www.alhasanath.net

அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

ஆகஸ்ட் 2010 ரமழான் 1431 மலர்: 36 இதழ்: 08

ரமழான் சிறப்பிதழ்

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதனை விளங்குவோம்!
அதன்வழி நடப்போம்! அதன்பால் அழைப்போம்!

மறுமைப் பயணத்தில்
கலாநிதி அஹ்மத் அல்அஸ்ஸால்

50/-

ISLAMIC MONTHLY

இஸ்லாமிய இலட்சியப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L பரீட்சையின் பின் உங்கள் உயர்கல்வித் தேவைக்கு யாரை நாடுவதென்று யோசிக்கிறீர்களா?

IBS ல் இணைந்து கொண்டு உங்களுடைய உயர்கல்விக் கனவை நனவாக்கிக் கொள்ள இதோ உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!!

செப்டெம்பர் 2010ம் கல்வியாண்டுக்கு இப்பொழுதே பதிவு செய்து பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்!

BTEC HND in Business (IT) - Edexcel, International UK
Foundation Studies in Business & IT
Foundation in Interactive Media
(இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது)
Islamic Banking & Finance - abe, UK
(ஆங்கில மொழி மூலம்)
Islamic Banking & Finance - IBS Certificate
(தமிழ் மொழி மூலம், தபால் மூலம் கல்வி)
International Computer Driving Licence - ICDL, UK
IELTS Preparatory Course
Spoken/ Business English - City & Guilds, UK
Diploma in - IT,
Web Design,
Graphic Design,
Hardware Engineering,
Business Management,
HRM, Marketing Management,
Accounting & Book Keeping போன்ற பல பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன!!

Hotline: 2 729 557

* Conditions apply.

பாடநெறிகள் கொழும்பு, கண்டி, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறும்.

ஏன் IBS நிறுவனத்தை தெரிவு செய்ய வேண்டும்?

1. இலவச தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஒத்துழைப்பு/ வேலை வங்கியில் இலவச பெயர் பதிவு
2. இலவச விசா ஆலோசனைச் சேவைகள்
3. சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள்
4. சிறப்புத்தேர்ச்சியுடைய, அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
5. ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனிப்பட்ட கவனிப்பு
6. பரிசில்களும் புலமைப்பரிசில் வாய்ப்புக்களும்.

INSTITUTE OF BUSINESS STUDIES IBS

IBS CAMPUS

67, Kawdana Road, Dehiwala. Tel: 0115522188
524, Peradeniya Road, Kandy. Tel: 0112729557
464, Main Street Negombo. Tel: 0315677288
Email: info@ibslanka.com Website: www.ibslanka.com

சர்வதேச தரத்திலான பாடநெறிகளை மிகக் குறைந்த செலவில் இலங்கை மாணவர்களுக்கு பெற்றுத் தரும் முன்னோடி நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Invest your time wisely!
Increase your value quickly!

JOIN GOLDEN COLEGE

Diploma in
Spoken English

To develop the communication skills in English in a multimedia environment

★ Duration: 03 Months
★ Class Schedule: Weekdays & Weekends
★ Course Fee: SLR 10,750.00 (For all 03 levels)

Why Spoken English @ GC?

- Modern Teaching Methods
- Competency based Curriculum
- Student friendly environment
- Group works and 100% Spoken training
- Experienced Lecturers
- Flexible Time Table
- Three different levels

(Basic, Intermediate, Diploma)

● Free Study Packs & CDs ● Installment payment scheme

நீங்களும் கட்டிட நிர்மாணத்துறையில் கணனி படவரைஞராவதற்கான ஓர் அரிய வாய்ப்பு

Professional Diploma in 2008 & 2009 **2D & 3 D**
Auto CAD
(Computer Aided Designing & Drafting)

★ Civil Engineering
★ Electrical Engineering

Free: Saudi, Qatar, & Dubai Drawings

★ Full Time - 20 Days
★ Part Time - 02 or 03 Months } Adjustable Time Table
★ அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்
★ 100% செய்முறை பயிற்சிகள்

9500/=

Diploma in
Computerized Accounting

Sage 50, Acc Pac, Quick Book, MYOB, Tally

★ Duration: One Month (Flexible Time Table)
★ Experienced Lecturers
★ 100% Practical Training
★ Free Study Packs & Software CDs

For 05 Packages 4,250/=

Also Available
★ Peachtree 2009
★ Quicken

FOR EACH PACKAGE 2500/=

தூர பிரதேச மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்

GOLDEN COLLEGE

No.23, Suduhumpola Rd, (Off Peradeniya Rd) Kandy (Next to IMS)
Tel: 0812 20 55 44, Mobile: 0777 912 597 / 0718 03 29 67

HOTLINE - 0777 71 71 29

Digitized by Noorani Foundation
www.noorani.org

RS. 680.00



RS. 500.00

RS. 500.00

RS. 200.00

RS. 400.00

RS. 250.00

RS. 235.00

RS. 130.00

RS. 250.00

RS. 135.00

RS. 600.00

RS. 160.00

RS. 220.00

15 படிகள் ஏறி உள்ளே வரவேண்டிய மாடிக் கட்டிடத்தில் அமைந்திருக்கும்

இலக்கம் 77

இஸ்லாமிக் B புக் ஹவுஸ்

தெமட்டகொட வீதி, கொழும்பு - 09

T.P. 0112684851, 0112669197 Fax: 0112688102

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

بسم الله الرحمن الرحيم

"யாருக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோமோ அவர்கள் அதை எவ்வாறு ஓதி(ஒழுகி)ட வேண்டுமோ, அவ்வாறு ஓதுகிறார்கள். அவர்கள்தாம் அதன் மேல் நம்பிக்கையுள்ளவர்கள். யார் அதை நிராகரிக்கிறார்களோ அவர்கள் பெரும் நஷ்டவாளிகளே!"
(ஸூரதுல் பகரா: 121)

மலர்: 36 இதழ்: 08

ஆகஸ்ட் 2010, ரமழான் 1431

ISSN : 1391 - 460X

விலை விபரம்:

உள்நாடு

தனிப் பிரதி : ரூபா 40.00
வருட சந்தா : ரூபா 600.00
ஆறு மாதம்: ரூபா 300.00

வெளிநாடு

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர் : 1100.00

மத்திய கிழக்கு நாடுகள் : 1400.00

இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, மலேஷியா, ஜப்பான், கொரியா : 1500.00

ஐக்கிய அமெரிக்க நாடுகள் : 1800.00

• • •

வெளியீடு:
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

தொடர்புகளுக்கு:
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி, கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி :(011) 2689324, தொலைநகல் :(011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.net

அல்குர்ஆன் விளக்கம் | 5-7
அல்குர்ஆன் மீதுள்ள எமது பொறுப்புக்கள்
அஷ்ஷெய்க் தாஹிர் எம். நிஹால் (அஸ்ஹரி)

அல்ஹதீஸ் விளக்கம் | 8-9
ரமழானில் வாரி வாரி வழங்குவோம் தன்னிறைவுள்ள சமூகம் காண்போம்!
அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

தஃவா களம் | 10-12
அன்று வெற்றிகளை சுமந்து பயணித்த ரமழான்!
உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

கண்குளிர்ச்சி தரும் தொழுகை | 13-14

தூய ரமழானே வருக...! | 15-18

ஜமாஅத்தே இஸ்லாமி முக்கியஸ்தர்கள் கைது! | 19-21

பலஸ்தீன் விவகாரத்தில் ஸுன்னத்துல்லாஹ் | 22-25

ரமழான் காலத்து ஆலோசனைகள் | 34-37

பாகிஸ்தான் உருவாக்கத்தில் மௌலானா மௌதூதி [ரஹ்] அவர்கள் வகித்த பங்கு | 47-49

இஸ்லாம் உயர் தரம்

அந்நிஸா

பெண்களே, ரமழானிடம் தோற்றுப் போவோமா? | 28-29

பெண்கள் மீதும் ஸகாத் கடமை | 30-31

மணமான மணவாழ்வு | 33-34

அடுத்த உம்ராவுக்கு நீங்கள் தயாரா? | 35-36

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் குறிப்பிட்ட தொகைக்கு ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை நெருக்கத்தில் சமூகத்தின் மீட்சி

"சமூகத்தைப் பற்றி ஒருவர் உங்களிடம் முறையிடுகிறார் என்றால், "நீங்கள் பஜ்ர் தொழுகையை கிரமமாக நிறைவேற்றுகிறீர்களா?" என அவரிடம் கேளுங்கள். "இல்லை" என அவர் பதிலளித்தால் அவருடைய கருத்துகளைப் புறக்கணித்து விடுங்கள்." இது ஒரு பெரியாரின் கூற்று. "உன்னைத் திருத்து; உலகம் திருந்தும்" என்ற பழமொழிக்கு ஒரு விளக்கமாக இது இருப்பதோடு சமூகத்தின் மேம்பாடு பஜ்ர் தொழுவதில்தான் தங்கியுள்ளது என்பதையும் அவர் நாசூக்காக தெரிவிக்கின்றார்.

இஸ்லாம் எமக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கும் பண்பாடு "பஜ்ருக்கு முன்னரே விழித்தெழுந்து சுறுசுறுப்பாக இயங்கி இஷாத் தொழுகையுடன் தூங்கச் சென்று விடுங்கள்" என்பதுதான். யூத, கிறிஸ்தவ சக்திகளால் இன்று கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் ஜாஹிலிய்ய கலாசாரமே "நடுநிசிவரை விழித்திருந்து உலக இன்பத்தை அனுபவியுங்கள்; காலையில் உறங்குங்கள்" என்பது. இதற்கு இசைவாகவே அவர்களது கட்டுப்பாட்டிலிருக்கும் ஊடகங்களும் செயல்படுகின்றன.

இன்று எமது சமூகம் இவ்விரண்டுக்கும் இடையில் சிக்கி, தொழுகை எமது வாழ்வில் ஏற்படுத்த விரும்பும் நெறிமுறைகளை இழந்து, உலக இன்பங்களில் மூழ்கி, மறுமைக்கான தயாரிப்புக்களை மறந்து ஏனோ தானோ என இரண்டுங் கெட்டான் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தஹஜ்ஜுத் தொழுகையை அதிகாலையிலே ஒருவன் தனித்து நிறைவேற்றும்போது, அல்லாஹ்வுடனான நெருக்கம் அதிகரிக்கிறது. உள்ளம் அமைதி பெறுகிறது. தெளிவான சிந்தனை பிறக்கிறது. சமூகப் பணி செய்யும் உத்வேகம் துளிர்விடுகிறது. அல்லாஹ்வின் உதவி, வழிகாட்டல், அருள் அனைத்தும் கிடைக்கின்றன. அவன் தனிமையிலிருந்து சமூகத்துக்கு வருகின்றான். தனது வாழ்க்கை வட்டத்தின் மையப்புள்ளியாகத் திகழும் மஸ்ஜிதில் அனைவரையும் சந்திக்கிறான்.

அவனது அன்றைய நிகழ்ச்சி நிரல் அங்கு தயாராகின்றது. அன்றைய முழுநாளும் அவனுடைய இலக்கை நோக்கிய பயணமாக மலர்கிறது.

முழு சமூகமும் இவ்வாறு செயற்பட முற்படும்போது சமூகம் அல்லாஹ்வுடன் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்கிறது. சமூகத்திற்கென தெளிந்த ஒருமைப்பாடான சிந்தனை பிறக்கிறது. சமூகத்தின் ஆன்மிகப் பலம் உணரப்படுகிறது. அல்லாஹ்வின் உதவி, வழிகாட்டல், அருள் அச் சமூகத்தின் மீது சொரிகிறது. இவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஒரு சமூகம் ஷைத்தானிய ஜாஹிலிய்ய கலாசாரத்தின் பின்னால் ஓடப்போவதில்லை. இவற்றினால் விளையும் தீமைகளை எதிர்த்துப் போராடவும் துணிகிறது.

படைத்த இறைவனைப் புரிந்து கொண்ட சமூகம், அல்குர்ஆனை அதன் வழிகாட்டலாக ஏற்றுக் கொண்ட சமூகம், முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை, நபியை முன்மாதிரியாக எடுத்துக் கொண்ட சமூகம், மறுமையின் வெற்றியையும் படைத்த இறைவனின் திருப்தியையும் இலக்காகக் கொண்ட சமூகம், உருக்கி வார்க்கப்பட்ட ஓர் அரணாகச் செயல்படுவதில் என்ன தடை இருக்க முடியும்? அவ்வாறு அது செயல்படவில்லை என்றால், அதன் நம்பிக்கைகளிலே ஏதோ கோளாறு இருக்கின்றது என்பதுதான் அர்த்தம்.

எதிர்வரும் ரமழான் எம்மில் தெளிவான சிந்தனையையும் உறுதியான நம்பிக்கைகளையும் கிரமமான வணக்க வழிபாடுகளையும் உருப்படியான கூட்டு முயற்சிகளையும் ஏற்படுத்த வேண்டும் எனப் பிரார்த்திப்போம்; அதற்கான முயற்சிகளைச் செய்வோம். சமூகத்தின் மீட்சி இறை நெருக்கத்திலேயே தங்கியுள்ளது. ■

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆன் மீதுள்ள எமது பொறுப்புக்கள்

"யாருக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோமோ அவர்கள் அதை எவ்வாறு ஓதி(ஒழுகி)ட வேண்டுமோ, அவ்வாறு ஓதுகிறார்கள். அவர்கள்தாம் அதன் மேல் நம்பிக்கையுள்ளவர்கள். யார் அதை நிராகரிக்கிறார்களோ அவர்கள் பெரும் நஷ்டவாளிகளே!" (ஸூரதுல் பகரா: 121)

அஷ்ஷெய்க் தாஹிர் எம் நிஹால் (அஸ்ஹரி)

ஓர் அரசன் தனது மக்களின் நலன் கருதி ஒரு மடலை அனுப்பி வைக்கின்றான். அதில் அவர்கள் கடைபிடிக்க வேண்டிய கட்டளைகளையும் தவிர்ந்து நடக்க வேண்டிய விலக்கல்களையும் எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகளையும் எழுதி அனுப்புகின்றான்.

இம்மடல் கிடைக்கப் பெற்ற மக்கள் அரசன் அனுப்பிய மடல் என்பதற்காக அதனைப் பற்றிப் பேசிப் பேசி அம்மடலைத் தமது சிரசுகளுக்கு மேலால் வைத்து கண்ணியப்படுத்தி பல சந்தர்ப்பங்களில் இராகமிட்டு அம்மடலை வாசித்து மகிழ்ச்சியடைகின்றனர். மடலின் உள்ளடக்கத்தைப் புரியாது அவர்கள் நடந்து கொண்டிருந்தவேளையில், திடீரென எதிரிகள் அவர்களைத் தாக்கி அவர்களை அலைக்கழியச் செய்து அழித்தும் விட்டனர். அரசனின் மடலின் உள்ளடக்கத்தை இவர்கள் புரிந்து செயற்பட்டிருந்தால் எதிரிகளின் தாக்குதலிலிருந்து இவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியும்.

இது அகிலத்தின் இரட்சகனின் மாமறையைப் பெற்ற இந்த உம்மத்தின் யதார்த்த நிலையை விளக்கும் ஓர் உதாரணமாகும். புனித அல்குர்ஆனை, வைபவங்களை ஆரம்பித்து வைக்கவும் மரணித்தவர்களுக்கு நன்மை சேர்க்கவும் ரமழான் மாதத்தில் அதிகதிகம் ஓதி ஏனைய பதினொரு மாதங்களிலும் மூடிவைக்கும் ஒரு வேதமாக எம்மில் பலர் கருதுவது வேதனைக்குரிய விடயமாகும். புனித ரமழான் மாதமும் அதில் உள்ளடங்கியிருக்கும் புனித லைலதுல் கத்ரும் சிறப்பும் கண்ணியமும் பெறுவதற்கு புனித அல்குர்ஆனே காரணமாக உள்ளது.

நாம் இங்கு விளக்கத்துக்காக எடுத்துக் கொண்டுள்ள வசனத்தில் புனித அல்குர்ஆனை ஏற்றுக் கொண்டவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. புனித அல்குர்ஆனை உரிய முறையில் ஓதுவதன் மூலமே ஈருலகிலும் ஈடேற்றம் பெற முடியும். இதனை உரிய முறையில் ஓதுதல் என்பதனைக் குறிப்பதற்கு இவ்வசனத்தில் 'ஹக்குத் திலாவா' எனும் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. அல்குர்ஆன் மீதுள்ள எமது பொறுப்புக்களை சரிவரப் புரிந்து கொள்வதற்கு ஹக்குத் திலாவா எனும் சொல்லின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும். இச்சொல்லுக்கு விளக்கமளிக்கும் இமாம் இப்னு கதீர் அவர்கள் ஸஹாபாக்களின் கருத்துக்களைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

உமர் இப்னுல் கத்தாப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இச்சொல்லை விளக்கும்போது, "ஹக்குத் திலாவா என்பது, சுவனத்தைக் குறிக்கும் வசனங்களை ஓதும்போது அல்லாஹ்விடம் சுவனத்தை வேண்டுவதும்; நரகத்தைக் குறிக்கும் வசனங்களை ஓதும்போது நரகிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பு வேண்டிக் கொள்வதுமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இதனை விளக்கும்போது, "ஹக்குத் திலாவா என்பது, புனித அல்குர்ஆனில் ஆகுமானதை (ஹலாலை) ஆகுமாக்கிக் கொள்வதும்; தடைசெய்யப்பட்டவற்றை (ஹராத்தை) தவிர்ந்து கொள்வதும்; அல்லாஹ் இறக்கி வைத்த பிரகாரம் அதனை ஓதுவதும்; அதன் சொற்களைத் திரிபுபடுத்தாமலும் பொருத்தமற்ற கருத்துக்களைத் திணிக்காமலும் இருப்பதாகும்" எனக் கூறியுள்ளார்கள்.

இப்னு உமர், இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் இதற்கு விளக்கமளிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, "ஹக்குத் திலாவா என்பது, அதன் போதனைகளை உரிய முறையில் கடைபிடிப்பதாகும்" என விளக்கியுள்ளார்கள்.

ஸஹாபிகளது இக்கருத்துக்களின் மூலம் மனிதர்களுக்கு குர்ஆன் மீதுள்ள பொறுப்புக்களை பின்வரும் அமைப்பில் விளங்கிக் கொள்ள முடியும்:

1. புனித அல்குர்ஆனை முழுமையாக விசுவாசம் கொள்தல்.
2. குர்ஆனை முறையாகவும் வழக்கமாகவும் ஓதுதல்.
3. அதன் பொருளையும் போதனைகளையும் விளங்கி அறிந்து கொள்ளல்.
4. அதன் போதனைப்படி வாழ்வை வடிவமைத்துக் கொள்ளல்.
5. அதன் போதனைகளை மக்களுக்கு எடுத்துரைத்தல்.

புனித அல்குர்ஆன் மீதுள்ள எமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர நிறைவேற்றி அதன் உரிய பயனை அடைந்து கொள்ள முஃமின்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை அஷ்ஷெய்க் அபுல் ஹஸன் அலி அந்நத்வி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பின்வருமாறு வரிசைப்படுத்துகின்றார்கள்.

புனித அல்குர்ஆன் கரை காண முடியாத கடலைப் போன்றதாகும். அதில் மூழ்குபவர்கள் அனைவரும் நிச்சயம் முத்துக்களைப் பெற்றுக் கொள்வார்கள். ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளும் முத்துக்கள் அவரவரது முயற்சியையும் திறனையும் பொறுத்தே அமையும்.

1. ஆசையும் ஆர்வமும்

"இவருக்கு இவருடைய இறைவனிடமிருந்து ஓர் அத்தாட்சி இறக்கி வைக்கப்பட்டிருக்கக் கூடாதா என்று நிராகரிப்போர் கூறுகிறார்கள், (நபியே!) நீர் கூறும்: நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவரை வழிகெடச் செய்கிறான்; தன்பால் எவர் திரும்புகிறாரோ அத்தகையோருக்கு நேர்வழி காட்டுகிறான்." (13: 27)

2. செவிமடுத்து செயற்படுத்துதல்

"எவர்கள் ஷைத்தான்களை வணங்குவதைத் தவிர்த்துக் கொண்டு, அவற்றிலிருந்து விலகி முற்றிலும் அல்லாஹ்வின்பால் முன்னோக்கியிருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் நன்மாராயம். ஆகவே (என்னுடைய) நல்லடியார்களுக்கு நன்மாராயங் கூறுவீராக! அவர்கள் நல்லுபதேசத்தைச் செவியேற்று அதிலே அழகானதைப் பின்பற்றுகிறார்கள். அல்லாஹ் நேர்வழியில் செலுத்துவது இத்தகையவர்களைத்தாம். இவர்கள்தாம் நல்லறிவுடையோர்." (39: 17, 18)

3. பயபக்தியும் அச்சமும்

"(அல்லாஹ்வுக்கு) அஞ்சுபவன் விரைவில் உபதேசத்தை ஏற்பான்." (87: 10)

"அவர்கள் கூறுவதை நாம் நன்கறிவோம். நீர் அவர்கள் மீது நிர்ப்பந்தம் செய்பவரல்லர். ஆகவே, (நம்) அச்சறுத்தலை பயப்படுவோருக்கு, இந்தக் குர்ஆனைக் கொண்டு நல்லுபதேசம் செய்வீராக." (50: 45)

4. மறைவானவற்றை விசுவாசித்தல்

"இது, (அல்லாஹ்வின்) வேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தியுடையோருக்கு (இது) நேர்வழிகாட்டியாகும்." (2: 2)

"(பயபக்தியுடைய) அவர்கள் (புலன்களுக்கு எட்டா) மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையையும் (உறுதியாக முறைப்படி) கடைப்பிடித்து ஒழுகுவார்கள். இன்னும் நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழியில்) செலவும் செய்வார்கள்." (2: 3)

5. சிந்தித்து விளங்க முயற்சித்தல்

"மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்கள் (இருக்கின்றனவே) அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா?" (47: 24)

6. சிரமங்களை சுமந்து முயற்சி செய்தல்

"மேலும் எவர்கள் நம்முடைய வழியில் முயல்கிறார்களோ நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான வழிகளில் நாம் செலுத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கிறான்." (29: 69)

அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட புனித அல்குர்ஆன் அகிலத்தார் அனைவருக்கும் சொந்தமானதாகும். இதனை ஒரு சாரார் மாத்திரம் சொந்தம் கொள்ள முடியாது. ஆலிம்களால் மாத்திரமே புனித குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியும் எனும் கருத்து இஸ்லாமியக் கருத்தன்று. இவ்வாறான குறுகிய கருத்துக்கள், இஸ்லாம் ஒருபோதும் அங்கீகரிக் காத மதகுருக்களை உருவாக்க துணை போகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. வேதம் மதகுருக்களுக்கு மாத்திரம் சொந்தமானது என்பது யூத மதக் கருத்தாகும்.

"நிச்சயமாக, இந்தக் குர்ஆனை நன்கு நினைவுபடுத்திக் கொள்ளும் பொருட்டே எளிதாக்கி வைத்திருக்கிறோம். எனவே, (இதிலிருந்து) நல்லுணர்வு பெறுவோர் உண்டா?" (54: 17)

இவ்வாறு ஸூரா அல்கமரில் நான்கு இடங்களில் அல்லாஹ் வினவுவதன் மூலம் அகிலத்தார் அனைவரும் புரியக்கூடியதாகவே அல்லாஹ் புனித அல்குர்ஆனை எளிதாக்கி இறக்கி வைத்துள்ளான் என்பது தெளிவாகின்றது. மேலும் புனித அல்குர்ஆன் முழு மனிதகுலத்திற்கும் சொந்தமான வேத நூல் என்பதை புனித அல்குர்ஆனில் பல இடங்களில் கண்டுகொள்ள முடியும்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதனால் அழையப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரமழான் மாதம் எத்தகையதென்றால், அதில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும் தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை-தீமைகளைப்) பிரித்தறிவிப்பது மான அல்குர்ஆன் இறக்கியருளப் பெற்றது." (2: 185)

"மனிதர்கள் படிப்பினை பெறுவதற்காக தன் வசனங்களை அவன் தெளிவாக விளக்குகிறான்." (2: 221)

"இன்னும், இந்தக் குர்ஆனில் மனிதர்களுக்காக எல்லாவித உதாரணங்களையும் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதற்காக நாம் திடமாக எடுத்துக் கூறியுள்ளோம்." (39: 27)

"அப்படியல்ல; நிச்சயமாக இது நல்லுபதேசமாகும். (எனவே, நல்லுபதேசம் பெற) எவர் விரும்புகிறாரோ அவர் இதை நினைவில் வைத்துக் கொள்ளட்டும்." (74:54, 55)

புனித அல்குர்ஆன் கரை காண முடியாத கடலைப் போன்றதாகும். அதில் மூழ்குபவர்கள் அனைவரும் நிச்சயம் முத்துக்களைப் பெற்றுக் கொள்வார்கள். ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளும் முத்துக்கள் அவரவரது முயற்சியையும் திறனையும் பொறுத்தே அமையும். புனித அல்குர்ஆனை கற்றுக் கொள்வதில் முஃமின்கள் கூடிய கவனமும் கரிசனையும் செலுத்துவது கடமையாகும்.

அறபு மொழி இதற்குத் தடையாக அமையக் கூடாது. அறபு மொழியைக் கற்பது புனித அல்குர்ஆனுக்காகவே அமைய வேண்டும். அறபு மொழி கற்பவர்கள் அறபு மொழியில் "இது ஒரு மாடு, இது ஒரு கழுதை" எனக் கூறும் அளவோடு நிறுத்திக் கொள்வது வேதனைக் குரிய விடயமாகும். அறபு மொழி கற்பவர்கள் 'கலீலா வதிம்னா' புத்தகத்திற்கும் இம்றஉல் கைஸின் கவிதைகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட பன்மடங்கு முக்கியத்துவத்தை புனித அல்குர்ஆனுக்கு கொடுக்க வேண்டும். அறபு மொழி இலக்கண இலக்கியம் உட்பட அனைத்துக் கலைகளும் புனித அல்குர்ஆனைத் தழுவியதாகவே அமைய வேண்டும். அப்போதுதான் புனித அல்குர்ஆன் மீது எமக்குள்ள கடமைகளை சரிவர எம்மால் நிறைவேற்ற முடியும்.

புனித ரமழானை அடைந்திருக்கும் நாம் புனித அல்குர்ஆனை ஓதும்போது 'ஹக்குத் திலாவத்'தைப் பேண முயற்சிக்க வேண்டும். புனித அல்குர்ஆனை ஓதுவதுடன் மாத்திரம் நின்று விடாது அதனை விளங்கி எமது வாழ்வில் முழுமையாகக் கடைபிடித்து மற்றவர்களுக்கு எத்திவைக்க வல்ல அல்லாஹ் எம்மனை வருக்கும் தவ்பீக் செய்வானாக!

புனித ரமழானை பயனுள்ள வாசிப்பில் கழியுங்கள்



350/-



90/-

220/-



30/-

கிடைக்குமிடம்:

இஸ்லாமிக் புக் ஹவுஸ்

77, தெமடகொட வீதி,
கொழும்பு- 09

T.P: 0112684851, 0112669197
Fax: 0112688102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழானில் வாரி வாரி வழங்குவோம் தன்னிறைவுள்ள சமூகம் காண்போம்!

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மனிதர்களுள் வாரி வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார்கள். ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ரமழான் மாதத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைச் சந்திக்கின்ற வேளையில் அவர்கள் வாரி வாரி வழங்குகின்றவர்களாக இருந்தார்கள். ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ரமழானின் ஒவ்வோர் இரவிலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ஓதிக் காட்டுவார்கள். ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைச் சந்திக்கும்போது சுழன்றடிக்கும் மழைக்காற்றை விட வேகமாக நல்லவற்றை வாரி வாரி வழங்கும் வள்ளலாக அவர்கள் திகழ்வார்கள்."

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முழு ஆளுமை பெற்ற ஓர் இறைத் தூதர். அவர்களது ஆளுமையை அங்க சம்பூரணப்படுத்திய மூன்று தாய்ப் பண்புகள் அவர்களிடம் காணப்பட்டன. அதாவது, அவர்கள் மனிதர்களில் மிகவும் அழகானவராகவும் சிறந்த வராகவும் இருந்தார்கள். அவர்கள் வாரி வாரி வழங்கும் வள்ளலாக இருந்தார்கள்; மாவீரராகத் திகழ்ந்தார்கள். இந்த ஹதீஸ் நபியவர்களின் கொடை கொடுக்கும் மனப்பாங்கைத் தெளிவுபடுத்துகின்றது.

இயல்பிலேயே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொடுத்துதவும் பண்புடையவராகத் திகழ்ந்தார்கள். ரமழான் மாதத்தில் அண்ணலாரின் இந்தப் பண்பு இன்னொரு பரிமாணத்தை அடையும். ரமழானில் பலரும் கண்டு வியக்கத்தக்களவு அதிகமாக வாரி வாரி வழங்குவார்கள்.

விஷேடமாக நபியவர்கள் ரமழான் மாதத்தில் ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்? இந்த ஹதீஸில் இடம்பெற்றுள்ள பதப்பிரயோகங்கள் இதற்கான தெளிவைத் தருகின்றன. ரமழான் மாதம், ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது வருகை, நபியவர்கள் அல்குர்ஆனை ஓதிக் காட்டுதல் முதலான பிரயோகங்கள் எமது சிந்தனைக்குரியவை.

அல்லாஹுத் தஆலா நம்பிக்கையும் நாணயமும் உள்ள வானவர்கோன் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மூலமாக உத்தமத் தூதருக்கு தூய்மையான திருமறையை இறக்கியருளினான். இதன் மூலம் ரமழான் மாதம் சிறப்புற்றது. இந்த மாதத்தில்தான் நோன்பு கடமையாக்கப்பட்டது. நோன்பு இறையச்சத்தை தோற்றுவிக்கின்றது. இறையச்சம் அல்குர்ஆனின் வழிகாட்டுதலைப் பெறுவதற்கான அடிப்படை நிபந்தனையாக உள்ளது.

அல்குர்ஆனின் வழிகாட்டுதல்களில் ஒன்றுதான் மனிதநேயத்தையும் மனிதாபிமானத்தையும் மனிதர்கள் சுவாசித்து வாழ வேண்டும் என்பதாகும். இதற்கான ஏற்பாடுகளில் முதன்மையானது நோன்பு நோற்று ஏழ்மையின் நிறத்தைப் புரிந்து கொள்வதாகும். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மனிதர்களின் வாழ்வைத் தரம் உயர்த்துவதும் இதில் அடங்கும். இந்தத் தாத்பரியத்தை அல்லாஹ்வின் தூதர் வாழவைத்துள்ளார்கள். சுழன்றடிக்கின்ற காற்றைவிட வேகமாக வாரி வாரி வழங்கினார்கள். போதனைகள் சாதனைகளாக உருப்பெறவில்லையெனின், அவை வெறும் வரட்டுத் தத்துவமாக ஏடுகளில் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நோன்பு மாதத்தை பயிற்சிப் பாசறையாக அறிமுகம் செய்தார்கள். ஆனாலும் மனிதர்களின் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் சுக துக்கங்களையும் புரிந்து கொள்ளாது, அவற்றுக்குரிய பங்கை வழங்காது, துறவுக் கோலம் பூணும் ரிஷிகளை ரமழான் மாதப் பாசறையில் இறைத்தூதர் உருவாக்கவில்லை. மானுட வசந்தத்தை சுவாசித்து வாழும் ஆன்மிகவாதிகளையே அவர்கள் தோற்றுவித்தார்கள்.

ரமழானில் பகற் பொழுதுகளில் பசித்திருந்து, தாகித்திருந்து, இரவெல்லாம் விழித்திருந்து தியானித்திருந்து, நீண்ட நேரம் நின்று வணங்கும் நோன்பாளி வகையற்றவர்களின் துயர்துடைக்க ரமழானில் பாடுபட்டு உழைக்கவில்லையென்றால் அவர் ஆத்மானந்தத்தை அனுபவிக்க மாட்டார். ஆத்மானந்தம் என்பது கண்களை இறுக மூடிக் கொண்டு மூலையில் குந்தியிருந்து சில உச்சாடனங்களை செய்வதில் இன்பம் காண்பதல்ல. வயிறு சுருங்கிக் கிடக்கும் ஏழைக்குச் சோறு போட்டு அவர்களது முதுகெலும்புகளை நிமிர்த்திவிடுவதிலும் கையிலுள்ள சிறு தொகைப் பணத்தையாவது கொடுத்து அவர்களைப் பொருளாதார ரீதியாக தூக்கிவிடுவதிலும் உண்மையான ஆன்மிகக் களிப்பு உண்டு. இத்தகைய ஆன்மிகக் களிப்பிலேயே அண்ணலார் திளைத்திருந்தார்கள்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணலாரின் இபாதத்துகளை ஒரு கோணத்தில் மட்டும் நின்று பார்த்து ரமழானை தனிப்பட்ட இபாதத்துகளினால் மட்டும் நாம் அலங்கரித்து வருகின்றோம். இது ஓர் ஒரக்கண் பார்வை. இது நியாயமான, அங்கபூர்வமான பார்வையல்ல. நபியவர்கள் இல்லாத மக்களுக்கு ரமழானில் வாரி வழங்குவதில் வரிந்து கட்டிக் கொண்டு ஈடுபட்டுள்ளார்கள். இந்தப் பணியை நாம் பார்க்கத் தவறி விட்டோம். எனவே, ரமழானின் இராக் காலங்களில் பள்ளிவாசல்கள் இபாதத்துக்களால் களைகட்டுகின்ற அளவுக்கு பகற் காலங்களில் தர்மம் வழங்கும் அறச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுவதில்லை.

அல்குர்ஆன் அறிமுகம் செய்கின்ற ஆன்மிகவாதிகள் ஆன்மிகக் கோலம் பூண்டு வலம் வருபவர்களல்ல. அவர்களது சிறப்புப் பண்புகளில் ஒன்றாக கொடுத்துதவும் பண்பை அல்குர்ஆன் பிரத்தியேகமாகக் குறிப்பிடுகின்றது. அவர்கள்தான் சுவனத்தின் அனந்தரக்காரர்கள் என்றும் கூறுகின்றது.

"நிச்சயமாக இறையச்சமுள்ள மனிதர்கள் நீரூற்றுக்கள் உள்ள சுவனப் பூஞ்சோலைகளில் இருப்பார்கள். அவர்களது இரட்சகன் அவர்களுக்கு வழங்கிய சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இதற்கு முன்னர் (உலகில் வாழும் காலத்தில்) அவர்கள் நல்லோர்களாக வாழ்ந்தனர். இரவில் சிறிது நேரம் நித்திரை கொண்டு (எழுந்து) வைகறைப் பொழுதில் இறைவனிடம் பிழை பொறுக்கத் தேடுபவர்களாக இருந்தனர். அவர்களது சொத்து செல்வங்களில் கைநீட்டி யாசிப்போருக்கும் கைநீட்டி யாசிக்காமல் (கற்பைப் பேணி) வாழும் ஏழைகளுக்கும் குறிப்பிட்ட பங்கு உண்டு."

(அத்தாரியாத்: 15-19)

அருள்சுரக்கும் ரமழானில் அல்லாஹ்வின் திருப்தியை நாடி வானவர்கோன் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் உள்ளத்தை குளிரச் செய்து, ஏழைகளின் முகங்களை மலரச் செய்கின்ற அறச்செயல்களில் நபியவர்கள் அதீத ஆர்வம் காட்டினார்கள். ரமழானில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸகாத் எனும் பர்ளான கடமையை நிறைவேற்றுவதில் சிரத்தை எடுத்துக் கொண்டார்கள் என்று கூற முடியாது. ஏனெனில், ஸகாத் என்பது ரமழானில் மட்டும் கடமையாவதில்லை. அது வருடத்தில் அனைத்து மாதங்களிலும் கடமையாகின்ற இபாதத் ஆகும்.

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ரமழானில் பர்ளான கடமை என்ற வகையில் முன்னுரிமை வழங்கியது ஐவேளைத் தொழுகைக்கும் நோன்புக்கும் மாத்திரமேயாகும். ரமழானில் அதிகமான ஸுன்னத்தான, நபிலான வணக்கங்களுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முன்னுரிமை கொடுத்தார்கள். இந்தவகையில் மேலதிகமாகதான தர்மங்களை அள்ளி வழங்கினார்கள்.

ஸகாத் வழங்குகின்ற விஷேட மாதமல்ல ரமழான். அத்தகைய நிலைப்பாடு நபிகளாருக்கு இருக்கவில்லை. ஸகாத் என்னும் கடமையை நிறைவேற்றுகின்ற மாதமாக ரமழான் இருந்திருந்தால் ஸகாத் கொடுக்கும் தகுதி பெற்ற தனவந்தர்களைத் தவிர உள்ள நடுத்தர வர்க்கத்தினர் தர்மம் செய்கின்ற அறச் செயலில் இருந்து கவனமாகத் தப்பித்துக் கொள்வார்கள். ரமழானில் சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் ஏழைகளின் உணர்வலைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே இறைத் தூதரின் உன்னத நோக்கமாகும்.

அண்ணலார் இந்தப் பண்பொழுக்கத்தை நபித் தோழர்களுக்கு மத்தியில் திட்டமிட்டு வளர்த்தார்கள். ஒரு முறை அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு அண்ணலார் கீழ்வருமாறு கூறினார்கள்:

—

"உனது செல்வங்களை நீ சேமித்து வைக்காதே! அல்லாஹ் உனக்கு வாழ்வாதாரங்களை தராமல் தடுத்து வைத்துக் கொள்வான்."

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

பிறிதோர் அறிவிப்பில் இடம்பெற்றுள்ளதாவது:

"நீ செலவு செய்து உளப்பூர்வமாக தாராளமாக அள்ளி வழங்கு! வாரி வாரி வழங்கு! நீ பொருள், செல்வங்களைத் தடுத்து வைத்துக் கொள்ளாதே! அவ்வாறு செய்தால் அல்லாஹ் உனக்குத் தரவேண்டிய பொருள், செல்வங்களைத் தடுத்து வைத்துக் கொள்வான்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

ரமழான் மாதம் தராவீஹ் தொழுகை, கியாமுல் லைல், திக்ர், தௌபா, இஸ்திஃபார் முதலானவற்றால் விளம்பரப் படுத்தப்படுகின்ற அளவு தான தர்மங்களினால் களைகட்டுவதில்லை. ரமழானின் இறுதிப் பத்து தினங்களும் விஷேட நிகழ்வுகளினால் ஹயாத்தாக்கப்படுகின்றன. பள்ளிவாசல்கள் இராக்காலங்களில் உணவகங்களாக மாற்றப்படுகின்றன. தாரவீஹ் தொழுகை, பயான் நிகழ்ச்சிகள், திக்ர் மஜ்லிஸ்கள் என்று பரபரப்பான ஆரவாரமான இரவுகளாக அவை காட்சி தருகின்றன. ஆனால், அல்லாஹ்வின் பாதையில் அள்ளி வழங்குகின்ற அமலைப் பொறுத்தமட்டில் ரமழான் நலிவுற்றுக் காணப்படுகின்றது. அன்று அண்ணலார் தகுதியுள்ளவர்களுக்குக் கொடுத்தார்கள். தன்னிறைவு உள்ள சமூகத்தை உருவாக்கினார்கள். இன்று ரமழானில் நடப்பதென்ன? "கொடுப்பது கடமை; ஸவாப் வந்தால் போதும்" என்ற மனப்பாங்குடன் கொடுக்கின்றார்கள். தகுதியுள்ளவர்களுக்கு கொடுக்கப்படுகின்றதா? என்ற விடயத்தை இவர்கள் மதிப்பீடு செய்வதில்லை.

அவ்வாறே காலத்தின் தேவை உணர்ந்தும் சமூகத்தின் தரமறிந்தும் தர்மம் வழங்கப்படுவதில்லை. வெளி நாட்டிலுள்ள தனவந்தர்கள் வழங்கும் பணம் ரமழானில் வீணே இறைக்கப்படுகின்றது. இப்தார் நிகழ்வுகள் ஆடம்பரமாகவே ஏற்பாடு செய்யப்படுகின்றன. சிலபோது உண்மையாகவே வறுமைவயப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைப்பதில்லை. கொடுத்தால் நற்கூலி கிடைக்கும் என்ற பதிவுடன் ஏழைகளின் தரம் உயர

(74ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noorjahan Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வெற்றிகளை சுமந்து பயணித்த ரமழான்! இன்று...?

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜூல் அக்பர்
அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி



- ரமழான் நோன்பின் மாதம்
- ரமழான் இரவு வணக்கத்தின் மாதம்
- ரமழான் தவ்பாவின் மாதம்
- ரமழான் தர்மத்தின் மாதம்
- ரமழான் பொறுமையின் மாதம்
- ரமழான் இரத்த உறவினதும் சகோதரத்துவத்தினதும் மாதம்
- ரமழான் மறை ஞானம் இந்த மண்ணுக்கு அருளப்பட்ட மாதம், அதாவது குர்ஆனின் மாதம்.
- ரமழான் குர்ஆனியக் கொள்கைகளுக்கு மகத்தான வெற்றிகள் கிடைத்த மாதம்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உருவாக்கிய குர்ஆனிய சமூகம் வரலாறு காணாத வெற்றிகளை அள்ளிக் குவித்த மாதமாக ரமழான் திகழ்ந்தது. சத்தியத்தை வாழவைத்து அசத்தியத்தை வீழ வைத்த மாதமாக அது மாறியது. இஸ்லாம் எழுச்சி பெற்று ஜாஹிலிய்யத்தின் கோட்டை கொத்தளங்கள் சரிந்து வீழ்ந்த மாதமாக அது காட்சியளித்தது.

இன்றோ அந்த உன்னத மாதம் எங்களை வந்து பார்த்து விட்டுச் செல்கிறது. வருடந்தோறும் வந்து விட்டுச் செல்கிறது.

இருப்பினும் என்ன!

களைகட்டி கலைந்து விட்ட ஒரு விழாவாகவே அது முடிந்து வருகிறது. விழா முடிந்ததும் சோர்வும் அயர்வும் தூக்கமும் மிகைக்கின்றன.

இன்றைய ரமழான் ஓய்வெடுத்துக் கொள்ளும் மனிதர்களை விட்டுச் செல்கிறது. வெறிச்சோடிய மஸ்ஜித்களை விட்டுச் செல்கிறது. சவால்களை எதிர்கொள்ளத் திராணியற்ற சமுதாயத்தை விட்டுச் செல்கிறது.

பண்படாத உள்ளங்களை பண்படுத்தாமலேயே ரமழான் சென்று விடுகின்றது. உம்மத்தை ஒரு சோதனைக்குப் பின்னால் மற்றொரு சோதனையிலும் ஒரு தோல்விக்குப் பின்னால் மற்றொரு தோல்வியிலும் விட்டுச் செல்கிறது.

"யா ரமழான்! மகத்துவமிக்க குர்ஆனை சுமந்து வா ரமழான்!" என்று சப்தமிட்டு உனையழைக்க விழைகிறது என் மனம். எனினும், இயலாமைகளையும் பலவீனங்களையும் தோல்விகளையும் தோல்வி மனப்பான்மைகளையும் சுமந்து கொண்டு அடுத்த (வருட) வருகைக்காக உன்னை வழியனுப்பி வைத்து விடுவோமே என்று நினைக்கும்போது அந்த அழைப்பின் குரல் நாணித்து நலிவடைகிறது.

ரமழானே! சத்தியத்திற்கு உயிர் கொடுத்த மாதம் நீ; இஸ்லாமிய உம்மத்தின் இருப்பை அதன் இலக்குகளோடு இணைத்து உறுதிப்படுத்திய மாதம் நீ; உலகை தமது கோரப்பிடியில் வைத்து அடக்கியாண்ட அக்கிரம சக்திகளை துவம்சம் செய்து மானிட சமூகத்திற்கு விடுதலை வழங்கிய மாதம் நீ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவுக்குப் பின் 610ஆம் ஆண்டு விண்ணுலகில் இருந்த குர்ஆனை மண்ணுலகம் கொண்டு வந்து ஜாஹிலிய்ய இருளகற்றினாய் நீ...

ஹிஜ்ரி இரண்டில் அந்தக் குர்ஆனை எதிர்த்து நின்று குலப் பெருமை பேசிய குறைஷிப் படையை தலை குனியச் செய்து பத்ர் வெற்றியைத் தந்தாய்.

ஹிஜ்ரி ஐந்தில் அரபுத் தேசமே அணிதிரண்டு இஸ்லாத்தைப் பூண்டோடு அழிக்க முற்பட்ட அகழ் யுத்தத்தில், மரண பயத்தை உண்டுபண்ணி கதிகலங்க வைத்து எதிரிகளை விரண்டோடச் செய்தாய்.

ஹிஜ்ரி எட்டில் அஞ்ஞான அரசோச்சி அரபுத் தேசம் ஆண்ட மக்காவை மறை ஞானத்தின் மத்திய தலமாக மாற்றினாய்; மக்கா வெற்றியைப் பெற்றுத் தந்தாய்.

அதே ஆண்டு யமனை ஈமானியத் தேசமாக மாற்றும் நோக்கில் அந்த மண்ணுக்கு இஸ்லாத்தின் தூதை சுமந்து சென்றாய்.

மேலும் அதே ஆண்டு 'உஸ்ஸா' வை உடைத்து 'அஸீஸ்' ஆகிய அல்லாஹ்வின் மகத்துவத்தைப் பறை சாற்றினாய்.

ஹிஜ்ரி ஒன்பதில் 'லாத்' ஐ உடைத்து அல்லாஹ்வின் பெருமையை அகிலத்தில் மேலோங்கச் செய்தாய்.

அதே ஆண்டு இஸ்லாத்தை எதிர்த்து நின்ற தாஇப் மக்களை இஸ்லாத்தில் நுழைய வைத்தாய்.

அதே ஆண்டில் தபூக் சென்று உரோம சாம்ராஜ்யத்தின் கதவைத் தட்டிவிட்டு வந்தாய்.

ஹிஜ்ரி 15 இல் பாரசீகர்களைத் தோற்கடித்து காதிஸிய்யாவில் வெற்றிவாகை சூடினாய்.

ஹிஜ்ரி 91இல் ஆபிரிக்காவை கடந்து இருண்ட கண்டமாக அன்றிருந்த ஐரோப்பாவில் கால்பதித்தாய். அன்று உன் வரவுக்காகக் காத்திருந்த ஸ்பெய்ன், ஐரோப்பாவுக்கே சுதந்திர சுவாசத்தைக் கற்றுக் கொடுத்தது.

ஹிஜ்ரி 92இல் தாரிக் பின் ஸியாத் ரொட்ரிக் மன்னனை வெற்றி கொண்டு கிழக்கில் இஸ்லாமிய சூரியனை உதிக்கச் செய்ததும் ரமழானே உன்னில்தான்.

உலகப் புகழ்பெற்ற இஸ்லாமியப் பல்கலைக்கழகம் ஜாமிஉல் அஸ்ஹர் எகிப்தில் நிறுவி முடிக்கப்பட்டதும் ரமழானே (ஹிஜ்ரி 361) உன்னில்தான்.

ஹிஜிரி 584இல் 'ஸப்த் கோட்டை' யைக் கைப்பற்றி சிலுவை வீரர்களிடமிருந்து பலஸ்தீனைப் பாதுகாக்கும் முயற்சியில் ஸலாஹுத்தீன் அய்யூபி வெற்றிவாகை சூடியதும் ரமழானே உன்னில்தான்.

ஹிஜ்ரி 658இல் இந்தியாவின் வட திசையிலிருந்து காட்டாறுபோல் அடர்ந்தேறி இஸ்லாமியத் தேசமெங்கும் நாசம் விளைவித்து பாலைவனங்களையெல்லாம் செம்மண்தளங்களாக மாற்றிய தறுதலைத் தாத்தாரியர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களின் இருப்பையே இல்லாமல் செய்த எகிப்து சுல்தான் வெற்றிவாகை சூடியதும் உன்னில்தான்.

இன்று உன்னைக் கடந்து செல்கின்ற நாம் அல்லாஹ்வின் தூதருடைய முன்மாதிரியைப் பின்பற்றி மனைவி, மக்களோடு குடும்பம் சகிதம் ஒரு மைதானத்தில் அல்லாஹ்வைத் தொழுது பெருநாள் கொண்டாடுவதற்குக் கூட திராணியற்ற பலவீனர்களாக இருக்கிறோம் ரமழானே! பள்ளிவாசல்களின் "கலெக்ஷன்" தான் உனது வருகையின் நோக்கமாகி விட்டதோ என்று நினைக்கத் தோன்றுகின்றபோது உன்னை சப்தமிட்டுக் கூவியழைத்து வரவேற்க என் மனம் நாணுகிறது.

ரமழானே! நீ வருகின்றபோது சுவனத்தின் அதியுயர் பீடமான பிர்தவ்ஸை நாம் அல்லாஹ்விடம் கேட்கிறோம். எனினும், உலகத்தின் அதியுயர் பீடத்துக்கு எங்களில் எவரும் செல்லத் துணிவதில்லை.

நபிகளாரின் வரலாற்றில் நடந்த முதல் சம்பவத்தை மீட்டுகிறேன். சோர்வையும் துணிவையும் ஒருசேர அந்நிகழ்ச்சி எமக்குப் பாடமாகக் கற்பிக்கின்றது. வஹியின் வருகையாலும் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடனான சந்திப்பினாலும் அதிர்ச்சிக்குள்ளாகி போர்வைக்குள் இருந்த அல்லாஹ்வின் தூதரை அல்லாஹ் எழுந்திருக்கும்படி கட்டளையிட்டான். சோர்வைத் தளர்த்திவிட்டு அதிர்ச்சிக்குள்ளிருந்து மீண்டார்கள் நபியவர்கள். அன்று எழுந்தவர்கள் ஓயவில்லை; ஓய்வு தேடவுமில்லை. அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய எழுந்திருங்கள் என அல்லாஹ் இட்ட கட்டளை அன்னாரை அவசரப்படுத்தியது.

எழுந்தார்கள் நபிகளார். இல்லாமைகள், இயலாமைகள், ஏமாற்றங்கள், தோல்விகள், நையப்புடைப்புக்கள், துன்ப துயரங்கள் அலையலையாக வந்து கொண்டே இருந்தன. எழுந்தவர்களை அமரவைக்க அவையனைத்தும் படாதபாடுபட்டன. துன்பங்களும் துயரங்களும் அன்னாரோடு மோதிக் களைத்து விட்டன. எனினும், அன்பே உருவான அண்ணலார் களைத்துப் போகவில்லை. அவர்கள் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் அல்லாஹ்வின் மார்க்கம் உயரும்வரை அசத்தியம் அழிந்து சத்தியம் மேலோங்கும் வரை ஓயவில்லை; அநீதிகள் அழிந்து நீதி உயரும் வரை ஓயவில்லை; பாவங்கள் அஞ்சி அடங்கி நன்மைகள் ஆர்ப்பரிக்கும்வரை ஓயவில்லை; அமைதி ஆட்சிபுரியும் வரை ஓயவில்லை.

இந்த உயர்வுக்கு ஈடாகத்தான் மறுமையின் உயர் பீடம் பிர்தவ்ஸை கேட்டார்கள் நபிகளார். இந்த உயர்வுக்காக உழைத்த உத்தமர்களும் பிர்தவ்ஸை இறைஞ்சுமாறு வேண்டினார்கள். ரமழானே! நீ வந்ததும் பிர்தவ்ஸைக் கேட்கின்ற இன்றைய நாங்கள் எந்த உயர்வுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறோம்!?

வணக்க வழிபாடுகளிலும் பண்பாடுகளிலும் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்விலும் பொழுதுபோக்குகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலிலும் கல்வி, பொருளாதாரத்திலும், வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அல்லாஹ்வின் மார்க்கத்தை புதைத்துவிட்டு ஜாஹிலிய்யத்துக்கள் உயர வழிசெய் திருக்கும் இன்றைய சந்ததியினருக்கு நீ வந்தவுடன் மறுமையின் உயர்பீடமான பிர்தவ்ஸ் நினைவுக்கு வருகிறதா?

ஆச்சரியம்தான். இருந்தாலும் மறுமையின் உயர் பீடத்தையாவது மறக்காமல் நினைவில் வைத்திருக் கிறார்களே என்பது ஆறுதலும்தான். எனினும், உலகில் உயர வேண்டியதைத் தாழ்த்திவிட்டு மறுமையின் உயரத்தை மட்டும் ஆசிப்பது எங்கனம்? அவர்களது அறிவுக்குப் பட்டதோ தெரியவில்லை!

இன்றோ, நீ வரலாறு நெடுகிலும் இஸ்லாத்துக்குப் பெற்றுக் கொடுத்த உயர்வுகளையும் வெற்றிகளையும் பெற்றுத் தராமலே எங்களிடம் வந்து போகிறாய். உனது வருகையால் நாங்கள் என்ன வெற்றிகளை அடைகிறோம் என்பது குறித்து எமக்குக் கவலையும் இல்லை.

பள்ளிவாசல்களுக்கு நிறம் பூசி, வீடு வாசல்களைக் கழுவிச் சுத்தம் செய்து, கஞ்சி கொடுப்பவர்களுக்கும் பயான் பண்ணுபவர்களுக்கும் பட்டியல் தயாரித்து, ஏனைய காலங்களில் செய்கின்ற வணக்கவழிபாடுகள் சிலவற்றை சற்று அதிகமாக, சற்று அதிகமானவர்கள் செய்யத் தயாராகி விட்டால் ரமழானே! நீ திருப்திப் படுவாயா? இத்தனையும் செய்து விட்டால் நீ இந்த சமூகத்துக்கு உயர்வுகளையும் வெற்றிகளையும் பெற்றுத் தருவாயா?

உன்னை எதிர்கொள்வதற்காக உன் வருகையை எதிர்கொண்டு கேட்கிறேன்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உன்னை வரவேற்றார்கள்; அன்னாரின் உத்தமத் தோழர் கள் உன்னை வரவேற்றார்கள். தொடர்ந்து வந்த இஸ் லாமிய உம்மத் கடந்த பல நூற்றாண்டுகளாக உன்னை வரவேற்றுள்ளது. அப்போதெல்லாம் நீ அவர்களுக்கு உயர்வுகளையும் வெற்றிகளையும் கொடுத்தாய்.

இன்று பல தசாப்தங்கள் நாம் உன்னைத் தாண்டிச் செல்கிறோம்; நீ எங்களைத் தாண்டிச் செல்கிறாய். உல கில் எந்த உயர்வுகளையும் நீ எமக்குத் தராமலே சென்று விடுகிறாயே!

நான் இப்படி உன்னிடம் கேட்கும்போது எனது உம்மத்தின் சில குரல்கள் என்னை விளித்துக் கேட்பது போல் இருக்கிறது.

"ஏன் இல்லை, எங்களுக்கு உயர்வு கிடைத்துத் தானிருக்கிறது; நாங்கள் ஒன்றும் தாழ்ந்து விடவில்லை..." என்று அதட்டி மறுமொழி கூறும் குரல்கள் ஒலிக்கின்றன.

இஸ்லாம் தாழ்ந்துபோன நிலையில் எமது உம்மத்தில் சிலர் உயர்ந்து நிற்கிறார்கள் என்பது உண்மைதான். எனினும், மொத்த இஸ்லாத்துக்கு ஏற்பட்டிருக்கும் தலைகுனிவும் தாழ்வும் அவர்களுக்கு எங்கே புரியப் போகிறது!

ரமழானே.. நீ சொல்வது எனக்குக்கேட்கிறது.

.. கஃபத்துல்லாஹ்வின் திரையைப் பிடித்து கொண்டு பாவமன்னிப்புக் கோருவோரின் உள்ளங்கள் சிலபோது உயரலாம். எனினும், அதே மனிதர்கள் தாம் வாழும் வீட்டையும் தெருவையும் கிராமத்தையும் சமூகத்தையும் பாவமீட்சிக்கு கொண்டு வருவதற்காக உழைக்கா விட்டால் அங்கு இஸ்லாத்துக்கு என்ன உயர்வு கிடைக்கப் போகிறது? விமானத்திலிருந்து பொதிகள் போடுவது போல, ரமழான் உயர்வுகளையும் வெற்றி களையும் பொதிகளாக போட்டுவிட்டுச் செல்லுமா இவர்களுக்கு...?

ரமழானே.. உனது இந்தக் குரலை செவிமடுத்துக் கொண்டே கூறுகிறேன். உன்னை வரவேற்பதில் இந்த உம்மத்துக்கும் மகிழ்ச்சிதான். உன்னை சிறப்பிக்க வேண்டும் என்பதிலும் இவர்களுக்கு ஆர்வம்தான். என்றாலும் அது ஒரு மக்கா வெற்றிக்கல்ல... காதிஸிய் யாவுக்காகவல்ல... நவீன தாத்தாரியர்களை தடுத்து நிறுத்துவதற்காக அல்ல... பைத்துல் மக்திஸின் விடு தலைக்காகவல்ல... குறைந்தபட்சம் ஒரு கிராமத்தில் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்ந்து, பகைமைகள் அகன்று, ஒற்றுமை மலர்ந்து, அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வின் மார்க்கத்தை அடுத்த பதினொரு மாதங்களில் மேலோங்கச் செய்வதற்குமல்ல!

உன்னை வரவேற்கும் ஆர்வம் வெறுமனே ஒரு "ஸீஸனல்" ஆர்வம்தான். அது ரமழான் தலைப்பிறையில் ஆரவாரித்து, நடுப்பிறையாகும் போது நலிவடைந்து 27 ஆகும் போது மீண்டும் கொதிநிலைக்கு வந்து ஷவ்வால் தலைப்பிறையோடு ஆறிப் போகின்றது.

இந்த ஸீஸனல் ஆர்வத்தைப் பார்க்கத்தான் நீ வரு கிறாய். அன்று வெற்றிகளை சுமந்து கொண்டு உன்னை வரவேற்ற உம்மத், இன்று தோல்விகளையும் தோல்வி மனப்பான்மையை சுமந்து கொண்டு, உன்னை வரவேற் பதைப் பார்க்க என்னால் முடியாதிருக்கிறது.

இருப்பினும் நீ ஒரு நாள் வருவாய்; உனது வரலாற்றுப் பெருமையைக் காண வருவாய்; வெற்றிகளைக் காண வருவாய்.

உமர்களும் தாரிக்களும் ஸலாஹுத்தீன்களும் தவழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று அவர்கள் எழுந்து நடை பயின்று, சிறுபராயம் தாண்டி, வாலிபம் அடைகின்றபோது நீ உனது வரலாற்றுப் பெருமையை மீட்டவருவாய்; வெற்றிகளைக் காணவருவாய்;

அந்த நம்பிக்கையோடு உன்னை வரவேற்கிறேன். உமர்களினதும் தாரிக்களினதும் ஸலாஹுத்தீன்களதும் வாரிசுகளுக்கு நீ சுமந்து வரும் அருள்களை சொரிந்து விட்டுப் போ... அவர்கள் செத்துப்போன இதயங்களை துடிக்க வைப்பார்கள்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்குளிர்ச்சி தரும் தொழுகை

உஸ்தாத் எம்.யூ.எம். ரம்ஸி, அதிபர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை

ஒரு மனிதன் 'லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' எனும் கொள்கையை ஏற்று இஸ்லாம் எனும் வட்டத்துக்குள் வந்து விட்டால் அடுத்து அவன் மீது கடமையாவது ஐவேளைத் தொழுகையாகும். ஒரு முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடும் தொழுகைதான். அதுவே சுவனத்தின் திறவுகோலாகும். மறுமைநாளில் முதன் முதலாக விசாரிக்கப்படுவதும் தொழுகை பற்றியே.

ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கஷ்டத்தோடு இறுதி மூச்சுக்களை விட்டுக் கொண்டிருந்தபோது ஏதோ சொல்ல முயற்சித்தார்கள். சரியாக விளங்கவில்லை. ஒரு நபித்தோழர் அருகில் சென்று காதுகொடுத்துக் கேட்டார். அப்போது அவர்கள் "அஸ்ஸலா அஸ்ஸலா..." (தொழுகை..தொழுகை...) எனக் கூறிக் கொண்டிருந்தார்கள்.

"யார் தொழுகையைப் பேணி நிறைவேற்றுவாரோ அது அவனுக்கு ஓர் பிரகாசமாகவும் ஆதாரமாகவும் மறுமை நாளில் தப்பிக்கொள்வதற்கான வழியாகவும் அமையும். யார் அதனைப் பேணுதலாக நிறைவேற்றவில்லையோ அவனுக்கு அந்தப் பிரகாசமும் ஆதாரமும் இருக்காது. மறுமை நாளில் தப்பிக் கொள்வதற்கான வழியும் இருக்காது. அந் நாளில் அவன் காரூன், பிர்அவ்ன், ஹாமன், உபை இப்னு கலப் ஆகியோருடன் இருப்பான்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்னதாக அப்துல்லாஹ் பின் அம்ர் இப்னு ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (அஹ்மத்)

கியாமத் நாளில் சுவனவாதிகள் நரகவாதிகளை நோக்கி "உங்களை நரகில் தள்ளிய விடயம் எது?" எனக் கேட்பார்கள். அதற்கவர்கள் "நாங்கள் தொழுபவர்களாக இருக்கவில்லை" எனக் கூறுவார்கள்.

(ஸூரா அல்முத்தஸ்ஸிர்)

"எவர் தொழுகையைக் கடமையெனக் கருதுவாரோ அவர் சுவனம் நுழைவார்" என நபியவர்கள் நவின்றதாக உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நடைமுறை வாழ்வை தெளிவுபடுத்தும் தொழுகை

தொழுகை எனும் வணக்கத்தை மேலோட்டமாக நோக்குமிடத்து, அது ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிகக் குறுகிய ஒரு நேரத்தையே பிடித்துக் கொள்வதைக் காணலாம். சிறிய சில ஓதல்களாகவும் கிரியைகளாகவுமே அதன் வெளித்தோற்றம் அமைந்துள்ளது. அவ்வாறாயின், அதற்கேன் இவ்வளவு பெரியதொரு முக்கியத்துவம் என்ற கேள்வி எழுகிறது.

ஆம், சுவனத்தை அனந்தரமாகப் பெறும் உத்தமர்களை அல்குர்ஆன் அடையாளப்படுத்தும்போது "அவர்கள் தமது தொழுகையில் உள்ளச்சம் உடையோராயிருப்பார்கள்" எனக் கூறுகிறது. உள்ளச்சம் எனும் விடயம் மிகக் கவனமாக நோக்கப்பட வேண்டும்.

"எத்தனையோ மனிதர்கள் இரவில் நின்று தொழுகிறார்கள். களைப்புடன் சிரமப்பட்டு விழித்திருந்ததைத் தவிர வேறு எந்தப் பலனும் அவர்களுக்கு இல்லை..."

(அந்நஸாஇ)

"தொழுகையின்போது யார் வேண்டுமென்றே தன் வலப்பக்கத்திலோ இடப்பக்கத்திலோ இருப்பவரை அறிந்து கொள்ள முயன்றால் அவரது தொழுகை வீணாகிவிடும்" என முஆத் பின் ஜபல் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

எனவே, உள்ளத்தை ஒருமுகப்படுத்தி உள்ளச்சத்துடன் தொழுகை நிறைவேற்றப்பட வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கிறது. இத்தகைய தொழுகைதான் ஓர் அடியானின் நடைமுறை வாழ்வை நெறிப்படுத்துகிறது; பாவங்

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருந்து பாதுகாக்கிறது; நற்குணங்களை வளர்க்கிறது. "நிச்சயமாக தொழுகை மானக்கேடான காரியங்கள், தீமைகளை விட்டும் தடுக்கிறது" என அல்குர்ஆன் கூறும் உண்மை இதுதான்.

மிக விரைவில் ஒரு மனிதனின் பாவங்களை விட்டும் அவனது தொழுகை அவனைத் தடுக்கவில்லையென்றால் அவனது தொழுகை பயனற்றுச் செல்கிறது. மேலும் அத்தகைய தொழுகையாளிகளுக்கு கேடுதான் என அல்குர்ஆன் சாபமிடுகிறது.

ஒரு மனிதர் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து "ஒருவர் இரவில் தொழுகிறார்; காலையில் திருடுகிறார்" எனக் கேட்டபோது "விரைவில் அவரது தொழுகை அத்தீமையிலிருந்து அவரைத் தடுத்துவிடும்" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

தொழுகையினூடாக ஒரு மனிதரிடத்தில் உருவாக வேண்டிய பண்புகளை அல்குர்ஆன் பட்டியல் படுத்தியுள்ளது.

அவன் தன் வாழ்வில் வரும் அனைத்து கஷ்டங்களின் போதும் பொறுமை காப்பான். நலவுகள் கிடைத்து விட்டால் சுயநலவாதியாக மாற மாட்டான். தனது செல்வத்தில் ஒரு பகுதியை ஏழைகள், யாசகர்களுக்காக ஒதுக்கிக் கொள்வான். எப்போதும் அவன் கற்பொழுக்கத்தோடு வாழ்வான். அமானிதங்களையும் உடன்படிக்கைகளையும் பேணி நடந்து கொள்வான். இத்தகைய தொழுகையாளிகள்தாம் சுவனத்தில் கண்ணியப்படுத்தப் பட்டிருப்பார்கள்.

தொழுகையில் கண்குளிர்ச்சி

தொழுகை ஒரு மனிதனை அல்லாஹ்வுக்காகவே வாழுமாறு தூண்டும். அவனது தீனை நிலைநாட்டும் பாதையில் உழைக்கத் தூண்டும். அவ்வாறு உழைக்கும் மனிதன் தனது பாதையில் பல கஷ்டங்களையும் எதிர்ப்புகளையும் காண்பான். அப்போதெல்லாம் தொழுகையினூடாக அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்டு மன அமைதி காண்பான். இதைத்தான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "எனது கண்குளிர்ச்சி தொழுகையில் இருக்கிறது" (அந்நஸாஈ) எனக் குறிப்பிட்டார்கள்.

இகாமதுத்தீன் எனும் இலட்சியத்தோடு வாழும் ஒரு மனிதனால்தான் இதனை உணர முடியும். ஏனையோரைப் பொறுத்தமட்டில் தொழுகை ஒரு கடமை. நேரத்துக்கு நிறைவேற்ற வேண்டிய ஒரு பொறுப்பு என்ற உணர்வுதான் இருக்கும். ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அந்த உயரிய இலட்சியத்தோடு உழைக்கும்போது அந்த இலட்சியப் பாதையில் எதிர்கொண்ட கஷ்டங்களைக் கண்டு கலங்கி நின்று, செய்வதறியாது போர்த்திக் கொண்டு உறங்கியபோது தான் தொழுகைக்கான முதல் கட்டளை வந்தது.

"போர்த்திக் கொண்டிருப்பவரே இரவில் சொற்ப நேரம் தவிர்த்து எழுந்து தொழுவீராக!"

இந்த இறை கட்டளையைத் தொடர்ந்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் அவர்களோடிருந்த உத்தம ஸஹாபிகளும் இரவு நேரத் தொழுகையைப் பக்குவமாய் நிறைவேற்றி வந்தார்கள். அது அவர்களுக்குப் பெரும் ஆறுதலாய் இருந்தது. கவலைகள் அனைத்தையும் மறந்துவிட வழியமைத்துக் கொடுத்தது. தொழுகையினூடாக அவர்கள் பெற்ற இறை உறவு பெரும் ஆனந்தமாக அமைந்தது. இந்த இரவு நேரத் தொழுகை பகற்பொழுதில் இகாமதுத் தீன் பணியில் உழைப்பதற்கு பெரும் உத்வேகத்தைக் கொடுத்தது. இரவானால் மறுபடியும் அவர்கள் தொழுகையில் மன அமைதி தேடுவார்கள்.

சுமார் 11 வருடங்கள் கழிந்தன. பின் மிஃராஜின் போது ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது. இதுவரை நிறைவேற்றிவந்த இரவுத் தொழுகை ஸுன்னத் ஆக்கப்பட்டது. இன்னும் பல ஸுன்னத்தான தொழுகைகளை ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்.

கண்குளிர்ச்சி காண்பதற்கு பர்ளாக்கப்பட்ட 17 ரகஆத்கள் மட்டுமல்ல, அதற்கப்பாலும் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒரு முஃமின் இவ்விரண்டினூடாகவும் கண்குளிர்ச்சியைத் தேடுவான்; மனஅமைதி காண்பான். ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு ஏதேனும் ஒரு பிரச்சினை ஏற்பட்டால் விரைவாகச் சென்று தொழுவார்கள் என ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

வர்ணனைக்கு அப்பாற்பட்ட அவர்களது நீண்ட இரவு நேரத் தொழுகையின் ரகசியம் இதுதான். அல்லாஹ்வுடனான உறவில் கண்ட இன்பத்தின் காரணமாக தூக்கமோ களைப்போ அவர்களுக்கு விளங்கவில்லை. கால்கள் வீங்கி வெடித்த போதிலும் அதை அவர்கள் பொருட்படுத்தாமலிருந்தார்கள்.

இவ்வாறு ஒரு முஃமின் தொழுகையில் கண்குளிர்ச்சி காண முடியுமாயின் தொழுகையை ஒரு பாரமாக உணர மாட்டான். பர்ளுகளோடு மாத்திரம் போதுமாக்கிக் கொள்ள மாட்டான். ஒரு தொழுகை முடிந்தால் மறு தொழுகையை எதிர்பார்த்திருப்பான். இடையில் உள்ள ஸுன்னத்தான தொழுகைகளை ஆசையுடன் நிறைவேற்றிக் கொள்வான். குறிப்பாக இரவுத் தொழுகையில் மிகக் கூடிய கவனம் செலுத்துவான்.

"அல்லாஹ் ஒரு மனிதனுக்கு அருள்புரியட்டும். அவன் இரவில் எழுந்து தொழுதான். தன் மனைவியையும் எழுப்பினான். அவள் எழும்பாதபோது முகத்தில் தண்ணீரைத் தெளித்து எழுப்பினான். அவ்வாறே ஒரு பெண்ணுக்கு அருள்புரியட்டும். அவள் இரவில் எழுந்து தொழுதாள். தன் கணவனையும் எழுப்பினாள். அவன் எழும்பாதபோது முகத்தில் தண்ணீரைத் தெளித்து எழுப்பினாள்" என ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்னதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள். (அபூதாவுத்)

இங்கு நாம் ஒரு சில ஹதீஸ்களையே நினைவுபடுத்தியுள்ளோம். முடிந்தளவு நாம் அவற்றை கவனத்தில் எடுத்து எமது தொழுகைகளை உயிரோட்டமானதாக ஆக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்காக இந்த ரமழானை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வோம். தொழுகையில் கண்குளிர்ச்சி காண்பதற்கு அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக!

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உஸ்தாத் குர்ரம் முராத்

தூய ரமழானே வருக...!

இதோ, இன்னும் சில நாட்கள்தான். மீண்டும் வான்மறை வழங்கப்பட்ட வளமான மாதம் ரமழான் தொடங்கி விடும்.

அண்ணல் நபிகளார் எந்த மாதத்தை 'ஷஹ்ரே அழீம்' (கண்ணியம் நிறைந்த மாதம்) என்றும்; 'ஷஹ்ரே முபாரக்' (அருள் நிறைந்த மாதம்) என்றும் சொன்னாரோ அந்த மாதத்தின் மகத்துவத்தை எவரால்தான் வார்த்தைகளில் வடித்தெடுக்க முடியும்? நம்முடைய கற்பனைச் சிறகுகளால் அந்த மகத்துவத்தின் சிகரங்களை எட்டிப் பார்க்கவும் முடியாது. நம்முடைய நாவால் அதன் அருள் வளங்களை எண்ணிப் பார்க்கவும் முடியாது.

ரமழான் மகத்துவம் மிக்க மாதம்

இந்த மாதத்தில்தான் மகத்தான ஓர் இரவு பொதிந்து கிடக்கிறது. அந்த ஒரே ஓர் இரவில் ஆயிரக்கணக்கான மாதங்களுக்கான அருள் வளங்களின் புதையல்கள் ஈட்டப்பட்டிருக்கின்றன.

"நாம் இதனை -தெளிவான வேதத்தை- அருள் பாலிக்கப்பட்ட ஓர் இரவில் இறக்கி வைத்தோம்." (44: 3)

இந்த மாதத்தின் ஒவ்வொரு நாளும் புனிதமான, தூய்மையான நாள் ஆகும். இந்த மாதத்தின் ஒவ்வோர் இரவும் அருள் வளம்மிக்க இரவாகும்.

ஒவ்வொரு நாளும் பொழுது விடியும்போது எண்ணற்றவர்களுக்கு எப்படிப்பட்ட அருட்பேறு கிடைக்கிறது தெரியுமா? இறைவனுக்காகவே, இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காகவே, இறை உவப்பைப் பெற வேண்டும் என்பதற்காகவே, தம்முடைய ஆகுமான உடல் தேவைகளையும் இச்சைகளையும் துறந்து விட்டு இறைவனே எங்களின் அதிபதி; இறை உவப்பே எங்களின் இலக்கு என்றும் அவனுக்கே கீழ்படிந்து வாழ வேண்டும் என்கிற ஆசையில்தான் வாழ்வின் அசல் பசியும் தாகமும் இருக்கின்றன என்றும்; அவனுடைய உவப்பில் தான் இதயங்கள் நிறைவு பெறுகின்றன, நரம்புகள் நனைகின்றன என்றும் சான்றுபகர்கின்ற அருள்பேறு அது! அதனைவிடச் சிறப்பானது, மேன்மைமிக்கது வேறு உண்டா?

இரவில் இருள் கவ்வத் தொடங்கும்போது எண்ணற்ற அடியார்கள் இறைவன் முன் பணிவுடன் நிற்கிறார்கள்; அவனோடு உரையாடுகிறார்கள்; அவனின் வசனங்களைக் காதார, மனமாரக் கேட்கிறார்கள்; அவனுடைய நினைவு தருகிற சுவையால், இன்பத்தால் இதயம் குளிர்கிறார்கள்; அவர்களுடைய இதயங்கள் கண்ணாடி விளக்குகளைப் போல ஒளிமயமாய் ஜொலிக்கின்றன.

"அவனது ஒளிக்கு உவமை இவ்வாறாகும். ஒரு மாடத்தில் விளக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவ்விளக்கு ஒரு கண்ணாடிக் கூண்டினுள் இருக்கிறது. அக்கண்ணாடிக் கூண்டு முத்தாய் ஒளிரும் தாரகை போன்று உள்ளது. அவர்கள் எத்தகையோர் எனில், தொழுகையை நிலைநாட்டுவதிலிருந்தும் ஸகாத் கொடுப்பதிலிருந்தும் வியாபாரமும் கொள்வினை கொடுப்பினையும் அவர்களைப் பராமுகமாக்கி விடுவதில்லை." (24: 35,36)

"இந்த மாதத்தின் ஒவ்வொரு நொடியிலும் எந்த அளவுக்கு அருள் வளங்களின் புதையல் பொதிந்து கிடக்கின்றதெனில், நஃபில் நற்செயல்கள் ஃபர்ழான நற்செயல்களின் அந்தஸ்தைப் பெற்று விடுகின்றன. ஃபர்ழான நற்செயல்களோடு எழுபது மடங்கு அதிக நன்மைகளைத் தருவதாக மகத்துவம் பெற்று விடுகின்றன." (அல்பைஹகி)

"ரமழான் மாதத்தில் வானத்துக் கதவுகள் திறக்கப்பட்டு

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றன. அருள் வளங்கள் மழையாய்ப் பொழிகின்றன. சுவனத்தின் கதவுகள் திறக்கப்பட்டு விடுகின்றன. நற்செயல்கள் நன்மைகளுக்காகன பாதைகள் எளிதாக்கப்படுகின்றன. எல்லோருக்குமே நன்மை செய்வதற்கான வாய்ப்பும் அருளும் கிட்டுகின்றன. நரகத்தின் கதவுகள் மூடப்பட்டு விடுகின்றன. தீமைகளின் பாதையில் முட்டுக்கட்டையாக நோன்பு வழிமறித்து நிற்கிறது. ஷைத்தான்கள் விலங்குகளால் பூட்டப்பட்டு விடுகிறார்கள். தீமைக்கான வாய்ப்புகள் வெகுவாகக் குறைக்கப்பட்டு விடுகின்றன."

(அல்புகாரி, முஸ்லிம்)

"ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பவனின் முந்தைய, பிந்தைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும். இரவுப் பொழுதுகளைத் தொழுகையில் கழிப்பவனின் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும். மகத்துவம் மிக்க இரவில் தொழுகின்றவனின் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும் என நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. ஒரே ஒரு நிபந்தனைதான். அவன் தன்னுடைய பேச்சிலும் செயலிலும் வாய்மையுடன் நடக்கட்டும். தன்னுடைய உறுதிமொழியை வாய்மையுடன் நிறைவேற்றட்டும். தன்னைத் தானே உணர்ந்து இருக்கட்டும். சுய உணர்வு, சுய மதிப்பீடு ஆகியவற்றில் கவனம் பிசகாமல் இருக்கட்டும்."

(அல்புகாரி, முஸ்லிம்)

உங்களுடைய பங்கு

இந்த மாதம் ஐயமின்றி மகத்தானது தான். அருள் வளம் மிக்கதுதான். ஆனால், வெறுமனே காலச் சக்கரத்தின் சுழற்சியால் இந்த மாதத்தைப் பெற்றவர்கள் எல்லோருக்கும் இதன் அருள் வளங்கள் கிடைத்துவிடும் என்பதன்று.

மழை பெய்யும்போது அதன் மூலம் பல்வேறு நதிகள், ஆறுகள், குளங்கள், குட்டைகள், ஏரிகள், பெருங்கடல்கள் எனப் பலவும் தத்தமது பரப்பளவுக்கும் ஆழத்திற்கும் ஏற்ப மழை நீரால் பயன்பெறுகின்றன. மழை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகப் பெய்கிறது. ஆனால், குட்டையில் அதன் பரப்பளவுக்கும் ஆழத்திற்கும் ஏற்ப குறைந்த அளவு நீரே தேங்கி நிற்கிறது.

இதேபோல பெரும் பாறாங்கல்லிலோ, வரண்ட நிலத்திலோ விழுகின்ற நீரும் தேங்கி நிற்பதுமில்லை; தேங்கி நின்று எவருக்கும் பயன் அளிப்பதும் இல்லை. பெய்த நீரெல்லாம் வழிந்தோடி விடுகிறது. ஆனால் செழிப்பான மண் தரையில் மழைநீர் பெய்யும்போது அது பச்சைப் பசேலென்று பூத்துக் குலுங்குகிறது. மனிதர்களுடைய இயல்பும் அவர்களின் விதியும் இதைப் போன்றதே...!

புனித ரமழானின் அருள் வளப் புதையலில் உங்களுக்கு என்னென்ன கிடைக்கும்? செழிப்பான நிலத்தைப் போல உங்களுடைய இதயமும் இளகியதாக, கண்களும் ஈரமானதாக இருந்தால் உங்களுக்குள் ஈமானிய விதையை நடும்போது மேலும் உங்களுடைய திறமை, திறன் ஆற்றலுக்கேற்ப அதனைப் பாதுகாக்கும்போது அந்த விதை பெரும் மரமாக வளரும். அந்த மரத்தில் நற்செயல் எனும் பூக்கும் மலர்களும் கனிகளும் மணம் சேர்க்கும். பிறகு நீங்கள் நிலையான அரசை அறுவடை செய்வீர்கள்.

விவசாயியைப் போல நீங்களும் உழைத்தால், தொய்வில்லாமல் பாடுபட்டால் சுவனத்து அன்பளிப்புகளை அறுவடை செய்வீர்கள். எந்த அளவுக்கு உழைப்பீர்களோ அந்த அளவுக்கு கனியின் சுவையும் திடமும் கூடி இருக்கும்.

உங்களுடைய இதயம் கல்லாக இருந்தால், நீங்களும் அக்கறையில்லாத, பொறுப்பற்ற விவசாயியைப் போல தூங்கி வழிந்து கொண்டிருந்தால் நோன்புகள், தராவீஹ், அருள்வளம் ஆகியவற்றின் நீர் யாவும் அடித்துச் செல்லப்பட்டு விடும். உங்களுக்கு எதுவுமே கிடைக்காது.

இறைவனின் நாட்டமும் அருளும் இன்றி நிச்சயமாக எதுவுமே கிடைக்காது. ஆனால் யார் முயற்சி செய்கிறாரோ, பாடுபடுகிறாரோ அவருக்குத் தான் இறைவனின் நாட்டமும் அருளும் கிடைக்கின்றன.

கவனித்தீர்களா, இறைவன் என்ன சொல்கிறான்?

"அவனை நோக்கி ஓர் அடி முன்னேறினால் அவன் உங்களை நோக்கி இரண்டு அடி எடுத்து வைக்கிறான். நீங்கள் அவனை நோக்கி நடந்து சென்றால் அவன் உங்களிடம் ஓடோடி வருகிறான்."

(முஸ்லிம்)

நீங்கள் நின்று கொண்டே இருந்தால், முதுகைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தால், துளிகூட அக்கறையோ ஈடுபாடோ பொறுப்போ இல்லாமல் நின்றிருந்தால், நீங்களே சொல்லுங்கள், இறைவனின் நாட்டமும் அருளும் எப்படிக் கிடைக்கும்?

ரமழான் மாதம் கடந்து கொண்டிருக்கிறது; இறை கருணையும் அருள் வளங்களும் கொட்டோ கொட்டு எனப் பொழிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நீங்கள்தாம் எத்துணை துரதிஷ்டசாலி! உங்களுடைய பாத்திரம் காலியாக இருக்கிறதே...! இந்த நிலை உங்களுக்கு வேண்டாம்.

ஏதாவது செய்வதற்கும் உங்களுக்கு உரிய இறையருளின் பங்கைச் சேகரித்துக் கொள்வதற்கும் எண்ணம் கொண்டு எழுங்கள். வரிந்து கட்டிக் கொண்டு நில்லுங்கள்.

"எத்தனையோ நோன்பாளிகளுக்கு நோன்புகளால் பசி, தாகத்தைத் தவிர வேறெதுவும் கிடைப்பதில்லை. எத்தனையோ தொழுகையாளிகளுக்கு தமது தொழுகைகளால் இரவில் விழித்திருந்ததைத் தவிர வேறு எதுவும் கிடைப்பதில்லை."

(அத்தாரமி)

எல்லாமே உங்களுடைய கையில்தான் உள்ளது

ரமழான் மாதம் வருவதற்கு முன்பே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபித்தோழர்களுக்கு இந்த மாதத்தின் சிறப்பையும் மகத்துவத்தையும் எடுத்துரைப்பார்கள். அதன் அருள்வளங்களின் செல்வக் குவியல்களில் தத்தமது பங்குகளை முழுமையாக ஈட்டிக் கொள்வதற்காக கடுமையாக உழைக்குமாறு அறிவுறுத்துவார்கள்.

திடமான எண்ணம்

முதலாவதாக ரமழானைச் சிறப்பாக, சரியாகப் பயன்படுத்துவேன் என்ற திடமான எண்ணம் இருக்க வேண்டும். எண்ணம் இல்லாமல் செயல் இல்லை. உயிரில்லாமல் உடல் இல்லை என்பது போல!

ரமழானை எப்படி வரவேற்க வேண்டும் தெரியுமா? அதன் அருமை பெருமைகளை மறுபடியும் உணர வேண்டும். இறையச்சத்தைப் பெறுவதற்குத்தான் ரமழான். அந்த இறையச்சத்தின் நறுமணம் எனது வாழ்விலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவ வேண்டும் என்ற அளப்பரிய ஆசையால் மனம் பரபரக்க வேண்டும். இந்த மாதத்தின் ஒவ்வோர் இரவையும் பகலையும் ஒவ்வொரு மணித்துளியையும் பயன்படுத்துவேன், இதயத்தைப் பக்குவப்படுத்துவேன் என்ற ஆசை பொங்க வேண்டும். எனது வாழ்வின் இலட்சியத்தை அடையும் சக்தியை எனக்குள் உருவாக்க இதோ ஒரு வாய்ப்பு என்ற உறுதி இருக்க வேண்டும்.

அந்தத் திடமான எண்ணத்துடன் இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும்; கருணையாளன் முன்னால் கையேந்திக் கேட்க வேண்டும்; அவனது புகழ் பாடி, அவனது தூதர் மீது ஸலவாத் ஓதி, பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்ட பிறகு ரமழானை சிறப்பாகக் கழிக்க, அதன் அருள்மழையில் நனைய, அதில் மூழ்கி முத்து எடுக்க அருள் புரிவாய் ரஹ்மானே என்று பிரார்த்திக்க வேண்டும்.

குர்ஆனுடன் தொடர்பு

அடுத்ததாகக் குர்ஆனுடனான தொடர்பு. ரமழான் குர்ஆனின் மாதம். தொழுகை, நோன்பு முதலிய வழிபாடுகள் எல்லாமே ஏதாவதொரு வகையில் குர்ஆனைச் சுற்றியே அமைந்துள்ளன.

தராவீஹ் தொழுகைகளை முறையாக நிறைவேற்ற வேண்டும். நேரத்தோடு பள்ளிவாசலுக்குச் சென்று முதல் வரிசையில் இடம்பிடிக்க முந்த வேண்டும்.

அல்லாஹ்வின் இல்லத்தில் அல்லாஹ்வின் முன் கைகளைக் கட்டிக் கொண்டு பணிவுடன் அவனது வார்த்தைகளைக் கேட்பது எத்துணை பெரிய நற்பேறு! மாதம் முழுவதும் விடாமல் தராவீஹ் தொழுதால் குர்ஆன் முழுவதையும் கேட்டு விடலாமே!

அதேசமயம் வீட்டில் அன்றாடம் ஒரு பாகம் (ஜுஸ்உ) குர்ஆன் ஓதலாம். முடியாதவர்கள் குறைந்தபட்சம் அரை ஜுஸ்உ ஆவது ஓத வேண்டும்.

அத்துடன் குர்ஆனைப் புரிந்து ஓத வேண்டும்; மொழிபெயர்ப்போடு படிக்க வேண்டும்; ஓதும்போதும் அந்த வசனங்களிலேயே மூழ்கிவிட வேண்டும்.

அல்லாஹ் என் முன்னால் இருக்கிறான்; என்னுடன் உரையாடுகிறான், வழிகாட்டுகிறான்; இதைச் செய், இதைச் செய்யாதே என்று சொல்கிறான்; என்ன நடக்கும், எது கிடைக்கும் என்பதையெல்லாம் விளக்குகிறான் என்ற உணர்வுடன் மனம் ஒன்றி ஓத வேண்டும்.

இறையச்சம்

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்வதிலிருந்து விலகியிருத்தல். நோன்பு என்பது பசித்திருப்பதும் தாகித்திருப்பதும் மட்டுமல்ல, அல்லாஹ்வின் கட்டளைகளை மீறாமலிருப்பதும்தான்.

அறிந்தோ அறியாமலோ பல விடயங்களில் நாம் அலட்சியத்துடன் நடந்து கொள்கிறோம். சின்ன விடயம்தானே என்ற சிந்தனையில் ஈமானையே- இறைநம்பிக்கையையே சிதைத்து விடுகிறோம்.

இத்தகைய சின்ன விடயங்களைப் பட்டியலிடுங்கள். அவற்றை வாழ்விலிருந்து அகற்ற உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.

நாவடக்கத்துடன் ஆரம்பிக்கலாம். யாரிடமும் சண்டையிட மாட்டேன்; இரைந்து பேச மாட்டேன்; புறம் பேச மாட்டேன்; கெட்ட வார்த்தைகளைச் சொல்லேன்; கேலி செய்யேன்... அன்றாடம் இவை குறித்து சுய மதிப்பீடு செய்யலாம்.

நற்செயல்களில் ஆர்வம்

நற்செயல்களில் ஈடுபட கட்டுக் கடங்காத ஆர்வம் வேண்டும். கட்டாயத் தொழுகைகள், உபரியான தொழுகைகள், நற்செயல்கள் ஆகியவற்றை அதிகம் செய்ய வேண்டும்.

ஒருவருக்கொருவர் தொடர்புகளை வலுப்படுத்தலாம். சகோதரனைப் புன்னகை பூத்த முகத்துடன் பார்ப்பதும்கூட நற்செயல்தான். அடுத்தவர் வாளியில் தண்ணீர் ஊற்றுவதும் நற்செயல்தான். பாதையில் கிடக்கும் கற்கள், முட்கள் போன்றவற்றை அகற்றுவதும் நற்செயல்தான். பசித்தவருக்கு உணவளிப்பதும் நற்செயல்தான்.

ஏதாவது மூன்று நற்செயல்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை மாதம் முழுவதும் தொடர்ந்து செய்ய முயன்று பார்க்கலாம்.

இரவுத் தொழுகை

இரவில் விழித்திருந்து இறைவனைத் தொழுதல். தராவீஹ் தொழுகையோடு பின்னிரவுத் தொழுகையான தஹஜ்ஜுத் தொழுகையையும் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும்.

இரவில் விழித்திருந்து தொழுவது, குர்ஆன் ஓதுவது, சுயமதிப்பீடு செய்வது, கண்ணீர்விட்டு அழுது பாவ மன்னிப்புக் கோருவது இவையெல்லாமே இறையச்சம் பெற இன்றியமையாதவையே.

ஸஹர் செய்ய எழத்தான் செய்கிறீர்கள். பத்து நிமிடம் முன்னால் எழுந்து இரண்டு ரக்அத் தொழுங்கள்.

இரண்டு ரக்அத் தொழுவதற்கும் முடியவில்லையெனில் குறைந்தபட்சம் இறைவனுக்கு முன்னால் சிரம் தாழ்த்தி நெற்றி பதித்து ஸஜதா செய்யுங்கள். அழுங்கள், பாவங்களுக்காக மன்னிப்புக் கோருங்கள். நல்லவற்றை யாசியுங்கள். இறைவழியில் நிலைத்திருக்க உறுதியைக் கேளுங்கள்.

பிரார்த்தனைகள்

வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு நிமிடமும் செய்ய வேண்டியவை தாம் திக்ரும் துஆவும்.

திக்ர் என்பது என்ன? அது இறைவனுக்கு விருப்பமானது. வார்த்தைகளால் மட்டுமன்றி, உள்ளத்தாலும் செயல்களாலும் இறைவனை நினைவு கூர்தல் வேண்டும். நோன்பும்கூட திக்ர்தான். குர்ஆன் ஓதுவதும் குறிப்பாக தொழுகையில் குர்ஆன் ஓதுவதும் திக்ர்தான்.

திக்ர்களைத் தேர்ந்தெடுத்து மனனம் செய்து கொள்ளலாம். அவற்றை அன்றாடம் ஓதி வரலாம். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நமக்கு என்னென்ன பிரார்த்தனைகளைக் கற்றுத் தந்திருக்கின்றாரோ அவற்றையெல்லாம் ஓதி வரலாம்.

ரமழானில் சில தருணங்கள் மிக முக்கியமானவை. நோன்பு துறக்கும் நேரமும் அவற்றில் ஒன்று. அந்த நேரத்தில் கருணையாளனிடம் அவன் அருளுக்காக மன்றாடுங்கள்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைலத்துல் கத்ர்

அடுத்ததாக, லைலதுல் கத்ர். ரமழான் மாதத்தின் இறுதிப் பத்தில் ஒற்றைப்படை இரவுகளில் ஒன்று தான் லைலதுல் கத்ர். இது கண்ணியம் மிக்க இரவாகும். இந்தப் பத்து இரவுகளில் அதனைத் தேட வேண்டும். அந்த இரவில்தான் குர்ஆன் அருளப் பட்டது. தொழுதல், குர்ஆன் ஓதுதல், பிரார்த்தித்தல் என்று அந்த இரவைக் கழிக்க வேண்டும்.

இரவு முழுவதும் தொழுங்கள். முடியா விட்டால் முடிந்த அளவுக்கு விழித்திருந்து தொழுங்கள். மனம் உருகிப் பாவமன்னிப்பு கேளுங்கள்.

ரமழானின் இஃதிகாஃப்- இறைவனுக்காக பள்ளிவாசலில் தங்கியிருத்தல்- மிகவும் விரும்பத்தக்க ஒன்றாகும். உலகின் விருப்பவிழைவுகள், வேலைகள் எல்லாவற்றையும் விட்டு விட்டு இறையில்லத்தில் இறைவனுக்காக மட்டுமே நேரத்தை அர்ப்பணித்து விடுவதுதான் இஃதிகாஃபின் அடிப்படையாகும்.

பத்து நாளும் இஃதிகாஃப் இருப்பது நல்லது. இயலாவிட்டால் முடிந்த அளவு இஃதிகாஃப் இருக்கலாம்.

இறைவழியில் செலவிடுதல்

அடுத்ததாக, இறைவழியில் செலவழிப்பது. தொழுகைக்குப் பிறகு மிகப் பெரிய இறைவழிபாடு இறைவழியில் செலவழிப்பதுதான்.

அல்லாஹ் அருளிய அனைத்தையும் அவனது பாதையில் செலவழிப்பது. நேரத்தையும் உடல் ஆற்றலையும் திறமைகளையும் அவனுடைய வழியில் செலவிடல் வேண்டும். அனைத்தையும் விட பணத்தை! ஏனெனில், உலக மோகத்தின் வேர் பணம்தான். உலக மோகம்தான் அனைத்துத் தீமைகளுக்கும் ஊற்று.

எனவே, அந்த உலக மோகத்தைக் கட்டுக்குள் கொண்டுவர இறைவழியில் பணத்தைச் செலவிட வேண்டும். இறையச்சங் கொண்டவர்களின் கட்டாயப் பண்பு இறைவழியில் செலவழிப்பதுதான். ரமழானில் இச்சைகளை எரித்து நோற்பதுடன் பண ஆசையையும் எரித்தால் இறையச்சத்தைப் பெறுவதற்கான உங்களது முயற்சி பெரு வெற்றிபெறும்.

ரமழானில் உங்களது பணப்பை திறந்தே இருக்கட்டும். மார்க்கத்தை நிலைநாட்டுவதற்காக உற்றார்-உறவினருக்காக, அநாதைகளுக்காக, ஆதரவற்றவர்களுக்காக எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவிகளைச் செய்து கொண்டே இருங்கள்.

ஆனால், கொடுப்பதெல்லாம் இறைஉவப்புக்காகவே என்ற உணர்வு எப்போதும் மிகைத்திருக்கட்டும். கைம்மாறு எதிர்பாராமல் இந்தப் பணி நடக்கும். ஸகாத்தையும் முழுமையாக, சரியாகக் கணக்கிட்டு உரியவர்களிடம் சேர்ப்பித்துவிட வேண்டும்.

மனிதநேயம்

அனைத்தையும் தழுவிய முழுமையான மனித நேயம் வேண்டும்.

ரமழான் மாதம் கருணையின் மாதம். மற்ற மனிதர்களிடம் பரிவு காட்ட வேண்டிய மாதம். குறிப்பாக, பொருளாதார விடயத்தில் ஒருவர் மற்றவரின் கஷ்டங்களை, கவலைகளை, குறைகளை, துக்கங்களைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய மாதமாகும்.

பசித்தவருக்கு உணவளிப்பது, நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது, அநாதைகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவது, உறவினர் தொடர்புகளை வலுப்படுத்துவது எல்லாமே இதில் அடங்கும்.

நோன்பு துறக்க உதவுவது மிகப் பெரிய நற்செயல். ஒரு பேரீத்தை, ஒரு மிடறு பால், ஒரு டம்ளர் நீர் கொடுத்தாலும் கோடி நன்மை!

எனவே, இந்த மாதத்தில் இவற்றில் அதிகம் கவனம் செலுத்துங்கள். சகோதர சகோதரிகளின் நலம் நாட வேண்டும். பசித்தவருக்கு உணவளிப்பது பெரும் புண்ணியம். மன்னிப்பும் நரக வேதனையிலிருந்து பாதுகாப்பும் கவ்ஸர் குளத்தில் நீர் அருந்தும் பேறும் சுவனத்தில் நுழையும் வாய்ப்பும் இவற்றில்தான் அடங்கியிருக்கின்றன.

குர்ஆனின் பக்கம் அழைப்பு

அடுத்ததாக, குர்ஆனின் பக்கம் அழைப்பு. இறைவனின் கோபத்திலிருந்தும் நரக நெருப்பிலிருந்தும் ஒருவரைக் காப்பாற்றுவதுதான் நாம் அவருக்குச் செய்யக்கூடிய மகத்தான சேவை.

உலகில் நாம் உணரும் பசி, தாகம் எல்லாம் உலகோடு முடிந்து விடும். ஆனால் மறுமையின் பசியும் தாகமும் நிலையானவை; கொடுமையானவை. உணவோ முட்கள்தான். குடிப்பதற்கோ இரத்தமும் சீழும் கொதிநீரும்தான்!

அந்தக் கொடுமையிலிருந்து ஒருவரை விடுவிக்கக் கூடிய ஆற்றல் படைத்ததுதான் குர்ஆன். குர்ஆனின் மாதத்தில் குர்ஆனின் செய்தியை மற்றவருக்கு எடுத்துச் செல்வதுதானே சாலச் சிறந்த நற்செயல்!

ரமழானில் தொழுகை, குர்ஆன் ஓதுதல், உபரியான தொழுகை, தராவீஹ், இறை தியானம் என்று நன்மைகளைத் திரட்டுவதில் கவனமெல்லாம் இருக்கும். இத்தகைய நிலையில் மிகப் பெரிய நற்செயலிலிருந்து, என்றென்றும் நிலையான நன்மைகள் கிடைக்கக் கூடிய பணியிலிருந்து உங்கள் கவனம் திரும்பிவிடக் கூடாது.

இறைவனின் பக்கம் இறையடியார்களை அழைப்பது- இறைமறையின் பக்கம் இறையடியார்களை அழைப்பதுதான் மிகப் பெரிய நற்செயல் ஆகும். மிகவும் இலாபகரமான, அதிகமான கூலி கிடைக்கக் கூடிய, உங்களது உளத்தூய்மைக்கு வழிவகுக்கும் நற்செயல் அது!

குர்ஆன் பக்கம் அழைப்பதையும் ரமழானில் வழக்கமான பணியாக ஆக்கிக் கொள்ளுங்கள். மக்களைச் சந்தியுங்கள், பேசுங்கள்; குர்ஆனின் செய்தியை நோன்பில் ஆரம்பித்து சொல்லுங்கள். நோன்பு துறக்கும் நிகழ்ச்சிக்கு மற்றவர்களையும் அழையுங்கள்.

ஓரிரு தோழர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தொடர்ந்து சந்தித்து, குர்ஆனின் செய்தியைச் சொல்லுங்கள்.

நன்றி: சமரசம்

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதனால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஜெம்ஸித் அஸீஸ் -

மேற்கின் மகுடிக்கு ஆடும் பங்களாதேஷ் அரசு

ஜமாஅத்தே இஸ்லாமி முக்கியஸ்தர்கள் கைது!

பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீர் மௌலானா முதீஉர் ரஹ்மான் நிஸாமி, பொதுச் செயலாளர் அலி அஹ்ஸன் முஹம்மத் முஜாஹித் மற்றும் அதன் பதில் தலைவர் மௌலானா திலாவர் ஹுஸைன் ஸெய்யித் ஆகியோர் கடந்த ஜூன் 29ஆம் திகதி பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் பங்களாதேஷ் பொலிஸாரினால் கைதுசெய்யபபட்டு ஜூன் 30ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பின்னணி

டாக்கா நகரில் இடம்பெற்ற ஒரு பொது ஒன்று கூடலில் ஜமாஅத்தே இஸ்லாமியைச் சேர்ந்த மௌலானா ராபிகுல் இஸ்லாம் கான் 'முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாழ்வும் பணியும்' எனும் கருப்பொருளில் நடைபெற்ற கலந்துரையாடலில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளைப் போன்றே மௌலானா முதீஉர் ரஹ்மான் நிஸாமி அவர்களுக்கும் ஏற்படுகிறது என கருத்துத் தெரிவித்தமையானது, பங்களாதேஷ் முஸ்லிம்களின் மத உணர்வைப் பாதிப்பதாகவும் அவர்களின் மனதைப் புண்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இதனால் இந்நிகழ்வுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் என அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் ஒரு முஸ்லிம் அமைப்பு வெவ்வேறான ஐந்து மனுக்களை நீதிமன்றில் தாக்கல் செய்தது.

இதனையடுத்து நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையின் பேரில் நிகழ்வில் கலந்து கொண்ட மௌலானா ராபிகுல் இஸ்லாம் உட்பட்ட அந்நிகழ்வுக்குச் செல்லாத ஜமாஅத்தின் அமீர், பொதுச் செயலாளர், பதில் தலைவர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தான் அவ்வாறு கருத்துத் தெரிவிக்கவில்லை; இது என் மீது சுமத்தப்பட்டுள்ள பொய்க் குற்றச்சாட்டு என நிகழ்வில் கலந்துகொண்ட மௌலானா ராபிகுல் இஸ்லாம் தெரிவித்துள்ளபோதிலும், அதனைக் கருத்திற் கொள்ளாது இன்றுவரை அவர்களை விளக்கமறியலில் வைத்திருக்கிறது பங்களாதேஷ் அரசு.

இந்தியாவின் ஓரவஞ்சனை, தானே தென்னாசியாவை அடக்கியாள வேண்டும் என்ற மேலாதிக்க சிந்தனை, பங்களாதேஷை கிறிஸ்தவமயப்படுத்தும் நோக்கில் செயற்படும் மிஷனறிகளின் தீவிர ஈடுபாடு, இஸ்லாத்துக்கெதிரான போரில் ஒன்றுசேர்ந்து கைகுலுக்கிக் கொண்டிருக்கும் மேலைத்தேய நாடுகளின் தலையீடு என்பன பங்களாதேஷில் சூறாவளியாக சுழன்றடித்துக் கொண்டிருக்கின்றன. மேற்குறித்த சக்திகளுக்கு தற்போதைய ஷேக் ஹஸீனா தலைமையிலான அவாமி லீக் அரசாங்கம் பூரண ஆதரவு நல்கி வருகிறது.

இம்மூன்று சக்திகளையும் குழப்பவாதிகளையும் நாட்டின் ஊழல் பெருச்சாளிகளையும் தொடர்ந்தேர்ச்சியாக எதிர்த்து வருவது பங்களாதேஷின் ஜமாஅத்தே இஸ்லாமி ஒன்றுதான். ஜமாஅத்தின் வளர்ச்சியும் அதன் அரசியல் காய்நகர்த்தலும் ஆளும் அவாமி லீக் அரசுக்கு பெரும் தலையிடியாக விளங்குகிறது. எனவே, பங்களாதேஷில் ஏற்பட்டு வரும் இஸ்லாமிய எழுச்சியை அடக்கி ஒடுக்க வேண்டும்; அவ்வெழுச்சிக்குப் பின்னணியில் நிற்கும் ஜமாஅத்தே இஸ்லாமியின் செயற்பாடுகளை முடக்கி இஸ்லாமிய கொள்கைக்கு சாவுமணி அடிப்பதன் மூலம் அவாமி லீக் கட்சி தனது அரசியல் அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டு இஸ்லாத்தின் ஆணிவேரையே தகர்த்தெறிய எதையும் செய்யத் துணிந்திருக்கிறது.

இந்தப் பின்னணியில் செயற்படும் பங்களாதேஷ் அரசின் நீண்டகாலத் திட்டத்தின் ஓர் அங்கம்தான் இக்கைது நடவடிக்கையும் புனையப்பட்ட குற்றச்சாட்டுகளுமாகும்.

பங்களாதேஷில் ஜமாஅத்

இந்தியாவிலிருந்து பிரிந்து சென்று பாகிஸ்தான் தனி நாடாக ஆனதிலிருந்து இந்தியா- பாகிஸ்தான் முறுகல் தொடர்ந்து கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில் முழு மூச்சாக செயற்பட்ட இந்தியா, அவாமி

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீக் கட்சியை தன் வலையில் வீழ்த்தி அதன் பூரண ஒத்துழைப்போடு 1971இல் பாகிஸ்தானைத் துண்டாடியது. விளைவாக பங்களாதேஷ் தனிநாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. பாகிஸ்தான் துண்டாடப்படுவதை ஜமாஅத்தே இஸ்லாமி விரும்பவில்லை. அதற்கெதிராக அப்போது குரல் கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

1971இல் ஏற்பட்ட பங்களாதேஷின் பிரிவினையைத் தொடர்ந்து பங்களாதேஷில் மூக்கை நுழைத்த இந்தியா, தனக்கு பூரண விசுவாசமான அவாமி லீக் கட்சியை ஆட்சியில் அமர்த்தியது. இந்தியாவின் மகுடிக்கு அவாமி லீக் கட்சி எழுந்து நின்று ஆடியது. இன்றுவரை அக்கட்சி இந்திய அரசின் கைப்பொம்மையாகவே இருந்து வருகிறது.

முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான அவாமி லீக் அரசாங்கம் பங்களாதேஷை மதசார்பற்ற நாடாகப் பிரகடனப்படுத்தியதுடன் மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகள் இயங்க முடியாது என்ற சட்டத்தையும் கொண்டு வந்து பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியை தடை செய்தது.

1975இல் இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வந்த ஸியாஉர் ரஹ்மான், மதசார்பற்ற பங்களாதேஷை மாற்றிமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். 'பிஸ்மி'யுடன் யாப்பை எழுதி அதில் பல்வேறு மாற்றங்களையும் கொண்டு வந்தார். மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகள் இயங்க முடியாது என்ற சட்டத்தையும் மாற்றியமைத்தார். எனினும், அவராலும் நாட்டில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவர முடியாமல் போனது.

ஸியாஉர் ரஹ்மானின் ஆட்சிக் காலத்தில் நிலவிய இஸ்லாமிய கொள்கைக்குச் சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமி முனைப்புடன் செயற்பட ஆரம்பித்தது. ஜமாஅத்தே இஸ்லாமி, அதன் மாணவர் இயக்கம், பெண்கள் பகுதி ஆகியன வேகமாக வளர்ச்சியடைந்தன. சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், சுமார் இருநூறு கிளைகளைக் கொண்ட மாபெரும் இஸ்லாமிய வங்கி, மருத்துவக் கல்லூரிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்றவற்றை இஸ்லாமிய அடிப்படையில் ஜமாஅத்தே இஸ்லாமி நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆட்சியில் ஜமாஅத்தே இஸ்லாமியின் 18 அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். அதில் இருவர் அமைச்சர்கள். ஜமாஅத்தின் அமீர் முதீஉர் ரஹ்மான் நிஸாமி அவர்கள் விவசாய மற்றும் கைத்தொழில் அமைச்சராகவும் பொதுச் செயலாளர் அலி அஹ்ஸன் முஹம்மத் முஜாஹித் அவர்கள் சமூக நல சேவைகள் அமைச்சராகவும் பணியாற்றினர்.

விவசாய அமைச்சராகவிருந்த ஜமாஅத்தின் அமீர், அவ்வமைச்சில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்ததுடன் விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதியை கணிசமான அளவு அதிகரிக்கச் செய்து நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து செயற்பட்டார்.

மட்டுமன்றி, நாட்டு மக்களை வறுமையின் கோரப் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் நோக்கில் 'விவசாயியின் வீடு; அது ஒரு பூங்கா' (Chasir Bari- Bagan Bari) திட்டத்தை அறிமுகப்படுத்தி விவசாயிகளை ஊக்குவித்தமை, விவசாய உற்பத்திகளை உள்நாட்டில் சந்தைப்படுத்துவதற்கான பொதுச் சந்தைகள் பலவற்றை நிறுவியமை, மர நடுகை மற்றும் பழவகை மரங்களைப் பயிரிட்டு பழவகை உற்பத்தியில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை அமுல்படுத்தியமை, நிர்வாக மட்டத்தில் விவசாய ஆய்வு நிலையத்திற்கு முழு நேர பணிப்பாளர் ஒருவரை நியமித்தமை, விவசாயத்தில் ஈடுபடுகின்ற 12 ஆயிரம் விவசாய மேற்பார்வையாளர்களை அரசாங்க உதவி விவசாய அதிகாரிகளாகப் பதவி உயர்த்தியமை, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் மையங்களை உருவாக்கி வேலையற்றோருக்கு தொழில் வழங்கியமை, மூடப்பட்டிருந்த பல்வேறு கைத்தொழில் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கி அவற்றை மீளக் கட்டியெழுப்பியமை, பெண்களுக்கான தேசிய சுய தொழில் மையங்களை நிறுவுவதற்கான முயற்சிகளை எடுத்தமை, தேசிய உற்பத்தி நிலையம் நவீனமயப்படுத்தப்பட்டமை போன்ற பல்வேறு மாற்றங்களை மௌலானா முதீஉர் ரஹ்மான் நிஸாமி கொண்டு வந்தார்.

மௌலானா முதீஉர் ரஹ்மான் அவர்கள் கைத்தொழில் அமைச்சராகவிருந்தபோது கைத்தொழில் துறை பாரிய வளர்ச்சி கண்டது. நாட்டின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் விவசாய மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழேயே முன்னெடுக்கப்பட்டன.

ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் சமூக நல சேவைகள் அமைச்சைப் பொறுப்பேற்றதையடுத்து அரசாங்க வருமானம் உயர்வடைந்தது. பல்வேறு வித்தியாசமான திட்டங்களை அறிமுகப்படுத்தி அவ்வமைச்சைக் கட்டியெழுப்பிய அவர், சமூகநலப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். வறுமையை ஒழித்துக் கட்டி, மனிதவள அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

நீரிழிவு நோய் வைத்தியசாலைகள், இருதய வைத்திய நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் என்பன நிறுவப்பட்டன. அவற்றிலிருந்து வறியவர்கள், அநாதைகள், பராமரிப்பற்றோர், வயது முதிர்ந்தோர் முதலானோர் இலவசமாகவும் குறைந்த செலவிலும் சிகிச்சை பெற்றனர்.

ஊனமுற்றவர்களுக்கான குறுகிய, நீண்ட கால சேவைகள் எட்டு வகையான தரத்தில் மேற்கொள்ளப்பட்டன. மாதாந்த இலவசக் கொடுப்பனவு, கல்விக்கான மாதாந்தக் கொடுப்பனவு, இலவச மருத்துவ சிகிச்சை ஆகிய திட்டங்களின் மூலம் ஊனமுற்ற சிறுவர்கள், மாணவர்கள் உச்ச பயனடைந்தனர்.

பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமியின் இந்த அசுர வளர்ச்சியை சகிக்காத இந்தியா, மேற்கத்தேய நாடுகள் மற்றும் கிறிஸ்தவ மிஷனறிகள் ஆகிய முப்பெரும் சக்திகளும் பங்களாதேஷின் தற்போதைய அரசுடன் இணைந்து அதனைப் பலவீனப்படுத்தி இஸ்லாமிய கொள்கையின் எழுச்சியை நசுக்க முயற்சிக்கின்றன.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Copyright © Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித கொள்கையுமற்ற, சுயநலன்களுக்காக மாத்திரம் ஆட்சியதிகாரங்களைப் பிடித்து வைத்திருக்கும் அவாமி லீக், கைது செய்வது என்ன, எதைச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களும் கிறிஸ்தவ மிஷனறிகளும்

உலகில் ஆகக் கூடுதலான சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பணிபுரியும் நாடு பங்களாதேஷ் ஆகும். 50%க்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதனாலும் பங்களாதேஷ் அடிக்கடி இயற்கை அனர்த்தங்கள் மற்றும் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளால் பாதிக்கப்படுவதனாலும் இவற்றை சாதகமாகப் பயன்படுத்தி வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் இங்கு ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

1971இல் ஏற்பட்ட பங்களாதேஷ் பிரிவினையோடு தொண்டு நிறுவனங்களும் பங்களாதேஷை நோக்கி படையெடுக்கத் துவங்கின. இத் தொண்டு நிறுவனங்கள் மக்களை இஸ்லாத்தை விட்டும் தூரமாக்கும் பணியில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. இவ் என்.ஜி.ஓ.க்களில் சில சடவாதம் மற்றும் மதச்சார்பற்ற சிந்தனையை மக்கள்மயப்படுத்தும் நோக்குடனும் மற்றும் சில கிறிஸ்தவமயமாக்கலை இலக்காகக் கொண்டும் செயற்படுகின்றன.

வறிய மற்றும் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு துன்பப்பட்டிருக்கும் மக்களுக்கு பொருளாதார ரீதியில் சகல உதவிகளையும் வழங்கி அவர்களின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த அத்தொண்டு நிறுவனங்கள் அயராத முயற்சி எடுத்து வருகின்றன.

பங்களாதேஷை தொண்டு நிறுவனங்கள்தான் ஆட்சி செய்கின்றனவோ என்று எண்ணுமளவுக்கு அவை அரசாங்கத்தில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றன. கடந்த ஆட்சியில் பேகம் காலிதா ஸியா இரண்டு தொண்டு நிறுவனங்களின் பதிவை ரத்துசெய்தபோது அந்த முடிவை மூன்று மணித்தியாலத்துக்குள் வாபஸ் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. எந்தளவுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் அழுத்தம் அரசுக்கு வழங்கப்படுகிறது என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

பங்களாதேஷின் நிலப்பரப்பில் ஒரு மைலுக்கு 3.5 வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் காணப்படுகின்றன. என்.ஜி.ஓ.க்களில் மாத்திரம் இரண்டு இலட்சம் பேர் பணிபுரிகின்றனர். ஆனால், ஓர் ஆய்வின்படி, இவ்வளவு தொண்டு நிறுவனங்கள் இருந்தும் அவற்றுக்குக் கிடைக்கும் நிவாரணப் பணிகள் மற்றும் உதவிகளிலிருந்து 5%ஆனவை மட்டுமே பொது மக்களைச் சென்றடைகின்றன. ஏனைய 95%ஆனவை அவர்களது சொகுசு, ஆடம்பரம், இரகசியத் திட்டம், மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்கு பயன்படுத்தப்படுவதாக அறிய முடிகிறது.

இவை ஒருபுறமிருக்க, ஆளும் அவாமி லீக் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்களாகவும் அமெரிக்காவில் வசிப்பவர்களாகவும் உள்ளனர்.

பங்களாதேஷின் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் தாரிக் கரீம் பல வருடங்களுக்கு முன்பே அமெரிக்க குடியுரிமையைப் பெற்றிருக்கிறார். அவரது குடும்பத்தினர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். பங்களாதேஷின் ரஷ்யாவுக்கான தூதுவரும் அமெரிக்க குடியுரிமையைப் பெற்றவர்.

பாராளுமன்ற உறுப்பினரும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனாவின் புதல்வரும் நாட்டின் அடுத்த பிரதமராக எதிர்பார்க்கப்படுபவருமான ஸஜீப் வாஜிட் ஜோய் அமெரிக்க குடியுரிமையுடையவர். அவரது மனைவி கிரிஸ்டைன் ஓவமேரி ஓர் அமெரிக்கப் பெண். இவர் கிறிஸ்தவ குடும்பப் பின்னணியுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர் யூத குடும்பப் பின்னணியுடையவர் என்ற கருத்தும் உண்டு. இவர்களது ஒரே புதல்வி சோபியா. இவரும் அமெரிக்காவில் பிறந்தவர். சோபியா என்பது கிரேக்க மொழிச் சொல். அது கிரேக்க பெண் கடவுளைக் குறிக்கின்றது.

எது எப்படியோ, இஸ்லாத்துக்குப் புறம்பான, இஸ்லாமிய வாசமே வீசாத ஒரு பங்களாதேஷை உருவாக்க முயற்சிக்கும் அந்த முப்பெரும் (இந்திய மேலாதிக்கம், கிறிஸ்தவ மிஷனறிகள், மதச்சார்பற்ற கொள்கை) சக்திகளின் வலையில் வீழ்ந்திருக்கும் பங்களாதேஷ் அரசுக்கு ஓர் இஸ்லாமிய இயக்கத்தின் வளர்ச்சி பெரும் தலையிடிதான்.

எனவேதான் பங்களாதேஷ் அரசு கடந்த ஜூலை மாதத்தின் நடுப் பகுதியில் அந்நாட்டின் அரச பாடசாலைகள், வாசிகசாலைகளில் மௌலானா மௌதூதி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் நூல்களை தடை செய்திருக்கிறது.

இப்போது, ஜமாஅத்தே இஸ்லாமியை பங்களாதேஷ் மண்ணிலிருந்து முற்றாகத் துடைத்தெறிய வேண்டும் என்ற நோக்கில், 40 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பங்களாதேஷ் பிரிவினையின்போது, ஜமாஅத்தே இஸ்லாமி அங்கத்தவர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டை சுமத்தி சட்ட நடவடிக்கை என்ற பெயரில் இவ்வாறு செயற்பட்டு வருகிறது.

ஒன்றை மட்டும் சுபசோபனமாகச் சொல்லலாம். எங்கெல்லாம் இஸ்லாம் ஒடுக்கப்பட்டதோ அநீதியும் வன்முறையும் தலைவிரித்தாடி இஸ்லாமியவாதிகள் துன்புறுத்தப்பட்டார்களோ அங்கெல்லாம் இஸ்லாம் எழுச்சிபெற்று அநியாயக்காரர்களின் கொட்டத்தை அடக்கியது. பலஸ்தீன், துருக்கி, எகிப்து போன்ற நாடுகளில் இந்த உண்மை சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு பங்களாதேஷ் வரலாறு மட்டும் என்ன விதிவிலக்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆஸிம் அலவி -

பலஸ்தீன் விவகாரத்தில் ஸுன்னத்துல்லாஹ்

ஆங்கிலேய காலனித்துவவாதிகள் பலஸ்தீனை உஸ்மானிய கிலாபத்திடமிருந்து பறித்தெடுத்தே யூதர்களுக்கு தாரைவார்த்துக் கொடுத்தார்கள். எந்த உஸ்மானிய கிலாபத்திடமிருந்து பலஸ்தீன் பறிபோனதோ, அதே உஸ்மானியரின் பேரப்பிள்ளைகள் அதனை மீட்டெடுப்பார்கள் போல் தென்படுகிறது, இன்ஷா அல்லாஹ்.

உண்மையில் அப்படியே நிகழ்ந்துவிடுமோ என்ற அச்சம் இஸ்ரேலியரியத்திலும் பலமாக நிலவுகிறது. துருக்கியில் அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் ஜன நாயக முதிர்ச்சிமிக்க அரசியல் மாற்றங்கள், துருக்கிய பொதுமக்கள் மத்தியில் அதிகரித்து வரும் பலஸ்தீன ஆதரவு, இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு விவகாரங்களில் துருக்கிய அரசாங்கம் எடுத்துவரும் துணிவும் இராஜதந்திர முதிர்ச்சியும் பொதிந்த தீர்மானங்கள் போன்றன மேற்கூறிய அனுமானத்தை நோக்கி ஒருவரை அழைத்துச் செல்கின்றன.

மனிதாபிமான நிவாரணக் கப்பல் மர்மரா அசம்பாவிதம், இரு வருடங்களுக்கு முன் பிரதமர் தைய்யிபுக்கும் இஸ்ரேலிய ஜனாதிபதி ஷிமன் பெரஸுக்கும் இடையில் டேவோஸ் வர்த்தக மாநாட்டில் ஏற்பட்ட வாக்குவாதம் மற்றும் வேறு பல நிகழ்வு மாற்றங்கள் அனைத்தும் ஒரு விடயத்தை உணர்த்துகின்றன. அதாவது, பலஸ்தீன விவகாரம் பாரியதொரு தலைமைத்துவ நகர்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் அது.

உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு துருக்கியருக்கும் யூதர்களுக்கும் இடையில் நடந்த மிகப் பெரும் நேரடி மோதல் என மர்மரா நிகழ்வை வர்ணிக்க முடியும். அது இந்த நகர்வின் ஆரம்பமேயொழிய முடிவல்ல. இந்த நகர்வும் அல்லாஹுத் தஆலாவின் அற்புதங்களில் ஒன்றுதான். ஸுன்னத்துல்லாஹ் (அல்லாஹ்வின் பூகோள விதிமுறைகள்) பலஸ்தீன் விவகாரத்தில் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை இதிலிருந்து தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

பலஸ்தீன் விவகாரத்தைப் பொறுத்தவரை ஸுன்னதுல்லாஹ்வை இரண்டு அடிப்படை அம்சங்களை மையமாக வைத்தே நோக்க வேண்டும். ஒன்று, 'யெரட்ஸ் யிஸ்ராஈலை' (மகா இஸ்ரேலை)க் கட்டியெழுப்பும் கனவு. அடுத்தது, பலஸ்தீன் மீட்டெடுக்கப்படும் வரை மஸ்ஜிதுல் அக்ஸாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கியாம நாள் வரை போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்ற முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் முன் அறிவிப்பு.

ஒன்று ஷைத்தானிய முயற்சி; மற்றையது சத்தியத்தின் முயற்சி. இவ் இரண்டு சக்திகளுமே பலஸ்தீனில் மோதிக் கொள்கின்றன. போராட்டம் பைதுல் மக்திஸிலும் நடக்கிறது; காஸாவிலும் நடக்கிறது. அவற்றின் சுற்றுப்புறங்களிலும் ஏன், முழு உலகிலும் பல வடிவங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. "சிரியாவை ஆக்கிரமித்து அதனூடாக கோலான் பிரதேசத்துக்குச் சென்று யூத இராணுவத்தை ஆரத்தழுவுவோம்" என பத்து வருடங்களுக்கு முன் சூளுரைத்த துருக்கிய இராணுவத்திடம் இப்போது வியத்தகு மாற்றங்கள் தோன்றியுள்ளன.

மதீனாவையும் ஜோர்தான், எகிப்து மற்றும் சிரியா ஆகியவற்றின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக மத்திய தரைக்கடல் வரையான மிகப் பரந்த பிரதேசத்தில் 'யெரட்ஸ் யிஸ்ராஈலை' கட்டியெழுப்புவதே ஸியோனிச யூதர்களின் கனவாகும். ஆனால், பலஸ்தீன விவகாரத்தில் ஆரம்பத்திலிருந்தே பல்வேறு தரப்பினர் பாடுபட்டு இக்கனவு நனவாகாது காத்து வந்துள்ள அற்புதத்தை நாம் காணலாம். துருக்கியின் தற்போதைய எழுச்சியும் முன்னெடுப்புகளும் இவ்வழியில் முக்கியமான தடுப்பரண்களாகும்.

ஒருவேளை துருக்கி இதில் தோல்வியுற்றாலும் அல்லாஹுத் தஆலா வேறொரு தடையை அக்கனவின் மீது ஏற்படுத்துவான். இந்த அற்புதமிக்க தெய்வீகக் காரியத்தை முஃமின்களால் மாத்திரமே ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும். ஏனையோர் இஸ்ரேலை ஒரு வெற்றிவாகை சூடிய பலமிக்க நாடாகவும் பலஸ்தீன எழுச்சியை தந்திரமாக கைக்குள் அடக்கி வைத்துள்ள சக்தியெனவுமே கருதுவார்கள். ஆனால், உண்மை அதுவல்ல என்பதை எதிர்காலம் எடுத்துக் காட்டும்.

ஸுன்னதுல்லாஹ்வில் வெளிப்படும் மற்றறொரு

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்வாழ் அமைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம், இஸ்ரேல்-ஈரான் முறுகலாகும். அல்லாஹ்த் தஆலா மறைமுகமான காரணத்துக்காக இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் தீராப் பகையை ஏற்படுத்தி வைத்துள்ளான். இரு நாடுகளும் தம்மை முதல்தர பரம வைரிகளாக அடையாளப்படுத்தியுள்ளன. இஸ்ரேலியரை பீடித்து வாட்டி வதைக்கும் 'பாதுகாப்புப் பீதி'யின் காரணமாக, ஈரானிய ஜனாதிபதி அஹ்மத் நஜாதின் ஒவ்வொரு தும்மலின்போதும் முழு இஸ்ரேலுமே அதிர்கிறது. அஹ்மத் நஜாதின் அணுகுண்டு எப்போது தமது தலைகளில் வந்து விழும் என்ற பீதியில் அவர்கள் தவிக்கின்றனர். ஈரானின் அணு ஆயுதத்தளத்தை அழிக்கும் வழிவகைகளைத் தேடும் பிரயத்தனத்தில் அல்லாஹ்த் தஆலா இஸ்ரேலியரை பராக்காக்கி வைத்துள்ளதால் 'யெரட்ஸ் யிஸ்ராஈல்' பற்றி சிந்திப்பது தாமதமாகியுள்ளது.

அண்டப்புழுகுகளை ஊர்ஜிதமான உளவுத் தகவல்கள் என சோடித்து, அமெரிக்காவை ஈராக்கிய சகதியில் இழுத்துப் போட்டு, குறிப்பாக ஈரானையும் பொதுவாக மத்திய கிழக்கையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள இஸ்ரேல் எடுத்த முயற்சி வெற்றியளிப்பதற்குப் பதிலாக தற்கால உலகின் அதிபலம் வாய்ந்த வல்லரசை இழிவுமிக்க கேவலத்திலும் அவமானத்திலும் ஆழ்த்தியுள்ளது. யூத நாட்டைக் காப்பாற்றுவதா அல்லது மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு, மேலும் இழப்பைத் தவிர்த்துக் கொண்டு நாடு திரும்புவதா? என்ற முடிவை எடுக்க முடியாது அவர்கள் திண்டாடுவதை உலகின் சமாதான விரும்பிகள் சுவாரஷ்யமாக கண்டு களித்துக் கொண்டிருக்கின்றனர்.

சத்தாம் ஹுஸைன் அமர்ந்த ஆசனத்தில் இஸ்ரேலியர் மீது பரிவு கொண்ட ஆட்சியாளர் ஒருவர் அமர்வார்; அவரது துணையுடன் பாரசீகரின் அணுத்தளத்தை அழித்து நாசமாக்கிவிட முடியும் என்ற ஆசை மண்கவ்விக் கொண்டிருக்கிறது. ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நிலவும் பகை அல்லாஹ் நாடிய காலம்வரை தொடர வேண்டும் என்பதே ஸுன்னத்துல்லாஹ்வின் எதிர்பார்ப்பு.

அத்தோடு விரிவாக நோக்கின், எந்த ஈரானுக்கு எதிரானவர்கள் சத்தாமின் ஆசனத்தை ஆக்கிரமிக்க வேண்டுமென ஸியோனிச அரசியல் விற்பன்னர்கள் எதிர்பார்த்தனரோ அதே ஈரானின் ஆதரவாளர்கள் அந்த ஆசனத்தில் வந்து சொகுசாக அமர்த்துள்ளமை மேற்படி விற்பன்னர்களை தலைசுற்ற வைத்துள்ளது.

யாஸிர் அரபாத்தின் பலஸ்தீன் விடுதலை இயக்கம் லெபனானின் அகதி முகாம்களிலிருந்தே வளர்ச்சி பெற்று தமக்கு தொந்தரவு தந்து கொண்டிருக்கிறது; அது முற்றாக அழிக்கப்பட வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக இஸ்ரேலிய இராணுவம் தென் லெபனானுக்குள் ஊடுருவி அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்த சட்டவிரோத ஆக்கிரமிப்பை எதிர்கொண்டு போரிட்டு தமது பிரதேசங்களை மீட்டெடுக்கும் புனித நோக்கத்துடன் எழுச்சிபெற்ற அமைப்பே ஹிஸ்புல்லாஹ்வாகும். சுமார் 20 வருடப் போராட்டத்தின் பின் அது இஸ்ரேலியரை விரட்டியடித்து விட்டது.

நிலைமை இப்படியிருப்பின், இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையிலான பகைமை எப்போதே தீர்ந்திருக்க வேண்டும். ஆனால், 2005ல் இஸ்ரேல் லெபனான் மீது நடத்திய கொடூர படுகொலையின் பின்னர் அப்பகைமை மென்மேலும் உக்கிரமடைந்தது. அல்லாஹ் நாடும் காலமெல்லாம் அப்பகை பொங்கியெழுந்து கொண்டே இருக்கும்.

அல்லாஹ்த் தஆலா வெவ்வேறு காரணங்களுக்காக நாடுகளையும் மனிதர்களையும் இஸ்ரேலுடன் பகைக்க வைத்துள்ளான். உண்மையில் அல்லாஹ் யூதர்களுக்கோ அல்லது வேறெந்த சமூகத்துக்கோ அநியாயமிழைப்பதில்லை. அவர்களே தமக்கு அநியாயமிழைத்துக் கொள்கின்றனர்.

உதாரணமாக, 1967இல் இஸ்ரேல் ஆக்கிரமித்த சிரியாவின் கோலன் குன்றுகளை திருப்பிக் கெடுக்கும் வரை அவ்விரு நாடுகளுக்குமிடையில் உள்ள பகை தணியாது. அதனைத் திருப்பிக் கொடுக்கவும் முடியாது. ஏனெனில், அங்கு வாழும் தீவிரவாத யூதர்கள், தமது சவப் பெட்டிகளைக் கடந்தே இஸ்ரேலிய இராணுவம் கோலானிலிருந்து வாபஸ் பெற நேரிடும் என எச்சரித்துள்ளனர்.

ஹமாஸ் இயக்கம் அரசியல் முதிர்ச்சியுடனும் எத்தகு துன்பங்கள் வந்தபோதும் தளர்ந்துவிடா மனோபலத்துடனும் திடவுறுதியுடனும் திகழ்வதும் கூர்ந்து கவனிக்கத்தக்கவை. காஸா இடிந்து நொறுங்கி விட்டது; தலைவர்கள் கொடூரமான விதத்தில் அழிக்கப்பட்டு விட்டனர்; உலகில் மிகப் பெரிய திறந்த சிறைக் கூடம் எனப்படும் காஸாவின் முட்கம்பி வேலிக்குள் மக்கள் சிக்குண்டு பட்டினி, மனவிரக்தி, எதிர்காலம் பற்றிய அச்சம் ஆகியவற்றினால் வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இவையனைத்துக்கும் மத்தியில் ஹமாஸ் விடாப்பிடியாக நிர்வாகத்தை தன்வசம் வைத்துள்ளது. உண்மையில் ஹமாஸ் சற்றேனும் தளர்ந்து கொடுத்திருந்தால் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் (பீ.எல்.ஓ) போல் அதனையும் ஒடுக்கிவிட முடியும் என்ற தைரியத்தை யஹூதிகள் பெற்றிருப்பர். கியாம நாள் வரையிலான போராட்டத்தை பலஸ்தீனில் தொடர்வதற்கான வேறொரு அணி உருவாகும் வரை இஸ்லாமிய உலகு காத்திருக்க வேண்டி ஏற்பட்டிருக்கும். PLO இயக்கத்தின் இஸ்ரேல் மீதான பகை தணிந்து அவர்கள் அதன் கூலியாட்களாக மாறியபோது அல்லாஹ்த் தஆலா ஹமாஸையும் இஸ்லாமிய ஜிஹாதையும் ஏனைய விடுதலை அமைப்புகளையும் முன்கொண்டு வந்து தனது ஸுன்னாவை பலப்படுத்தினான். அவனே மனிதர்களுக்கிடையில் நிகழ்வுகளை மாறி மாறி கொண்டு வருகிறான். அல்லாஹ் ஏற்படுத்திய ஸுன்னாவை எவராலும் மாற்ற முடியாது என்பதை அல்குர்ஆன் இப்படி எடுத்துரைக்கிறது:

"அல்லாஹ் ஏற்படுத்திய வழி இதற்கு முன் சென்றவர்களுக்கும் இதுதான். ஆகவே, (நபியே) நீங்கள் அல்லாஹ்வுடைய வழியில் யாதொரு மாறுதலையும் காண மாட்டீர்கள்."

(அல்அஹ்ஸாப்: 62)

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஹமாஸின் யுத்தக் கைதியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹமாஸின் வியத்தகு பேரம் பேசும் ஆற்றல் இவ்விடயத்தில் இஸ்ரேலை முழுமையாக அடிபணிய வைத்து விட்டது. ஏனெனில், பலஸ்தீனின் முழுச் சனத்தொகையையும்விட தனது ஒரு சிப்பாய் தம்மோடு இருப்பது மேலானது என யஹூதிகள் கருதுகின்றனர். அவர்களது இந்த உளப் பலவீனம் ஹமாஸுக்கு நன்கு தெரியும். 1000 பேரையும் கட்டவிழ்த்துவிட இஸ்ரேல் இணங்கியுள்ளது.

பிடிபட்ட இஸ்ரேலிய சிப்பாய் ஜிலாத் ஷாலித் விவகாரமும் ஸுன்னதுல்லாஹ்வின் அற்புதங்களின் ஒன்று. அவர் தமது விருந்தாளியாக 2050ஆம் ஆண்டு வரை இருந்தாலும் பரவாயில்லை என ஹமாஸ் அறிவித்துள்ளது. இஸ்ரேலிய சிறைகளில் வாடும் சுமார் 1000 பலஸ்தீனரை விடுதலை செய்ய வேண்டும் என்பது தான் ஷாலித்தின் விடுதலைக்கான நிபந்தனை. இதில் பலர் ஆயுட்கால தண்டனை அல்லது 300 தொடக்கம் 400 வருட தண்டனை பெற்றவர்கள், இஸ்ரேலிய அமைச்சர்களையும் இராணுவ ஜெனரல்களையும் ஏனையோரையும் கொலை செய்த குற்றம் சுமத்தப்பட்டவர்கள்; இராட்சத யுத்த தாங்கிகள் மீது சிறிய கற்களை எறிந்த சிறுவர்கள், தாய்மார்கள், நோயாளிகளும் இதில் அடங்குவர். இதில் மன்னிக்கவே முடியாத முதல்தரப் பயங்கரவாதிகள் என இஸ்ரேல் அடையாளப்படுத்தியுள்ளவையும் அடங்குவர்.

ஹமாஸின் வியத்தகு பேரம் பேசும் ஆற்றல் இவ்விடயத்தில் இஸ்ரேலை முழுமையாக அடிபணிய வைத்து விட்டது. ஏனெனில், பலஸ்தீனின் முழுச்சனத்தொகையையும்விட தனது ஒரு சிப்பாய் தம்மோடு இருப்பது மேலானது என யஹூதிகள் கருதுகின்றனர். அவர்களது இந்த உளப் பலவீனம் ஹமாஸுக்கு நன்கு தெரியும். 1000 பேரையும் கட்டவிழ்த்துவிட இஸ்ரேல் இணங்கியுள்ளது. இப்போதுள்ள சிக்கல், அவர்களில் முதல்தர பயங்கரவாதிகளை பலஸ்தீனுக்கு அனுப்புவதா அல்லது வெளிநாடுகளுக்கு அனுப்புவதா என்பதுதான். இது எவ்வளவு வியப்பும் அற்புதமும் பொதிந்த நிலைமை!

அநீதியையும் சுரண்டலையும் வெறுக்கும் சுதந்திர உலகம் தனது வெறுப்பை அமெரிக்கா மீதும் அது பாரபட்சமாக அனுசரிக்கும் இஸ்ரேல் மீதும் உமிழ்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் இஸ்ரேலிய இராணுவம் ஜெனின் நகரில் ஒரு பலஸ்தீன குடும்பத்துக்குச் சொந்தமான வீட்டை இடிக்கும்போது புல்டோஸருக்கு முன்னால் நின்று தடுக்க முயன்ற இளம் அமெரிக்க நங்கை 'ராசெல் கொரே' என்பவரை நசுக்கிக் கொலை செய்த சம்பவம் ஞாபகம் இருக்கும். அவர் அநியாயத்துக்கு எதிராக எழுந்து நின்றதனாலே கொலையுண்டார். மாவி மர்மராவுடன் சென்ற மற்றைய கப்பல்களில் ஒன்றின் பெயர் 'ராசெல் கொரே' என்பது குறிப்பிடத்தக்கது. அந்த சமாதான கடற் பிரயாணத்தில் சென்றவர்களுள் நூற்றுக்கணக்கான முஸ்லிம் அல்லாதோர் இருந்தனர்.

இன்று அல்லாஹுத் தஆலாவின் வல்லமையின் மூலம் இலட்சக்கணக்கான முஸ்லிம் அல்லாதோர் பலஸ்தீன் போராட்டத்தில் இணைந்துள்ளனர். இவர்கள் செல்வாக்கற்ற, கருத்துப் புனையும் ஆற்றல் இல்லாத, சமூகத்தில் முக்கியமற்ற தொழிலற்றோர் அல்ல. மாறாக, துறைசார், நிபுணர்கள், அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், மதப் பெரியார்கள், சமாதான செயற்பாட்டாளர்கள், வணிகத்துறை சார்ந்தோர், கல்விமான்கள், இளைஞர்கள், யுவதிகள், தமது வாக்குப் பலத்தால் அரசாங்கங்களை மாற்றும் சக்தி படைத்தவர்கள், ராஜதந்திரிகள், நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள்... என்ற நீண்ட பட்டியலில் அடங்குபவர்கள்.

இவை அனைத்தும் அல்லாஹுத் தஆலா பலஸ்தீன் விவகாரத்தில் ஏற்படுத்தி வைத்துள்ள தடுப்பரண்களாகும். இவ்விதம் தடுப்பரண் இடுவது அவனது பொதுவான விதியிலும் உள்ள ஒன்று.

இவை இல்லாவிட்டால் எப்போதோ மஸ்ஜிதுல் அக்ஸா இடிக்கப்பட்டு அவ்விடத்தில் ஸுலைமானியக் கோயில் (Soloman Temple) உருவாகியிருக்கும்; அனைத்துப் பலஸ்தீனரும் துரத்தியடிக்கப்பட்டு அங்கே 'யெரட்ஸ் யிஸ்ராஈல்' கட்டி எழுப்பப்பட்டிருக்கும்.

வரலாற்றில் முதல் தடவையாக இஸ்ரேல் அரசுக்கும் வெள்ளை மாளிகை நிர்வாகத்துக்குமிடையில் முறுகல் நிலை உருவாகியுள்ளது. அமெரிக்க நிர்வாகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள பலமிக்க யூதக் குழுக்களின் அதிரடியால் வெள்ளை மாளிகை இம்முறை தோல்வியுற்றிருக்கலாம். ஆனால், இதுவோர் ஆரம்பமேயன்றி முடிவல்ல.

அல்லாஹுத் தஆலாவின் ஸுன்னா செயற்படும் விதத்தை குர்ஆன் இப்படி வர்ணிக்கிறது:

"...மனிதர்களில் (தீங்கு செய்யும்) சிலரை மனிதர்களில் சிலரைக் கொண்டே அல்லாஹ் தடுக்காவிட்டால் இப்பூமி அழிந்தேயிருக்கும். ஆயினும் நிச்சயமாக அல்லாஹ் உலகத்தார் மீது கருணையுடையவனாக இருக்கிறான்."

(அல்பகரா: 251)

நெதன்யாஹு பிரதமரானபோது, இதன் பிறகு பலஸ்தீனர் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று பலர் கூறினர். அவரது வெளியுறவு அமைச்சர் 'அவிக்டோர் லைபர்மான்' ஒரு நச்சுப் பாம்பு! அணுகுண்டு கொண்டு பலஸ்தீனை அழித்தால் மாத்திரமே தன்னால் நிம்மதியாக வாழ முடியும் என பகிரங்கமாகக் கூறிய பித்தன்.

ஆனால், தற்போது இஸ்ரேலில் ஆட்சி நடத்தும் அந்தக் கும்பல் அந்நாட்டை மிகவும் ஆபத்தானதொரு திசையில் நகர்த்திக் கொண்டிருக்கிறது. இந்நகர்வானது வெளித்தோற்றத்தில் பலஸ்தீனர்களின் அழிவு காலம்போல் தென்பட்டாலும் உண்மையில், யூதர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் திசையில் எடுத்து வைத்துள்ள காலடியே அது.

அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ஜோன் மியர் ஷைமர், இஸ்ரேல் தற்போது 'அபாதைட்' (Apartheid-

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதனால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்காவில் முன்பு நிலவிய வெள்ளையின மேலாதிக்க ஆட்சி) முறையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். விரிவாக ஆராயப்பட்டுள்ள அவரது 'The Future of Palestinians, Righteous Jews Vs Atrikarners' என்ற சொற்பொழிவில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

"இஸ்ரேலுக்கு முன்புள்ள தேர்வுகளில் ஒன்று, இரு இனங்கள் வாழும் நாடாக மாறுவது (Two Nation State); இரண்டு, பலஸ்தீனர்களுக்கு காஸா-மேற்குக் கரை பிரதேசத்தில் ஒரு நாட்டை உருவாக்கி இஸ்ரேலில் வாழும் அரேபியர்களையும் அதற்குள் தள்ளி அதனை தனி நாடாக்குவது; மூன்றாவது, பலஸ்தீனரை அடக்குமுறைக்கும் அடிமைத்துவத்துக்கும் உட்படுத்தி அபாதைட் ஆட்சியை கொண்டு செல்வது.

முதற் தேர்வை இஸ்ரேலிய மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில், அரபிகள் மீது துவேசத்தை வளர்க்கும் கல்வித் திட்டத்தில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதால் இம்முயற்சி சாத்தியமாக மாட்டாது. அத்தோடு அரபிகளையும் இணைக்கும் நாடொன்று உருவானால் அதில் அரபியரின் சனத்தொகை யூதர்களை விட அதிகரித்திருக்கும். இரண்டாவது தேர்வையும் அவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். ஏனெனில், அது அவர்களது அடிப்படை மத நம்பிக்கைக்கு முரணானது. மூன்றாவது தேர்வே அவர்களுக்கு ஏற்புடையது.

இதனை ஆரம்பத்தில் அமெரிக்கா பலமிக்க யூதசக்திகளின் வற்புறுத்தல் காரணமாக ஏற்றுக் கொண்டாலும் காலப்போக்கில் அதனை நிராகரிக்கக் கூடும். அதேபோல் மேற்கு நாடுகளும் இதனை ஏற்றுக் கொள்ளத் தயங்கும். அத்தோடு அமெரிக்காவிலுள்ள தற்போது இஸ்ரேலை ஆதரித்து வரும் மூத்த யூதத் தலைவர்கள், மனிதநேயத்தை விரும்பும் இளம் யூத சந்ததியினர் எவரும் இதனை அங்கீகரிக்க மாட்டார்கள். ஏனெனில், அபாதைட் கொள்கையானது மேற்கின் மையவிழுமியங்களுக்கே எதிரானது" என்கிறார் பேராசிரியர் ஜோன்.

"மேலும், மேற்கு நாடுகளிலும் முஸ்லிம் நாடுகளிலும் முஸ்லிம்கள் பலமடைந்து வருதல், சுதந்திர உலகில் சமாதான விரும்பிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருதலும் அவர்கள் மத்தியில் பலஸ்தீனர்கள் மீதான அனுதாபம் அதிகரித்து வருவது, துருக்கி போன்ற துணிச்சல் மிக்க நாடுகளை வேறுபல முஸ்லிம் நாடுகளும் பின்பற்றி இஸ்ரேலுக்கு எதிராக தைரியத்துடன் நிற்கும் நிலை உருவாவது, அத்தோடு, முன்னணி தொடர்பூடகங்கள் இஸ்ரேலுக்கு சார்பான பொய்களைப் பரப்பி பிரசாரம் செய்து வந்தாலும் மாற்று ஊடகங்கள் இன்டர்நெட் மூலம் உண்மைத் தகவல்களை மென்மேலும் அதிகமாகக் கொடுத்து மக்கள் அபிப்பிராயத்தை பலப்படுத்துவார்கள். அந்நிலை உருவானால் New York Times கூட உண்மை கூற நிர்ப்பந்திக்கப்படும்" எனவும் ஜோன் கூறுகிறார்.

> **"மேலும், மேற்கு நாடுகளிலும் முஸ்லிம் நாடுகளிலும் முஸ்லிம்கள் பலமடைந்து வருதல், சுதந்திர உலகில் சமாதான விரும்பிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருதலும் அவர்கள் மத்தியில் பலஸ்தீனர்கள் மீதான அனுதாபம் அதிகரித்து வருவது, துருக்கி போன்ற துணிச்சல் மிக்க நாடுகளை வேறுபல முஸ்லிம் நாடுகளும் பின்பற்றி இஸ்ரேலுக்கு எதிராக தைரியத்துடன் நிற்கும் நிலை உருவாவது, அத்தோடு, முன்னணி தொடர்பூடகங்கள் இஸ்ரேலுக்கு சார்பான பொய்களைப் பரப்பி பிரசாரம் செய்து வந்தாலும் மாற்று ஊடகங்கள் இன்டர்நெட் மூலம் உண்மைத் தகவல்களை மென்மேலும் அதிகமாகக் கொடுத்து மக்கள் அபிப்பிராயத்தை பலப்படுத்துவார்கள். அந்நிலை உருவானால் New York Times கூட உண்மை கூற நிர்ப்பந்திக்கப்படும்."**

நெதன்யாஹுவினதும் லைபர்மானினதும் அபாதைட் பயணம் இஸ்ரேலை ஒரு பயங்கரவாத நாடென்ற நிலைக்குத் தள்ளி, அதனை முழு உலகும் ஒதுக்கிவிடும் நிலை உருவாகக் கூடும். தென்னாபிரிக்காவில் அபாதைட்டை எதிர்த்த அமெரிக்கா, இஸ்ரேலை எப்போது கைகழுவுகிறதோ அப்போது அதன் தொப்புள் கொடி அறுந்து போகும். இந்நிலைமையை இஸ்ரேலின் முன்னைய பிரதமர்களான யஹூத் ஒல்மர்டும் யஹூத் பராக்கும் வெவ்வேறு வார்த்தைகளில் இப்படி வர்ணித்தனர்:

"இஸ்ரேல் என்பது ஒரே அரசியல் சக்தியாக இருக்கும் காலமெல்லாம் யூத நாடாகவோ அல்லது ஜனநாயக நாடாகவோ இருக்காது; எப்போது இரு இனங்களுக்கும் (யூத-பலஸ்தீன) பொருத்தமான இரு நாடு உருவாவதற்கான முயற்சி தோல்வியடையுமோ அப்போது இஸ்ரேல் வீழ்ச்சியடைந்து விடும்."

அத்தகைய வீழ்ச்சியை யூதர்கள் நிச்சயம் தமது கைகளாலேயே ஏற்படுத்திக் கொள்வார்கள். பேராசையும் அதிகார வெறியும் மமதையும் துவேசமும் அவர்களை தம் நிலை மறக்கச் செய்துள்ளதால் வீழ்ச்சியின் விளிம்புக்குச் சென்ற பின்பே விழித்துக் கொள்வார்கள். அவர்கள் இனி நல்லுணர்ச்சி பெற்று தம்மை சீர்திருத்திக் கொள்ள முன்வரவே மாட்டார்கள் என்ற நிலை உருவானதும் அல்லாஹ்வின் ஸுன்னா செயற்பட ஆரம்பிக்கும். யூதர்கள் கட்டியெழுப்பிய நாடு இயல்பாகவே சரிந்து விழுந்து விடும்.

"யாதொரு ஊரை (அவ்வூராரின் தீய செயலின் காரணமாக) நாம் அழித்து விடக் கருதினால், அதில் ஆடம்பரக்காரர்களை நாம் ஏவுகிறோம். அவர்கள் அதில் விஷமம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். பின்னர். அவர்கள் மீது நம்முடைய வாக்கு ஏற்பட்டு அவ்வூரை நாம் அடியோடு அழித்து விடுகிறோம்."

(அல்இஸ்ரா: 16)

'யெரட்ஸ் யிஸ்ராஈல்' கனவு மரணித்த அந்தப் பூமியில் அல்லாஹ் நிச்சயம் பலஸ்தீன் எனும் நாட்டை மீளவும் ஸ்திரப்படுத்துவான்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழான் தக்வாவின் விளைச்சல் நிலம்

அஷ்ஷெய்க் எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

மனித உள்ளங்களை வஹியின் பிரகாசத்தால் ஒளியேற்றி, ஆன்மாக்களை பாவக்கறையிலிருந்து பரிசுத்த மாக்கி, நன்மைகளால் அரவணைத்துக் கொள்ளும் பண் பாட்டுப் பாசறை ரமழான் எம்மை நோக்கி வருகிறது. ரமழான் மனிதனின் விருப்பு, வெறுப்பு ஆசாபாசங்கள் என்பவற்றைக் கைவிட்டு ஏக இறைவனின் ஏவல் விலக் கல்களுக்கு மட்டுமே கட்டுப்படுகின்ற நிலையை உரு வாக்கும் தர்பிய்யா களம். வாழ்க்கைச் சுமைகளை நிதான மாக சுமந்து கொள்ளும் சக்தியைத் தரும் பயிற்சிக்கூடம். இறைத்தூதர் வெகு ஆர்வத்தோடு ரமழானை வரவேற்று ஸஹாபிகளை உற்சாகப்படுத்தியுள்ளார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ரமழானில் முதல் நாள் இரவிலேயே ஷைத்தான்களும் தீங்கிழைக்கும் ஜின்களும் விலங்கிடப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் அனைத்தும் மூடப்பட்டு விடும். அதில் எந்தவொரு வாயிலும் திறக்கப்பட மாட்டாது. சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. அதன் எந்தவொரு வாயிலும் மூடப்படுவதில்லை. மேலும் ஒரு அழைப்பான் "நன்மை புரிகின்றவர்களே! நன்மைகளை (அதிகம் அதிகமாக) புரியுங்கள். பாவமிழைப்பவர்களே! அதனைக் குறைத்து தவிர்த்து விடுங்கள். (ரமழானில்) அல்லாஹ் நரகலிருந்து விடுதலையளித்துக் கொண்டிருக் கிறான்" இது ஒவ்வோர் இரவிலும் நிகழ்கிறது. (அபூதாவுத்)

அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். "ரமழான் வந்தபோது ரஸூலுல்லாஹி (ஸல்லல்லஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "உங்களை நோக்கி ஒரு மாதம் வருகிறது. அதில் ஓர் இரவிருக்கிறது அது ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்த தாகும். யார் அந்த இரவின் பாக்கியத்தை இழந்து விடுகின் றானோ அவன் அனைத்து நன்மைகளையும் இழந்தவ னாவான்" என்று குறிப்பிட்டார்கள்." (அபூதாவுத்)

மனிதன் தன்னைப் படைத்தவனுக்கு முன்னால் நிறை வேற்ற வேண்டிய பொறுப்புக்கள் ஏராளம். அதனை அறிந்துணர்ந்து செயற்பட அவன் கடமைப்பட்டுள்ளான். ஷரீஅத்தின் வரையறைகளைப் பேணுவது இறைபணிக் காய் வாழ்வதும் அதில் தன் பாதங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதும் அதில் தனது உள்ளத்தை மனநிறைவுகாணச் செய்வதும் மனிதனுக்கு முன்னால் விரிந்து கிடக்கும் பொறுப்புக்களாகும். அவை தொடர்ந்தேர்ச்சியான பயிற்சியை வேண்டி நிற்பவை.

இவையனைத்துக்குமான உந்துசக்தியை ஒரு முஃமின் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை அம்சம் தக்வா. ஏனெனில், அதுவே இறைசிந்தனையை உள்ளத்தில் முழு மையாக ஆழமாகப் பதித்துக் கொள்வதற்கான கட்டுச் சாதனம். மனிதன் என்ற உயர் பெறுமானத்தோடு வஹியின் சிந்தனைக்காக வாழ்வதற்கான பாதுகாப்புக் கேடயம்.

"நிச்சயமாக (வாழ்க்கைப் பயணத்தின் பாதுகாப்பிற் கான) மிகச் சிறந்த கட்டுச் சாதனம் தக்வா ஆகும்." (2: 197)

"(உள்ளத்தின் அவ்ரத்தை மறைத்துப் பாதுகாக்கும்) தக்வாவின் ஆடையே மிகச் சிறந்தது." (7: 26)

"நிச்சயமாக அல்லாஹ்விடம் உங்களில் மிக கண்ணி யத்திற்குரியவர் உங்களில் இறையச்சம் (தக்வா) உள்ள வர்களே." (49: 13)

தக்வா என்ற பலம்வாய்ந்த மகத்தான கேடயத்தை பற்றிப் பிடித்துக் கொள்வதற்கான பயிற்சியைத் தருவதே ரமழான் நோன்பின் உயர்ந்த இலக்கு.

"இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்பிருந்த சமூகங்களுக்கு நோன்பு விதியாக்கப்பட்டதுபோல உங்களுக் கும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங் கள் தக்வா உள்ளவர்களாக மாறலாம்." (அல்பகரா: 183)

"தக்வா என்பது ஒருவர், ஷைத்தானின் பிடியிலிருந் தும் ஜாஹிலிய்யத்துக்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் நரகிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எடுக்கின்ற முயற்சி" என வரைவிலக்கணப்படுத்தலாம்.

இதனையே அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கூற்று உணர்த்துகின்றது.

"தக்வா என்பது மகத்தான இறைவனுக்கு அஞ்சுவது. அவன் அருளிய வழிகாட்டலின் அடிப்படையில் பணி யாற்றுவது. கிடைப்பவை சொற்பமாயினும் அதில் திருப்தி காண்பது. உலகிலிருந்து விடைபெற்றுச் செல்லும் பய ணத்திற்கு தம்மை தயார்படுத்திக் கொள்வது..."

ஒருமுறை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உபை இப்னு கஅப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் தக்வா என்றால் என்ன எனவினவியபோது, "அமீருல் முஃமினீனே! முட்கள் நிறைந்த ஒற்றையடிப் பாதையில் பயணித்துள்ளீர்களா?" என வினவினார்கள். அதற்கு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "ஆம்" என்றார்கள் "அப்போது என்ன செய்தீர்கள்?" என வினவினார் உபை (ரழியல்லாஹு அன்ஹு). "ஆடைகளை பற்றிப்பிடித்துக் கொள்வேன்: முட்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்வ தற்கு முயற்சிப்பேன்" என்றார் உமர் (ரழியல்லாஹு அன்ஹு).

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் தக்வா" என பதிலளித்தார் உபை (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்.

தக்வா என்பது வெறும் மனப் பயமல்ல. இறைவன் கூர்ந்து எம்மை அவதானிக்கின்றான் என்ற ஆழமான அக அச்ச உணர்வோடு தீமைகள், பாவங்களை விட்டும் தூரமாகி விலகிச் செல்லுதல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எம்மைச் சூழ்ந்திருக்கும் ஜாஹிலிய்ய முட்களிலிருந்தும் ஷைத்தானின் கெடுபிடிகளிலிருந்தும் சூழ்ச்சிகளிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதன் ஊடாக கொடிய நரகிலிருந்து பாதுகாப்புப் பெற்று சுவனம் என்ற எமது நிலையான, உண்மையான தாயகத்தை இழந்து விடாது பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளே தக்வா. இத்தகைய மகத்தான மன உணர்வை ஆழமாக வளர்ப்பதற்கான களமாக ரமழான் நோன்பு அமைந்திருக்கின்றது.

பசித்திருப்பதும் தாகித்திருப்பதும் மட்டும்தான் நோன்பு என்று புரிந்து வைத்திருந்தால் அது பிழையானது. மாறாக, உண்ணுவதையும் அருந்துவதையும் தடுத்துக் கொள்வது போலவே அவனுக்குள்ளால் இருக்கின்ற கட்டுங்கடங்காத உணர்ச்சிகள், ஆசைகள், ஆசாபாசங்கள், பொங்கி எழும் கோப தாபங்கள், தன் நிலையை மறக்கடிக்கச் செய்யும் மகிழ்ச்சி ஆரவாரங்கள் போன்ற உள்ளத்து உணர்வுகளை கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதற்கான வழிகாட்டலைத் தருவது தான் நோன்பு. நோன்புக்காக வாக்களிக்கப்பட்ட நன்மைகளுக்கும் பின்னால் இந்த உண்மை தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.

"ஆதமின் சந்ததியினர் செய்கின்ற சகல செயல்களுக்கும் பன்மடங்கு நன்மைகள் அதிகரித்துக் கொடுக்கப்படுகின்றன. ஒரு நற்செயலுக்கு அதனைப் போன்று பத்து மடங்கிலிருந்து எழுநூறு வரை அதிகரித்து கூலிகள் வழங்கப்படும். அல்லாஹ் கூறுகிறான் நோன்புக்குரிய கூலியைத் தவிர. நிச்சயமாக அது எனக்குரியது அதற்கு நானே கூலி வழங்குகிறேன். எனக்காகவே (நோன்பாளி) தனது இச்சைகளைக் கட்டுப்படுத்தி உணவையும் தடுத்துக் கொள்கிறான்." (முஸ்லிம்)

எனவேதான் ரமழான் தரும் பயிற்சி பிறர் சொத்துக்களை அபகரித்தல், மதுபானம், வட்டி, போன்ற தீய வற்றை மட்டுமல்ல, ஹலாலான உணவையும் குடிபானத்தையும்கூட படைத்த அல்லாஹ்வின் கட்டளை என்பதால் அவற்றைத் தவிர்ந்து கொள்ளுமாறும் ஏவப்பட்டுள்ளது.

"எவர் தன் அல்லாஹ்வின் முன்னிலையில் நிற்க வேண்டும் என்பதனை கருதி தன் மனோஇச்சைகளைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாரோ அவர் நுழையும் இடம் சுவனமாகும்" (79:40,41)

ரமழானில் ஒவ்வொரு வினாடியும் இந்த உணர்வுடன் கழிய வேண்டும். அதன் இரவுகளை கியாமுல் லைல்களால் உயிர்ப்பித்து அல்குர்ஆனுடன் ஆத்மார்த்த உறவுபூண்டு இறையச்சத்தை வளர்க்க முயற்சிக்க வேண்டும். அர்த்தமற்ற விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், வீணான அரட்டைகள் என்பவற்றிலிருந்து முழு வாழ்வையும் பாதுகாப்பதற்கான பயிற்சியாக ரமழானைப் பயன்படுத்த வேண்டும். தக்வா உடைய மனிதர்களுக்கு எண்ணற்ற அந்தஸ்துக்கள் உலகிலும் மறுமையிலும் உண்டு என அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.

தக்வா மனிதனின் கண்ணியத்திற்கான அளவுகோல். அல்லாஹ்வின் நேசத்தையும் அவனது பாதுகாப்பையும் உறுதிசெய்யும் சாதனம். கடினமான கருமங்கள் இலகுவாவதற்கும் வாழ்க்கையில் பயனுள்ள வழி பிறப்பதற்குமான திறவுகோல். மொத்தத்தில் அல்லாஹ்வின் விசாலமான மன்னிப்பைப் பெற்று சுவனப் பேரின்பத்தை அனுபவிப்பதற்கான உன்னத மார்க்கம்.

இம்மகத்தான அனைத்து வாயில்களையும் திறக்கின்ற திறவுகோல் தக்வா. அவ்வுணர்வை வளர்த்துக் கொள்வதற்கான இப்பிரபஞ்சப் படைப்பாளனின் ஏற்பாடுதான் ரமழான். நீண்ட முடிவில்லாத வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ் காட்டியுள்ள நிறைவான வழிகாட்டல். ரமழானை அடைந்து இந்தப் பாக்கியத்தைப் பெறாதவன் தன் வாழ்வில் அனைத்து நன்மைகளையும் இழந்தவன்; வாழ் நாளை வீணே தொலைத்தவன்; அபாக்கியசாலி.

சம்பிரதாய நோன்புகளை விட்டு விட்டு இலக்கை அடைந்து கொள்வதற்கான நோன்புகளை நோற்க வேண்டும். அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு கட்டுபாட்டுடன் நடப்பதற்கான பயிற்சியாக ரமழானை நாம் பயன்படுத்த வேண்டும். எமது சிந்தனையும் செயற்பாடும் இறை கட்டுப்பாட்டிலிருந்து தூரமாகி விடக்கூடாது. இறையன்பையும் திருப்தியையும் ஈட்டித் தரும் கருமங்களைச் செய்ய வேண்டும். அவனது வெறுப்பை சம்பாதிக்கும் கருமங்களில் ஈடுபடுவதை நெருப்புக் குண்டத்தில் வீழ்வதற்கு சமமாகக் கருத வேண்டும். இறையச்சம் நிறைந்த வாழ்க்கைக்கான நகர்வாக எமது ரமழான் அமைய வேண்டும்.

அல்லாஹ்வின் பேரின்பப் பரிசான சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படும் மகத்தான காலமிது. சுவனத்தின் மீது தீராத ஆசை கொண்டவர்களாக எம்மை வார்த்தெடுப்பதற்கான பருவமிது. அதுவே மனித வாழ்வை அழகுபடுத்தும். மறைவானவற்றின்மீது ஆழமான விசுவாசத்தை உருவாக்கும். அதன் விளைவாக கண்கள் கண்ணீர் சிந்தும். இறையச்சத்தால் சிந்தும் கண்ணீருக்கு அர்ஷின் நிழலைப் பெற்றுத் தரும் சக்தியுண்டு. நரகம் அந்தக் கண்களைத் தீண்டுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளும். இந்த இறையச்ச உணர்வுதான் உலக வாழ்வை செம்மைப்படுத்தும். அசுத்தங்களிலிருந்து எம்மைத் தூய்மையாக்கும். ஹலாலும் ஹராமும் தெளிவாகும். இல்லாதபோது வாழ்க்கை ஒழுங்கு சீரழிந்து அசுத்தங்களில் (ஹராம்) மூழ்கி வாழ்வின் இலட்சியத்தைப் பாழாக்கி மிக மோசமான ஒதுங்கு தலமான நரகத்தையே சென்றடைய வேண்டிவரும். நஊது பில்லாஹி மின்ஹா.

அல்லாஹ் எம்மனைவரையும் முத்தகீன்களோடு சேர்த்தருள்வானாக!

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களே, ரமழானிடம் தோற்றுப் போவோமா?

அலபடகம பின்த் ஏ. ஹமீத்

பார்த்தீர்களா; நேற்றுத்தான் வந்து போனது போலொரு உணர்வு, இத்தனை வேகமாக வந்து போகின்ற ரமழான்களை, ரஹ்மத் பொருந்திய இந்த மாதத்தை, நன்மைகளை பன்மடங்கு அதிகமாகப் பெறக் கூடிய, இலாபம் கொழிக்கப்போகும் இந்த ஸீஸனை வீணே விட்டுவிட முடியாது. ரமழான் வருமுன் அதன் எதிர்பார்ப்பு மனநிலையை உருவாக்கிக் கொள்வது எம்மை அமல்களின் பால் ஆர்வத்தை தூண்டிவிடும். இத்தகைய மனநிலை மீதமுள்ள மாதங்களில் இருக்குமாறு தக்க வைத்துக் கொள்வதில்தான் வெற்றி இருக்கிறது. இல்லையேல் ரமழானிடம் நாம் தோற்று விடுவோம். எமது வழமையான அன்றாட காரியங்களையும் சிறிது மாற்றமுறச் செய்து ஒரு சிறப்பொழுங்கிற்கு கொண்டு வருவோம்.

குடும்பத்தவரும் ரமழானும்

1. முழுக் குடும்பத்தினரும் அமர்ந்து (குடும்ப உஸ்ராவில்) திட்டமிடல் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டு பெரியவர் முதல் சிறியவர் அவரவர் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வோம்.

2. நோன்பு கால தர்பிய்யா அட்டவணைகளை வயதுக்கேற்றவாறு தயாரித்துக் கொள்வோம்.

3. ஒரு வசதியுள்ள குடும்பம் தனது வருவாயின் அளவைப் பொறுத்து சில புதிய முடிவுகளுக்கு இம்முறை வரலாம். நோன்பு நோற்க வசதியில்லாத அன்றாட கூலிகளுக்கு (இவர்கள் எமது ஊரிலேயே வசிப்போராக அல்லது உறவினர்களாக இருக்கலாம்) சில குடும்பங்களுக்கு, குறிப்பிட்ட மாதத்திற்கு தேவையான அரிசி மற்றும் தானியங்களை கிடைக்கச் செய்தல். வெறுமனே இவ்வுதவியைச் செய்துவிட்டு தொடர்பின்றி இராது அவர்களை அமல்களின் பால் தூண்டி ஆர்வத்தை ஏற்படுத்தி, அந்த வீடுகளை அல்லாஹ்வை அதிகமதிகம் ஞாபகப்படுத்தும் நன்றி செலுத்தும் வீடுகளாக மாற்றமுறச் செய்வோம்.

4. நாமும் முன்கூட்டியே தேவையான பொருட்களை வாங்குவோம். பிள்ளைகள் உட்பட யாவரும் அமர்ந்து ஒரு **Shopping List** தயாரித்து ஒரே தடவையில் அத்தனையையும் வாங்கி விடுவதால் ரமழான் **Smooth** ஆகப் போகலாம்.

5. **TV** பார்க்கக் கூடாது என சட்டம் போட்டு பெரிய துணியால் **TV** ஐ மூடி வைப்பதும் ஷவ்வால் பிறையைக் கண்டதும் திரையை அகற்றுவதுமாய் இனியும் தோற்றுப் போக முடியாது. இதில் தாயும் தகப்பனும் கூடுதல் கவனம் எடுத்தல் வேண்டும். பெரியவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பயனுள்ள ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை குடும்பத்திற்குள் அறிமுகப்படுத்த வேண்டும். கிடைத்துள்ள வாழ்க்கைக் காலத்தில் தங்களதும் தம் பிள்ளைகளதும் வாழ்வு அர்த்தமின்றிக் கழிய இனியும் பெற்றோர் இடமளிக்கலாகாது. உண்மையில் நாம் பிள்ளைகளை நேசிப்போமாயின் அவர்களுக்கு **Quality Of Life** ஐக் கொடுக்கவே முயற்சிப்போம்.

அயல் வீட்டாருடன் ரமழான்

01. ரமழானை அவர்கள் சிறப்பாகப் பயன்படுத்த முதலில் துஆச் செய்து கொள்வோம். பெரியவர்கள் அவ்வீட்டுப் பெரியவர்களுக்கும் எமது சிறியவர்கள் அவ்வீட்டின் சிறியவர்களுக்குமாக துஆச் செய்வகின்றபோது இரு குடும்பத்தினருக்குமிடையில் இறுக்கமான உறவும் அன்பும் வளர்ந்து விடும்.

02. எமது வாயிற் கதவில் ரமழானை வரவேற்கும் வகையில் 'ரமழான் சுவரொட்டி' ஒன்றைத் தொங்கவிடுவதன் மூலம் ரமழானுக்குத் தயாராகும் செய்தியை அயல்வீட்டாருக்கு எத்தி வைப்போம்.

03. ரமழான் பற்றிய சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், ரமழான் சட்டதிட்டங்கள் அடங்கிய கையேடு ஆகியவற்றை அவர்களுக்கு கிடைக்கச் செய்யுங்கள். ஓர் அமலைக் கற்றறிந்து செய்வது பெறுமதி கூடியது. பர்ளான நோன்பின் மகத்துவம் பற்றிய அத்தனை தகவல்களையும் அவர்களுக்கு எத்திவைப்பதை உங்கள் வேலைத்திட்டங்களுள் ஒன்றாகப் போட்டுக் கொள்ளுங்கள்.

04. சில இப்தார்களை அவர்களுடன் சேர்ந்து செய்யுங்கள். அல்லது அவர்களுக்குரிய இப்தார் உணவை சமைத்து அனுப்பி விடுங்கள். முன்கூட்டியே நீங்கள் அனுப்பும் செய்தியைச் சொல்லி விடுங்கள். இது அவர்கள் நேரத்தை மிச்சப்படுத்த உதவும்.

05. முஸ்லிம் அயலவரை இப்தாருக்கு அழைக்கும் போது குறைந்தது ஒரு முஸ்லிமல்லாத அயல் குடும்பத்தாரையும் சேர்த்து அழையுங்கள். அவர்கள் ரமழான் பற்றிய விளக்கம் கேட்கவும் நீங்கள் விளக்கமளித்து உங்கள் தஃவாவை துவங்கவும் இது வழியாகும். அவர்களுக்கு விளங்கக்கூடிய பாஷையில் ரமழான் பற்றிய சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், தொகுப்புக்களை அழகாக பொதிசெய்து

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து விடுங்கள். கூடவே இது குர்ஆனிய மாதம். அந்தப் பொதியில் ஒரு குர்ஆன் மொழி பெயர்ப்பையும் வைத்து 'இது ரமழான் பரிசு' எனக் கொடுங்கள்.

இஸ்லாத்தின் தூதை மற்றவர்களுக்கு எத்திவைப்பதில் இன்னும் நாம் பின்னடைந்து சோம்பேறிகளாக இருப்பதை இனியும் அனுமதிக்க முடியுமா? ருசியாக கஞ்சி செய்து கோப்பை நிறைய அவர்களுக்குக் கொடுக்க எம்மில் பலருக்கு மனமுண்டு. ஆனால் அல்லாஹ்வின் செய்தியை எத்திவைக்க மனதில் துணிச்சலில்லை. என் வீட்டுக்கருகில் குடியிருக்கும் இந்த மாற்று மத அயலவனுக்கு ஏன் இன்னும் என்னால் இஸ்லாத்தின் செய்தியைச் சொல்ல முடியாதிருக்கிறது என சிறிது சிந்திப்போம்! காலடியில் உள்ள தஃவாவுக்கான வாசல்களை அடைத்துக் கொள்ளாதிருப்போம்!

06. அயல்வீட்டுப் பிள்ளைகளை தன் பிள்ளைகள் மூலமாக அழைத்து தனியாக, அவர்களை முக்கியத்துவப்படுத்தும் இப்தார் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். இதனை அப்பிஞ்சு உள்ளங்களின் ஆன்மிக அமர்வாக மாற்றுங்கள்.

07. உங்கள் பிள்ளைகளின் ஆசிரியர்களுக்கு ஓர் இப்தாரை ஏற்பாடு செய்யுங்கள். அவர்கள் மாற்று மதத்தவராயிருப்பின் மிக நல்லது. அவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு அறிவுபூர்வமாக பதிலளிக்க உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். ஓர் அறிஞனுக்கு இஸ்லாத்தின் தூதை எத்திவைப்பது அவன் சார்ந்த அத்தனை பேருக்கும் அச்செய்தி எத்திவைக்கப்பட வழிகோலும்.

08. ரமழான் பற்றிய ஏதாவதொரு தலைப்பில் **Project** ஒன்றைத் தயாரிக்க உங்கள் பிள்ளையைத் தூண்டுங்கள். எல்லாக் கோணங்களில் இருந்தும் ரமழானை அவர்களது பார்வையில் பெறுமதி மிக்கதாக ஆக்குங்கள். இதற்கு அவர்களது ஆசிரியர்களின் துணையை நாடுங்கள்.

09. பொய் பேசாதே, சப்தம் போடாதே, சண்டை பிடிக்காதே... என எதிர்மறையாய் நின்று பொலிஸ்கார வேலை செய்வதை விட்டுவிட்டு, அவர்கள் உண்மை பேசி பண்பாடாய் நடக்கக்கூடியவாறு அறிவுரை சொல்லி அதற்கேற்ற சூழலையும் உருவாக்கி முஹாஸபா பட்டியல் ஒன்றை அவர்களுடன் கலந்தாலோசித்து தயாரித்து அதனை செயல்படுத்த வையுங்கள். அதற்குரிய ஹஸனாத்தை அல்லாஹ் மறுமையில் அதிகரித்துத் தருவான் என ஆசையூட்டி உங்கள் சார்பிலும் சிறிய அன்பளிப்பை பெருநாளன்று தருவதாக வாக்களித்து நிறைவேற்றியும் விடுங்கள். இது போன்றவற்றை சிறிய வேலைத்திட்டமாக **(Project)** ஆக்கி எமது சிறுசுகள் மூலமாகவே அவர்களின் வகுப்புத் தோழர்கள், அயல்வீட்டு சிறார்கள், உறவினர்களில் உள்ள சிறுசுகளுக்கு எத்திவைத்து செயல்படுத்த வையுங்கள்.

10. அல்லாஹுத் தஆலாவுக்கு அதிகமாக நன்றி செலுத்தவும் அதிகமதிகம் துஆச் செய்யவும் தவக்குல் வைக்கவும் பிள்ளையைப் பழக்கி விடுங்கள். இது அவர்களில் தன்னம்பிக்கையை வளர்க்கும்.

சமையல்கட்டும் ரமழானும்

தனது குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும் ஏன் அயல்வீட்டாருக்கும் திட்டங்கள் போட்டு வழிகாட்டும் சமையல்கட்டின் பிரதானி தாய், தன் பங்குக்கு கூடுதலாக நேரத்தை சமையலில் கழிக்க இயலாது. தாய்மார்களே, நீங்களும் அதிகமதிகம் ஸஜதாக்கள் செய்ய வேண்டி இருக்கிறது. திலாவத்திலும் தப்ஸீரிலும் ஸீராவிலும் உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அலட்சியமாய் இருந்துவிட்டு ஈற்றில் கைதேசப்பட முடியாது.

எனவே, ரமழான் காலத்திலும் முழு நேரமும் சமையற்கட்டே கதி என்று கிடக்காமல், சமையலையும் ஓர் ஒழுங்கிற்கு கொண்டு வாருங்கள். சுருக்கமான நேரத்தில் சமையலை முடித்துவிட்டு இபாதத்களில் ஈடுபடுங்கள்.

குளிர்சாதனப் பெட்டி, மின்சார சமையல் அடுப்புகள் வைத்திருப்பவர்கள் அவ்வசதிகளை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அத்தோடு, உணவுப் பழக்கவழக்கங்களிலும் நல்ல மாறுதல்களை இம்மாதத்தில் ஏற்படுத்தி விடுங்கள். எந்த நாளும் பொரியலும் வறுவலும் உண்ணக் கொடுக்காதீர்கள். அதிகப்படியான சீனிப் பதார்த்தம் எடுக்க விடாமலும் ஸஹர் உணவை அளவுக்கதிகமாக உண்ண விடாமலும் தடுத்துக் கொள்ள வேண்டும். இப்தாருக்கும் ஸஹருக்கும் இடையில் முடிந்தளவு கூடுதலாக தண்ணீரோ பானங்களோ குடிக்க வைப்பது எம் வீட்டாரை மறுநாள் **fresh** ஆக வைத்திருக்கும்.

பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், தானிய வகைகள், பால் பொருட்களை முறைப்படி தயாரித்து உண்ணச் செய்ய வேண்டும். இவை எம் வீட்டாரின் சுகாதாரத்தைப் பாதுகாக்கும்.

ஆமாம் உடலுக்குரிய போஷாக்கு போல எமது ஆன்மாவுக்கும் போஷாக்களிக்க வேண்டிய கடமை எமக்கிருக்கிறது. நரக நெருப்பிலிருந்து எம்மையும் எம் குடும்பத்தையும் உறவுகளையும் அயலவரையும் பாதுகாப்பதற்கான ஆற்றலையும் திறமையையும் அல்லாஹ் எமக்குத் தந்திருக்கிறான். இக் கருமத்தில் எம்மை முழுமையாக ஈடுபடுத்தி நல்லவற்றை உலகில் வாழச்செய்து தீயனவற்றை அகற்றும் பணியில் எமது பங்களிப்பையும் செய்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்ற அடியார்களாக ஆவோமாக!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பெண்கள் மீதும் ஸகாத் கடைமை

டாக்டர் மரீனா தாஹா ரிபாய்

ஸகாத், இஸ்லாத்தின் ஐம்பெரும் தூண்களில் ஒன்று. இன்று ஸகாத் கொடுக்க வேண்டியவர்கள் சரியாகக் கொடுக்காமலிருப்பதாலும் எடுக்க வேண்டியவர்கள் சரியாக எடுக்காமலிருப்பதாலும் எமது சமுதாயத்தில் உள்ளோருக்கும் இல்லாதோருக்கும் இடையிலான இடைவெளி விரிந்து கொண்டே போகிறது. இந்நிலை மாற வேண்டுமாயின், முழு சமுதாயமும் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். இதில் பெண்களுக்கும் பங்கு உண்டு.

அநேக பெண்கள் ஸகாத் கொடுப்பது தந்தையின் அல்லது கணவனின் கடமை என எண்ணிக் கொண்டு அது பற்றிக் கற்கவோ விபரம் தெரிந்து கொள்ளவோ நினைப்பதில்லை. உண்மையில் நாம் ஸகாத் கொடுக்க தகுதியற்றவர்களாக இல்லாவிட்டாலும், ஒவ்வொரு பெண்ணும் ஸகாத் பற்றி மட்டுமல்ல, இஸ்லாமிய விடயங்கள் பற்றி பொதுவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

ஏனெனில், அறிவைப் பெற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமை. அந்தவகையில் இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றான ஸகாத் பற்றியும் பொதுவாக அறிந்திருக்க வேண்டும். தான் கொடுக்காவிட்டாலும் தன்னைச் சார்ந்தவர்கள் கொடுக்கிறார்களா என்பதைக் கவனித்து அவர்களுக்கு அறிவுரை வழங்க முடியும். இப்போதில்லாவிட்டாலும் எப்போதாவது ஸகாத் கொடுக்கும் சாராரிலோ ஸகாத் எடுக்கும் சாராரிலோ நாமும் சேர நேரிடலாம். அப்போது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கிணங்க சிறந்த முறையில் அவற்றைச் செய்யத் தெரிந்திருக்க வேண்டும்.

பெண்கள் தமது சொந்த வருமானத்தில் அல்லது மற்றோரிடமிருந்து பெற்ற செல்வத்தில் அல்லது சேர்த்து வைத்த செல்வத்திலிருந்து ஸகாத் கொடுக்கத் தகுதியானவர்களாக இருக்கலாம். எப்படியிருந்தாலும், ஸகாத் ஒரு கட்டாயக் கடமை; ஸகாத் கொடுக்காமலிருப்பது பெரும் பாவங்களில் ஒன்று என்பதை அவள் உணர வேண்டும். அறியாமலிருந்தேன்; தெரியாமலிருந்தேன் என்றெல்லாம் ஆகிராவில் சாக்குப்போக்குச் சொல்ல முடியாது.

ஒரு பெண்ணிடம் நகையிருந்தால் அது அவளுக்கு சொந்தமாக இருக்கும்வரை -அது அவளது பெற்றோர் கொடுத்ததாக அல்லது கணவன் வாங்கிக் கொடுத்ததாக அல்லது அவளுடைய சொந்தச் சம்பாத்தியத்தில் இருந்து பெற்றுக் கொண்டதாக அல்லது வெகுமதியாக வேறொருவரிடமிருந்து கிடைத்ததாக இருந்தாலும்- அவள்தான் அதற்குரிய ஸகாத்தைக் கொடுக்க வேண்டும். கணவரோ பெற்றோரோ அதற்கான ஸகாத்தைக் கொடுத்து விட்டால் சரி; அப்படி இல்லாதவிடத்து அவளே குற்றவாளி.

நகை நட்டு மட்டுமல்ல, வருமானத்துக்காக கட்டப்பட்ட வீடு, பங்குதாரராக அவள் இருக்கும் வியாபாரம், கடைகள் மற்றும் அவளது சேமிப்புப் பணம், ஸகாத் நிஸாபை அடைந்திருக்கக் கூடிய கால்நடை, தானியம், பயிர்வகை எல்லாவற்றுக்கும் அவளே பொறுப்பு.

பல பெண்கள் தமது சொந்த வருமானத்தில் வாங்கிய நகைகளுக்கு மட்டும் ஸகாத் கொடுத்தால் போதும்; கணவன் மூலம் கிடைக்கப் பெற்றவைக்கு கணவன்தான் ஸகதாத் கொடுக்க வேண்டும் எனத் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

வேறு சிலர், தாய்-தகப்பன் ஊடாக வந்த சொத்து, நகை போன்றவற்றை; இவை வாரிசுரிமைதானே, அவற்றுக்கு ஸகாத் கொடுக்கத் தேவையில்லை எனக் கருதுகிறார்கள்.

எனவே, ஒவ்வொரு பெண்ணும் எந்தெந்தப் பொருட்களில், எப்போது, எவ்வளவு ஸகாத்துக்கு உரித்தாகிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வழமையாக, ஸகாத் ரமழான் மாதத்தில் கொடுக்கப்படுவதாக இருந்தாலும், புதிதாக வாங்கிய நகை, சேமித்து வைக்கும் பணம் இவற்றுக்கு ஒரு வருடம் பூர்த்தியாகும் போது, அது எந்த மாதத்திலிருப்பினும் ஸகாத் கடமையாகி விடுகிறது என்பதை அவள் அறிந்திருக்க வேண்டும்.

இவ்வளவு காலமும் ஸகாத் கொடுக்காத பெண்களாயின் எவ்வளவு காலம் கொடுக்காதிருந்தோமோ அதனைக் கணக்குப் பார்த்துக் கொடுத்துவிட வேண்டும். சேமிப்பில் கணிசமான தொகை குறையுமே என்று சிந்திக்கக் கூடாது. நாம் கொடுக்காமல் வைத்திருந்த பணமெல்லாம் நம்முடையதல்ல. ஏழைகளுக்குச் சொந்தமான பணத்தை நாம் அனுபவித்துக் கொண்டிருந்தோம் என்ற அச்சம் வரவேண்டும். வங்கியில் போட்டு வைத்துக் கொண்டு "நம்மிடம் இவ்வளவு இருக்கிறது" என மகிழும் ஆனந்தம் அற்பமானது; அது நிலைக்காது; அதற்காக மறுமையில் நரக நெருப்பில் வேக வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரையில் நகைகளுக்கு ஸகாத் கொடுப்பதில் பயன்படுத்தும் நகை, சேமிப்புக்கு வாங்கி வைத்த நகை என்பவற்றில் எதற்கு ஸகாத் கொடுக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து வைத்த நகைகள் ஒரு வருடத்துக்கு மேல் நம்மிடமிருந்து அவை நிஸாபையும் அடைந்திருந்தால் நிச்சயம் வருடா வருடம் அதற்கு ஸகாத் கொடுக்க வேண்டும். இவற்றுக்கு வாழ்வில் ஒருமுறை ஸகாத் கொடுத்தால் போதும் என சிலர் கூறினாலும் அதற்கு வலுவான ஆதாரமில்லை.

நாளாந்தம் பயன்படுத்தும் நகைகள் என்பது எப்போதும் கையில், கழுத்தில் அணிந்திருக்கும் நகைகள் மட்டுமல்ல, ஒரு பயணத்துக்கு, விருந்துக்கு என அணியும் நகைகளும்தான். இவற்றுக்கான ஸகாத் பற்றி உலமாக்களிடையே மூன்று கருத்துக்கள் நிலவுகின்றன.

1. இவற்றுக்கு ஸகாத் கொடுப்பது அவசியமில்லை
2. வாழ்வில் ஒருமுறை கொடுத்தால் போதும்
3. ஒவ்வொரு வருடமும் (இவை எம்மிடம் இருக்கும்வரை) கொடுக்க வேண்டும்.

இவற்றில் மூன்றாம் தீர்ப்பு கொடுப்பவருக்கு நல்லது. ஏனெனில் ஸகாத் எமது சொத்துக்களைத் தூய்மைப்படுத்தும். ஸகாத் ஓர் இபாதத். அதிகம் செய்வதால் நஷ்டமடைவதில்லை. நிச்சயமாக ஸகாத்துக்கு அல்லாஹ் 700% பலன் தருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறான்.

ஸகாத்தைச் சொந்தப் பணத்திலிருந்தோ கணவர் அல்லது பெற்றோர் அல்லது மக்கள் இவர்களிடமிருந்து பெற்றோ கொடுக்கலாம். அப்படி இல்லாதவிடத்து இருக்கும் நகைகளை விற்றாவது ஸகாத் கொடுக்க வேண்டும். இப்படி வருடா வருடம் விற்று வந்தால் இருக்கும் நகையெல்லாம் முடிந்து விடுமே என சிலர் மூடத்தனமாகக் கேள்வி கேட்பார்கள்.

வருடா வருடம் இரண்டரை வீதம் கொடுத்து வந்தால் எல்லாம் முற்றுமாக முடிய குறைந்தது 40 வருடங்கள் செல்லும்! அதிலும் தங்கத்தின் அளவு குறையக் குறைய கொடுக்கும் அளவு குறைந்து கொண்டே செல்லும்! ஆனால், தங்கம் முடியும்வரை ஸகாத் கொடுப்பது அவசியமில்லை. ஏனெனில், நிஸாப் அளவை அடைந்தால் மட்டுமே ஸகாத் கொடுக்க வேண்டும். இப்படிக் கொடுத்துக் கொண்டு வரும்போது நிஸாபின் அளவைவிட ஒரு மஞ்சாடியளவு குறைந்தாலும் ஸகாத் கொடுப்பது அவசியமில்லை. எனவே, எவரும் தங்கம் முடியும் வரை கொடுக்கும் நிர்ப்பந்தம் இல்லை.

யாரொருவர் ஸகாத்தை ஒழுங்காகக் கொடுத்து வருகிறாரோ அவர் நிச்சயமாக தன் வாழ்வில் பரக்கத்தையும் ரஹ்மத்தையும் காண்பார். நகை நட்டு மட்டுமன்றி, பிள்ளை குட்டிகள், குடும்ப வாழ்க்கை, மன நிம்மதி இவை எல்லாவற்றிலும் அல்லாஹ்வின் ஆசியும் அருளும் இருக்கும்.

நகைகளுக்கு என்று கொடுக்கும் போது சேமிப்பு நகை, பயன்பாட்டில் உள்ள நகை இவை எல்லாவற்றையும் சேர்த்து நிஸாபை அடைகிறதா என்று பார்த்து, இருப்பின் எல்லாவற்றினதும் மொத்தப் பெறுமதியின் இரண்டரை வீதம் ஸகாத்தாகக் கொடுக்கப்பட வேண்டும். இது தெரியாத சிலர், நிஸாபை விட எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அந்த அதிகமான அளவுக்கு மட்டும் இரண்டரை வீதம் ஸகாத் கொடுக்கின்றனர். இது முற்றிலும் தவறாகும்.

ஒரு பெண்ணுக்கு வியாபாரத்தில் பங்கிருக்குமானால், அதில் ஈடுபடுத்தப்பட்ட முதலுக்கு ஸகாத் கொடுக்க வேண்டும். தந்தை தந்தது; எனவே, நான் அதற்கு ஸகாத் கொடுக்கத் தேவையில்லை என்று சொல்ல முடியாது. அவ்வாறே வீடொன்று வாடகைக்கு விடப்பட்டால் வாடகைத் தொகைக்கு, தோட்டத்தில் விளை பொருட்களுக்கு, கால்நடைகளுக்கு மற்றும் இன்னோரன்ன எல்லா விடயங்களிலும் ஸகாத் விதியாகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

பெண்கள் தாம் ஸகாத் கொடுக்கும் நிலையை அடையா விட்டாலும் தமது கணவன், தந்தை, மகன், மகள் இவர்கள் ஸகாத்தை சரிவரக் கொடுக்கிறார்களா என்று கவனித்து, அப்படிக் கொடுக்காதவிடத்து அவர்களுக்கு அதன் அவசியத்தை எடுத்துச் சொல்ல வேண்டும்.

யாருக்கு ஸகாத் கொடுக்கப்படுகிறது என்பதும் முக்கியமானது. சிலர், ஸகாத்தை யாருக்கும் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் வசதியாக இருப்பவர்களுக்கும் "நீங்களும் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்களேன்" என்று கொடுக்கும் அதிசயம் நமது நாட்டில் நடக்கிறது! எமது ஸகாத்தை உரியவர்களுக்குக் கொடுக்காவிட்டால் ஸகாத்தைக் கொடுக்காதவர் போலாவோம். ஸகாத் பெறத் தகுதியில்லாதோர் ஸகாத் பெறுவார்களானால், அவர்கள் ஏழைகளின் சொத்தில் கைவைத்த குற்றத்துக்கு ஆளாவர்.

ஓர் ஆணைப் பொறுத்தமட்டில், அவனது பொறுப்பிலிருக்கும் பெற்றோர், மனைவிமார், பிள்ளைகளுக்கு ஸகாத் கொடுக்க முடியாது. இவர்கள் தவிர்ந்த சகோதர சகோதரிகள், அவர்களின் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு -இவர்கள் ஸகாத் பெறத் தகுதியிருப்பின்- கொடுக்கலாம்.

பெண்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு எவரையும் பாராமரிக்க வேண்டிய பொறுப்பு இல்லாததால் உலகில் எவருக்கும் அவளது கணவன், பெற்றோர், பிள்ளைகள் உட்பட யாவருக்கும் கொடுக்கலாம். சொல்லப் போனால் அவளுடைய ஸகாத்துக்கு மிக்க உரித்தானவர்கள் அவளது மேற்குறிப்பிட்ட ஒரு சில உறவினர்களே. அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னரே மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஓர் ஆணும் கூட தனது நெருங்கிய உறவினர்களைத்தான் முதலாவதாகத் தெரிந்தெடுத்துக் கொடுக்க வேண்டும். இன்று இந்த வழிமுறையைக் கைவிட்டதால், சிலபோது கூடப் பிறந்த சகோதர, சகோதரிகள் மற்றோரிடம் கைநீட்டி வாங்க வேண்டிய அவலத்தைப் பார்க்கிறோம்.

சிலர் 10 ரூபா 100 ரூபா தாள்களை வாசலில் வருகின்ற போகின்றவர்களுக்கு ஸகாத் என்று கொடுக்கிறார்கள்; இது தவறு. முஸ்லிம் அல்லாதவரும் ஸகாத் பெறுவதற்காக தொப்பியை முக்காட்டைப் போட்டுக் கொண்டு வரலாம்; வருகிறார்கள்.

ஸகாத் பெறுபவர்கள் எதிர்வரும் வருடத்தில் கைநீட்டத் தேவையற்ற வகையில் போதுமானதாகக் கொடுப்பதே ஸகாத்தில் மிகச் சிறந்தது. ஏழ்மையை ஒழித்து சமுதாயத்தில் சுபிட்சம் பெருக அல்லாஹ் அமைத்துள்ள ஸகாத் விதிமுறைகளைப் பின்பற்றி நல்வாழ்வு பெறுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித ஈக்கள்

குவைத்திலிருந்து ஆஇஷா ஷரீப்தீன்

காணும்போது அருவருப்பையும் எரிச்சலையும் ஊட்டக்கூடிய படைப்பினங்களில் ஒன்றே ஈ. இப் பிராணியின் பிரதான பணியே இதற்கு காரணம். அழுக்குகளையும் அசுசைகளையும் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு காவிச் செல்வதே இதனது வேலை.

இத்தகைய வேலைகளைச் செய்யும் மனித ஈக்களை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்... சமூகத்தில் அழுக்குகள் கிடைக்குமிடமெல்லாம் ஓடித்திரிந்து, சந்தர்ப்ப சூழ் நிலைக்கேற்றவாறு நாகரிகமான வடிவத்தில் அழுக்குகளை சுமந்து வந்து மனிதர்கள் ஏற்றுக்கொள்ளும் விதமாக அவற்றை சமர்ப்பிக்கும் பணியை இத்தகு மனித ஈக்கள் கனகச்சிதமாக செய்து விடுகின்றன.

மக்கள் ஏற்றுக்கொள்ளும் தகுதி, தராதரத்தில் இருந்தவர்களாக உளவியல் உத்திகளோடு இத்தகையவர்கள் இப்பணியை முன்னெடுப்பதால், இவர்கள் யாரென நாம் ஆரம்பத்தில் அடையாளம் காணத் தவறிவிடுவதுண்டு. காலப்போக்கில், இவர்கள் அடுத்தவர்களின் குற்றங்குறைகளைக் காவிச் செல்வதற்கு- தனது குறைகளை மறைக்க வேண்டிய நிலை, தனக்கு அங்கீகாரம் கிடைக்காமை, குறித்த மனிதர்களின் மீதான காழ்ப்புணர்ச்சி போன்றவையே காரணமாக இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

எனினும், தமது இப்பணிக்கு விமர்சனம் எனும் பொய் முலாம் பூசியிருப்பதால் படித்தவர்களும் பாமரர்களுமாக இவர்களின் பேச்சில் மயங்கிவிடுவதுண்டு. விமர்சனத்துக்கான ஆழ அகலமான வரைவிலக்கணத்தை நபியவர்கள் ஓரிரு வார்த்தைகளில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

"ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு கண்ணாடி."

கண்ணாடி தனக்கு முன்னால் நிற்பவரின உருவத்தை உள்ளபடியே கூட்டிக் குறைக்காமல் மிகத் தெளிவாக காட்டிக் கொடுக்கிறது மட்டுமன்றி, முன்னால் நிற்பவரின் குறையை அவரிடம் மட்டுமேயன்றி, வேறு யாரிடமும் ஒருபோதும் காட்டிக் கொடுக்கவும் மாட்டாது. எனவே, மறுமையை அஞ்சும் விமர்சகர்கள் ஒருபோதும் விஷக் காவிகளாக இருக்க மாட்டார்கள் அல்லவா?

இம்மனித ஈக்களை அவர்களின் தொடர்பாடல் மூலம் இனங்காணலாம். இவர்கள் பேசுவதைக் கொஞ்ச நேரம் கேட்டுக் கொண்டிருந்தாலே உள்ளம் அமைதி இழக்கும் அளவுக்கு தமது பேச்சில் அடுத்த மனிதர்களைப் பற்றி பேசி தப்பெண்ணங்களை எம் மனதில் விதைக்க முயற்சிப் பார்கள். ஆனால், அவர்களின் பிழைகளை நாம் சுட்டிக் காட்டினாலோ அவற்றை மறுப்பார்கள்; மறைப்பார்கள். இத்தகையவர்களை அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு எச்சரிக்கிறான்:

"பிறரைக் குறைகூறிப் புறம்பேசித் திரியும் ஒவ்வொரு வருக்கும் கேடுதான்." *(104: 01)*

எனவே, இத்தகைய ஷைத்தானிய சகவாசம் குறித்து எச்சரிக்கையோடு இருப்போம்!

அளவற்ற அருளானனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

புனித ரமழான் மாதம் வருவதற்கு முன்பாகவே அண்ணலெம் பெருமானார் (ஸல்) தம்முடைய தோழர்களுக்கு ரமழானைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டி வருவது வழக்கம்!

இதோ, இந்த ரமழானில் நமது ஈமானுக்கு ஊட்டச் சத்தாய் எமது புதிய வெளியீடுகள்

ஈமான் பில்லாஹ் இறைநம்பிக்கை

தியாகம் ஓர் முஸ்லிமின் உருவாக்கம்

குழந்தைகளுக்கான குர்ஆனிய கதைகள்

எளிதாய் கற்க இனிய துஆக்கள்

திருக்குர்ஆனின் நிழலில் 30ம் பாகம்

சத்ருத்தீன் இஸ்லாஹி (ரஹ்) விலை ரூ75

குர்ரம் முர்ராத் (ரஹ்) விலை ரூ 25

ஸனீர் விலை ரூ 25

மௌலவி அப்துர்ரஹ்மான் உமரி விலை ரூ 20

ஷஹித் செய்யத் குதுப் (ரஹ்) விலை ரூ 200

எமது இதர வெளியீடுகளில் சில

- இறை நினைவு — விலை ரூ 15
- ரமழான் வருங்காலத்தின் வெளிச்சம் — விலை ரூ 15
- ரமழானை வரவேறபோம் — விலை ரூ 15
- நோன்பு ஏன் ஏவ்வாறு — விலை ரூ 30
- தஸ்கியா பாகம் 1 — விலை ரூ 25
- தஸ்கியா பாகம் 2 — விலை ரூ 35
- தொழுகை ஏன் எவ்வாறு — விலை ரூ 30
- இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் — விலை ரூ150
- வதைச் சிறை — விலை ரூ 75
- இஸ்லாமிய ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் பாகம் 2 — விலை ரூ 75
- அண்ணலாரின் குழந்தைகள் — விலை ரூ 22
- தக்வா — விலை ரூ 35

முழுநேர , பகுதி நேர விற்பனை முகவர்கள் தேவை

Thinnai Thozargal Publication's & Book's seller
office : 24,nehru street, kumaraananthapuram, Tiruppur- 641602
shop : 81,angappan street, chennai-600001
Tel : +(00)91-99946 00350, 99526 35343 Email : shihab_ttp@yahoo.co.in

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமான மணவாழ்வு

உலக வாழ்வு என்பது சொற்ப காலமே. ஒரு மனிதனது ஆயுட்காலத்தை யாராலும் மட்டிட்டு சொல்ல முடியாது. ஒரு மனிதன் தன் ஆயுட்காலத்தில் 20, 25 வயது வரை பெற்றோருடன் வாழ்ந்து, மிகுதிக் காலத்தை மணவாழ்விலும் அதனைத் தொடர்ந்த குடும்ப வாழ்விலும் கழிக்கிறான்.

அந்த மணவாழ்வானது நிம்மதியானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய வேண்டும் என இறைவன் விரும்புகிறான். மனிதனது ஒவ்வோர் அசை வையும் உணர்வுகளையும் அறிந்த இறைவன் அதற்கு ஏற்றவாறே சட்டங்களை வகுத்துள்ளான். உண்மையிலே திருமணத்தின் மூலம் கணவன், மனைவி இருவரும் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு ஆகும்.

திருப்தியான மணவாழ்வின் மூலம் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கின்றன:

1. கணவன், மனைவி இருவரும் தமது ஆசைகளை சரியான விதத்தில் பூர்த்தி செய்து கொள்வது.
2. திருமணத்தின் மூலம் ஆண்-பெண் இருபாலாருக்கும் பாதுகாப்பு உண்டாகிறது.
3. குடும்பங்கள் மத்தியில் புதிய உறவுகள் பலப்படுத்தப் படுகின்றன.
4. மனித இனவிருத்தி
5. சமூகத்தில் எய்ட்ஸ் முதலான ஆட்கொல்லி நோய்கள் உண்டாவதிலிருந்து பாதுகாப்பு.

திருமண வாழ்வில் நிம்மதி என்பது ஓர் ஆணுக்கு அவனது மனைவியும்; ஒரு பெண்ணுக்கு அவளது கண வனும்; இருவருக்கும் அவர்களது சந்ததிகளும் கண் குளிர்ச்சியாக அமைவதாகும். இதன் மூலம் மகிழ்ச்சி கரமான, இன்பமான வாழ்வு கிடைக்கின்றது.

"அவனே உங்களை ஒரே மனிதனிலிருந்து படைத் தான். அவருடன் கூடி (இணைந்து) வாழ்வதற்காக அவரு டைய துணைவியை அவரிலிருந்தே படைத்தான்."
(அல்அஃராப்: 189)

"இன்னும் நீங்கள் அவர்களிடம் நிம்மதி பெறுவதற் குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்க ளுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களிடையே அன் பையும் கிருபையும் உண்டாக்கியிருப்பதும் அவனு டைய அத்தாட்சிகளாகும்." (அர்ரூம்: 21)

"இவ்வுலகம் அனைத்தும் இன்பம் அனுபவிக்கும் இடமாகும். உலக இன்பங்களில் மிகச் சிறந்தது ஸாலி ஹான ஒரு பெண்ணாவாள்." (முஸ்லிம்)

மார்க்கத்தில் எந்த விடயமும் நிர்ப்பந்தமோ வற்புறுத்தலோ இன்றி நடைபெற வேண்டும். எனவே, இஸ்லாம் என்பதுதான் வாழ்க்கை; வாழ்க்கை என்பது இஸ்லாம்தான். இவ்வடிப்படையில் வற்புறுத்தலோ நிர்ப்பந்தமோ இன்றி ஆண் தனக்கான துணைவியையும் ஒரு பெண்ணுக்கான துணையை அவளின் அனுமதியு டன் பெண்ணின் வலியும் தேர்வு செய்ய வேண்டும். மணமகன், மணமகள் இருவரையும் தெரிவு செய்யும் போது முதல் தகுதிகளாக மார்க்கம், நற்குணம், பண்பாடு ஆகியன அமைய வேண்டும்.

ஆண் தொழில் செய்யக்கூடியவனாகவும் தீய பழக்கங்கள் அற்றவனாகவும் இருக்க வேண்டும். மட்டுமன்றி, இருவரும் அன்புள்ளம் கொண்டவர்களா கவும் விட்டுக்கொடுப்பு, பொறுமை முதலானவற்றை குடும்ப வாழ்வில் கைக்கொள்ள வேண்டும்.

இன்று இதன் யதார்த்தம் தெரியாமல் பலர் அதனை நரக வாழ்வாக, கஷ்டம்-கவலை-துன்பம் நிறைந்த பாலைவன வாழ்வாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர். இதனை பூஞ்சோலையான, நிம்மதியான வாழ்வாக மாற்றுவது ஒவ்வொரு கணவன், மனைவியினதும் கடப்பாடாகும்.

மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு உளவியலாளரான ஆப்ரஹாம் மாஸ்லோ (Abraham Maslow) அவரது தேவைக் கொள்கையிலிருந்து (Hierachy of needs) 06 அம்சங்களை முன்வைத்தாலும், முக்கியமான நான்கு தேவைகளை குர்ஆன், ஸுன்னா அடிப்படையில் மணவாழ்வுடன் இணைத்துப் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உடலியல் தேவை 2. காப்புத் தேவை

3. அன்புத் தேவை 4. கணிப்புத் தேவை

01. உடலியல் தேவை

உடலியல் தேவை நிறைவுறாதபோது காப்புத் தேவையோ, அன்புத் தேவையோ, ஒருவரிடத்தில் எழ மாட்டாது. ஒரு மனிதனின் உடலியல் தேவைகளான பசி, தாகம், தூக்கம், கழிவகற்றல், பாலியல் நாட்டம், நோய் நிலைமைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உடலியல் தேவையானது ஏனைய தேவைகளிலும் வலிமை கூடியது.

பாடசாலை மாணவர்களின் உடலியல் தேவை பூர்த்தி செய்யப்படா விட்டால் அவர்கள் நன்றாக கற்க மாட்டார்கள். பசி, தாகம், களைப்பு, தூக்கம், சுகவீனம் ஆகியவற்றின் மத்தியில் கற்பது கடினம்.

இதனடிப்படையில் வாழ்க்கை வண்டியை ஓட்டும் கணவன், மனைவி இருவரதும் தேவைகளும் இருவராலும் நிறைவேற்றப்பட வேண்டும். ஓர் உழைப்பாளியான கணவனின் மூலம் தன் மனைவி பிள்ளைகளுக்குரிய உணவு, உடை, உறையுள், மருந்து போன்ற இன்னோரன்ன பல தேவைகளை நிறைவேற்ற முடியும். அதேபோல் தன் கணவனின் வாய்க்கு ருசியான விருப்பமான உணவு, பானங்களையும் ஓர் அன்புள்ளங் கொண்ட மனைவியால் நிறைவேற்ற முடியும். அதேபோல இருவரது பாலியல் தேவைகளையும் உணர்ந்து இருவருமே நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு தேவைகள் நிறைவேற்றப்படுமிடத்து ஒரு பெண் ஏனைய ஆண்களின் தொடர்பையோ ஒரு ஆண் ஏனைய பெண்களின் தொடர்பையோ நாட மாட்டார். இது மாத்திரமன்றி வேறு எவரிடத்திலும் அன்பையோ, காப்பையோ வேண்டி நிற்க மாட்டார்.

"ஆண்கள் பெண்களை நிர்வகிக்கக்கூடியவர்கள்."
(அந்நிஸா: 34)

எனவே, தன் குடும்பத்திற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வது ஓர் ஆண்மகனின் கடமையாகும். இதற்கு பெருமானாரின் ஹதீஸ்கள் விளக்கமாக அமைகின்றன.

"அல்லாஹ்வின் திருப்தியை நாடி நீ உன் மனைவிக்கு செலவு செய்த எந்த செலவுக்கும் ஏன் நீ அன்புடன் ஊட்டி விட்ட ஒருபிடி உணவுக்கும் அல்லாஹ் கூலி கொடுக்காமல் இருப்பதில்லை." (அல்புகாரி, முஸ்லிம்)

"அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி அல்லாஹ்வின் பாதையில் ஒரு தீனாரையும் அடிமையை விடுதலை செய்வதற்கு ஒரு தீனாரையும் தன் மனைவி-மக்களை செம்மையாக வைத்திருக்க ஒரு தீனாரையும் செலவு செய்கிறார். இவற்றில் தனது மனைவி-மக்களுக்கு செலவிட்டதே அனைத்து செயல்களிலும் மேலானதாகும்." (முஸ்லிம்)

எனவே, குர்ஆன்-ஸுன்னாவின் அடிப்படையில், உளவியல் அணுகுமுறைகளின் அடிப்படையில் வாழ்க்கை அமையும்போது மகிழ்ச்சியான வாழ்வு கிட்டுகிறது.

02. காப்புத் தேவை

சிறு குழந்தைகளுக்கு பெற்றோரின் பாதுகாப்பு அவசியம். மாணவர்களுக்கு ஆசிரியனின் பாதுகாப்பு அவசியம். ஒரு சேவையாளனுக்கு சேவை கொள்வோனின் பாதுகாப்பு அவசியம். இதுபோல ஒரு மனைவிக்கு ஒரு கணவனின் பாதுகாப்பும்; கணவனின் சொத்து, பிள்ளை, அவளது கற்பு அனைத்திற்குமே அவனது பாதுகாப்பும் வழங்க வேண்டும். இல்லாவிடின், குறிப்பிட்ட நபர் தனது பாதுகாப்புத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள மிகவும் பிரயத்தனப்படுவார்.

உதாரணமாக, பாடசாலையில் நிலவும் அநீதி, பாரபட்சம், சண்டைகள், உரத்த ஒலி, புதிய சூழல் என்பன பிள்ளையின் காப்பை பாதிக்கும். பிள்ளைகள் விரும்புவது போலவே மனைவியும் பூரணமான சுதந்திரத்தைவிட கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரத்தையே விரும்புகிறாள். இவ்விரு சாராருக்கும் (பிள்ளை, மனைவி) எது செய்ய வேண்டும்; எது செய்யக் கூடாது, எதற்குத் தண்டனை; எதற்கு வெகுமதி; எதற்குப் பாராட்டு கிடைக்கும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுமானால் இவ்விருவரினதும் காப்புணர்வு நிறைவேறும்.

முதன் முதலாக பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் எவ்வாறு காப்பை வேண்டி ஆசிரியரின் அன்பை வேண்டுகிறதோ அது போல புதியதொரு குடும்பத்தில் புதிய வாழ்க்கையில் நுழைந்த மனைவியும் தன் காப்பையும் அன்பையும் முதலில் எதிர்பார்ப்பது கணவனிடத்தில்தான். இச்சந்தர்ப்பத்தில் மிகவும் அன்புடன் மனைவியை நடத்தினால் அவள் நிம்மதியடைவாள்.

"அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்."
(அல்பகரா: 18)

அதாவது, இருவரது குறைகளையும் இருவரும் மறைத்துப் பாதுகாப்பது இருவரினதும் கடமையாகும்.

"ஒரு பெண் ஐவேளை தொழுது தன் வெட்கத்தலத்தைப் பாதுகாத்து கணவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பாளானால் தான் விரும்பிய வாயிலால் சுவனம் நுழைவாள்." (இப்னு மாஜா)

"ஒரு பெண் தன் கணவன் ஊரிலிருக்கும் நிலையில் அவன் அனுமதியின்றி நோன்பு நோற்பதும் அவனின் அனுமதியின்றி அவனது வீட்டிற்கு யாரையும் அனுமதிப்பதும் கூடாது." (அல்புகாரி, முஸ்லிம்)

இவ்விரு ஹதீஸ்களிலும் பெண்ணின் கற்புடைமைக்கான கூலியும் கணவன்-மனைவி இருவரின் மானத்திற்கான காப்பும் உத்தரவாதமளிக்கப்படுகிறது.

(தொடரும்)

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்வழி அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
www.noolaham.org

அடுத்த உம்ராவுக்கு நீங்கள் தயாரா?

ஏழைகளுக்குரியதையும் சேர்த்தே அல்லாஹ் நமக்குத் தந்திருக்கிறான். எனக்கு உரிமையில்லாததையும் நான் வைத்திருக்கிறேன் என்ற எண்ணம் எப்போதும் இருக்க வேண்டும். அப்போதுதான் எமக்காகச் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயையும் இதற்காக நான் குற்றவாளியாவேனா? எனும் அச்சத்துடன், சிந்தனையுடன் செலவு செய்வோம்.

கஃபதுல்லாஹ் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து உள்ளத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. அந்தப் புனிதத்தலத்தில் கால்பதித்து விட்டு வந்தவர்களுக்கு மீண்டும் அங்கு சென்றுவிட வேண்டும் என்ற துடிப்பைத் தவிர்க்கவே முடியாது. கஃபாவைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது மனதில் தோன்றும் நிம்மதியை, உள்ளம் உருகிச் செய்யும் தவாஃபை, அங்கு நடத்தப்படும் தொழுகையை, நேரம் போவது தெரியாமல் குர்ஆன் ஓதுவதில் உள்ளம் திளைத்திருப்பதை நினைக்குந் தோறும் உள்ளம் சிலிர்க்கத்தான் செய்யும். அடுத்த விமானத்தில் பறந்து போய்விட வேண்டும் என்றுகூடத் தோன்றும். இந்தளவு ஈர்ப்புச் சக்திமிக்க புனித இடம் பூமியில் வேறு எங்குமே இல்லை.

அதிலும் ரமழான் நெருங்கி வரும் இவ்வேளையில் இந்தப் பாக்கியமிக்க காலத்தை அந்தப் புனித பூமியில் கழித்துவிட மனம் துடியாய்த் துடிக்கும். ஆமாம், ரமழான் ஆன்மிகத்தில் மனதைத் திளைக்கச் செய்யும் மாதம். ஹரம் ஷரீப் ஆன்மிக உணர்வுகளை பொங்கிப் பிரவாகிக்கச் செய்யும் தலம். இரண்டும் இணையும்போது அந்த இன்பமே தனி!

எனவே, ஈமானைப் புதுப்பித்துக் கொள்ள இந்த வருடமும் உம்ராவுக்குப் போகத் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். வழமையாகச் சென்று வருபவர்களுடன் புதிதாகப் பலரும் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். தயவுசெய்து கொஞ்சம் நில்லுங்கள். உங்கள் மனதின் ஆவலைக் கொஞ்சம் அடக்கி வையுங்கள்.



- ஷாறா -

இதோ! உங்கள் சமூகம் உங்களை அழைக்கிறது.

அங்குள்ள காட்சிகளைப் பார்த்திருக்கிறீர்களா?

- ஒருநாளைக்கு ஒருமுறை ஒரு தேநீராவது கிடைக்காதா என ஏங்கும் பிஞ்சுகள்...
- சோறும் சம்பலும்கூடப் பரவாயில்லை. அதுகூட இல்லையே என ஏங்கும் வயிறுகள்...
- அயல்வீடுகளிலிருந்து வரும் கறி வாசத்தை நுகர்ந்து வாயில் நீர் ஊறும் குழந்தைகளை இழுத்துக் கொண்டு வந்து பசி தீர்க்க தண்ணீரைக் கொடுக்கும் தாய்மார்கள்...
- உடுத்திருந்த ஆடையைத் துவைத்துப் போட்டு விட்டு, குளித்து முடிந்த பின் உலர்ந்தும் உலராத நிலையில் அதே ஆடையைத் திரும்பவும் அணிந்து மானத்தை மறைக்கும் உடம்புகள்...
- தேவையானவற்றை வாங்க வசதியில்லாததால் பாடசாலை செல்லாமல் குடில்களுக்குள் முடங்கியுள்ள சிறுசுகள்...
- வசதியின்மையால் பாதியில் முடக்கப்படும் திறமைகள்...
- சொந்தமாய் ஒரு பலகை வீட்டுக்காக வருடக் கணக்காய் காணும் கனவுகள்...

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ!

மனிதனின் அடிப்படைத் தேவை உணவு. எமது அண்டை அயலவர் அதற்கே வழியின்றி இருக்கும்போது நாம் எவ்வாறு மகிழ்ச்சியாக வாழ முடியும். மேலதிக ஹஜ், உம்ரா செய்யாதது குறித்து அந்த ரஹ்மான் நம்மைக் குற்றம் பிடிக்க மாட்டான். ஆனால், சமூகத்தில் உள்ள அவலங்களைக் கண்டு கொள்ளாமல், அவை பற்றி சிந்திக்காமல், அவற்றுக்குத் தீர்வு தேடாமல் இருந்ததற்காக நிச்சயமாக அல்லாஹ் நம்மை விசாரிப்பான்.

நம்மிடம் செல்வம் வந்து சேரும்போது அது எமக்குச் சொந்தமானதல்ல; அல்லாஹ்வே அதன் சொந்தக்காரன்

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உணர்வு நம்மிடம் வர வேண்டும். ஏழைகளுக் குரியதையும் சேர்த்தே அல்லாஹ் நமக்குத் தந்திருக்கி றான். எனக்கு உரிமையில்லாததையும் நான் வைத்திருக் கிறேன் என்ற எண்ணம் எப்போதும் இருக்க வேண்டும். அப்போதுதான் எமக்காகச் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயையும் இதற்காக நான் குற்றவாளியாவேனா? எனும் அச்சத்துடன், சிந்தனையுடன் செலவு செய்வோம்.

இந்த உணர்வு அற்றுப் போனதால்தான் வீண் விரயமும் ஆடம்பரமும் பெருகிக் கொண்டு போகின்றன. எனது பணம், எனது இஷ்டம் என்ற நிலையில் தன் மன ஆசைகளை நிறைவேற்ற, அந்தஸ்தை நிலைநாட்ட ஏழைகளுக்குரியதை மனிதன் பயன்படுத்துகிறான். அதைப் பிழையெனச் சிந்திக்கும், சுட்டிக்காட்டும் உணர்வுகூட சமூகத்தில் இல்லை.

இப்போது நாம் சிந்திப்போம். நமது மன நிம்மதிக் காக, மகிழ்ச்சிக்காக செல்வத்தை செலவழிப்பதா? அல்லது வறுமையில், பிரச்சினையில் மூழ்கி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் சமூகத்துக்கு ஒட்சிசனாக நாம் மாறுவதா? திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களது கல்வி விருத்திக்கு உதவிசெய்து கல்வித்துறையில் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ள சமூகத்தை வழிநடத்தத் தகுதியான தலைவர்களை, துறைசார் நிபுணர்களை, உருவாக்கி முன்மாதிரி சமூகமாக மாற்றுவதா? போசாக் கின்மையால் நலிந்து, உருக்குலைந்துபோயுள்ள நமது இளைய தலைமுறையின் தேவைகளைப் பூர்த்திசெய்து ஆரோக்கியமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புவதா?

நமது சமூகத்துக்குத் தெரிந்த மிக முக்கியமான நல்ல காரியம் குமர் காரியம்தான். குமரைக் கரைசேர்க்க சீதனம் கொடுத்து, தாலிசெய்து திருமணத்தை நடத்தி வைப்பதற்கு ஹஜ் செய்த நன்மை என்று வேறு சொல்லிக் கொள்வார்கள். இஸ்லாத்தில் அப்படியொரு காரியம் இல்லை. இஸ்லாம் தெரியாததால் பரம்பரையாகச் செய்து வந்தவையும் மன இச்சையைத் திருப்திப்படுத்த புதிது புதிதாகச் சேர்த்துக் கொண்டவையும் சேர்ந்துதான் திருமணம் செய்வதை மலையைத் தூக்குவது போல சுமக்க முடியாத சுமையாக மாற்றியிருக்கின்றன.

திருமணம் இஸ்லாத்தில் மிக எளிய, மிகச் சாதார ணமான விடயம். ஊரை, உலகத்தை ஒரு கலக்குக் கலக்கிச் செய்யப்பட வேண்டியதல்ல. சிலவேளைகளில் ஸஹாபி கள் தாம் திருமணம் முடித்து வந்து சொல்லும்வரை ரஸூலுல்லாஹ்வுக்கே தெரியாமலிருந்தது. எனவே, தயவு செய்து குமர் காரியத்தை சமூகத்துக்குச் செய்யும் மிக நல்ல காரியங்களில் ஒன்றாகச் சேர்த்து விடாதீர்கள்.

இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? விமான டிக்கட்டுக்காய் ஒதுக்கிய பணத்தை எடுத்துக் கொண்டு ஏஜன்டிடம் போகப் போகிறீர்களா?

இல்லை, அந்தப் பணத்தால் சமூகத்தை வளப்படுத்த களத்திற்கு வரப் போகிறீர்களா?

அல்ஹம்துலில்லாஹ், வாருங்கள்!

சுவனத் தாயகம் நோக்கி இப்போதே புறப்படுங்கள்!

IDEAL TRAVEL SOLUTIONS

உள்ளூர், வெளியூர் விஷேட சுற்றுலா முகவர்

இந்தியா, தூரகிழக்கு சீனா, எகிப்து, மத்திய கிழக்கு, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான விஷேட சுற்றுலாக் குழுக்கள் இப்போது பயணிக்கத் தயாராகின்றன.

விஷேட இந்திய விஜயங்கள்

- பொன் திரிகோணப்பூமி : (டில்லி ஆக்ரா ஜெய்ப்பூர்) 5 இரவுகள் 6 பகல்கள்.
58,500.00 (5பேர் அடங்கிய குழுக்கள்)
- பெங்களூர், மைசூர், ஊட்டி 5இரவுகள், 6பகல்கள்
56,000.00 (4பேர் அடங்கிய குழுக்கள்)
- சென்னை விஷேட ஷொப்பிங் சவாரி 3 இரவுகள் 4 பகல்கள்
29,500.00 (4பேர் அடங்கிய குழுக்கள்)

இவையனைத்தும் விமானப் பயணச்சீட்டுகள், நட்சத்திர ஹோட்டல்கள், உள்ளூர் போக்குவரத்து, காலையாகாராம் மற்றும் நம்பிக்கையான வழிகாட்டிகள்....

இஸ்லாமிய ஒழுங்குகளுக்கு அமைய எல்லா ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.
புனித ரமழான் மாதத்தில் பயணிப்போர்க்கு விஷேட ஏற்பாடுகள் செய்து தரப்படும்

இன்னும் விஷேட குழுக்கள்
தூரகிழக்கு சீனா, எகிப்து, மத்திய கிழக்கு, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான விஷேட பயணக்குழுக்களும் ஏற்பாடு செய்து தரப்படும்.

Ideal Travel Solutions (Pvt) Ltd.
www.idealtravels.lk
Ideal Travel Solutions (Pvt) Ltd
No.4 1/1, Vandervert Place, Dehiwala, Tel: 0115231841, E-mail: info@idealtravels.lk, — 0771095519, 0771095517

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்வழி அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
www.noolaham.org

ஸலபுஸ் ஸாலிஹீன்களின் பிரதிபிம்பமாகத் திகழ்ந்தவர்



கலாநிதி அஹ்மத் அல்அஸ்ஸால் (ரஹிமஹுல்லாஹ்)

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

இஸ்லாமிய உலகம் ஒரு ரப்பானிய மனிதரை இழந்திருக்கிறது. ஆழமான அறிவு, எளிமை, அர்ப்பண சிந்தை, உயர் பண்பாடு, பணிவு... முதலான, ஓர் இஸ்லாமிய அழைப்பாளன் பெற்றிருக்க வேண்டிய பண்புகளை அணிகலனாகக் கொண்ட பேராசிரியர் கலாநிதி அஹ்மத் அல்அஸ்ஸால் கடந்த 2007.07.10ஆம் திகதி வபாத்தானார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

கடந்த ஜனவரி மாதம் நானும் கலாநிதி சுக்ரி அவர்களும் எகிப்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது கலாநிதி அல்அஸ்ஸால் அவர்களை அவரது இல்லத்தில் வைத்து சந்திக்கும் பேறு கிடைத்தது. கலாநிதி அல்அஸ்ஸால் அவர்கள் உலகின் பல்வேறு இஸ்லாமிய பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்; இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் தலைவராகவும் கடமையாற்றியவர்.

அவரது எளிமையான வாழ்வைப் பார்த்து நாங்கள் பேராச்சரியம் அடைந்தோம். கெய்ரோவில் நடுத்தரமான மக்கள் வசித்துவரும் பிரதேசத்திலுள்ள அடுக்குமாடி வீட்டுத் தொகுதியில் மிகவும் எளிமையான அவரது வீடு அமைந்திருக்கிறது. கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த ஷெய்க் அவர்கள், பலவீனமான நிலையிலும் எம்மை அன்புடன் ஆரத்தழுவி வரவேற்றார்கள். ஆன்மிக சிந்தனைகளை எம்மோடு பகிர்ந்து கொண்டார்கள். ஓர் இஸ்லாமிய இயக்கம் உருவாக்க விரும்பும் ஆளுமையை ஷெய்க் அல்அஸ்ஸால் அவர்களிடம் எம்மால் அவதானிக்க முடிந்தது.

அவர் இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த சந்தர்ப்பத்தில் 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்ற ஜாமிஆ நளீமிய்யாவின் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

"ஓர் இஸ்லாமிய அழைப்பாளன் உலக மாயைகளிலிருந்தும் அதன் கவர்ச்சிகளிலிருந்தும் விடுபடாதவரை அவனது இறையச்சம் முழுமை பெற முடியாது" என்று சொன்ன ஷெய்க் அல்அஸ்ஸால் அவர்கள் தனது சொல்லுக்கு செயல்வடிவம் கொடுத்த ஓர் உதாரண புருஷர்.

"ஓர் அழைப்பாளன் எத்தகைய சவால்களுக்கு முகம் கொடுப்பினும் எதிர்ப்புக்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டாலும் கொடுமைக்கும் அநீதிகளுக்கும் உட்பட்டாலும் சத்திய மார்க்கத்தையும் அகீதாவையும் ஏனைய உரிமைகளையும் பாதுகாக்க இறுதிமூச்சு வரை போராட வேண்டும்" என்று அடிக்கடி கூறிவந்த ஷெய்க் அவர்கள் அவ்வாறே வாழ்ந்து காட்டினார்கள்.

தனது இளம் பராயம் முதலே அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்ட ஷெய்க் அவர்கள், இமாம் ஹஸனுல் பன்னா, ஷெய்க் பஹீ அல்ஹூலி (ரஹிமஹுமுல்லாஹ்) ஆகியோரின் நேரடி தர்பிய்யத்திலும் கண்காணிப்பிலும் வளர்ந்தவர்.

பிறப்பும் கல்வியும்

1928ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி எகிப்தில் 'பிரஸ்தக்' எனும் கிராமத்தில் பிறந்த ஷெய்க், சிறு பராயம் முதலே மார்க்கப் பின்னணியில் வளர்ந்தார். தனது 10 ஆவது வயதில் அல்குர்ஆனை மனனம் செய்து முடித்தார். இதற்காக, 12 வயதுக்கு முன் அல்குர்ஆனை மனனமிடுவோருக்கு வழங்கப்படும் மன்னர் பாரூக் பரிசு இவருக்கு கிடைத்தது. ஆரம்பத்தில் கிராமப்புற பள்ளிவாசலில் கல்வி கற்ற இவர், பின்னர் இஸ்லாமிய உலகின் மிகப் பெரும் பல்கலைக்கழகமான அல்அஸ்ஹரில் தனது ஆரம்ப மற்றும் உயர்கல்வியைத் தொடர்ந்தார். ஷரீஆத் துறையில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்து 1958இல் அங்கிருந்து வெளியேறி முன்னாள் 'ஷெய்குல் அஸ்ஹர்' ஆகக் கடமை புரிந்த ஷெய்க் முஹம்மத் ஷல்தூத் அவர்களின் காரியாலயத்தில் பணியாற்றினார். ஷெய்க் யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் இவரது பால்ய நண்பராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

தனது மேற்படிப்புக்காக லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று இஸ்லாமிய தத்துவவியலில் 1968இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். கட்டார், எகிப்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக, பேராசிரியராகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றிய அவர், பாகிஸ்தான் இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் விஷேட ஆலோசகராகவும் தலைவராகவும் கடமையாற்றினார்.

அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தோடு இளம் பராயம் முதல் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார். ஷெய்க் முஹம்மத் அல்கஸ்ஸாலி, ஸய்யித் ஸாபிக், மன்னாஉல் கத்தான், யூஸுப் அல்கர்ளாவி, அப்துல் ஸத்தார், பத்ஹுல்லாஹ் ஸஈத், அஹ்மத் அல் ஸிர்பாழி, அப்துல்லாஹ் அல்ஹதீப், அஹ்மத் ஹஸன் அல்பாஹலி, முஹம்மத் அர்ராவி, மஹ்மூத் அப்துல் வஹ்ஹாப், அப்துர் ரஷீத் ஸகர் போன்ற அறிஞர்களோடு இணைந்து அல்இஹ்வானுல் முஸ்லிமூன் மாணவர் அமைப்பில் மிகவும் மும்முரமாக செயற்பட்டார். தனது இஸ்லாமிய அழைப்புப் பணியின் பாதையில் பல தடவைகள் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

கலாநிதி அஹ்மத் அல்அஸ்ஸால் அவர்கள் பற்றிய இரங்கல் கட்டுரையில் அஷ்ஷெய்க் யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் குறிப்பிடுகையில்,

"ஷெய்க் அல்அஸ்ஸால் அவர்கள் இஸ்லாமிய அழைப்புப் பணி மேலோங்குவதற்காகவும் இஸ்லாமிய கல்வியின் பரவலுக்காகவும் தனது முழு ஆயுளையும் அர்ப்பணித்தவர். அவர் பணிவுள்ள நற்பண்பாடுகளின் சின்னமாகத் திகழ்ந்தவர். அவருடன் நான் பல வருடங்கள் ஒன்றாக வாழ்ந்துள்ளேன். எச்சந் தர்ப்பத்திலும் 'நான்' என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியதில்லை. மிகவும் இனிமையாக வாழ்ந்தவர். அவரது சிந்தனை மிகவும் ஆழமானது. இஸ்லாம் உலகை ஆள வேண்டும்; அப்போதுதான் உலகில் அமைதி நிலவும் என்ற சிந்தனையை அடிக்கடி வலியுறுத்துபவர். அதற்காக வாழ்ந்தவர். பல்வேறு கண்ணோட்டங்களில் சத்திய இஸ்லாத்தின் தூதை எத்திவைத்தவர்" எனக் குறிப்பிட்டார்.

கலாநிதி அஹ்மத் அல்அஸ்ஸால் அவர்கள் பற்றி அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் தலைவர் கலாநிதி முஹம்மத் பதீஉ குறிப்பிடுகையில்,

"ஷெய்க் அல்அஸ்ஸால் அவர்கள் ஓர் அறிஞர் மாத்திரமல்ல களத்தில் நின்று போராடிய ஒரு பெரும் போராளி. அல்லாஹ்வுக்காக தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்தவர். இயக்கத்திலும் வேறு இடங்களிலும் அவர் வகித்த சகல பதவிகளுக்கூடாகவும் அல்லாஹ்வின் கலிமாவை மேலோங்கச் செய்வதற்காக அயராது உழைத்தவர்" என விவரித்தார்.

ஸலபுஸ் ஸாலிஹீன்களின் பிரதிபிம்பமாகத் திகழ்ந்த ஷெய்க் அஹ்மத் அல்அஸ்ஸால் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் பணிகளை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு உயர்ந்த சுவனத்தை வழங்குவானாக!

BERUWALA SCIENCE PROJECT
புதுப் பொலிவுடன்
உயர்தர விஞ்ஞான, கணித துறைகளில்
2012ம் ஆண்டுக்கான வகுப்புகள் ஆரம்பம்
இலங்கையில் தலைசிறந்த ஆசிரியர் குழாமினது நேரடி பங்காற்றல், கண்காணிப்பின் கீழ் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன—
2006 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பேருவளை கல்வி அபிவிருத்திச் சங்கம் (B-EDS) 2007 ம், 2008ம், மற்றும் 2009 ஆண்டுகளில் மாணவர்கள் பலரை வைத்திய, பொறியியல் மற்றும் ஏனைய துறைகளில் பல்கலைக் கழகம் நுழைவதற்கு பங்களிப்புச் செய்த எமது கல்வி நிறுவனம் 2012ம் ஆண்டுக்கான வகுப்புக்களையும் ஆரம்பித்துள்ளதென்பதனை பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
எமது விரிவுரையாளர்கள்

BIOLOGY	V. Uma Shanger (B.Sc PGDE) A. Thangaraja B.Sc. (Dip. in Edu.)
PHYSICS	Eng. S. Ganeshan S. Nanthakumar B.Sc.
CHEMISTRY	S.T. UmaShankar B.Sc (Ch.Sp.) M.Sc. (Poly Tech)
COMBINED MATHS	V. Jayanthan B.Sc.

- கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் மீது தனித்தனி கவனம் செலுத்தல்.
- மார்க்க வழிகாட்டல் வகுப்புக்கள்
- ஆங்கில கணனி வகுப்புக்கள் (GFI)
- ஆலோசனை வழிகாட்டல் வகுப்புக்கள் (Counseling)
- உணவு தங்குமிட வசதிகள். (ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்கு தனியாகவும்)

அமைதியும் பாதுகாப்பும் கூடிய இஸ்லாமியச் சூழலில்
Residential Education System
குறிப்பு : வரையறுக்கப்பட்ட அனுமதிகளே உள்ளன.
மேலதிக தொடர்புகளுக்கு : 0773 017 102, 0777 889 794, 077 8154404
148, JAMIAH NALEEMIYAH ROAD, CHINAFORT, BERUWALA.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்வழி அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாதுல் பித்ர்:

நோன்பை தூய்மைப்படுத்தும் இபாதத்

ஹாலு அம்ரா

ஸகாத் வறுமை ஒழிப்பில் மிகப் பெரும் பங்கு செலுத்துவது போன்று, ஸகாதுல் பித்ராவும் வறுமை ஒழிப்பில் முக்கிய இடத்தை வகிக்கிறது. எந்த நன்மையான தர்மமும் அடுத்தவர்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கின்றபோதுதான் விளைவு மிகவும் பயனுள்ளதாக அமையும். அந்த வகையில் நோன்பு நோற்க பொருளாதார ரீதியாக சிரமப்படுகின்ற ஏழைகளின் கஷ்டத்தைப் போக்கும் வண்ணம் ரமழான் பிறை ஒன்றிலிருந்தே ஸகாதுல் பித்ராவைக் கொடுப்பது மிகவும் நல்லது. பொருத்தமான நேரத்தில் பொருத்தமான நற்செயல் புரிவதே 'அமலுஸ் ஸாலிஹாத்' ஆக அமையும்.

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திராட்சை, கோதுமை என்பவற்றிலிருந்து ஒரு ஸாஃ (2751g) அளவை முஸ்லிம்களிலுள்ள ஒவ்வொரு சுதந்திரமுள்ளவன், அடிமை, பெண், பெரியவர் மீதும் ரமழான் தர்மமாக (ஸகாதுல் பித்ரை) விதியாக்கினார்கள்."

(அல்புகாரி, முஸ்லிம்)

மேற்குறிப்பிட்ட ஹதீஸில் ரமழான் மாதத்தின் குறிப்பிட்ட நாளோ, நேரமோ வரையறுத்துக் கூறப்படவில்லை. அதேபோல் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸும் மேற்படி கருத்தை உறுதி செய்கிறது.

"நோன்பாளியின் நோன்பு இரு தவறுகளிலிருந்து தூய்மையடையவும் ஏழைகள் நோன்பு நோற்கவும் பெருநாள் கொண்டாடவும் வசதியை ஏற்படுத்தவுமே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸகாதுல் பித்ராவை விதியாக்கினார்கள். பெருநாள் தொழுகைக்கு முன் இதனை நிறைவேற்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஸகாதுல் பித்ராவாக அது கருதப்படும். அதற்குப் பின்னர் நிறைவேற்றினால் அது ஸதகாவாக கணிக்கப்படும்." (அபூ தாவூத், இப்னு மாஜா)

ஸகாதுல் பித்ர் விதியாக்கப்பட்டதன் இரண்டு நோக்கங்கள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

1. ஏழைகளுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், இது பித்ராவை பெறுபவருடன் தொடர்புள்ள நோக்கமாகும். எனவே, சிறந்த முறையில் நோன்பு நோற்று மகிழ்வுடன் பெருநாளைக் கொண்டாடுவதற்காக பெருநாள் **தினத்திற்கு முன்னர் ஸகாதுல் பித்ர்** பணமாகவோ, தானியமாகவோ கொடுக்கப்பட வேண்டும்.
2. ஸகாதுல் பித்ர் வழங்குபவரின் நோன்புகள் அதன் மூலம் தூய்மையடைகின்றன. இது பித்ராவை வழங்குபவருடன் தொடர்புபட்ட நோக்கமாகும். நோற்கப்பட்ட நோன்புகளில் ஏற்பட்ட சிறு சிறு குறைகளை நீக்கி பூரணமான நோன்பின் கூலியைப் பெற்றுத் தரும்.

ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெருநாள் தொழுகைக்கு முன் நிறைவேற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பித்ராவாக கருதப்படும் என்பதனை பெருநாள் தொழுகைக்கு சற்று முன்புதான் கட்டாயமாக பித்ராவைக் கொடுக்க வேண்டும் என்று தவறுதலாகப் புரிந்து கொள்ளக் கூடாது. ஹதீஸ்களில் பித்ரா கொடுப்பதற்கான வரையறை குறிப்பிடப்படவில்லை.

பல இமாம்களது கருத்தும் ரமழானின் ஆரம்பத்திலிருந்தே பித்ரா கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும். அதற்காக கீழ்வரும் ஹதீஸை அவர்கள் ஆதாரமாகக் கொள்கின்றனர்.

"பெருநாள் தினத்திற்கு முந்தைய தினம் அல்லது அதற்கு முந்தைய தினம் நபியவர்கள் பிரசங்கம் நிகழ்த்தும் போது சோளம், கோதுமை, திராட்சை, வாற்கோதுமை என்பவற்றிலிருந்து ஒரு ஸாஃ (2751g) அளவு ஸகாதுல் பித்ர் நிறைவேற்றுவது ஒவ்வொரு சுதந்திரமுள்ளவர், அடிமை, சிறியவர், பெரியவர்கள் மீதும் கடமையாகும்" எனக் கூறினார்கள்.

ரமழானின் ஆரம்பத்திலிருந்து ஸகாதுல் பித்ர் கொடுக்க முடியும் என ஷாபிஈ மத்ஹப் இமாம்களும் ரமழான் பிறை 16 முதல் கொடுக்க முடியும் என ஹன்பலி மத்ஹப் இமாம்கள் சிலரும் குறிப்பிட்டுள்ளனர். அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்கள் ரமழானின் ஆரம்பத்திலிருந்து பித்ரா கொடுப்பது சிறந்தது எனும் கருத்தை ஏற்றுள்ளார்கள். இன்னும் சமகால இஸ்லாமிய அறிஞர்கள் பலரும் ரமழான் மாத ஆரம்பத்திலிருந்தே பித்ராவை வழங்குவது சிறந்தது எனக் கருதுகிறார்கள்.

எனவே, ஸகாதுல் பித்ரை ரமழானின் ஆரம்பத்தில் துவங்கி பெருநாள் தொழுகை முடிவடைவதற்கு முன்னர் வழங்கி எமது நோன்புகளைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள முயற்சிப்போம்!

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள ரமழானே

மபாஸா முனாப், ஹுஸைனிய்யா புரம்

கீழ்வானில் பிறை
நிலா பாறைசாற்றும்
புதிய விடியலின்
உதயம் புதுப்பிக்கையில்
என் இதய ஏடுகள்
விரிந்து கொண்டன
விடியும் பொழுதுகளின்
புதிய நுகர்வுகளை
சொந்தமாக்கிக் கொள்ள...

பாவங்கள் மடல்
வரைந்தன- நான்
மரணித்து விட்டேன்
இனி நன்மைதான்
உன் நண்பனென்று....

சொத்தின் சொந்தக்காரனுக்கு
பசி பாடம் கற்பித்து
ஸகாத்தின் இலக்கணத்தை
புரிய வைக்கிறது...

தொழுகையோடு
தொடர்பிழந்தவர்களும்
நன்மை திரட்டிட
நாளாந்தம் போட்டிகள்...

ஐம்புலன்கள் அடங்கிக்
கொண்டன- அர்த்தமற்ற
அடிபணிதலை விட்டும்
அமைதியின் மாதம்
சூழ்ந்தபோது...

தஹஜ்ஜுத் பொழுதுகள்
தளிர் விடுகிறது- அதில்
கொட்டும் பனித்துளிகள்
ஊற்றுச் சுனையாகி
தளிரை வளர்த்திட
உரமூட்டுகிறது...

புனித மாதத்தில் ஒரு
புஷ்பம் விடிகிறது
அந்த ஒரு நாள்
ஆயிரம் மாதங்களின்
அந்தஸ்தில் ஆனபோது
பாவங்களின் பலிபீடங்கள்
தகர்ந்து போனது

கெடுதிகளின் உறைவிடங்கள்
உறைந்து போனது
உள்ளக்கிடக்கை தவ்பா
தண்ணீரால் துடைக்கப்பட்டு
ஆன்மிகக் கட்டிடம்
தண்ணீர் கலவையால்
மீள எழுப்பப்படுகிறது
படைத்தவனை
பறைசாற்றியே
தூசுத் துடைத்து
தூய உறவைச் சுமந்து
வரும் தூயவனே!
புதிய மனிதனாய்
எமை மாற்றிட
உன் புதுப் பிரவேசம்
எமக்குள் புத்துணர்வை
புதுப்பிக்கட்டும்...

ஹிராக் குகை ஈரமாய் இனிக்கிறது!

அடிவானில் பட்டுத் தெறிக்கும்
பிரகாசம்
சுதந்திர தேசத்தின் முதல் சுவாசம்
என் உள்ளத்துப் பிணிக்கெலாம்
மருத்துவம் செய்யும்
தஸ்கிய்யா மாதம்
ரமழானே நீ வருவாய்- என்
பாவக் கறைகள் கழுவிச் செல்வாய்!

வஹியமுது பீறிட்டுப் பாய்ந்ததே
ஹிராக் குகையும் ஈரமாய் இனிக்குதே
வானமெலாம் அலங்கரித்து நிற்குதே
ஜன்னாவின் மலரெலாம் இதழ்
விரித்து சிரிக்குதே
நரகத்தின் வாயில்கள்
மூடுண்டு போனதே
ரமழானே நீ வருவாய்- என்
பாவக் கறைகள் கழுவிச் செல்வாய்!

சுதந்திரமாய் திரிகிறேன்- நரகத்தின்
விளிம்பில் நிற்கிறேன்-
ஐம்பொறிகளும்
ஜாஹிலிய்யப் பொறிக்குள்
இறுகிப் போனதே- படைத்தவனை
மறந்து பழகிப் போனதே- உள்ளத்தின்
வசந்தமாய் குர்ஆனில் குளிர்ந்திடவே
பயணத்தின் தோழனாய்- நபிவழி
பற்றிடவே
ரமழானே நீ வருவாய்- என்
பாவக் கறைகள் கழுவிச் செல்வாய்!

கனமூலை பாரிஸ்

மாண்பு தரும் நோன்பு

தீயவரும் திருந்தவரும்
நல்லதொரு மாதம் ரமழான்
கொண்டுவரும் கண்டுமனம்
நிறைந்துவிடும் போதம்

வானவரும் வருகை தரும்
சங்கைமிக்க ரமழான் நபி
நாதர் தரும் வாழ்வும் வரும்
வாழ்வில் இனி சுகம்தான் மீதம்

மாற்றம் வரும் மார்க்கம் தரும்
மகத்தான மாதம் வாழ்வில்
ஏற்றம் பெற ஏற்றுநட
உனக்கது போதும்

வறியவரும் தெரியவரும்
தெளிவான முறையில் நாம்
அறியவரும் அனைவரையும்
அவரவர் நிலையில்

தீயவழி ஏவிவிடும்
ஷைத்தானின் கூட்டம் இனி
தூரவழி சென்றுவிடும்
சுவர்க்கம்தான் திறக்கும்

சிறு நன்மை செய்தாலும்
பெரும் பலனே கிடைக்கும்- நீ
அலிப் என்று சொன்னாலும்
அருள் பாதை திறக்கும்

நினைக்க வொண்ணா நிலையில்
நன்மை நிச்சயம் கிடைக்கும்-
ஷைத்தான்
சகிக்க வொண்ணா வகையில்
மனங்கள் தீனில் திளைக்கும்

மறக்க வொண்ணா வகையில்
நோன்பு மாண்பைக்
கொடுக்கும்- அதை
நோற்க எண்ணா மனங்கள்
வீழ்ந்து நரகில் துடிக்கும்

கொடிய நரகில் வீழும்
கொடுமைத் தளையை
அறுப்போம்- நாம்
நெடிய சுகத்தில் மூழ்கும்
நோன்பு அதனை நோற்போம்!

ஆர்.எச். ஷப்னம் ஜதீதா,
மீராகேணி

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி-திருகோணமலை-புத்தளம்

2010 G.C.E A/L பரீட்சையின் பின்... >>> WHAT ???

LET'S SPEAK ENGLIS

DIPLOMA/ ADVANCED DIPLOMA/ PROFESSIONAL DIPLOMA

Grammar உடன் கூடிய ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி 2 TO 4 MONTHS

ONE OF THE BEST PRACTICAL ENGLISH PROGRAM WITH GRAMMAR

மொழிகள் வித்தியாசமானவை. ஆங்கிலமும் அப்படித்தான். வித்தியாசமானவர்களிடம் படித்து வித்தியாசத்தை உணருங்கள்.

கண்டியிலிருந்து விஷேட பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்கள். ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்.

PART TIME / FULL TIME AVAILABLE.

Bachelor of Information Technology (BIT)
From University of Colombo
with 3S's in A/L

B.sc in Business Administration (BBA)
From Sri J.PuraUniversity
with 3S's in A/L

Degree Foundation Program
Leading to
Management and IT Degrees(UK) edexcel

AAT with Computerized Accounting Packages
ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்யலாம்

20-21 வயதில் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்

சகல பாடநெறிகளுக்கும் வெளியிலிருந்து விஷேட விரிவுரையாளர்கள்.

பதிவுகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

CONTINENTAL COLLEGE
693/3 PERADENIYA ROAD,
KANDY.
PHONE 081 2205831
HOT LINE : 0777 450196

R.I.A.S
05, MAIN STREET (NSB BUILDING),
TRINCOMALEE.
HOTLINE : 071 4966868
077 7870391

R.I.A.S
100, MARIKKAR STREET,
PUTTALAM.
PHONE 032 5740749
HOT LINE : 071 4966868

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளத்தின் முதற்தர கல்வி நிறுவனத்தின்

Celebrating 13 YEARS 1997-2010

அரச அங்கீகாரமான சான்றிதழ்களை பெறக்கூடிய பாடநெறிகள்

CertCAB PROGRAMME — IHRA, University of Colombo
Certificate Course in Computer Applications in Business

MS Office & DTP, Web Designing & Development, Hardware & Networking, Internet & E-mail Training Data Management போன்ற பாடநெறிகளை உள்ளடக்கியது.

Duration: 6 Months

BIT — University of Colombo

தகவல் தொழில் நுட்பத்துறையில் இளமானி பட்டத்தினை பெற்றுத்தரக்கூடியபாடநெறி.
(Bachelor in Information Technology)

ICDL (UK) International Computer Driving Licence

அடிப்படை IT அறிவினைப் பெறக்கூடிய சர்வதேச பாடநெறி சர்வதேச அங்கீகாரமான சான்றிதழ்.

Duration: 3 Months

UKAP Diploma in IT (UK)
United Kingdom Association of Professionals

வெளிநாடு செல்லவிருப்போர்களுக்கு பொருத்தமான பாடநெறி சர்வதேச ரீதியில் அங்கீகாரமான சான்றிதழ்

Duration: 3/4 Months

எமது ஏனைய பாடநெறிகள்:

* Multimedia * Web Designing * Web Development * Networking
* Programming * Desktop Publishing * Hardware Technology * ICT /GIT

எமது அங்கீகாரங்கள்:

TVEC — Tertiary Vocational & Education Commission
DCCIA — District Chamber of Commerce
IHRA — University of Colombo IHRA Division
United Kingdom Association of Professionals
Greenwich College Colombo.
G-TEC Computer Education India
Co-orporate Member of Jobsnet, Sri Lanka.

CBS CITY CAMPUS 55A, Second Cross Street, Puttalam. Tel : 032-2265689
cbsputtalam@gmail.com, Hotline: 0777 34 14 98

STUDY IN UK

CELEBRATING 8 YEARS

எமது சேவைகள்...

* தரமான கல்லூரிகளில் அனுமதிகள் பெற்றுக்கொடுத்தல்
* VISA நிராகரிக்கப்பட்டால், மீள் விண்ணப்பித்தல், மீள் பரிசீலனை.
* இலவச சட்ட ஆலோசனைகள்.
* ஸ்பொன்சர் (Sponsor) ஏற்பாடுகளும், ஆலோசனைகளும்
* சிறப்புத் தேர்ச்சியுள்ள மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வசதிகள்.
* மாணவர்களுக்கான UK விமான நிலைய PICK-UP
* வசதிகளுடன், தங்குமிட வசதிகளும்.

Diploma / Advanced Diploma / HND / Bsc / Msc / BBA / MBA

in

Accounting, Management, Marketing, Multimedia, Travel and Tourism, Nursing, Pre School Teacher Training, Social Science, Hospitality, Child Psychology, HRM, Engineering, Islamic Studies, Law, Electronics, Misc / Arts, Sports, Fashion Design, Beauty Culture, Web Programming, Software Engineering, Networking

IELTS Not Needed



Minimum Qualification GCE O/L

EBS INTERNATIONAL (PVT) LTD
35, St. Lawrence Road, Colombo-6. Sri Lanka
Tel : (+94) 112 362534, Fax : (+94) 114 013733.
E-mail : ebslk@sltnet.lk Hot Line : 0777 - 341498
(Authourized Agent for Colleges & Universities in Abroad)

Approved & Accredited By :
Quality Study Abroad Network.
United Kingdom. Reg.No: QRS12007004

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Colombo School of Computing

මෙවර උසස්පෙළ විභාගයට පෙනීසිටින සිසුන්ට ද අයදුම් කල හැක.

BIT Bachelor of Information Technology

Entry Requirement : A/L 3 Passes in any stream.

BIT PartTime Mode

Semester 1 - Batches Commencing :

Class Time : 8.30am - 5.30pm

Sunday : 8th August
Monday : 30th August
Saturday : 4th September (last batch of the year)
Sunday : 5th September (last batch of the year)

Semester 1 Fee : **Rs. 22,000/=**
(Installment 5,000/= * 4 + 2,000/=)

* Special Discount for University Students

BIT FullTime Mode

BIT Xclusive (Full time)

Become an *elite* IT Professional

Commencing on : Monday, 13th September

Day : Mon to Fri [4days]
Time : 9.00am - 4.00 pm
Duration : 3 years [6 Semesters]

Year 3 — BIT Semester 5 & Semester 6
- Final Year Project Guidance
- Linux Administration/CCNA

Year 2 — BIT Semester 3 & Semester 4
- JAVA (SCJP)
- OCP
- Web Development (LAMP)

Year 1 — BIT Semester 1 & Semester 2
- .NET (MCTS)
- CWD
- PC Assembling & Optimization
- Networking

BIT Xclusive
Total Cost :Rs. 225,000/=

Payable in installments

Registration Fee : Rs. 25,000/=
+
Yr 1 - 8 Inst * 10,000/=
Yr 2 - 8 Inst * 10,000/=
Yr 3 - 4 Inst * 10,000/=

* Conditions Apply

☎ 0777 795 334

IDM PREMIER CAMPUS

IDM Premier Campus
IDM Affliated University College
No. 15, Lauries Place, Duplication Road, Colombo-04.
Contact : 011 30 40 507 , 0112 50 85 30
Email : info@idmcampus.lk Web : www.idmcampus.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழான் வேண்டுகோள்

உளவளர்ச்சி குறைந்தவர்களுக்கான

அல்ஹிக்மா பாடசாலை

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்த, மூளை வளர்ச்சி குன்றிய உடலியல் திறன் குறைந்த பிள்ளைகளின் நலன்களைக் கவனிப்பதற்கும் சுயமாக வாழ்வதற்குமான பயிற்சியை வழங்கும் இந்நிலையம், கடந்த 9 வருட காலமாக ஹெம்மாதகமைபிரதேசத்தில் செயற்பட்டு வருகின்றது.

"தேவையுள்ளவர்களுக்கும் ஆதரவற்ற மக்களுக்கும் உதவுவதற்காக கடும் முயற்சி மேற்கொள்பவர் அல்லாஹ்வின் பாதையில் தீவிரமாக ஈடுபடுபவரைப் போன்றவராவார்."
(அல்புகாரி, முஸ்லிம்)



நோக்கங்கள்:

- பயிற்றப்பட்ட வளவாளர்களைக் கொண்டு பயிற்சி வழங்குதல்.
- காலை முதல் மாலை வரை தேவையுடைய பிள்ளைகளுக்கு பயிற்சியளித்தலும் உதவுதலும்.
- பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாத அங்கக் குறைவுடைய பிள்ளைகளுக்கு வீடு வீடாகச் சென்று பயிற்சியளித்தல்.
- பெற்றோருக்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

நன்கொடைகள், காசோலை, காசுக்கட்டளைகளை
The Society for the Welfare of
Mentally Retarded Children என்ற பெயருக்கு எழுதவும்.
கணக்கு இலக்கம்: 1-65-002836-0
மக்கள் வங்கி, ஹெம்மாதகம

இப்புனித ரமழானில் உங்களது ஸகாத், ஸதகா நன்கொடைகளின் ஒருபகுதியினை இப்பாடசாலையின் அபிவிருத்திக்காக தந்துதவுமாறு தயவாய் வேண்டுகிறோம்.

// பயிற்சி பெறும் அநேகமான குழந்தைகளின் பெற்றோர் மிகவும் வறியவர்கள்.
// இப்பாடசாலையின் மாதாந்தப் பரிபாலனத்திற்கு பெருந் தொகையான பணம் செலவாகிறது.
// பிள்ளைகளுக்கான தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
// சொந்த இடத்தில் பாடசாலையை அமைப்பதற்கு பெற்றுக் கொண்ட காணியில் பாடசாலைக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயிற்றப்பட்ட தகுதி வாய்ந்த வளவாளர்கள் மூலம் பாதிப்புற்ற குழந்தைகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் தேவையான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் பெற 0712104013. 0773573871 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அல்ஹிக்மா பாடசாலை || இல: 571, Dunbuluwawa, Hemmathagama

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டுமொரு பிரசவம்

பிரசவமாகும் பருவகாலம்
வணக்கத்தில்
பரவசமாகும் பருவநாளம்!

உள்ளமெங்கும் பூக்கள்
மலர்ந்திருக்கும்
படைத்தவன் ஞாபகம்
ஊரெங்கும் படையெடுக்கும்!

மீண்டுமொரு ஜனனம்...
அழுக்குகள் தீர்த்து
புதுப் பாவையாக சேவகம்
நடந்தேறும்!

பிரார்த்தனைகளில்
கண்கள் குளமாகி
இமை வழியே உதிரம் கசியும்!

இறையச்சம் உயிர்த்தெழுந்து
உயிரில் கலந்து...
இறை தரிசனங்கள்
உயிரோவியங்களாகும்!

உணர்வுகள்
மனதில் ஆர்த்தெழுந்து தொழுகையில்
நடுநிசிப் பொழுதுகள்
கனமாகும்
பருவகாலம் உதிர்ந்து
பழைய காலம் உதயமாகும்
மீண்டுமொரு பிரசவம்
நடந்தேறும்!

வணக்கத்தில்
பருவ நாளங்கள் பரவசமாகும்!

- ஏறாவூர் இர்ஷாத் ஹாபிஸ் -

சபித்தல்

பகுதி 1

நந்திக் கடல்
சூடைக் கருவாடு
முறிப்பு வாய்க்கால்
கானந்திக் கீரை
கருவச் சோற்றுப் புளியாணம்
அடிநாக்கு ஊற
ஆரம்பிக்கும் தலைநோன்பு!

தலைப்பிறை கண்டதாய்
கொழும்பு பெரிய பள்ளியில்
சொன்னயாம்
ஊர்ப் பள்ளி
மோதின் அப்பா அலற
சீனவெடி கொளுத்திக்
கூத்தாடிய
தலைநோன்பின் ஞாபகிப்பு...!

ஒங்கட நோம்பு வந்துட்டு-
இனி
கஞ்சியும் பேரீத்தம் பழமும்
சொமிதான் எங்களுக்கு
பக்கத்து வீட்டு பார்வதி அக்கா

கல்லுப் போட்டுக் குலுக்கிய
கிலுகிலுப்பையாய் சிரிக்க
சந்தோசம் பரவும்
தலைநோன்பின் ஞாபகிப்பு...!

வாப்பா சாய்ந்து கிடக்கும்
சாய்மானக் கதிரைபோல
அடிமனசின் ஓரத்தில்
படுத்துக் கிடக்கிறது
அந்தக் காலத்து ரமழான்...!!

பகுதி 2

பெரும்பாலும் பட்டினி
நோன்பு...
கூரை நிலா வெளிச்சத்தில்
கரைந்து போகும் ஸஹர்
நேரம்...
ஒட்டுச் சட்டைப் பெருநாள்...

இப்படித்தான்
எனது டயறி எழுதியிருக்கிறது
தொண்ணூறுக்குப் பின்னரான
நோன்பு கால ஞாபகிப்பு...

இருபதாவது வருட
நோன்புக்கும் இதே
கதியென்றால்
யாராவது இனிப் பேசட்டும்
யுத்த வெற்றி...
மீள்குடியேற்றம்...
நல்லாட்சி...
மண்ணாங்கட்டி...

பஷீர் அலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ரமழான் காலத்து உணவு மற்றும் மருத்துவ ஆலோசனைகள்

டாக்டர் எஸ். ஆகில் அஹ்மத், மாவட்ட வைத்தியசாலை, பாலமுனை

உணவு

சாதாரணமாக ஒருவர் ஆரோக்கியமாக இருப்பதற்கு பிரதான உணவு வகைகளிலிருந்து உண்பது அவசியமாகும். தானியம், பால் மற்றும் பாலுற்பத்திப் பொருட்கள், இறைச்சி வகையும் பருப்பு வகையும், மரக்கறி வகையும் பழங்களும் ஆகியன பிரதான உணவு வகையில் உள்ளவையாகும்.

சுமாராக நாளொன்றின் அரைவாசிப் பொழுதில் எவ்வித ஆகாரமோ நீரோ இன்றி விலகி இருக்கின்ற ரமழான், நம்மை ஆரோக்கியப்படுத்தும் வகையில் அல்லாஹ்வினால் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதனை உரிய முறையில் அனுஷ்டிப்பதன் மூலமே ரமழானின் பூரண பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்த வகையில் ரமழான் காலத்தில் உணவுப் பழக்கத்திலும் நாம் கரிசனை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

ரமழான் காலங்களில் இப்தார், இரவுணவு மற்றும் ஸஹர் வேளைகளில் மேலதிகமாக உணவு உட்கொள்ள வேண்டியதில்லை. நமது உடலானது சீராக்கும் பொறிமுறையைக் கொண்டிருக்கின்றது. பசித்திருக்கும் பொழுதுகளில் இப்பொறிமுறை தூண்டப்படுகின்றது. இதனால் உடலின் சேமிப்பிடங்களிலிருக்கும் கொழுப்பு வினைத்திறனுடன் எரிக்கப்பட்டு உடலுக்குத் தேவையான சக்தி உருவாக்கப்படுகின்றது.

ரமழானில் உடலும் உள்ளமும் அமைதியடைவதனால் உடலின் அடிப்படை அனுசேபத் தொழிற்பாடுகள் தாழ்மட்டத்திற்கு குறைக்கப்படுகின்றன. இதனால் ஏனைய காலங்களில் உட்கொள்ளப்படுவதிலும் பார்க்கக் குறைந்தளவான உணவும் நம்மை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்கப் போதுமானதாகும். இதற்கு உணவு சமநிலையானதாக இருத்தல் வேண்டும்.

மேலதிகமாக உட்கொள்ளுதல், சமநிலை அற்ற உணவை உட்கொள்ளுதல் மற்றும் தேவையான அளவு உறக்கமின்மை என்பவற்றினால் சுகாதார சிக்கல்கள் உண்டாகலாம்.

ரமழான் காலத்தில் நாம் உட்கொள்ளும் உணவுகள் எளிமையானதாக இருத்தல் விரும்பத்தக்கது. எமது உடல் எடை மிகையாக அதிகரித்து விடாமலும் அதேபோல குறைந்து விடாமலும் உணவு முறையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

துரிதமாகச் சமிபாடடையக் கூடிய உணவு வகைகளை விட மெதுவாகச் சமிபாடடையக் கூடிய நார்ச்சத்துள்ள தீட்டாத அரிசிச் சோறு, பயறு, பருப்பு வகை, காய் கறி, இலை வகை உணவுகளை ஸஹர் உணவாக உட்கொள்ளல் பொருத்தமானதாகும். அதேவேளை இப்தார் வேளையில் துரிதமாக அகத்துறிஞ்சப்பட்டு குளுக்கோஸ், கனியுப்புக்கள், நீர் ஆகியவற்றை உடனடியாக குருதிக்குச் சேர்க்கக் கூடிய பேரீத்தம் பழம், பழரசம், சூப் அல்லது கஞ்சி போன்ற உணவுகளை உட்கொள்ள வேண்டும். அபரிமிதமாக உண்பதனை அவசியம் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

ஸஹர் வேளையில் தேநீர், கோப்பி, மென்பானங்கள் அருந்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவை சிறுநீர்ப் போக்கை அதிகப்படுத்தி நீரிழப்பையும் கனியுப்பு வெளியேற்றத்தையும் ஏற்படுத்தும்.

இரைப்பை அழற்சி (Gastritis)

ரமழான் காலங்களில் இரைப்பை அழற்சி சிலருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதுண்டு. ஸஹர் வேளையில் நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகம் உட்கொள்வது இவ் அசௌகரியத்தைக் குறைக்கும். ஸஹர் உணவை அவசியம் உண்பதும் அதனைப் பிற்படுத்திக் கொள்வதும் சிறந்ததாகும். காரமான சுவைச் சரக்குகள் அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளையும் புளிப்புச் சுவையுள்ள மற்றும் எண்ணெய் சேர்க்கப்பட்ட உணவுகளையும் தவிர்த்துக் கொள்ளவும். மென்பானங்கள் உகந்ததல்ல. போதியளவு உறக்கமும் ஓய்வும் அவசியம்.

நீரிழிவு (Diabetes)

பின்வரும் தரத்திலுள்ள நீரிழிவு நோயாளிகள் நோன்பு நோற்பதிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தளம்பல் நிலை வகை 1 நீரிழிவு (Brittle type1 diabetics)
- கட்டுப்பாடு குறைந்த வகை 1, வகை 11 நீரிழிவு poorly controlled type 1 & 11.
- அறிவுறுத்தல்களையும் மருந்துப் பாவனையையும் கரிசனையோடு பின்பற்றாத நீரிழிவு நோயாளிகள்.
- Unstable angaina மற்றும் கட்டுப்பாடு அற்ற உயர் குருதி அழுத்தம் போன்ற சிக்கல் நிலைமை உடைய நீரிழிவு நோயாளர்கள்.
- Diabetic Keto-acidosis ஏற்பட்டிருக்கின்ற நீரிழிவு நோயாளர்கள்.
- நீரிழிவு நோயுள்ள கர்ப்பிணிகள்.
- அடிக்கடி கிருமித் தொற்று ஏற்படுகின்ற நீரிழிவு நோயாளர்கள்.
- வயோதிப நீரிழிவு நோயாளர்கள்.
- கடந்த ரமழான் காலங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் குறை குருதி வெல்ல நிலைமை (Hypoglycemia) ஏற்பட்ட நீரிழிவு நோயாளர்கள்.

மேற்குறித்த நிலைமைகள் அற்ற கீழ் குறிப்பிடப்படுவோர் நோன்பு நோற்கலாம்.

- ☐ 20 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண், பெண் நீரிழிவு நோயாளர்கள்.
- ☐ தனது உடலின் உயரத்திற்கு ஏற்ற எடை கொண்ட அல்லது அதிக எடை கொண்ட சகல நீரிழிவு நோயாளர்கள்.
- ☐ நீரிழிவு நோய்க் கட்டுப்பாட்டில் உள்ள, வெல்லக் குறைப்பு மாத்திரை (oral hypoglycemics) களை பாவிக்கின்ற நீரிழிவு நோயாளர்கள். (இன்சுலின் பாவிப்பவர்கள் வைத்தியரின் நேரடி ஆலோசனையைப் பெறவும்)
- ☐ கர்ப்பிணிகள் அல்லாத, நியம அளவையும் விட 20% அதிக உடல் எடை கொண்ட அல்லது உடல் திணிவுச் சுட்டி BMI (BW kg/Ht m^2) 28ஐ விட அதிமான, இன்சுலினில் தங்கியிரா நீரிழிவு (NIDDM) நோயாளர்கள்.

எவ்வகையான நீரிழிவு நோயாளியாயினும் நோன்பு நோற்பதாயிருந்தால்,

- ♦ வேளைகளில் உணவைத் தவறவிடக் கூடாது.
- ♦ மருந்துகளை சீராகப் பாவிக்க வேண்டும்.
- ♦ நோன்பு துறந்ததன் பின்னர் அளவுக்கு அதிகம் உண்பதனைத் தவிர்த்தல் வேண்டும்.
- ♦ நீரிழிவு நோய்க்குரிய உணவு வகைகளையே உண்ண வேண்டும்.
- ♦ மிதமான அளவு உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தராவீஹ் தொழுகையும் ஏனைய நபிலான தொழுகைகளும் இதனை ஈடுசெய்யும்.

இன்சுலினில் தங்கியிருக்கும் நீரிழிவு (IDDM) நோயாளிகளுக்கு இரு வகை இன்சுலின் பிரயோக முறைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

1.Three-dose insulin regimen:

இரண்டு dosesகள் short acting insulin ஸஹர் மற்றும் இப்தார் உணவுகளுக்கு முன்னரும் ஒரு dose intermediate acting insulin பிந்திய அந்திப் பொழுதிலும்.

2. Three-dose insulin regimen:

வழமையான காலைப் பொழுதில் ஏற்றிக் கொண்ட அளவு இன்சுலின் short acting insulin, medium acting insulin ஆகிய வகைகளை சேர்த்து மாலை நேரத்திலும், வழமையாக ஏற்றிக் கொண்ட இன்சுலினை மாத்திரம் கொண்டு 0.1-0.2 unit/kg உடல் நிறை அளவான இன்சுலின் ஸஹருக்கு முன்னரும்.

இது ஒரு பிரேகரிப்பாக இருப்பதனால் தனிப்பட்ட வேறுபாடுகள் தேவைப்படலாம் என்பதனால் வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது சிறந்ததாகும். மேலும், ஸஹருக்கு முன்னரும் இப்தாருக்கு முன்னரும் இப்தாருக்கு 3 மணித்தியாலங்களுக்குப் பின்னரும் குருதியில் வெல்ல மட்டத்தை வீட்டிலேயே பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இதனைக் கொண்டு நோன்பிருக்கும் வேளையில் குறை குருதி வெல்ல நிலைமை (hypoglycemia) ஏற்படுவதிலிருந்தும், இப்தார் வேளையில் மேலதிகமாக உண்பதனால் ஏற்படக்கூடிய உயர் குருதி வெல்ல நிலைமை (post-prandial hyperglycemia) ஏற்படுவதிலிருந்தும் தவிர்க்கும் வகையில் உணவுப் பழக்கத்தையும் இன்சுலின் அளவையும் அமைத்துக் கொள்ளலாம்.

இன்சுலினில் தங்கியிரா நீரிழிவு (NIDDM) நோயாளர்கள் அவர்களது வெல்லக் குறைப்பு மாத்திரை (oral hypoglycemics) களை உரிய முறையில் குறைத்துக் கொண்டு சிக்கல் நிலைமைகள் ஏற்படாமல் நோன்பு நோற்க முடியும். இவர்கள் நாளொன்றுக்கான மொத்த மாத்திரை அளவை மூன்றில் ஒன்றாகக் குறைத்து இம்மாத்திரைகளை இப்தார் வேளையில் எடுத்துக் கொள்வதுடன் ஸஹர் வேளையில் மாத்திரைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

குறை குருதி வெல்ல மட்ட (hypoglycemic) அறிகுறிகள் தென்படுமிடத்து உடனடியாகவே நோன்பை முடித்துக் கொள்ள வேண்டும். தளர்ச்சி, சோர்வு, தலைச் சுற்று, கவனம் செலுத்த முடியாமை, நடுக்கம், தலைவலி, வேகமான இதயத் துடிப்பு போன்றன குறை குருதி வெல்ல மட்ட அறிகுறிகளாகும். ஸஹர் வேளைகளில் அதிகளவு வெல்லம் உட்கொள்வதானது சாதாரணமானவர்களிலும் இந்நிலைமையை ஏற்படுத்தும்.

மலச் சிக்கல்

நோன்பிருக்கும் வேளைகளில் நீரிழப்பும் நீராகாரத்தைத் தவிர்ந்திருப்பதுவும் நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ளாமையும் மலச் சிக்கலை ஏற்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலச் சிக்கலினால் மூல வியாதி (piles), குதவாயில் வெடிப்பு, வயிற்றுப் பொருமல் போன்ற அசௌகரியங்கள் ஏற்படக் கூடும். எனவே, போதியளவு நீர் அருந்துதல் மற்றும் தீட்டிய தானிய வகைகளைத் தவிர்த்து நார்ச் சத்துள்ள தீட்டாத தானியங்கள், காய்கறி, இலை வகைகளை அதிகம் உட்கொள்ளவது மலச் சிக்கலைத் தவிர்க்கும்.

காற்றுப் போக்கு

பொரித்த எண்ணெய்த் தன்மையான உணவுகள், காரத் தன்மையான உணவுகள், முட்டை, கோவா, காபனேற் மென்பானங்கள் போன்றன காற்றுப் போக்கை ஏற்படுத்தும்.

தசைப் பிடிப்பு

கல்ஸியம், மக்னீஸியம், பொற்றாஸியம் ஆகிய கனியுப்புக்கள் குறைபாடாகும்போது தசைப்பிடிப்பு ஏற்படும். மரக்கறி, பழங்கள், பாற்பொருட்கள், இறைச்சி, ஈத்தம்பழம் ஆகியவை இக்கனியுப்புகளைக் கொண்டுள்ளன.

வாய் துர்வாடை

வாயினுள் பக்றீரியாக்கள் வாழ்கின்றன. இவை வாயில் எஞ்சிக் காணப்படுகின்ற உணவுத் துணிக்கைகளை அனுசேபிக்கின்றபோது அங்கு துர்வாடையைத் தரக் கூடிய வாயுக்கள் உற்பத்தியாகின்றன. எனவே, வாயில் உணவுத் துணிக்கைகள் எஞ்சியிரா வண்ணம் பேணிக் கொள்ளல் வேண்டும்.

பல்லிடுக்குகள், பல்லிலுள்ள குழிகள், போலிப் பற்கள், முரசிலுள்ள சிதைவுகள் போன்றவற்றில் உணவுத் துணிக்கைகள் சிக்கிக் கொண்டிருக்கும். உணவு உண்ட பின்னரும் தூங்கி எழும்பிய பின்னரும் ஐங்காலத் தொழுகைகளுக்கு முன்னரும் உரிய முறையில் பற்களைத் துலக்கிக் கொள்ளல் அவசியமாகும்.

மிஸ்வாக், பற்தூரிகை ஆகியவற்றைக் கொண்டு பற்களை நிலைக்குத்து வாக்கிலும் கிடையாகவும் உள்ளும் புறமும் துலக்குங்கள். பற்குச்சிகளை உபயோகிக்க வேண்டாம். இவற்றையும் மீறி துர்வாடை ஏற்படுமாக இருந்தால் அல்ககோல் கலக்காத வாய் கழுவும் திரவங்களைக் கொண்டு வாய்களை அலசிக் கொள்ளவும்.

அவசியம் எனக் கருதுபவர்கள் ரமழானுக்கு முன்னதாகவே பல் வைத்தியரிடம் சென்று பற்களைச் சோதித்து சுத்தம் செய்து கொள்ளுங்கள்.

வயிற்றுக் கோளாறுகளும் வாய்த் துர்வாடையை ஏற்படுத்தக் கூடும். இவ்வாறான தொந்தரவு உள்ளவர்கள் வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.

உயர் குருதி அழுத்தம் (ப்றஷர்) (hypertension)

இலேசான (mild) மற்றும் மிதமான (moderate) உயர் குருதி அழுத்தம் உள்ளவர்கள் மற்றும் உடல் எடை கூடியவர்கள் நோன்பு நோற்பதற்கு உற்சாகப்படுத்தப் பட வேண்டும். ஏனெனில், நோன்பானது உயர் குருதி அழுத்தத்தை சீராக்குகிறது. நீர்ப்போக்கு மாத்திரைகளைக் குறைத்தல் மற்றும் குறுநேர மாத்திரைகளிலிருந்து நெடுநேர மாத்திரைகளுக்கு மாறுதல் போன்ற மருந்து சீராக்கங்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பின்பற்றுங்கள்.

மிகையான உயர் குருதி அழுத்தம் (severe hypertension) மற்றும் இருதய நோய் உள்ளவர்கள் நோன்பு நோற்பதிலிருந்து விலகி இருத்தல் வேண்டும்.

ஒற்றைத் தலைவலி (migraine)

நோன்பு காலங்களில் உடலிலுள்ள கொழுப்பு அனுசேபத்துக்கு உள்ளாவதால் குருதியில் சுயமான கொழுப்பமிலங்களின் அளவு அதிகமாகக் காணப்படும். இவை ஒற்றைத் தலைவலியை உண்டாக்க வல்லவை மட்டுமல்லாது, அதன் கடுமைத் தன்மையையும் அதிகரிக்கக் கூடியவை.

நீரிழப்பு, குறை குருதி வெல்ல மட்டம் போன்ற நிலைமைகளும் ஒற்றைத் தலைவலியை அதிகரிக்கும். எனவே, ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் நோன்பு நோற்பது உகந்ததல்ல.

கர்ப்பம்

கர்ப்பிணிகள் கர்ப்பத்தின் இரண்டாவது மூன்று மாதங்களில் ரமழானை அடைவார்களாக இருந்தால் நோன்பு நோற்க முடியும். நோன்பு நோற்பவர்கள் போஷாக்கு நிறைந்தவர்களாகவும் ஏனைய மருத்துவ ரீதியான இடர்கள் எதுவும் அற்றவர்களாகவும் இருக்க வேண்டும். குறை குருதி வெல்ல மட்டம் மற்றும் நீரிழப்பு போன்றவற்றின் அறிகுறிகளை அறிந்திருப்பது அவசியமாகும். அவ்வாறான நிலைமைகள் ஏற்படுமிடத்து உடனடியாகவே நோன்பை முறித்துக் கொள்ள வேண்டும்.

கர்ப்பத்தின் முதலாம், மூன்றாம் மூன்று மாதங்களில் ரமழானை அடைபவர்கள் நோன்பு நோற்பது ஊக்குவிக்கத்தக்கதல்ல.

ஆஸ்த்துமா

ஆஸ்த்துமா நோயாளிகள் நோன்பிருக்கும் வேளைகளில் அவசியப்படுமிடத்து inhaler வகை மருந்துத் தயாரிப்புக்களைப் பயன்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தலாம். இவ்வகை மருந்துகள் இரைப்பைக்கு அன்றி நேரடியாக சுவாசப்பைகளுக்கே செல்வதால் பசியிலோ தாகத்திலோ அல்லது நோன்பு நோற்றிருப்பதால் ஏற்படுகின்ற உடல் அசதியிலோ பாதிப்பை ஏற்படுத்த மாட்டாது என்பதனையும்; வாய் மூலம் அல்லது ஊசி மூலம் எடுக்கப்படும் மருந்துகளை விட பக்க விளைவு மிகவும் குறைந்தது என்பதனையும் கருத்தில் கொள்ளவும்.

எனவே, பேணுதலுடன் நோன்பு நோற்பதாகக் கருதிக் கொண்டு எல்லை மீறிச் சென்று வரம்புகளைப் போட்டு உங்களையும் அடுத்தவர்களையும் கஷ்டத்திற்குள்ளாக்கிக் கொள்ள வேண்டாம்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலானா மௌதூதி (ரஹ்) பார்வையில் தப்லீக் ஜமாஅத்

கலாநிதி நூர் முஹம்மத் ஜமுஆ
தமிழில்: எம்.என். இக்ராம் நன்றி: மீள்பார்வை

> “ ஷெய்க் இல்யாஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் அவர்கள் மேற்கொள்ளும் சீர்திருத்தப் பணியினதும் தர்பிய்யத்தினதும் உழைப்பினதும் விளைவுகளை நான் எனது கண்களால் பார்த்தேன். அந்தவகையில், இங்குள்ள சில கிராமங்களில் தொழுகைக்குச் செல்லாத ஒரு சிறு குழந்தையைக் கூட நாம் காண முடியாது. ”

இஸ்லாமிய எழுச்சியின் ஆரம்பத்தை நாம் நோக்கும்போது அது அரபு இஸ்லாமிய உலகு, இந்தியா, துருக்கி போன்ற பல்வேறு இடங்களிலுமிருந்து தோற்றம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இந்த எழுச்சியைத் தோற்றுவித்த அதன் ஆரம்பப் பரம்பரையினரை நாம் பார்க்கின்றபோது பல்வேறு ஜமாஅத்துக்களையும் தோற்றுவித்த அவர்களிடம் ஒரே வகையான பண்புகள் இருந்திருப்பதைக் காண்கிறோம். அன்பு, சகோதரத்துவம், தூய்மை, உண்மை, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பிரார்த்தித்துக் கொள்ளுதல் போன்ற உயர்ந்த பண்புகள் அவர்களிடம் காணப்பட்டிருக்கின்றன.

இதற்கான ஓர் உதாரணத்தை இமாம் மௌதூதியிடம் நாம் காண்கிறோம். அன்று பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் இயங்கிவந்த ஜமாஅத்தே இஸ்லாமியின் உத்தியோகபூர்வ பத்திரிகையாக இருந்த ‘தர்ஜுமானுல் குர்ஆன்’ சஞ்சிகையில் ‘தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகரின் பாசறையில் சில நாட்கள்’ என்ற தலைப்பில் இமாம் மௌதூதி அவர்கள் ஒரு கட்டுரையை எழுதி வந்தார். அதில் சில பகுதிகளை நாம் அவரது வார்த்தையிலேயே இங்கு நோக்கலாம்.

இந்தியாவின் தலைநகரான டில்லிக்கு அருகாமையில் உள்ள மேவாத் எனும் பிரதேசத்தைத் தரிசிக்கும் வாய்ப்பொன்று எனக்குக் கிடைத்தது. இதற்கு முன்னர் நான் இந்தப் பிரதேசத்தில் முஹம்மத் இல்யாஸ் கான் திஹ்லவியின் தலைமையில் இஸ்லாமிய எழுச்சியொன்று பரவிக் கொண்டிருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அந்த எழுச்சி அந்தப் பிரதேசத்தை தலை கீழாகப் புரட்டிப் போட்டிருப்பதாகவும் அறிந்தேன். எனவே, இந்த சலனமற்ற, மௌன சீர்திருத்தப் புரட்சியின் விளைவுகளைக் காண்பதற்கு நான் பெரும் தாகத்துடன் இருந்தேன்.

புவியியல் ரீதியாக மேவாத் டில்லி, அல்வர், ஜோர்ஜ் ஜானா, போன்ற பல பிரதேசங்களை எல்லைகளாகக் கொண்ட பெரும் பரப்புள்ள ஒரு பிரதேசம். எனது அறிவின்படி, அஷ்ஷெய்க் நிழாமுத்தீன் மஹ்பூப் இலாஹியுடையதும் அவரது சகாக்களதும் முயற்சியினால்தான் இங்கு இஸ்லாம் பரவியிருக்கின்றது. எனினும், விசனத்திற்குரிய விடயம், இந்த அத்தனை முயற்சிகளும் இஸ்லாமிய அரசுகளின் பொடுபோக்குத்தனத்தால் வீணாகிப் போய்விட்டன.

இந்தப் பிரதேச மக்கள் தலைநகருக்கு மிக அருகாமையில் இருந்தபோதும் அறியாமையின் பிடிக்குள்ளும் கோத்திர வழக்காறுகளின் இருளுக்குள்ளும் நீண்ட பல வருடங்களாக மூழ்கிப் போயினர். காலப்போக்கில் இந்தப் பிரதேசத்தில் இஸ்லாத்தின் அடையாளங்கள் படிப்படியாக மங்கிப் போயின. இறுதியில் அதன் எந்த எச்சசொச்சமும் இல்லாமல் அழிந்து போயின. அங்குள்ளவர்களுக்கும் தாம் முஸ்லிம்கள் என்பதைத் தவிர வேறெதுவுமே தெரியாத நிலை உருவாகியிருந்தது.

இஸ்லாத்தின் தோற்றங்களோ அடையாளங்களோ அங்கு காணப்படவில்லை. ஷஹாதத் கலிமாவை மொழியத் தெரிந்த ஒரு கிராமவாசிகூட இருக்கவில்லை. இந்நிலையில் தொழுகை பற்றியும் ஏனைய இஸ்லாமிய கடமைகள் பற்றியும் அவர்கள் தெரிந்து வைத்திருப்பார்களா என்பது பற்றி நாம் பேச வேண்டியதே கிடையாது.

அவர்களிடம் ஜாஹிலிய்ய அறியாமையின் அனைத்து அடையாளங்களும் காணப்பட்டன. ஆண்களும் பெண்களும் கிட்டத்தட்ட நிர்வாண கோலத்திலிருந்தார்கள். அவர்கள் தங்களுக்கிடையே எந்த வெட்க உணர்வுமின்றி கலந்து பழகினார்கள். களவு, வழிப்பறிக் கொள்ளை,

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதனூடாக அமைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய், ஏமாற்று, வஞ்சகம், விபசாரம் என சீர்கேட்டுக்கும் பின்னடைவுக்குமான என்னென்ன அடையாளங்கள் தேவையோ அவை அத்தனையையும் அங்கே காண முடியுமாக இருந்தது.

இத்தகைய காரிருள் நிறைந்த ஜாஹிலிய்யத் அலை மோதுகின்ற ஒரு சூழலில்தான் அஷ்ஷெய்க் இல்யாஸ் அவர்கள் அந்தப் பிரதேசத்தில் தனது முயற்சியை மேற்கொண்டார்கள். தனது கடும் பிரயத்தனத்தினால் அங்கே ஒன்றன்பின் ஒன்றாக இஸ்லாத்தின் மெழுகுவர்த்திகளை ஏற்றிவைத்தார்கள். முதலில் அவர் அல்லாஹ்வை நோக்கி மனிதர்களை அழைக்க ஆரம்பித்தார்கள். ஜாஹிலிய்யத்தின் அனைத்து வடிவங்களையும் கொண்டிருந்த இப்பிரதேச மக்களிடையே ஒரு சிறு காலப் பகுதிக்குள்ளால் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திவிட அவர்களால் முடியுமாக இருந்தது.

இப்போது அங்குள்ள சிறுவர்களுக்கு ஒழுக்கத்தையும் அடிப்படைப் பண்பாடுகளையும் சுத்தத்தையும் மார்க்கத்தையும் என வாழ்வின் அரிச்சுவடிகளைக் கற்றுக் கொடுப்பதற்காக 250 பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்தப் பாடசாலைகளில் கற்று வெளியேறுபவர்கள் டில்லிக்கு அருகிலுள்ள நிழாமுத்தீன் மஹ்மூத் இலாஹியினுடைய கிராமத்தில் அமைந்துள்ள சன்மார்க்க பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமது கல்வியைத் தொடர வாய்ப்பு அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு அறிவு போதிக்கப்படுவதோடு அதனுடன் இணைந்த வகையில் இஸ்லாமிய தர்பிய்யத்தும் கற்பித்தல் பயிற்சியும் வழங்கப்படுகிறது. சமூகத்திற்கு தஃவாவை முன்வைப்பதற்கும் அங்கு சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கும் தேவையான கலைகளும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. பின்னர் அவர்கள் தஃவாவுக்காகப் பின்தங்கிய பிரதேசங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

ஷெய்க் இல்யாஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் அவர்கள் மேற்கொள்ளும் சீர்திருத்தப் பணியினதும் தர்பிய்யத்தினதும் உழைப்பினதும் விளைவுகளை நான் எனது கண்களால் பார்த்தேன். அந்தவகையில், இங்குள்ள சில கிராமங்களில் தொழுகைக்குச் செல்லாத ஒரு சிறு குழந்தையைக் கூட நாம் காண முடியாது. சிறிது காலத்திற்கு முன்னர் ஆடு, மாடுகள் தங்கும் கொட்டில்களாகக் காணப்பட்ட பள்ளிவாசல்கள் அனைத்தும் இன்று ஐந்து வேளையும் அதான் கூறப்பட்டு தொழுகை நடத்தப் படக்கூடிய இடங்களாகக் காணப்படுகின்றன.

ஷெய்க் இல்யாஸ் அந்த நாட்டுப்புற மனிதர்களிடம் தஃவாவுக்கான ஆர்வத்தை உண்டுபண்ணியுள்ளார்கள். சீர்திருத்தத்திற்காக செயற்படும் வேட்கையை உயிர்ப்பித்துள்ளார்கள். ஜாஹிலிய்யத்தினதும் வழிகேட்டினதும் குறியீடுகளாகக் காணப்பட்ட மனிதர்களைப் பண்படுத்தி மனிதர்களுக்கு நேர்வழி காட்டும் தாஈக்களாக உயர்த்தியுள்ளார்கள்.

100% PRACTICAL COURSES
சுயதொழில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற 100% செயலடமுறை பயிற்சி அடங்கிய பாடநெறி.
Diploma in Refrigeration & Air Conditioning
> குளிர்சாதனப் பெட்டி, கடும் குளிரூட்டி (Deepfrezer)
> மென்மைக் குளிரூட்டி (Bottle Cooler)
> நீர்குளிரூட்டி (Water Cooler)
> வளிசீராக்கி Window A/C, Spilite A/C
> Package Plant A/C, Central Plant A/C,
> Auto A/C (Basic Knowledge)
Rs.11,750/-
Electrical Power
House Wiring வீட்டு மின்கற்று
Electrical Appliances - மின்உபகரணங்கள்
திருத்தும் முறை (Iron box, Blender, Washing Machine, Oven, Fan)
Single Phase, Three phase Wiring System
Re-Winding கொயில் சுறிறுதல்
Rs. 7,750/-
Diploma in TV , Radio Repairing
Rs. 7,750/-
சகலவிதமான TV , Radio, VCD, DVD , Monitor திருத்த பயிற்சியளிக்கப்படும்
Rs. 7,750/-
Full Time: MON - THU 10:00-03:00 2 WEEKS
Part Time: SAT OR SUN 10:00 - 1:00 2 MONTHS
SDC 071-4241873
No: 1, Perera Lane, Wellawatte, 011-7539075

100% செயன்முறையடங்கிய திருப்திகரமான பயிற்சி நெறி
Diploma in Mobile Phone Repairing
New syllabus
Hot line : 071 4 241873
Hardware
- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting இழுக்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கழற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner உபகரணம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகளைக் (Jumper System)
Free! Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site
Rs : 8750/=
Software Setup Installation, Unlocking, Flashing
Jaf, P-Key, SE tool, NSpro, Infinity, Pin Finder, Spiderman, MX-Key.
விரிவுரையாளர்: M.R.M. Rizvi (Colombo)
இலங்கைமுழுவதும் பல நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியர்
தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்
COLOMBO SDC
No: 1, Perera Lane, Wellawatte.
Full Time/Part Time
MON - THU 10:00-03:00 4 DAYS COURSE
SAT OR SUN 10:00 - 1:00 2 MONTHS
KANDY
Call : 071- 4241873
072- 3402243

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான் உருவாக்கத்தில் மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் வகித்த பங்கு

எம்.ஐ.எம். அமீன்
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதெனிய பல்கலைக்கழகம்

> “மக்கள் விருப்பை அறிய மேற்கொள்ளப்படும் வாக்கெடுப்பில் கலந்து கொள்வது ஷரீஅத்துக்கு முரணானது அல்ல. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தால் நான் பாகிஸ்தானுக்கு சார்பாக வாக்களிப்பேன். இந்தியா இரு நாடுகளாகப் பிரிக்கப்படும்போது, முஸ்லிம்கள் எந்த நாட்டில் பெரும்பான்மையாக இருக்கப் போகிறார்களோ அந்த நாட்டைத் தெரிவு செய்து வாக்களிப்பது முஸ்லிம்களின் கடமையாகும்.”

அல்ஹஸனாத் நாற்பதாண்டு நிறைவு மலரின் 61ஆம் பக்கத்தில் மௌலானா மௌதூதி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பற்றி எழுதப்பட்டுள்ள பின்வரும் வரிகள் மௌலானா பாகிஸ்தானை உருவாக்குவதில் வகித்த பங்கையும் மௌலானாவின் ஆளுமைகளையும் குறைத்து மதிப்பிடுவதாக உள்ளன.

“பாகிஸ்தான் உருவாக்கத்தை மௌதூதி விரும்பவில்லை; முஸ்லிம் தேசிய அரசு வேண்டும் என்பதற்காக முட்டாள்தனமாக ஏன் எமது நேரத்தை வீணாக்க வேண்டும்? அது நமது நோக்கத்துக்குப் பயனற்றது மட்டுமன்றி எமது பாதையின் தடையுமாகும்.

ஜின்னாவுடனும் பாகிஸ்தான் இயக்கத்துடனும் நேரடியாக முரண்பட்டார். ஜின்னா மற்றும் அவர் சார்ந்தோர் பாகிஸ்தான் தேசியவாதத்தைக் கட்டியெழுப்பியவர்கள்; மேற்கத்திய கல்வி மரபில் வளர்ந்தவர்கள். இஸ்லாமிய கருத்தியலைப் புரிந்து கொள்ளாதவர்கள் என்பதனாலும் பாகிஸ்தான் உருவாக்கத்தை மௌதூதி விரும்பவில்லை.

ஏதோ ஒருவகையில் தோற்றம் பெற்ற பாகிஸ்தானை விட்டு அவராலும் அவரது இயக்கத்தாலும் ஒதுங்கி நிற்க முடியாது என்பது யதார்த்தமாகும்...”

இப்பந்தியில் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன:

அ. பாகிஸ்தானின் உருவாக்கத்தை மௌலானா விரும்பவில்லை.

ஆ. அதனை உருவாக்கப் பாடுபடுவது, அதற்காக நேரத்தை செலவு செய்வது முட்டாள்தனம்.

இ. பாகிஸ்தானின் உருவாக்கம் மௌலானாவின் இலட்சியத்துக்குத் தடையானது.

ஈ. மௌலானா ஜின்னாவுடனும் பாகிஸ்தான் இயக்கத்துடனும் நேரடியாக முரண்பட்டார்.

உ. மௌலானா யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர். தனது விருப்பத்துக்கு மாற்றமாக தோற்றுவிக்கப்பட்ட பாகிஸ்தானில் வாழ வேண்டியவரானார்.

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள இக்கருத்துக்கள் மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் பற்றிய தவறான மதிப்பீடு ஒன்றை வாசகர் உள்ளத்தில் பதித்துவிடத் துணை செய்வனவாகும். அஃதன்றி, அவை உண்மைக்குப் புறம்பான கூற்றுக்களுமாகும். ஆதலால் பின்வரும் கருத்துக்களை வாசகர்முன் வைக்க விரும்புகின்றேன்.

பாகிஸ்தான் என்ற புதிய நாட்டின் உருவாக்க வரலாற்றில் முக்கிய மூன்று அம்சங்களைக் கருத்திற் கொள்ளல் அவசியமாகும்.

அ. முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனி நாடு இந்திய உபகண்டத்தில் உருவாக்கப்படல் வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கி வளர்த்தல், அதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல்.

ஆ. சுதந்திர நாட்டை உருவாக்க உழைத்தல்; அப்போராட்டத்துக்கு உதவுதல்.

இ. தோற்றம் பெறக்கூடிய நாட்டை நிர்வகிக்கும் திறமையும் தகைமையும் கொண்டவர்களை உருவாக்குதல்; அந்நாட்டை இஸ்லாமியமயமாக்குதல்.

இம்மூன்று அம்சங்களிலும் மௌலானா என்ன பங்கு வகித்தார் என்பதைக் கணித்த பின்பே மௌலானா பாகிஸ்தான் உருவாக்கத்தை விரும்பினாரா இல்லையா, அவ்வியக்கத்துக்கு எதிராக இயங்கினாரா என்பதைப் பற்றி எல்லாம் சரியான முடிவுக்கு வர முடியும்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தேசிய உணர்வு மேலீட்டால் சுதந்திரத்துக்காக 1920களில் குரல் கொடுத்துக் கொண்டிருந்த மௌலானா மௌதூதி, ஜம்இய்யதுல் உலமா ஹிந்து வெளியிட்ட 'முஸ்லிம்', 'அல்ஜாமிஆ' எனும் பத்திரிகைகளின் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றபோது, இந்திய காங்கிரஸ் சார்பாகவும் தேசியவாத சிந்தனை சார்பாகவும் கட்டுரைகளை எழுதினார்.

எனினும், 1924இல் கிலாபத் ஒழிக்கப்பட்டமை தேசியவாத சிந்தனை பற்றி மறுபரிசீலனை செய்ய அவரைத் தூண்டியது. அரபுகள் தேசியவாத சிந்தனை காரணமாக துருக்கிய கலீபாவுக்கு எதிராக பிரித்தானியர் சார்பாகப் போராடினர். இந்நிகழ்வு தேசியவாத சிந்தனை சர்வதேச நோக்குடைய இஸ்லாத்தின் இலட்சியத்தினை நிறைவேற்ற உதவ மாட்டாது என்பதை அவருக்கு உணர்த்தியது.

1924இல் ஒழிக்கப்பட்ட கிலாபத்தை மீண்டும் தோற்றுவிக்க முஸ்லிம்களும் இந்துக்களும் ஒன்றிணைந்து முயற்சித்துக் கொண்டிருந்த அதே காலப்பகுதியில், நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே தோன்றிய இனக் கலவரம் இந்து-முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்துவது சாத்தியமில்லை என்பதை அவருக்கு உணர்த்தியது. அச்சந்தர்ப்பத்தில் இந்து தலைவர்கள் நடந்து கொண்ட முறை, எதிர்கால சுதந்திர இந்தியாவில் முஸ்லிம்கள் தமது தனித்துவப் பண்புகளை நிலைநாட்ட உதவ மாட்டார்கள் என்பதையும் அவருக்கு உணர்த்தியது. ஜனநாயக ரீதியானதும் முஸ்லிம்களைப் போல மும்மடங்கு இந்துக்களைக் கொண்ட சுதந்திர இந்தியாவில் சிறுபான்மையினரான முஸ்லிம்களால் தமது நலவுரிமைகளைப் பேண முடியாது என்பதும் அவருக்குப் புலனாகியது.

முதலாம் உலக மகா யுத்தத்தின்போது இந்திய முஸ்லிம்களுக்கு அளித்த வாக்குறுதிகளை எல்லாம் மீறி பிரிட்டன் துருக்கியைத் துண்டாடி யூதர்களின் அபிலாசையை நிறைவேற்ற எடுத்த முயற்சிகள் பிரிட்டிஷ் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதுவித நலனும் ஏற்படப் போவதில்லை என்பதையும் அவருக்கு உணர்த்தியது.

இதன் விளைவாக தனது ஆக்கங்களில் இந்திய தேசியவாத சிந்தனையையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் விமர்சித்து எழுதினார். இந்துத் தலைவர்களின் நடத்தைகள் புகட்டிய இப்பாடத்தை அல்லாமா இக்பாலும் நன்கு இனங்கண்டு கொண்டிருந்தார். அதனால் தான் அவர் 1930இல் அஹமதாபாத் நகரில் உரையாற்றும் போது முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனி நாடு தேவை என்று குரல் எழுப்பினார்.

முஸ்லிம்களுக்கென்று ஒரு தனிநாட்டுக் கோரிக்கையை முஸ்லிம் லீக் 1940ல் தனது மாநாட்டில் பிரேரணையாக முன்வைத்தது. இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, முஸ்லிம்கள் தமக்கென்று தனி ஒரு கலாசாரத்தை உடையவர்களாதலால் அவர்களுக்கு என்று ஒரு நாடு அவசியம் என்பதை உணர்த்த Two Nation Theory யை ஆதரித்து மௌலானா மௌதூதி எழுதலானார். முஸ்லிம்களுக்கு ஒரு தனி நாடு வேண்டும் என்று தர்ஜுமானுல் குர்ஆன் சஞ்சிகையில் 1938 நவம்பர்-டிசம்பர் இதழில் கோரிக்கை விடுத்தார். மூன்று தொகுதிகளைக் கொண்டதாக 1937-1939 காலப்பிரிவில் மௌலானா வெளியிட்ட 'முஸ்லிம்களும் அரசியல் போராட்டமும்' (Musal man Awr Mawjudah Siyasi Kashmakash) எனும் நூலில் முஸ்லிம்களுக்கான ஒரு தனி நாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் எழுதினார். பிரிட்டிஷாரையும் இந்துத் தேசியவாதத்தையும் நிராகரிப்பதற்குத் தேவையான அறிவியல் அடிப்படையை இந்நூல் அமைத்துக் கொடுத்தது. இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரு நாட்டவர்களாக அன்றி, இரு நாட்டவராக அங்கீகரிப்பதொன்றே இந்து- முஸ்லிம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி என்று குறித்துள்ளார். (பார்க்க: Sayyid Abul A'ala Moududi And His Thought- Vol- 1 by Masudul Hasan p:194)

> "நான் பாகிஸ்தானுக்கு எதிரானவன் அல்லன். அல்லாஹ் உங்கள் முயற்சியை வெற்றியாக்குவானாக. நான் முஸ்லிம் லீக்கில் இருந்து வேறுபடுவது எல்லாம் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள் ஓர் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த தேவைப்படும் பண்புகளை மக்களிடையே உருவாக்க முயற்சிப்பதில்லை என்ற ஓரம்சத்தில் மட்டும்தான்... "

இந்திய உப கண்டத்தை இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு நாடுகளாகப் பிரிக்கக் கூடாது. அது ஒரு தனி நாடாகவே இருக்க வேண்டும் என்ற சிந்தனைக்கு (One Nation Theory) சார்பாகக் குரல் கொடுத்தவர்களே பாகிஸ்தானின் தோற்றத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்திய காங்கிரஸ் இச்சிந்தனையைத் தன் உயிரோட்டமாகவே வைத்திருந்தது. அதில் உறுப்பினர்களாக இருந்த மௌலானா அபுல் கலாம் ஆஸாத் (சுதந்திர இந்தியாவின் கல்வி அமைச்சராகவும் பின் ஜனாதிபதியாகவும் பிற்காலத்தில் கடமையாற்றியவர்) இந்திய தேசியவாதத்தால் கவரப்பட்டு பாகிஸ்தான் சிந்தனையைக் கடுமையாக எதிர்த்தார். 'ஜம்இய்யதுல் உலமா ஹிந்த்' சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றிய தேவ்பந்து ஆலிமான மௌலானா ஹுஸைன் அஹ்மத் மதனியும் ஜம்இய்யதுல் உலமா ஹிந்த் உறுப்பினர்கள் பலரும் பாகிஸ்தான் தோற்றத்தை கடுமையாக எதிர்த்தார்கள். இந்திய காங்கிரஸோடு இணைந்து இந்திய தனிநாட்டுக் கோரிக்கைக்காக உழைத்தார்கள். ஜம்இய்யதுல் உலமா ஹிந்தின் காங்கிரஸ் சார்பான இக்கொள்கையை மௌலானா ஏற்காததால்தான் அச்சங்கம் வெளியிட்ட பத்திரிகையின் ஆசிரியர் பதவியில் இருந்து விலகிக் கொண்டார்.

புவியியல் ரீதியாக இந்தியா ஒரு நாடாக இருக்க வேண்டும் என்ற (One Nation Theory) கோட்பாட்டை மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் கடுமையாக விமர்சித்தார்கள். இந்தியா இரு நாடுகளாகப் பிரிக்கப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதன் அவசியத்தைத் தர்க்க ரீதியாகவும் மனங் கொள்ளத்தக்கதாகவும் தர்ஜுமானுல் குர்ஆனில் எழுதினார். இதன் தாக்கத்தால்தான் காங்கிரஸில் உறுப்பினர்களாக இருந்த முஸ்லிம் பிரமுகர்கள் பலர் அவ்வியக்கத்திலிருந்து நீங்கி முஸ்லிம் லீக் உடன் சேர்ந்து பாகிஸ்தான் போராட்டத்துக்காக உழைத்தனர்.

இந்தியா-பாகிஸ்தான் என்ற இரு நாட்டு கோரிக்கைக்கு (Two Nation Theory) இஸ்லாமியப் பின்புலத்தில் உயிரோட்டத்தை வழங்கி அச்சிந்தனை மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஆக்கபூர்வமான பணி செய்தவர் மௌலானா மௌதூதி (ரஹ்) என்பதைப் பின்வரும் அறிஞர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

1. மௌலானா ஸபர் அஹ்மத் அன்ஸாரி: இவர் அகில இந்திய முஸ்லிம் லீக்கின் உதவிக் காரியதரிசி. முஹம்மத் அலி ஜின்னாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

2. மியான் முஹம்மத் ஷாபி: இவர் முஸ்லிம் லீக்கின் பிரசாரகர். பத்திரிகைக் கலைஞர். 'அக்தாம்' எனும் வார இதழில் பாகிஸ்தானின் தோற்றத்துக்கு மௌலானா எதிரானவர் அல்லர் என்பதனை எடுத்துக் காட்டியுள்ளார்.

3. ஷரபுத்தீன் பீர்ஸாதா: இவர் பாகிஸ்தானின் சட்டமாஅதிபராகவும் அமைச்சராகவும் கடமையாற்றியவர். Evaluation of Pakistan எனும் தனது நூலில், முஸ்லிம்களுக்கான ஒரு தனி நாட்டின் அவசியத்தை *1938, 1939*களில் வெளிவந்த தர்ஜுமானுல் குர்ஆன் எனும் சஞ்சிகையில் மௌலானா மௌதூதி (ரஹ்) வலியுறுத்தி எழுதி பாகிஸ்தான் உருவாக்கத்திற்கு துணை நின்றுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. கலாநிதி செய்யித் அப்துல்லாஹ்: இவர் லாஹூர் ஓரியன்டல் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவர் Intelectual Elements of The Pakistan Movment என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் மௌலானா மௌதூதி, ஜம்இய்யதுல் உலமா ஹிந்தின் தேசியவாத சிந்தனையைத் தகர்த்து பாகிஸ்தானின் இஸ்லாமிய வேலைத் திட்டம் ஒன்றுக்கு வழி வகுத்தவர் என்று பாராட்டியுள்ளார்.

5. கலாநிதி இஷ்தியாக் ஹுஸைன் குறைஷி: இவர் கராச்சி பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகக் கடமையாற்றியவர். பிரதமர் லியாகத் அலிகானின் அமைச்சரவை உறுப்பினராக இருந்தவர். Ulama in Politics எனும் தனது நூலில் பாகிஸ்தான் உருவாக்கத்தில் மௌலானா மௌதூதியின் பங்களிப்பை சுட்டிக் காட்டியுள்ளார்.

6. இஸட்.ஏ. சுலரி: இவர் பாகிஸ்தான் 'டைம்ஸ்' சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியர். My leader எனும் தலைப்பில் முஹம்மத் அலி ஜின்னா அவர்களின் சுயசரிதையை எழுதி வெளியிட்டவர். இவர் தனது கட்டுரை ஒன்றில் *1930*களில் மௌலானா மௌதூதி இந்திய முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனிநாட்டின் அவசியத்தை வலியுறுத்தி எழுதியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். மௌலானாவின் இத்துறைப் பங்களிப்பு பற்றி இவர் ராவல்பின்டியில் இருந்து வெளிவரும் 'நவஇ வக்த்' என்ற தினசரியின் *1973.12.13*ஆம் திகதியில் விளக்கியுள்ளார் என்பர்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காக பல அரசியல் தீர்வுகள் பலரால் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஷரபுத்தீன் பீர்ஸாதா தனது Evaluation of Pakistan எனும் நூலில் தொகுத்து அளித்துள்ளார். அதில் மௌலானா அவர்கள் முன்வைத்த தீர்வையும் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை வாசித்த எவரும் மௌலானா முஸ்லிம்களுக்கான பாகிஸ்தான் கோரிக்கையை எதிர்த்தார் என்று கூற ஒருபோதும் முனையமாட்டார்கள். (மேலதிக விபரங்களுக்கு Evaluation of Pakistan நூலின் *191-192*ஆம் பக்கங்களைப் பார்க்கவும்)

மௌலானா தனது கருத்துக்களை வெளிட்ட எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பாகிஸ்தான் நாட்டுக்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. ஒருமுறை முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த சிலர் மௌலானாவை சந்தித்து பாகிஸ்தான் இயக்கத்தில் நீங்கள் ஏன் பங்கு கொள்வதில்லை? (முஸ்லிம் லீக்கில் சேர்ந்து தங்களோடு போராடுவதில்லை) என்று கேட்டார்கள். அப்போது மௌலானா பின்வருமாறு பதில் கூறினார்கள்.

"நான் பாகிஸ்தானுக்கு எதிரானவன் அல்லன். அல்லாஹ் உங்கள் முயற்சியை வெற்றியாக்குவானாக. நான் முஸ்லிம் லீக்கில் இருந்து வேறுபடுவது எல்லாம் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள் ஓர் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த தேவைப்படும் பண்புகளை மக்களிடையே உருவாக்க முயற்சிப்பதில்லை என்ற ஓரம்சத்தில் மட்டும்தான்... "

வடமேற்கு எல்லைப்புற மாகாணம் எதிர்காலப் பாகிஸ்தானுடன் சேர்வதா இந்தியாவுடன் சேர்வதா என்பதை அறிய *1947*இல் (Referendum) மக்கள் தீர்ப்பை அறிவதற்கான வாக்கெடுப்பு ஒன்றை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதுபற்றி மௌலானா *1947.07.05*ஆம் திகதி 'கௌதர்' எனும் பத்திரிகையில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"மக்கள் விருப்பை அறிய மேற்கொள்ளப்படும் வாக்கெடுப்பில் கலந்து கொள்வது ஷரீஅத்துக்கு முரணானது அல்ல. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தால் நான் பாகிஸ்தானுக்கு சார்பாக வாக்களிப்பேன். இந்தியா இரு நாடுகளாகப் பிரிக்கப்படும்போது, முஸ்லிம்கள் எந்த நாட்டில் பெரும்பான்மையாக இருக்கப் போகிறார்களோ அந்த நாட்டைத் தெரிவு செய்து வாக்களிப்பது முஸ்லிம்களின் கடமையாகும்."

*1970.04.21*ஆம் திகதி பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் இக்பால் தினம் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் 'இக்பாலும் பாகிஸ்தானும்' எனும் தலைப்பில் மௌதூதி (ரஹிமஹுல்லாஹ்) உரையாற்றினார். அச்சந்தர்ப்பத்தில் இந்திய உப கண்ட முஸ்லிம்களுக்கு ஒரு தனி நாடு தேவை என்று அல்லாமா இக்பால் *1930*இல் சுட்டிக் காட்டியதைப் பாராட்டினார். பாகிஸ்தான் உருவாக்கத்தை மௌலானா மௌதூதி விரும்பவில்லை என்றால் ஒருபோதும் அல்லாமா இக்பாலின் இம் முன்மொழிவைப் பாராட்டிப் பேசியிருக்க மாட்டார்கள்.

(இன்ஷா அல்லாஹ் மீதி அடுத்த இதழில்)

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதனபால் அழைப்போம்!
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருகிறது வஹியின் பயிற்சிப் பாசறை ரமழான்!

அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். உவைஸ் (இஸ்லாஹி)

இறை அருளையும் அன்பையும் அள்ளிச் சொரியும் மகத்தான மாதம் மீண்டும் ஒருமுறை எம்மை எதிர் நோக்கியுள்ளது. ரமழான் மாதத்தின் சிறப்புகளையும் அதில் இறைத் தூதர் எமக்கு அறிமுகப்படுத்தித் தருகின்ற அமல்களையும் அவதானித்துப் பார்த்தால், மனித வாழ்வின் இறுதித் தங்குமிடம் நோக்கிய வழிகாட்டல்களாக அவை அமைந்திருப்பதைக் காணலாம்.

ரமழானின் முக்கியத்துவம் பற்றி இறைவன் கூறும்போது அது மனித வாழ்வை நெறிப்படுத்தி சீர்செய்து சுவன வாழ்வை வழங்கும் திருமறை அருளப் பெற்ற மாதம் என்று அறிமுகப்படுத்தியுள்ளான்.

"ரமழான் மாதம் அது எத்தகையதென்றால் அந்த மாதத்தில்தான் மக்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் நன்மை-தீமைகளைப் பிரித்தறியக்கூடியதாகவும் உள்ள குர்ஆன் இறங்கியருளப் பட்டது." (அல்பகரா: 183)

வஹி அருளப்பெற்ற மகத்தான மாதத்தை, இறைவன் வஹியை முழு மனித வாழ்விலும் சுமந்து கொள்வதற்கான ஒரு பயிற்சிப் பாசறையாக ஆக்கியுள்ளான். வஹியின் வாழ்வை யாரெல்லாம் கட்டிக் காக்கிறார்களோ அவர்கள் சுவனம் நுழைவிக்கப்படுவர்.

மனித வாழ்வின் இறுதி முடிவு சிறப்பாக அமைய வேண்டுமாயின் வஹியின் வழிகாட்டலைப் பெற்றுக் கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். வாழ்வின் அடிப்படைத் தேவையும் இறைவழிகாட்டலைப் பெற்றுக் கொள்வதே. இதனைத்தான் ஒரு முஸ்லிம் ஒவ்வொரு தொழுகையிலும் ஓதுகின்ற ஸூரதுல் பாத்திஹாவில் அவன் கேட்கும் அடிப்படைத் தேவையான "இறைவா! எமக்கு நேரான பாதையைக் காட்டுவாயாக!" என்ற பிரார்த்தனை குறிக்கிறது.

இத் தேவையை அல்லாஹ் நிறைவேற்றி வைத்த மகத்தான மாதம் ரமழான். இம்மாதத்தில் குர்ஆன் மனித வாழ்வின் மிக அடிப்படையான தேவையை நிறைவேற்றித் தருவதற்காக இறக்கப்பட்டது.

வஹியை ஒரு மனிதன் பெற்றுக் கொள்ள நாடினால் அதைச் சுமக்க வேண்டிய இடம் மனித உள்ளமாகும்.

"அல்லாஹ்வின் கட்டளைப்படி ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இதனை உமது உள்ளத்தில் இறக்கினார்." (26: 192, 193)

இன்று மனித வாழ்வு இணைவைப்பு, வட்டி, விபசாரம், மது, ஆடம்பரம், பகைமை, துர்க்குணங்கள் ஆகியவற்றினால் அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் வஹியை சுமக்க வேண்டிய உள்ளம் தீமைகளாலும் துர்க்குணங்களாலும் சூழப்பட்டுள்ளதுதான்.

இவற்றை சுத்திகரித்து உள்ளத்தில் வஹியை சுமக்கச் செய்யும் ஒரு பயிற்சிப் பாசறை ரமழான். இதில் ஒரு முஃமின் காலை முதல் மாலை வரைக்கும் பசியையும் தாகத்தையும் மனோ இச்சையை அடக்குவதிலும் துஆ, தௌபா, இஸ்திஃபார் போன்ற அமல்களிலும் தர்மங்களை அள்ளி வழங்குவதிலும் இஃதிகாஃப், அல்குர்ஆனை ஓதுதல், விளங்குதல், மனனமிடல் போன்ற தொடர்புகளுடனும் பெற வேண்டிய பயிற்சி வஹியை சுமக்கும் உள்ளத்தை தயார் செய்வதாகும்.

உள்ளத்தை சுத்திகரித்து தூய்மைப்படுத்தி வஹியை சுமந்த மனித வாழ்வுதான் உலகிலும் மறுமையிலும் வளமிக்கதாக அமையப் போகிறது.

ரமழான் எமக்குத் தருகின்ற பயிற்சி வஹியைச் சுமந்து கொள்வதற்கான பயிற்சி என்பதை நினைவில் நிறுத்திக் கொண்டே ரமழானுக்குள் நாம் நுழைய வேண்டும்.

01. தக்வா பெற்ற உள்ளம்

வஹியைச் சுமந்த மனித உள்ளம் எப்போதும் தக்வாவுடன் செயற்படும். அந்த மனித உள்ளத்தை நாம் அடைந்து கொள்ள வேண்டும். அல்குர்ஆன் தனது வழிகாட்டலை இறையச்சம் உடையவருக்கு வழங்கும் என்று கூறுகிறது.

"அலிப்லாம்மீம். இது வேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமுமில்லை. தக்வா உடையவர்களுக்கு இது நேர் வழியாகும்." (அல்பகரா: 1. 2)

எப்போதும் எந்த சந்தர்ப்பத்திலும் இறையச்சத்துடன் வாழும் போது அந்த வாழ்க்கை பாவங்களிலிருந்து பாதுகாக்கப்படும். தக்வா உடையோருக்குத்தான் மனித வாழ்வின் இறுதி இடமாகிய சுவனம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அல்குர்ஆனின் வாக்காகும்.

எனவேதான் நோன்பின் நோக்கம் பற்றி இறைவன் கூறும்போது,

"விசுவாசிகளே! உங்களுக்கு முன் வாழ்ந்தோர் மீது நோன்பு விதியாக்கப் பட்டதுபோல உங்கள் மீதும் விதியாக்கப் பட்டுள்ளது; நீங்கள் இறையச்சமுடையோராகலாம்" (அல்பகரா: 183) என்கிறான்.

இறையச்சமற்ற உள்ளம் ஒரு போதும் வஹியின் தேவையை உணர மாட்டாது. ஆகவே, ரமழானை நாம் இத்தகையதோர் உள்ளத்தை அடைந்து கொள்வதற்குப் பயன்படுத்திக்

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டும்.

2. அமைதியடைந்த உள்ளம்

அல்குர்ஆன் எதிர்பார்க்கும் மனிதனின் அடுத்த நிலை இதுவாகும். அமைதியடைந்த ஆத்மாக்கள் அல்குர்ஆனின் போதனைகளை சுமந்து செயலாற்றும்; அவை எப்போதும் திருப்தியுடன் அமைதியாகக் காணப்படும். இதனைக் குர்ஆன்,

"விசுவாசம் கொண்டவர்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வது கொண்டு அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன. அல்லாஹ்வை நினைவு கூர்வதால் நிச்சயமாக இதயங்கள் அமைதி பெறுகின்றன." (13: 28)

அல்குர்ஆனுக்கு இன்னும் ஒரு பெயர் 'திக்ர்' என்பதாகும்.

"நிச்சயமாக நாம் திக்ரை இறக்கினோம்." (13: 9)

உள்ளங்களில் அல்குர்ஆனின் எந்தப் பகுதியும் இடம்பெறவில்லையென்றால் அது பாழடைந்த வீடு போன்றதாகும். அந்த வாழ்வு இருளடைந்து, ஒளியிழந்து வெறுமையாகி விரக்தியடைந்து அமைதி இழந்து விடும். அந்த உள்ளத்தை உடையவன் மனக் குழப்பத்திற்கும் உளமுறிவுக்கும் ஆளாகி விடுவான். ஒரு மனிதன் குர்ஆனின் வார்த்தைகளை உள்ளத்தில் நினைவுகூர்ந்து செயல்படும்போது உலகம் புரிந்து கொள்ளாத அமைதியை அவனது ஆன்மா பெற்றுக் கொள்ளும்.

மறுமையில் இறைவன் தனது நல்லடியார்களைப் பார்த்து கூறும் மகிழ்ச்சிகரமான அழைப்பு இது:

"அமைதியடைந்த ஆத்மாக்களே! எனது நல்லடியார்களுடன் திருப்தி கொண்ட நிலையில் சுவனத்தில் நுழைந்து விடுங்கள்." (89: 27-30)

ரமழானை உள அமைதியை அடைந்து கொள்ளும் ஒரு பயிற்சிப் பாசறையாக நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். உள்ளங்களில் ஏற்படும் தீய, மோசமான விடயங்களைத் தூண்டும் ஆசைகளை அடக்குவதன் மூலம் இத்தகைய ஆன்மாக்களை அடைய முயற்சிக்க வேண்டும்.

3. அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நினைவுகூருதல்

அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நினைவுகூரும்போது ஈமான் அதிகரிக்கும். குர்ஆனின் போதனைகளை சுமந்த உள்ளம் எப்போதும் இறை சிந்தனையின் தாக்கத்தை உணரும். இப்படியானதோர் உள்ளத்தை அல்குர்ஆன் எதிர்பார்க்கிறது.

"உண்மையான இறை விசுவாசிகள் யாரென்றால் அல்லாஹ்வுடைய பெயர் அவர்களுக்கு முன் கூறப்பட்டால் அவர்களுடைய இதயங்கள் பயந்து நடுங்கும். அவனது வேதம் ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்களுடைய ஈமான் அதிகரிக்கும். அவர்கள் தங்கள் இரட்சகனின் மீது அனைத்துக் காரியங்களையும் ஒப்படைத்து முழுமையாக நம்பிக்கையும் வைப்பார்கள்." (8: 2)

வஹியைச் சுமந்த உள்ளம் எப்போதும் உணர்வுத் துடிப்புமிக்கதாய் இருக்கும். அல்லாஹ்வின் அத்தாட்சிகளினூடாக எப்போதும் ஈமானை அதிகரித்துக் கொள்ளும். முழு வாழ்க்கையிலும் வெறும் சடப்பொருட்களை நம்பி வாழாமல், அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையில் வாழ்வை அமைத்துக் கொள்ளும்.

இறைதூதர் அவர்களையும் அவர்களுடன் இணைந்து கொண்ட ஸஹாபிகளது வாழ்வையும் அவதானிக்கின்றபோது இப்பேருண்மையை நாம் கண்டு கொள்ள முடியும். அவர்கள் மனிதப் பலவீனம் காரணமாக தவறுகளைச் செய்துவிடும்போது உடனே இறைசிந்தனை பெற்று, அழுது புலம்பி மீண்டும் அல்லாஹ்வின் பக்கம் விரைந்து வந்து விடுவார்கள்.

இன்றைய சினிமா, ஆடல், பாடல்கள், இசைக் கச்சேரிகள், ஆடம்பர எண்ணங்கள் போன்றன இந்த உணர்வு மிக்க உள்ளத்தை பெற்றுக் கொள்வதற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளன.

ரமழான் இவை அனைத்திற்கும் கட்டுப் போட்டு விடுகிறது. உணர்வுத் துடிப்புள்ள இதயத்தையும் ஈமானிய அதிகரிப்பையும் அல்லாஹ்வை நம்பி வாழும் உள்ளத்தையும் அடைந்து கொள்ள எம்மைப் பயிற்றுவிக்கிறது.

4. விரிவடைந்த உள்ளம்

நிச்சயமாக வஹியைச் சுமந்த உள்ளம் வஹியின் விசாலத்தன்மையால் விரிவடைந்து செல்லும். ஒருபோதும் சுருங்கி சிறுமை கொண்டதாக இருக்க மாட்டாது. இது உள்ளம் நபிமார்கள் பெற்றுக் கொண்ட உள்ளமாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் திருமறையில் கேட்கிறான்:

"நபியே! நாம் உமது உள்ளத்தை விரிவாக்கவில்லையா?" (94: 1)

உள்ளம் இரண்டு முக்கிய அம்சங்களால் விரிவடைய வேண்டும்.

- அல்குர்ஆன் ▪ அஸ்ஸுன்னா

அல்குர்ஆன், அஸ்ஸுன்னா எமக்குக் கற்றுத் தருகின்ற வாழ்வம்சங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வதன் மூலம் உள்ளம் விசாலமாக வேண்டும். இதில் சிலவற்றுக்கு மட்டும் இடம் கொடுத்து இன்னும் பலதை ஒதுக்க முடியாது. அல்லாஹ் அல்குர்ஆனில் யூதர்களைப் பார்த்து கேட்கிறான்:

"நீங்கள் வேதத்தில் சிலதை ஏற்று சிலதை நிராகரிக்கிறீர்களா?"

ரமழானில் நாம் முழு அல்குர்ஆனையும் பல தடவைகள் ஓதி முடிப்பதும் செவிமடுப்பதும் போல முழு அல்குர்ஆனின் வாழ்வு முறையையும் அதன் சட்ட ஒழுங்குகளையும் எமதுள்ளம் அங்கீகரிக்க வேண்டும்.

இறைவழிகாட்டலுக்குரிய மனிதர்களின் அடையாளம் விசாலமான உள்ளத்தைப் பெற்றிருப்பதாகும். அற்பமான விடயங்களுக்காக அவர்களது உள்ளங்கள் சுருங்கிவிட மாட்டா. ரமழான் காலங்களில் வேறுபாடு பாராமல் எல்லோரையும் ஆதரித்த அந்த உள்ளம் முழு வாழ்விலும் பிரதிபலிக்க வேண்டும்.

இத்தகைய மகத்தான அடைவுகளை எமக்கு வழங்கி, வஹியை சுமந்த உள்ளம் கொண்டவர்களாக எம்மைத் தயார் செய்வதற்காகத்தான் வருடந்தோறும் வஹியின் பாசறையாக ரமழான் எம்மை எதிர்கொள்கிறது. அப்படியான அடைவைக் காணும் வஹியின் பாசறையாக இந்த ரமழானை அமைத்துக் கொள்ள முயற்சிப்போமாக!

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noorjahan Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவர்க்கத்தை அடையப் பெறும் (அந்நல்லடியார்கள்) அல்லாஹ்வின் மீது கொண்ட அன்பின் காரணமாக ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் சிறைப்பட்டவர்களுக்கும் உணவளிப்பார்கள்."
(ஸூரதுத் தஹ்ர்: 05)

தாருல் ஹஸனாத் சிறுவர் இல்லத்தில்...

- தாய், தந்தை இருவரையும் இழந்தோர்.
- தந்தையை இழந்தோர்.
- நீதிமன்றத்தினால் ஒப்படைக்கப்பட்டோர்.
- மாற்று மத சிறுவர் நிலையங்களிலிருந்து மீட்கப்பட்டோர்
- சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை நிலையங்களிலிருந்து அனுப்பப்பட்டோர் ஆகியோர் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கு பாடசாலைக் கல்வி, உலகியற் கல்வி, கணினிப் பயிற்சி முதலானவை வழங்கப்படுகின்றன. உணவு, உடை, மருத்துவ வசதி உட்பட சகல வசதிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. உள, உடல் வளர்ச்சிக்கு உதவும் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு வசதிகளும் உள்ளன. இதனால் சிறுவர்கள் இங்கு மகிழ்ச்சியாக உள்ளனர். அல்ஹம்து லில்லாஹ்.

புனித ரமழானில்

அநாதைகளுக்கும் நாதரவாளர்களுக்கும் உதவுவோம்!

அல்லாஹ்வின் அருளையும் சுவனத்தையும் பெறுவோம்!

நீங்களும் உதவலாம்

- ஸகாத், ஸதகா
- மாதாந்த நன்கொடை
- ஒரு பிள்ளைக்கான மாதாந்த செலவை ஏற்றல்
- ஒரு நாள் உணவுச் செலவை வழங்குதல்
- குர்பான், உழ்ஹிய்யா, அகீகா வழங்குதல்
- ஓர் ஊழியருக்கான மாதாந்த சம்பளத்தை வழங்குதல்
- உடைகள், காலணிகள், பாடசாலை உபகரணங்களை வழங்குதல்
- உண்டியல்களைப் பெற்று பணம் சேமித்து வழங்குதல்
- வெளிநாட்டிலுள்ள நண்பர்களினூடாக உதவுதல்
- ஒரு நேர உணவை வழங்குதல்
- உங்கள் நண்பர்களுக்கு இந்நிலையத்தை அறிமுகப்படுத்துதல்
- நீங்கள் விரும்பும் வேறு வழிகளிலும் உதவலாம்.

அநாதைகளுக்கு உதவினால் **என்ன கிடைக்கும்?**

"நானும் அநாதைகளைப் பராமரிப்போரும் இவ்வாறு இருப்போம் என்று நபியவர்கள் தனது இரு விரல்களைச் சேர்த்துக் காட்டினார்கள்." (அல்ஹதீஸ்)

தாய், தந்தையரின் அன்புக்காக ஏங்கித் தவிக்கும் இவர்களுக்கு உங்கள் வரவு நிறைந்த மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் செல்வப் பிள்ளைகளாக நினைத்து ஒருமுறை குடும்பத்துடன் வந்து பாருங்கள்.

உங்கள் காசோலைகளைப் பின்வருமாறு எழுதுங்கள்:

Name: DHARUL HASANATH CHILDREN'S HOME

Bank	A/C No
People's Bank- Hemmathagama	1-65-003225-6
Bank of Ceylon- Hemmathagama	0008187023
Amana Investments Limited, Mawanaella Branch	3-85978-10-1

DHARUL HASANATH CHILDREN'S HOME
F-67, Hijragama, Hemmathagama, Sri Lanka
Tel&Fax : +94 35 2257 533
Web : www.dharulhasanath.org
E-mail : contact@dharulhasanath.org

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழான் 17: அசத்தியத்தின் குரல்வளை நசுக்கப்பட்ட பத்ர் தினம்

– ஜெம்ஸித் அஸீஸ் –

"நாங்கள் உங்களை விசுவாசித்தோம்; உங்களை உண்மையாளர் என நம்பினோம்; நீங்கள் கொண்டுவந்த இஸ்லாம்தான் சத்தியமென்று முழங்கினோம்; எனவே, உங்களது கட்டளைகளைச் செவிமடுத்தோம்; எந்நேரத்திலும் உங்களுக்கு கட்டுப்படுவோம் என உடன்படிக்கையும் ஒப்பந்தமும் செய்து கொண்டோம். எனவே, நீங்கள் விரும்பிய வழியில் செல்லுங்கள்; உங்களை சத்தியத்தைக் கொண்டு அனுப்பிய இறைவன் மீதாணையாக! நீங்கள் எங்களை அழைத்துக் கொண்டு கடலுக்குள் மூழ்கினாலும் நாங்களும் மூழ்குவோம்; எங்களில் எவரும் பின்நிற்க மாட்டார். எதிரிகளோடு போராடுவதை நாங்கள் வெறுக்கவில்லை; நிச்சயமாக நாங்கள் போர் புரிவதில் உறுதியாக இருப்போம்; உங்களுக்கு கண் குளிர்ச்சி தருபவற்றை அல்லாஹ் எங்களால் வழங்கலாம்; அல்லாஹ்வின் அருளைப் பெற எங்களை அழைத்துச் செல்லுங்கள் யா ரஸூலல்லாஹ்"

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் போரை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்; அசத்தியத்தை தோற்கடிக்க வேண்டும்; வேறு வழிமுறையில் அதனை எதிர்கொள்ள முடியாது என்று உணர்ந்த பின் முஹாஜிர், அன்ஸாரி ஸஹாபாத் தோழர்களில் இராணுவ உயர்மட்டக் குழுவில் இருந்த சிலரை அழைத்து அது தொடர்பாக ஆலோசனை கேட்டபோது அன்ஸாரி ஸஹாபி ஸஅத் இப்னு முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உதிர்த்த வார்த்தைகளே இவை.

மறுபக்கம் முஹாஜிர்களில் அபூ பக்ர், உமர் பின் மிக்தாத் (ரழியல்லாஹு அன்ஹும்) அவர்கள் தமது கருத்துக்களை உறுதியாகத் தெரிவித்திருந்தார்கள்.

"இஸ்ரவேலர்கள் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம் கூறியதைப் போல் நாம் உங்களிடம் கூற மாட்டோம். சத்தியத்தைக் கொண்டு உங்களை அனுப்பியவன் மீதாணையாக! நீங்கள் எங்களை அழைத்துக் கொண்டு 'பர்குல் ஃகிமாத்' (மக்காவுக்கு அருகில் உள்ள இடம்) என்ற இடம் வரை சென்றாலும் நாமும் உங்களுடன் சேர்ந்து வருவோம்" என மிக்தாத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறிய கருத்தைச் செவியுற்ற நபிகளார் அவருக்காகப் பிரார்த்தனை புரிந்தார்கள்.

அசத்தியம் முறியடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அனைத்து ஸஹாபிகளும் உணர்ந்து கொண்டார்கள்; எவரும் பின்வாங்கவில்லை. எனவேதான் மக்கா வியாபாரக் குழுவின் பொருளாதாரத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டு வெளியேறிய 313 ஸஹாபிகளுக்கு பெரும் குறைஷிப் படையை எதிர்கொள்வது சிரமமாக இருக்கவில்லை.

இதில் 82 முஹாஜிர்களும் அவ்ஸ், கஸ்ரஜ் கிளைகளைச் சேர்ந்த அன்ஸாரிகள் 231 பேரும் இருந்தனர். சில அறிவிப்புக்களில் 314 அல்லது 317 ஸஹாபிகள் கலந்து கொண்டதாகவும் வந்துள்ளது. முஸ்லிம் தரப்பிடம் இரண்டு குதிரைகள் 70 ஒட்டகங்கள் மாத்திரமே இருந்தன. ஓர் ஒட்டகத்தில் ஒருவர், இருவர் அல்லது மூவராக மாறி மாறி பிரயாணம் செய்து 'பத்ர்' பள்ளத்தாக்கை சென்றடைந்தனர்.

மறுபக்கம் குறைஷிக் காபிர்களின் படை பதறியடித்துக் கொண்டு தம்மை தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தது. 1300 வீரர்கள், 100 போர்க் குதிரைகள், எண்ணிலடங்காத ஒட்டகங்கள் மற்றும் 600 போர்க் கவச அங்கிகள் என போருக்கான அத்தனை ஆயத்தங்களுடனும் அபூ ஜஹ்ல் இப்னு ஹிஷாமின் தலைமையில் குறைஷியர் படை தயாராகியது.

பத்ருப் போரில் மக்கத்து குறைஷிகள் வெற்றியீட்டினால் இஸ்லாத்தைப் புதைத்து விடலாம் என்ற எதிர்பார்ப்புடன் ஷைத்தான் மனிதஉரு தரித்து குறைஷிகளைத் தூண்டி விட்டான். எனினும், முழுப் பிரபஞ்சத்தையும் படைத்து ஆட்சி புரியும் அல்லாஹ் மலக்குமார்களை அனுப்பி ஷைத்தானையும் அவனின் வாரிசுகளையும் அடக்கினான். அசத்தியத்தின் முதுகெலும்பு உடைத்தெறியப்பட்டது.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைஷியர் போர் வெறியுடன் மக்காவிலிருந்து மதீனா நோக்கி வந்து கொண்டிருக்கையில் வியாபாரக் குழுவின் தலைவரான அபூ ஸுப்யான் (அப்போது அவர் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை), மதீனா முஸ்லிம்களிடம் அகப்படாமல் தான் வேறொரு பாதையால் வியாபாரக் குழுவை செலுத்தி தப்பித்து விட்டதாகவும் வியாபாரக் கூட்டம் மற்றும் அதன் செல்வங்கள் அனைத்தும் பாது காக்கப்பட்டு விட்டதாகவும்; குறைஷியரை திரும்பிச் சென்று விடுமாறும் செய்தி அனுப்பினார்.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட குறைஷியருள் சிலர் திரும்பி விடலாம் என கருத்துத் தெரிவித்தனர். எனினும், தலைவன் அபூ ஜஹ்ல், "இறைவன் மீதாணை யாக! நாம் திரும்ப மாட்டோம்; பத்ருக்குச் சென்று மூன்று நாட்கள் தங்கி ஒட்டகங்களை அறுத்துச் சாப்பிடுவோம்; மது அருந்துவோம்; பெண்கள் பாடலிசைப்பர்; எமது சக்தியை, வல்லமையை மதீனா அரேபியர் அறிந்து எமக்கு அஞ்சி வாழ வேண்டும்" என கர்ஜித்தான். எனினும், இச் சந்தர்ப்பத்தில் ஜுஹ்ரா கிளையினர் சார்பாக வந்திருந்த 300 பேர் திரும்பிச் செல்லவே 1000 பேருடன் குறைஷிப் படை பத்ர் பள்ளத்தாக்கு நோக்கிச் சென்று 'அல்உத்வதுல் குஸ்வா' எனும் மேட்டுப் பகுதிக்குப் பின்னால் தங்கியது.

அன்றிரவு மழை பொழிந்தது. அம்மழை காபிர்க ளுக்கு அடைமழையாகவும் முஸ்லிம்களுக்கு சாந்தமான தூறலாகவும் அமைந்தது. அதன் மூலம் அல்லாஹ் ஷைத் தான்களின் அசுத்தத்தை அகற்றி முஸ்லிம்களைப் பரிசுத் தப்படுத்தினான். முஸ்லிம்கள் தங்கியிருந்த மணற்பாங் கான பூமியை தங்குவதற்கு வசதியாக ஆக்கிக் கொடுத்தான். உள்ளங்களையும் பாதங்களையும் ஸ்திரப்படுத்தினான்.

குறைஷிகள் வருவதற்கு முன்பு பத்ர் மைதானத்திற்கு இரவோடிரவாகச் சென்ற முஸ்லிம்களின் அணி, அல் ஹுபாப் இப்னு முன்திர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆலோசனைக்கமைய எதிரிகளுக்கு சமீப மாகவுள்ள நீர்நிலைகளுக்கருகில் வந்திறங்கி தமக்குத் தேவையான நீர்த்தடாகங்களை அமைத்து விட்டு ஏனைய கிணறுகளை மூடி விட்டது. இது முஸ்லிம்களின் போர்த் தந்திரங்களுள் ஒன்றாக விளங்கியது.

நபியவர்களுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்ட நிலையில், ஹிஜ்ரி 2, ரமழான் மாதம் பிறை 17, வெள்ளிக் கிழமை பத்ர் மைதானத்தில் இரு படைகளும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டன. அப்போது நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "இறைவா இதோ குறைஷிகள் மமதையுடனும் கர்வத்துடனும் உன்னோடு போர்புரிய வந்துள்ளனர். உன் தூதரை பொய்ப்பித்தவர்களாக வந்திருக்கும் இவர்களைத் தோற் கடிப்பதற்காக எனக்கு வாக்களித்த உதவியைத் தந்தருள் வாயாக, இக்காலைப் பொழுதிலேயே அவர்களை அழித்து விடுவாயாக!" எனப் பிரார்த்தனை புரிந்தார்கள்.

நபியவர்கள் படையினருக்கு போர் ஒழுக்கங்களை அழகுற விளக்கிவிட்டு தலைமைக்கு கட்டுப்பட வேண் டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள். எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளாது இப்போரில் வெற்றி பெற நபியவர்கள் எண்ணவில்லை. போருக்கான உடல், உள, இராணுவ ரீதியாக அத்தனை முஸ்தீபுகளையும் முன்னெடுத்துவிட்டு புனித ரமழான் நோன்பை நோற்ற வர்களாகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இறைவனின் உதவியை நாடினார்கள்.

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆன்மிகத்தையும் இராணுவ உத்தியையும் கச்சி தமாக நிறைவேற்றியமையும் பத்ரின் வெற்றிக்கு வழி வகுத்தது" என அறிஞர் ஸய்யித் அஸ்ஸாத் குறிப்பிடுகிறார்.

தவிரவும் எதிரணிப் படையினரை உளவு பார்த்து அவர்களது பலம், பலவீனங்களை அடையாளம் கண்டு அதற்கேற்ப தமது படையினரைப் பலப்படுத்துகின்ற பணியையும் நபிகளார் திறம்படச் செய்தார்கள்.

தெய்வாதீனமாக வெற்றி கிடைக்க வேண்டுமென ஸஹாபிகள் எதிர்பார்க்கவில்லை. அல்லாஹ்வும் அவர்க ளின் முயற்சிக்குத் தக்க கூலியாக மலக்குகளை இறக்கி மாபெரும் உதவியைச் செய்தான்.

"அஹத்! அஹத்!" என்று கோஷமெழுப்பியவர்க ளாக எதிரிகளை அகோரமாகத் தாக்கி களத்தில் முன் னேறினார்கள் ஸஹாபிகள். உக்கிரமான போர் நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இறைவனிடம் மனம் உருகப் பிரார்த்திக்கிறார்கள். அல்லாஹ் வானவர்களை இறக்கி உதவி செய்கிறான்.

"அவ்வாறல்ல; அல்லாஹ்வுக்கு அஞ்சி பொறுமையுட னிருந்தால், இதே சமயத்தில் எதிரிகள் உங்கள் மீது அடர்ந் தேறிய போதிலும் (மூவாயிரமென்ன) ஆயுதம் தரித்த ஐயாயிரம் மலக்குகளை இறக்கி அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிவான்." (ஆலு இம்ரான்: 125)

ஸஹாபிகளோடு சேர்ந்து மலக்குகளும் போராடி னார்கள். தாக்குதல் வேகத்தை குறைஷிப் படையணியில் இருந்த அபூ ஜஹ்லின் மகன் இக்ரிமா (பின்னாளில் இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்) இப்படிக் கூறுகிறார்: "அன்றைய தினம் ஒருவரின் தலை துண்டிக்கப்பட்டு கீழே விழும். ஆனால் அவரை வெட்டியவர் யாரென்று தெரியாது."

மலக்குமார் களத்தில் நின்று போராடுவதைக் கண்ட சுராகா இப்னு மாலிக்கின் உருவத்தில் போருக்கு வந்தி ருந்த இப்லீஸ் போர்க்களத்தை விட்டு வெருண்டோடி கடலில் குதித்து விட்டான். தமது படை பலவீனப்பட்ட போதும் திமிருடன் தம்பட்டமடித்து முன்னேறி வந்த அபூ ஜஹ்லை இரண்டு ஸஹாபா சிறுவர்களின் வாள் முனை பதம் பார்க்கிறது. முஆத் இப்னு அம்ர் இப்னு ஜமூஹ் (ரழியல்லாஹு அன்ஹு), முஅவ்வித் இப்னு அஃப்ரா (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோரே இவ்விரு இளம் தியாகிகள். இப்போரில் முஅவ்வித் இப்னு அஃப்ரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஷஹீ தானார்கள். கொல்லப்பட்ட அபூ ஜஹ்லுக்கு 'இந்த சமுதாயத்தின் பிர்அவ்ன்' என்ற பட்டம் சூட்டப்படுகிறது.

இப்போர் நிராகரிப்பாளர்களுக்கு பெரும் தோல் வியாகவும் இறைவிசுவாசிகளுக்கு மகத்தான வெற்றி

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் முடிவடைகிறது. இதில் முஸ்லிம் படையணி சார்பில் முஹாஜிர் ஸஹாபிகள் ஆறு பேரும் அன்ஸாரி ஸஹாபிகள் எட்டு பேர்களுமாக மொத்தம் பதினான்கு ஸஹாபிகள் ஷஹீதாகினர். இணைவைப்பாளர்களில் எழுபது பேர் கொல்லப்பட்டனர். எழுபது பேர் சிறை பிடிக்கப்பட்டனர். குறைஷிகளில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் முக்கிய தலைவர்களாவர்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் போர் முடிந்த பிறகு பத்ர் மைதானத்தில் மூன்று நாட்கள் தங்கி மதீனா சென்றடைகின்றார்கள்.

நோன்பு நோற்றால் நாளின் பெரும் பகுதியை தூக்கத்திலும் பொழுது போக்குகளிலும் கழிப்பவர்கள், பத்ர் களம் புனித ரமழானில் நோன்பாளிகளின் வாள்வீச்சில் வெற்றி கொள்ளப்பட்டதை மறந்து விடுகின்றார்கள். ரமழான் மாதம் சோம்பேறிகளின் மாதமல்ல; அது வீர வரலாற்றுப் பெட்டகங்களின் திறவுகோல்; அல்லாஹ்வுக்காய் உயிரைத் துச்சமாக மதித்து களமிறங்கிய தியாகிகளின் மாதம் என்பதையே பத்ர் களம் எமக்கு கற்றுத் தருகிறது.

பத்ர் களம் தரும் படிப்பினைகள்

மௌலானா மௌதூதி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தப்ஹீமுல் குர்ஆனில் ஸூரா அல்அன்பாலுக்கு எழுதிய விளக்கவுரையில் பத்ர் களம் சொல்லும் படிப்பினைகளாக இவற்றைக் குறிப்படுகின்றார்கள்.

- ஒரு விடயத்தை பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதற்காக அது சத்தியமாகி விடாது. சத்தியவாதிகள் சொற்ப அளவில் இருந்தாலும் அல்லாஹ் அவர்களுடனே இருப்பான்.
- இறை நம்பிக்கை கொண்டதன் பின், இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தயங்குவது நயவஞ்சகத்தனத்தின் வெளிப்பாடாகும். அல்லாஹ் இத்தகையவர்களை வெறுக்கின்றான்.
- சொத்து, செல்வம், சந்ததிகள் மீதுள்ள பேராசைதான் கோழைத்தனத்தையும் இறை வழியில் போராடுவதற்கு தயக்கத்தையும் பீதியையும் ஏற்படுத்துகிறது. சொத்து செல்வங்களும் பிள்ளைச் செல்வங்ளும் இறைவனால் வழங்கப்பட்டுள்ள சோதனை என்பதை ஒவ்வொரு விசுவாசியும் புரிந்து கொண்டு விழிப்புடன் செயற்பட வேண்டும்.
- சத்தியத்தில் இருப்பவர் பலவீனனாக இருக்கின்ற நிலையில் அசத்தியவாதிகள் எவ்வளவுதான் சக்திவாய்ந்தவர்களாக இருந்தாலும் சூழ்நிலைகளை மாற்றி சத்தியவாதிகளுக்கு வெற்றியையும் பாதுகாப்பையும் அளித்திட இறைவனால் முடியும். பத்ருப் போரில் வானவர்களை இறக்கி இறை நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் துணை புரிந்தான். அல்லாஹ்வின் தூதரும் நபித்தோழர்களும் போருக்கான முன்னேற்பாடுகளைச் செய்துவிட்டு அல்லாஹ்வின்மீது தவக்குல் வைத்தவர்களாக அழுது கேட்ட துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு அசத்தியவாதிகளின் உள்ளங்களில் பீதியை உண்டாக்கினான். இறை மறுப்பாளர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் எதிர்த்துப் போரிட்டதனால் அல்லாஹ் அவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்கினான்.
- அல்லாஹ்வின் மாளிகையான கஃபதுல்லாஹ்வைத் தரிசிப்பதைத் தடுப்பதற்கு எவருக்கும் எவ்வித உரிமையுமில்லை.
- கஃபதுல்லாஹ்வை நிர்வகிக்கும் பொறுப்பாளர்கள் இறையச்சம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
- இறைவழியில் போரிடுவது ஓர் இபாதத். அசத்தியவாதிகள் கேளிக்கைகளில் மூழ்கிய வண்ணம் கர்வத்துடனும் ஆரவாரத்துடனும் போரிடுவர். சத்தியவான்கள் நிதானமாகவும் அடக்கத்துடனும் அல்லாஹ்வின் திருப்திக்காகப் போரிடுவர்; வெற்றி அல்லாஹ்வின் புறத்திலிருந்தே கிடைக்கும் என்று உறுதியாக நம்பிக்கை கொள்வர்; இறைவனுக்கு பூரண நன்றி செலுத்துவர்.

புனித ரமழானை பயனுள்ள வாசிப்பில் கழியுங்கள்



170/-

200/-



100/-

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வாழ்வில் மனிதன் மேற்கொள்ள வேண்டிய முப்பெரும் பணிகள்

தொடர் - 19

அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லூர் ரஹ்மான் (நளீமி, பி.ஏ)

'மனித வாழ்க்கை பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்' என்ற தலைப்பின் கீழ் இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியுள்ள மிக உயர்ந்த அந்தஸ்தையும் பெறுமானத்தையும் சென்ற தொடரில் பார்த்தோம். இத்தகைய அந்தஸ்துப் பெற்ற மனிதன், அவன் படைக்கப்பட்டதன் நோக்கம், பதில் கூறவேண்டிய பிரதான பொறுப்பு, மனிதனது ஆக்கத்திறன் என்பவற்றைக் கருத்திற் கொண்டு, இப் பூமியில் அவன் ஆற்ற வேண்டிய பிரதானமான மூன்று பணிகள் பற்றியே இத்தொடரில் பார்க்க உள்ளோம். அம்மூன்று பணிகளும் வருமாறு:

♦ இபாதத் ♦ கிலாபத்

♦ இமாரத்

இபாதத்

'இபாதத்' என்பது இஸ்லாமிய நோக்கில் தத்துவார்த்தமான பல்வேறு பொருள்களையும் விளக்கங்களையும் கொண்ட ஒரு பதமாகும். மொழிரீதியாக இது வணங்குதல், வழிபடுதல், அடிபணிதல், கட்டுப்படுதல் போன்ற கருத்துக்களைத் தருகின்றன. இஸ்லாமிய அறிஞர்கள் அதை 'அல்லாஹ்வுக்குச் செலுத்தும் உச்ச அன்புடன் கூடிய உச்ச அடிபணிதல்' என்று வரைவிலக்கணப்படுத்துகின்றனர். இதன்படி அன்பில்லாத அடிபணிதலோ அடிபணிதல் இல்லாத அன்போ 'இபாதத்' ஆக அங்கீகரிக்கப்பட மாட்டாது.

அல்லாஹ் பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தையும் அவனை வணங்கி அடிபணியும் இயற்கைத் தன்மையிலேயே படைத்துள்ளான். எனவே அவை அல்லாஹ்வுக்கு மறுப்பின்றி அடிபணிந்து செயலாற்றுகின்றன.

"பின்னர் அவன் வானத்தை நோக்கினான், அது புகைமண்டலமாக இருந்தது. அப்போது அதற்கும் பூமிக்கும் நீங்கள் விரும்பியோ விரும்பாமலோ அடிபணிந்து வாருங்கள் என்று கட்டளை பிறப்பித்தான். அவை 'நாம் விரும்பியே (அடிபணிந்து) வருகிறோம்' என்றன." (41: 11)

"ஏழு வானங்களும் பூமியும் அவற்றில் உள்ளனவும் அல்லாஹ்வையே துதிக்கின்றன. அவன் புகழைத் துதிக்காத எப்பொருளும் கிடையாது. ஆனால், (மனிதர்களாகிய) நீங்கள் அவற்றின் துதியை விளங்கிக்கொள்ள மாட்டீர்கள்." (17: 44)

"நட்சத்திரங்களும் மரங்களும் அவனுக்கே ஸுஜூது செய்கின்றன." (55: 06)

இவ்வசனங்களில் கூறப்பட்ட அடிபணிதல், துதிசெய்தல், ஸுஜூது செய்தல் என்ற பதங்கள் அனைத்தும், அவை அல்லாஹ்வுக்குச் செய்யும் இபாதத்தையே குறிக்கின்றன.

அல்லாஹ் மனிதனையும் அவனை இபாதத் செய்வதற்காகவே படைத்துள்ளான்.

"ஜின் வர்க்கத்தையும் மனித வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவே அன்றிப் படைக்கவில்லை." (51: 56)

இவ்வசனம் மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தை மிகத் தெளிவாக விளக்குகின்றது. இருப்பினும் ஏனைய படைப்பினங்களைப் போலல்லாது தனது விருப்பத்திற்கமைய செயல்படும் சுதந்திரம் பெற்றவனாகவே அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான். எனவே ஒரு மனிதன் அவனது விருப்பத்திற்கமைய அல்லாஹ்வுக்கு அடிபணியலாம் அல்லது அடிபணியாதிருக்கலாம். இதுபற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

"திண்ணமாக நாம் அவனுக்கு (மனிதனுக்கு) வழியைக் காட்டியுள்ளோம். அவன் அதில் நன்றியுள்ளவனாக நடக்கலாம் அல்லது நிராகரித்தவனாக நடக்கலாம்." (76: 03)

ஒவ்வொரு மனிதனும் தான் படைக்கப்பட்ட நோக்கத்தைப் புரிந்து தனது இரட்சகனுக்கு நன்றியுள்ளவனாக வாழும்போது அவனது வாழ்க்கை இபாதத்தாக மாறுகிறது.

இஸ்லாத்தில் இபாதத்தின் தளம் மிகவும் விசாலமானது. நபி (ஸல்லல்லாஹு) அவர்களது ஹதீஸ்கள் அதைத் தெளிவுபடுத்துகின்றன.

"நாளை மறுமை வரும் என்றறிந்த நிலையிலும் உனது கையில் ஒரு பேரீத்தை மரக்கன்று இருக்குமானால் அதை நட்டு விடு."

"தனது மனைவியுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடுவதும் அல்லாஹ்விடம் நன்மையாகக் கணிக்கப்படக் கூடியதே" என்று நபியவர்கள் கூறியபோது "ஒருவன் தன் இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கும் நன்மையுண்டோ" என நபித் தோழர்கள் ஆச்சரியத்துடன் வினவினர். அதற்கு நபியவர்கள் "ஹராமான வழியில் அதைத் தீர்த்துக் கொண்டால் அது தீமையெனில், ஹலாலான முறையில் தீர்த்துக் கொண்டால் அது நன்மையாகும்" எனத் தெளிவுபடுத்தினார்கள்.

இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் நோக்கும்போது ஒரு மனிதன் தான் நாடினால் தனது வாழ்வு முழுவதையுமே வணக்கமாக மாற்றிக் கொள்ள முடியும். வாழ்க்கையை வணக்கமாக்குவதென்பது வாழ்வை அழகுபடுத்தும் ஒரு கலையாகும். அக் கலையின் அடிப்படை அம்சம், அல்லாஹ்வின்மீதும் அவனது தூதர் மீதும் முழுமையான அன்பு கொண்டு அல்லாஹ்வுக்கு அடிபணிவதும் அவனது தூதருக்கு வழிபடுவதுமாகும்.

தன் வாழ்வை வணக்கமாக்கிக் கொண்ட மனிதன் அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடியானாகின்றான். அவ்வடியானை நினைத்து அல்லாஹ் பெருமிதம் கொள்கின்றான். தனது

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க விரோதியாகிய ஷைத்தானிடம் தன் அடியான் விடயத்தில் சவால் விடுகின்றான்.

"நிச்சயமாக எனது அடியார்கள் மீது உன்னால் ஆதிக்கம் செலுத்தவே முடியாது." (17: 65)

மனிதன் தனது வாழ்க்கை முறையைத் தெரிவு செய்வதில் சுதந்திரம் பெற்றவன் என்ற வகையில் இபாதத்திற்கு முரணான வாழ்க்கை முறையைத் தெரிவு செய்வானாயின் அது இயற்கைக்கே முரணான வாழ்க்கை முறையாகும். ஏனெனில், இயற்கையின் அனைத்தும் அல்லாஹ்வையே இபாதத் செய்கின்றன.

கிலாபத்

மொழிரீதியாக 'கிலாபத்' என்ற பதம் ஆட்சியதிகாரத்தையும் பிரதிநிதித்துவத்தையும் குறிக்கின்றது. இஸ்லாமிய வரைவிலக்கணப்படி, அல்லாஹுத் தஆலாவின் சட்டதிட்டங்களை உலகில் அமுல்படுத்தும் நீதியான ஆன்மிக அரசியல் அதிகாரத்தையே குறிக்கின்றது. இவ் வகையில் கலீபா என்ற பதம் நீதியான இஸ்லாமிய ஆட்சியாளரை அல்லது பிரதிநிதியைக் குறிக்கப் பயன்படுகிறது.

கலீபா என்ற சொல் மிகவும் தொன்மையானதாகும். அல்லாஹ் மனிதனைப் படைக்க நாடி மலக்குகளிடம் ''நான் புவியில் எனது கலீபாவை படைக்கப் போகிறேன்'' (2: 30) என்று கூறியபோது கலீபா என்ற சொல்லை அவர்கள் பூரணமாக விளங்காததால் கலீபா பற்றிய குற்றச்சாட்டுக்களையே முன்வைத்தனர். காரணம் கலீபா என்பவன் மலக்குகளின் இயல்புகளுக்கு மாற்றமான சொந்த விருப்பு வெறுப்பும் சுய அதிகாரமும் கொண்டு விளங்குவான் என்பதனாலாகும். ஏனெனில், மனிதனின் இச்சிறப்புக் காரணமாக, அவன் அல்லாஹ்வை நிராகரித்து தமக்குள் சண்டை இட்டுக் கொள்ளவும் சாத்தியம் இருக்கின்றது. இருப்பினும் அல்லாஹ்வின் உயர்ந்த நாட்டத்தை மலக்குகள் அப்போது அறிந்திருக்கவில்லை.

நிர்வகித்தல், ஆட்சி செய்தல் என்பன அல்லாஹ்வின் பணி. அது ஓர் அமானிதம். பூமியில் உள்ளவற்றிடம் அதைப் பொறுப்பேற்க கோரிய போது அனைத்தும் அதை மறுத்து விட மனிதன் மட்டும் சுமந்து கொண்டான். (பார்க்க 33: 72)

அதுமுதல் பூமியை நிர்வகிப்பதற்கும் அதில் ஆட்சி செய்வதற்கும் மனிதன் பிரதிநிதியானான். தன் பிரதிநிதித்துவத்தை அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கு அமைய நிறைவேற்றுவானாகில் அவன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற உயர் அந்தஸ்த்தைப் பெறுகின்றான். மறுமையிலும் அவனுக்கு மகத்தான நற்பாக்கியங்கள் உண்டு.

அல்லாஹ்வின் பிரதிநிதியாகச் செயல்பட முன்வராத மனிதன், ஒன்று ஷைத்தானின் பிரதிநிதியாகச் செயல்படுவான் அல்லது ஷைத்தானியப் பிரதிநிதிகளால் ஆக்கிரமிக்கப்படுவான். ஏனெனில் இவ்விரு தரப்புக்கும் இடையிலான அதிகாரப் போராட்டம் கலீபாவாகப் படைக்கப்பட்ட மனிதனின் இயற்கைத் தன்மையில் இருந்து தோன்றுவதாகும். ஆகவே, மறுமைவரை அப்போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இறைபிரதிநிதியின் ஆதிக்கமே உலகில் முதன் முதலாக காணப்பட்டது. காலப்போக்கில் அவர்கள் பிரதிநிதித்துவத்தில் விழிப்புணர்வு இன்றி இறை வழிகாட்டலை புறக்கணித்தபோது ஷைத்தானியப் பிரதிநிதிகளின் வலையில் வீழ்ந்தார்கள். தொடர்ந்து அல்லாஹ் நபிமார்களை அனுப்பி இறை பிரதிநிதிகளைப் பயிற்றுவித்து 'கிலாபத்' உருவாக உதவி செய்தான். வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் தனது நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்போது பூமியின் அதிகாரத்தை தனது விசுவாசிகளுக்குக் கொடுத்துமுள்ளான். கொடுப்பதாக வாக்குறுதியும் அளிக்கின்றான். (பார்க்க 24: 55)

இறுதியாக, முஹம்மத் (ஸல்லல்லாஹு) அவர்கள், ஷைத்தானிய இராச்சியம் உலகெங்கிலும் தாண்டவமாடிக் கொண்டிருந்த வேளையில் நபியாக அனுப்பப்பட்டார்கள். அவர்கள் தனது 23 வருட காலத்திற்குள் இறையாட்சியைத் தோற்றுவிப்பதில் மகத்தான சாதனை படைத்தார்கள். தொடர்ந்து வந்த காலங்களில், இறைபிரதிநிதிகளான முஸ்லிம்களின் கைகளில் ஷைத்தானிய இராச்சியங்கள் வீழ்ச்சியடைந்தன. குறுகிய காலத்தில் உலகில் மூன்றில் இரண்டு பகுதிகளில் 'கிலாபத் ராஷிதா' (இறையாட்சி) அதிகாரத்தில் இருந்தது. அநியாயம் தாண்டவமாடிய இடங்களிலெல்லாம் நீதி நிலைத்தோங்கியது. இறைவணக்கம் புறக்கணிக்கப்பட்ட இடகளிலெல்லாம் எல்லாம் வணக்கஸ்தலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை ஷைத்தானியத்திற்கெதிரான பயிற்சிப் பாசறைகளாகவும் விளங்கின. இறை பிரதிநிதிகள் அங்கு மேற்கொண்ட வணக்கங்களைப் பார்த்து மலக்குகளே ஆச்சரியமடைந்தார்கள். அல்லாஹ் மலக்குகளிடம் கூறிய ''நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நான் அறிந்தவனாக உள்ளேன்'' என்ற கூற்று மெய்யாகியது.

அல்லாஹ் மனிதனுக்கு கலீபா என்ற பதவியை பொதுவாக வழங்கியதன் காரணமாக எவருக்கும் 'கிலாபத்' பொறுப்பை மறுத்துவிட முடியாது. தலைமைத்துவம், கட்டுப்பாடு என்ற இரு பிரதான பகுதிகளைக் கொண்ட கிலாபத்தில் ஒவ்வொரு தனிநபரும் பொறுப்பாளராவார். விசுவாசமாக நடக்க வேண்டும் என்பது அதன் பிரதான நிபந்தனையாகும். இதுவே அல்லாஹ் காட்டித்தரும் மார்க்கமும் ஆகும்.

நபியவர்கள் கூறினார்கள். "மார்க்கம் என்பதே விசுவாசமாக நடத்தலாகும்" யாருக்கு என்று தோழர்கள் வினவினர். "அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும்" என்று நபியவர்கள் பதிலளித்தார்கள்.

கிலாபத் பணியை நிறைவேற்றும் போது அல்லாஹ்வுக்கும் அவனது பிரதிநிதிகளுக்கும் இடையே உள்ள உறவு அறுபடாது இருக்கவே வணக்க வழிபாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, 'கிலாபத்' பணியை மறந்த வணக்கசாலிகளோ வணக்க வழிபாடுகளில் ஆர்வமில்லாத 'கிலாபத்' பணியாளர்களோ இறைதிருப்தியைப் பெற்றவர்கள் அல்லர். இவ்வுண்மையைப் புரிந்து கொண்ட

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனால்தான் நபித்தோழர்கள் 'இரவில் துறவிகள்; பகலில் குதிரை வீரர்கள்' என்று புகழப்படும் அளவு இறை வணக்கத்திலும் கிலாபத் பணியிலும் சமாந்தரமாகச் செயற்பட்டார்கள்.

இமாரத்

'வளப்படுத்தல்' என்பது இப்பதத்தின் கருத்தாகும். இதன் எதிர்ப்பதமாக 'பாழ்படுபத்தல்' என்ற சொல்லைக் குறிப்பிடலாம். 'கிலாபத் பணி' யைப் போலவே 'இமாரத்' பணியும் அல்லாஹ்வால் மனிதன் மீது இயல்பாகவே விதிக்கப்பட்ட ஒன்றாகும்.

'இமாரத் பணி'யைத் தெளிவாக விளங்கிக் கொள்ள ஒரு பாழடைந்த வீட்டை சிறந்த உதாரணமாகக் கூறலாம். யாரும் குடியிருக்காததால் அதன் உட்புறமும் வெளிப்புறமும் புழுதி படிந்தும் முற்றவெளி பெருக்கப்படாததனால் இலை, குலைகள் நிறைந்தும் எல்லா இடங்களிலும் சிலந்திகள் வலைபின்னியும் எங்கும் இருள் சூழ்ந்தும் காணப்பட்ட அதில் மனிதர்கள் குடியிருக்க ஆரம்பித்ததும் நிலைமை தலைகீழாக மாறி வீடு பிரகாசமடைய ஆரம்பிக்கின்றது. இதற்கு மாற்றமாக முற்றத்தை பெருக்காது, புழுதியைத் துடைக்காது, சிலந்தி வலைகளை அகற்றாது இருளில் வாழ நினைக்கும் மனிதன் வாழத் தகுதியற்றவனாவான்.

இவ்வாறு, தான் வாழும் இடத்தை ஒழுங்குபடுத்தி அழகுபடுத்தும் பணி இமாரத் பணியைச் சார்ந்ததாகும். மனிதன் இப்பணியை பூமியில் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் மனிதர்களை இங்கு குடியமர்த்தியுள்ளான். அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

"அவனே பூமியில் இருந்து உங்களை உருவாக்கினான். அதில் உங்களைக் குடியிருக்கவும் வைத்தான்." (11: 61)

இவ் வசனத்தில் "அதில் உங்களைக் குடியிருக்கவும் செய்தான்'' என்ற பொருள் தரும் அரபுச் சொல் 'இஸ்தஃமரகும் பீஹா' என்பதாகும். இதை ''பூமியை வளப்படுத்துமாறு கேட்டுக் கொண்டான்'' என்றும் மொழிபெயர்க்கலாம். ஆகவே இவ் ஆழ்ந்த பொருள் தரும் சொல் மூலம், மனிதன் பூமியில் குடியிருப்பதன் மூலம் அதை வளப்படுத்த வேண்டும் என்ற கருத்தை புரிந்து கொள்கின்றோம்.

மனிதன் புவியில் இமாரத் பணி செய்ய இரண்டு விடயங்கள் அவனுக்கு தேவைப்படுகின்றன.

- வளம்
- அறிவு

இவ்விரண்டையும் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியிருக்கின்றான்.

"அவன்தான் பூமியில் உள்ள சகலவற்றையும் உங்களுக்காகப் படைத்துள்ளான்." (2: 29)

"(அவன்) ஆதமுக்கு எல்லாப் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான்." (2: 31)

வளங்கள் பற்றியும் அறிவு பற்றியும் கூறும் இவ்விரு வசனங்களும் மிக ஆழ்ந்த விளக்கங்களைக் கொண்டனவாகும். வளமும் அறிவும் ஒன்று சேரும்போது அங்கே ஆக்கப்பணி நடைபெறுகின்றது. இவ்வாக்கப் பணி மூலம் மனிதன் பூமியை வளப்படுத்துகிறான். இன்று கண்டெடுக்கப்படுகின்ற பண்டைய நாகரிகச் சின்னங்கள் அனைத்தும் வரலாறு நெடுகிலும் மனிதன் மேற்கொண்டு வந்துள்ள இமாரத் பணியின் சான்றுகளாகவே திகழ்கின்றன.

ஒரு நாட்டின் கல்வி அபிவிருத்தி, சுகாதார மருத்துவ சேவை, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்புக்கள் ஆகிய அனைத்தும் இமாரத் பணியைச் சார்ந்தனவாகும்.

கிலாபத் பணியும் இமாரத் பணியும் எப்போதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே செயற்படும். கிலாபத் பணி 'ரப்பானிய்யத்' (இறையாட்சி) ஆக இருக்குமானால் 'இமாரத்' பணியும் அவ்வாறாகவே அமையும். அது ஷைத்தானிய்யத் ஆக அமையுமானால் இமாரத் பணியும் அதற்கேற்றவாறே அமையும். அப்போது மனிதன் தனது மனோஇச்சையுடன் விரசமான, விகாரமான தோற்றங்களை இமாரத் பணியில் பிரதிபலிக்கச் செய்வான். அது மட்டுமல்லாது தனது ஆக்கத்தில் மதிமயங்கி தன் இரட்சகனையும் மறந்து விடுகின்றான். அவ்வாறான ஆக்கங்களை அல்லாஹ் அழித்துள்ளான். அவற்றின் சிதைந்த சிதிலங்களைப் பார்த்து படிப்பினை பெறுமாறு கட்டளையிடுகின்றான்.

"இவர்கள், தமக்கு முன்னுள்ளவர்களின் முடிவு எவ்வாறாக அமைந்தது என்பதைப் பார்த்து படிப்பினை பெறுவதற்கு, பூமியில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டாமா? அக்கால மக்கள் இவர்களைவிடப் பலசாலிகளாகவும் பூமியைப் பண்படுத்தி அபிவிருத்தி செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்." (39: 9)

'கிலாபத் பணி' ரப்பானிய்யத்தாக அமையும்போது 'இமாரத் பணி' யோ மறைந்து கிடக்கும் அல்லாஹ்வின் மகத்தான அத்தாட்சிகளை வெளிக் கொணர்ந்து அவனது இருப்பை மெய்ப்பித்துக் காட்டக்கூடியதாகத் தொழிற்படும். அதன் பணியாளர்களோ அல்லாஹ் தமக்குப் புரிந்த அருட்கொடைகளுக்காக தாம் முன் வைக்கும் நன்றியை இப் புவியின் மேல் பிரத்தியட்சமான விம்பங்களாக விட்டுச் செல்வார்கள்.

மனிதன் என்ற அடியான் வணக்கம் என்ற பெயரில் மடங்களிலும் மஸ்ஜித்களிலும் சதாவும் முடங்கிக் கிடப்பதை எஜமானாகிய அல்லாஹ் ஒருபோதும் விரும்பவில்லை. மாறாக அவன் விரும்புவதெல்லாம் அல்லாஹ்வின் மகிமை கூறும் உயர்ந்த நாகரிகத்தை தோற்றுவிப்பதைத்தான். அதற்காகவே அல்லாஹ் விண்ணில் உள்ளவற்றையும் மண்ணில் உள்ளவற்றையும் மனிதனுக்காக வசப்படுத்தி கொடுத்துள்ளான். (21: 20)

முடிவாக, பிரபஞ்சம் பற்றியும் மனித வாழ்க்கை பற்றியுமான உண்மையான உயர்ந்த கண்ணோட்டங்களை இஸ்லாம் முன்வைக்கின்றது. அதை விசுவாசிக்கும் மனிதன், இறை சட்டதிட்டத்திற்கமைய உலகை ஆளுவான்; உயர்ந்த நாகரிகத்தைக் கட்டி எழுப்புவான்; இறைவனை முறைப்படி வணங்குவான். அதனையே கிலாபத், இபாதத், இமாரத் என்ற சொற் பிரயோகங்கள் உணர்த்தி நிற்கின்றன.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃதிகாப் இருப்பதற்கு நேரம் வரையறுக்கப்பட்டுள்ளதா?

கேள்வி: ரமழானில் அல்லது வேறு நாட்களில் அல்லது ரமழானின் இறுதிப் பத்தில் இஃதிகாப் இருப்பதற்கான காலம் வரையறுக்கப்பட்டுள்ளதா? அதனுடைய அளவு என்ன? அதனுடைய ஷர்த், அர்கான் என்ன? மீண்டு வரமுடியுமா? மஸ்ஜித்தில் மட்டும் இருக்க வேண்டுமா? அல்லது வீட்டிலோ, மக்காவிலோ இருக்க முடியுமா?

பதில்: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ரமழான் இறுதிப் பத்தில் அல்லாஹுத் தஆலா ஏற்றுக் கொள்ளும்வரை இஃதிகாப் இருந்தார்கள்." (ஆதாரம்: அத்திர்மிதி)

எனவே ரமழான் இறுதிப் பத்தில் இஃதிகாப் இருப்பது ஸுன்னத் ஆகும். என்றாலும் அதை முஸ்லிம்கள் புனிதப்படுத்துவது கடமையாகி விட்டது. முஸ்லிம்கள் ரமழானில் இஃதிகாப் இருக்க முடியும். ஏனைய நாட்களில் இஃதிகாப் இருப்பதை விட ரமழானில் இஃதிகாப் இருப்பதே சிறந்ததாகும்.

பர்ழான தொழுகைக்காக அல்லது நபிலான தொழுகைக்காக பள்ளிவாசலினுள் ஒரு முஸ்லிம் நுழைகின்றபோது இஃதிகாபுக்காக நிய்யத் வைத்தால் அவர் அங்கு தங்கி இருக்கின்ற கால அளவுக்கு கூலியைப் பெற்றுக் கொள்வார். இஃதிகாபுடைய காலத்தை கூட்டுவதற்கோ குறைப்பதற்கோ எந்த வரையறையும் இல்லை.

இஃதிகாப் இருப்பதற்கான இடம் மஸ்ஜிதாக இருக்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. எல்லா மஸ்ஜித்களிலும் இஃதிகாப் இருக்க முடியும் என இமாம் ஹனீபா, அஹ்மத் போன்ற சில சட்ட அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஜுமுஆ நடக்கின்ற அனைத்துப் பள்ளிவாசல்களிலும் இஃதிகாப் இருக்க முடியும். இஃதிகாப் இருப்பவர் அவருடைய இஃதிகாப் நாளில் ஜுமுஆவுக்காகச் செல்வது வாஜிப் என இமாம் மாலிக் அவர்கள் குறிப்பிடுகிறார்.

மஸ்ஜித் அல்லாத இடங்களில் ஓர் ஆண் இஃதிகாப் இருக்க முடியாது. என்றாலும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு மஸ்ஜிதில் இஃதிகாப் இருக்க முடியும். எனினும் அவளுடைய வீடே அவளுக்குச் சிறந்தது. ஏனெனில் அவளது தொழுகை வீட்டில்தான் சிறப்பாக இருக்கும். இன்னும் அவளுடைய தொழுகைக்காக ஒதுக்கப்பட்ட அவளுடைய வீடே மஸ்ஜிதாக கருதப்படுகின்றது.

ஒரு பெண் அவளுடைய வீடான மஸ்ஜிதில் இஃதிகாப் இருக்க முடியாது. நிச்சயமாக பெண்கள் மஸ்ஜிதில் மட்டும் தாம் இஃதிகாப் இருக்க முடியும் என பிக்ஹ் அறிஞர்களான இமாம் மாலிக், இமாம் ஹனீபா ஆகியோர் கூறுகின்றனர்.

இஃதிகாப் இருப்பதற்கான அர்கான்கள்

1. மஸ்ஜிதில் தங்கியிருத்தல்
2. நிய்யத்

இஃதிகாப் இருப்பதற்கான ஷர்த்துக்கள்

1. முஸ்லிமாக இருத்தல்
2. பருவ வயதை அடைந்திருத்தல்
3. ஜனாபத், ஹைழ், நிபாஸ் போன்ற பெரிய தொடக்கில் இருந்து தூய்மையாக இருத்தல்.
4. மனைவியுடன் உடலுறவு கொள்வதை முற்றாகத் தவிர்த்தல்.

இஃதிகாப் இருப்பவர் தன்னை தூய்மைப்படுத்துவதற்கும் குளிப்பதற்கும் மணம் பூசிக்கொள்வதற்கும் ஏனைய வேலைகளைச் செய்வதற்கும் முடியும்.

அரபு மூலம்: டாக்டர் அஜீல் அந்நஷ்மி
தமிழில்: ஹசீனா இப்றாஹீம், இஸ்லாஹிய்யா வளாகம்

குறிப்பு:

இஃதிகாப் பத விளக்கம், இஃதிகாபின் வகைகள், இஃதிகாப் இருக்க வேண்டிய நாட்கள், நிபந்தனைகள், அடிப்படைகள், இஃதிகாப் இருக்கும் பள்ளிவாசல் குறித்த சட்ட வல்லுநர்களின் கருத்துக்கள், நவீன கால அறிஞர்களின் தீர்ப்புகள், இஃதிகாப் இருப்பவருக்கு முஸ்தஹப்பான விடயங்கள், இஃதிகாப் இருப்பவருக்கு ஆகுமானவை, இஃதிகாபை முறிக்கும் காரியங்கள் முதலானவை தொடர்பாக விரிவான விளக்கங்களைப் பெற விரும்புவோர் அல்ஹஸனாத் ரமழான் சிறப்பிதழைப் (2003, நவம்பர், மலர்:29, இதழ்:11) பார்க்கவும்.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பில் அல்லாஹ்வின் அருள் வெளிப்பாடு

டாக்டர் எம்.எல்.எம். ரயீஸ்

புனித ரமழான் மீண்டும் எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. எமது உடலிலும் உள்ளத்திலும் உள்ள குறைகளை நீக்கி முழுமையான முஃமினாக வாழ்வதற்கான உந்துசக்தியைப் பெற்றுக் கொள்ள அல்லாஹ் மீண்டும் எமக்கொரு சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தருகிறான், அல்ஹம்துலில்லாஹ்! ரமழானின் மணத்தை இப்பொழுதே உள்ளங்கள் நுகர ஆரம்பித்திருக்கும் இவ் வேளையில் நீங்கள் நோன்பு நோற்றிருக்கும்போது உடலுக்குள் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

ஒரு மனிதன் வாழ்வதற்கு சக்தி அவசியமாகிறது. பெற்றோல், டீஸல் இல்லாமல் எப்படி வாகனம் இயங்க முடியாதோ அப்படியே மனிதனும் சக்தியைப் பெற்றுக் கொள்ளாமல் வாழ முடியாது. மனிதர்கள் வடிவமைத்த வாகனங்களில் எரிபொருள் தீரும் வரை வாகனம் இயங்கும்; தீர்ந்து விட்டால் வாகனம் இயங்க வழி கிடையாது. எனவே, எரிபொருளைத் தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்க வேண்டும். யுத்த காலங்களில் எரிபொருள் நிரப்புவதற்கென்றே ஆகாயத்தில் விஷேட விமானங்களைத் பறக்க விடுகின்றனர்.

இதனை இப்படியும் சொல்லலாம். மனிதன் படைத்த வாகனங்களால் பட்டினியில் இயங்க முடியாது. மட்டுப்படுத்தப்பட்ட மனித அறிவின் மூலம் உருவாக்கப்பட்ட வாகனங்களின் இந்தப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காண முடியாதிருக்கிறது. இது மனிதன் வடிவமைக்கும் படைப்பின் குறைபாடு. மாறாக, அல்லாஹ் வடிவமைத்த மனிதனின் அற்புதப் படைப்பைப் பாருங்கள்! எவ்வளவு நுணுக்கமாக அல்லாஹ் மனிதனை வடிவமைத்திருக்கிறான் என்பதற்கு எமது உடலில் 24 மணி நேரமும் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் அமைப்புகள் சாட்சி. அல்லாஹ் மிகச் சிறந்த படைப்பாளன் என்பதற்கு இதனை விட வேறு அத்தாட்சிகள் தேவையில்லை.

''நிச்சமாக நாம் மனிதனை அழகான வடிவில் படைத்திருக்கிறோம்.'' (ஸூரா அத்தீன்: 04)

இந்தவகையில், நோன்பு நோற்கும்போது நமது உடல் பாதிப்படைந்து வாகனங்களைப் போல் நின்று விடாமல் தொடர்ந்தும் சக்தியைப் பெறுவதற்கு அல்லாஹ் உடலில் ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறான். இந்த அமைப்பின் மூலம் நோன்பு உடலைப் பாதிக்காமல் உள்ளத்தை சுத்திகரிக்கும் ஓர் அற்புதமான வல்லமையைக் கொண்டிருப்பது நோன்பிற்கேயுரிய சிறப்பம்சம் ஆகும்.

நோன்பாளியின் உடலினுள் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்து கொள்ள சாதாரண நிலையில் எவ்வாறு உடல் தொழிற்படுகிறது என்பது பற்றி சற்று அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு மனிதன்தான் வாழ்வதற்கான சக்தியை காபோஹைதரேற்று, புரதம், கொழுப்பு என்ற அமைப்பில் அன்றாடம் உண்ணும் உணவில் இருந்து பெற்றுக் கொள்கிறான். சாதாரண உணவில் சக்தியை வழங்கும் இந்த மூன்று அடிப்படையான பதார்த்தங்களும் இருக்கின்றன. எமது உடல் உறுப்புகள் இயங்குவதற்கும் மூளையைப் பயன்படுத்தி சிந்திப்பதற்கும் கை, கால்களை அசைப்பதற்கும் எமக்கு சக்தி அவசியமாகிறது. உடலுக்கு சக்தியை வழங்கும் அடிப்படை அம்சமாக 'குளுக்கோசு' இருக்கிறது. நாம் உண்ணும் உணவு, சமிபாடடைந்து இறுதியாக குளுக்கோசாக மாறுகிறது. இந்தக் குளுக்கோசு இரத்தத்தை அடைந்து சக்தியை வழங்கும். சதாரணமான உணவு உட்கொண்ட பின் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு மிக அதிகமாக இருக்கும். 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்பது குளுக்கோஸ் விடயத்திலும் பொருந்தும். இதனைத் தடுப்பதற்காக அல்லாஹ் உடலில் Inbuilt System to Regulate the Glucose level என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறான்.

இந்த அமைப்பின் மூலம் அளவுக்கதிகமான குளுக்கோசு மூலக்கூறுகள் இருப்பதை சதையி (Pancreas) என்ற உடலுறுப்பு உணர்ந்து 'இன்சுலின்' என்ற ஹோமோனை சுரக்கும். இந்த இன்சுலின், அளவுக்கதிகமாக இருக்கும் குளுக்கோஸை ஒன்றின் மேல் ஒன்றாக இறுக்கி 'கிளைக்கோஜன்' என்ற வடிவில் ஈரலில் பத்திரமாய் படிய வைக்கும்.

மேலும், இந்த இன்சுலின் ஹோமோனின் செயற்பாடு காரணமாக, அளவுக்கதிகமான உணவு கொழுப்பாக தோலின் கீழ்ப்புறத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. நாம் உணவு உட்கொண்டு சில மணி நேரங்களில் சமிபாடு முடிவடைந்ததும் இந்த சேமிப்பு நடவடிக்கை ஆரம்பமாகிறது. நாம் நோன்பு நோற்கும்போது பட்டினி இருப்பதால் உடலில் குளுக்கோசின் அளவு குறைந்து வரும். ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்ததும் இரத்தத்தில் குளுக்கோசு குறைவடைவதைத் தானாகவே உடல் உணரும் (Automatic System).

இவ்வேளையில் சதையி 'குளுகாகோன்' (Glucagon) என்ற மற்றொரு ஹோமோனை சுரக்கும். இந்த ஹோமோன் ஏற்கனவே ஈரலில் இறுக்கி வைத்திருக்கும் குளுக்கோசை ஒவ்வொன்றாய் பிரித்தெடுத்து இரத்தத்திற்கு அனுப்பும். இதன் மூலம் குருதியில் குளுக்கோசின் அளவு தெடர்ந்தும் பேணப்பட்டு உடல் தொடர்ந்தும் சக்தியைப் பெற்றிருக்கும். இவ்வாறு சேமிக்கப்பட்ட உணவின் மூலம் ஒரு மனிதனால் தொடர்ந்தும் ஒரு வாரத்துக்கு மேல் பட்டினி இருந்தும் சக்தியைப் பெற

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். எனவே, நோன்பு நோற்பதால், 12-14 மணித்தியாலங்கள் நாம் உணவு உட்கொள்ளாமல் இருப்பதால் எந்த வகையிலும் உடலில் பாதிப்பு ஏற்படாது. பட்டினியாய் இருக்கும் அந்தப் பன்னிரண்டு மணி நேரம் தொடர்ந்தும் சக்தி வழங்கும் அமைப்பை அல்லாஹ் அற்புதமாய் ஈரலில் வைத்திருக்கிறான்.

இந்த ஈரல் ஒரு பெரும் தொழிற்சாலை. இதில் உடலுக்கு அவசியமான எவ்வளவோ பொருட்கள் உற்பத்தியாகின்றன. கழிவகற்றல், சேமித்தல், சுரத்தல்... இவ்வாறு பலநூறு தொழில்கள் ஈரலுக்குண்டு. மிகச் சிறிய பரப்பில் வயிற்றினுள் இருந்து கொண்டு ஈரல் செய்யும் தொழிலை வெளியில் செய்வதாக இருந்தால் பல மாடிகள் கொண்ட கட்டிடமும் பல ஆயிரம் ஊழியர்களும் சேர்ந்தும் முடியாமல் போகும். இதனை ஒரு பேச்சுக்கு நான் சொல்லவில்லை. இதுதான் யதார்த்தம்! அல்லாஹ்வின் படைப்பின் அற்புதம்!!

Gauchers Disease என்று ஒரு நோய் இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு நொதியம் குறைவடைவதால் ஏற்படுவது இந்த நோய். இந்த நொதியத்தை உற்பத்தி செய்வது ஈரல். இந்த நொதியம் குறைந்த நோயாளிகளுக்கு இந்நொதியத்தை உற்பத்தி செய்து கொடுப்பதற்காக அமெரிக்காவில் Genzyme என்று ஒரு மருத்துவக் கம்பனி இயங்குகிறது. இந்த கம்பனியில் பல மாடிகள் கொண்ட பல கட்டடங்கள், ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்கள்.

இவ்வளவும் ஒரு நொதியத்தை உற்பத்தி செய்வதற்காக! ஆனால், ஈரலோ ஒரு சிறிய இடத்தில் கச்சிதமாய் அமர்ந்து கொண்டு பல நூறு நொதியங்களை சப்தமில்லாமல் சேர்த்து வைக்கிறது. எமது ஈரலின் அற்புதத்தை எவ்வாறு எழுதுவதென்றே தெரியவில்லை!

எமக்கு நோன்பு நோற்க உதவி செய்யும் ஈரலைப் படைத்த அல்லாஹ் நிச்சயமாக பெருமைக்கும் புகழுக்கும் உரியவன், அல்ஹம்துலில்லாஹ்!

எனது பார்வையில் நோன்பு

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
கொழும்பு பல்கலைக்கழகம்

உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் ஆண்டுக்கொரு முறை நோன்பு நோற்பதை யாவரும் அறிவர். சிறுபராயம் முதல் நான் முஸ்லிம் அயலவர்களுடன் ஒன்றுசேர்ந்து வாழும் வாய்ப்பைப் பெற்றதனால் நோன்பின் மகிமையை நன்கு அறிவேன். முஸ்லிம்களின் மிக முக்கியமான சிறப்பு, சமயத்தில் சொல்லப்பட்டவாறான மார்க்கக் கடமைகளைக் கட்டாயமாக கடைபிடிக்க முயற்சிப்பதாகும்.

நோய்வாய்ப்பட்ட ஒரு சிலரைத் தவிர ஏனைய சக முஸ்லிம்களும் நோன்பு நோற்பதில் கண்ணும் கருத்துமாக செயற்படுவதை நான் அவதானித்திருக்கிறேன். தனிப்பட்ட முறையில் நோன்பு நோற்பதைக் கடைபிடித்தாலும்கூட, அவர்களுடைய குடும்பமும் சூழவுள்ள சமூகமும் நோன்பு நோற்றிருக்கும் சிறுவர்கள் விடயத்தில் அவதானிப்பையும் கண்காணிப்பையும் செலுத்துவதைக் காணலாம்.

இவ்வாறான அவதானம் இளம் தலைமுறையினரை மட்டுமன்றி, மார்க்கக் கடமையிலிருந்து விலகிச் செல்வோரை நல்வழிப்படுத்தவும் சமயரீதியாக சமூகமயப்படுத்தவும் உதவுகின்றது என்பது நோன்பின் மற்றொரு சிறப்பம்சம்.

முஸ்லிம்கள் நோன்பு காலத்தில் பேணும் உணவுக் கட்டுப்பாடு மற்றும் நோன்பு கால வாழ்க்கை முறைகள் உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்த உதவுகின்றன என்பது மிகவும் பிரதானமான விடயம்.

நோன்பு காலம் தவிர்ந்த ஏனைய காலங்களிலும் உயர்தரமான வாழ்க்கை நெறிமுறைகளைக் கடைபிடிக்க நோன்பு காலப் பயிற்சிகளும் நடைமுறைகளும் ஒழுக்கங்களும் மகத்தான பங்காற்றுகின்றன.

தொழில்புரிவோர் நோன்பு காலத்தில் குறிப்பிட்ட நேரங்களுக்கு உணவைக் கைவிட்டாலும் தமது தொழில் கடமைகளை கைவிடுவதில்லை. உண்ணா நோன்புடன் தமது ஐவேளைத் தொழுகையைப் பேணியவர்களாக அவர்கள் தமது தொழிற்கடமைகளில் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் ஈடுபடுவது நோன்பின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

பொதுவாக, இஸ்லாமியக் கடமைகள் அனைத்தும் முஸ்லிம்களின் வாழ்க்கையை நெறிப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றன. பிறகு உதவி செய்வது, பண்பாடாக நடந்து கொள்வது, விருந்தோம்பல் செய்வது போன்ற நற்பண்புகள் வளர்வதற்கு இந்த மார்க்க சிந்தனைதான் காரணமாக அமைகின்றது.

இஸ்லாமிய சமயத்தின் செல்வாக்கின் காரணமாக முஸ்லிம்கள் இந்தப் பண்பாடுடையவர்களாக வாழ வேண்டும் என்ற சிந்தனையைப் பெறுகிறார்கள். குறிப்பாக பிறரை மதித்தல், ஆசிரியர்களை கௌரவப்படுத்துதல், அண்மைக் காலங்களில் முஸ்லிம்கள் கல்வியில் செலுத்திவருகின்ற கூடிய அக்கறை முதலானவற்றை நோக்குகின்றபோது அவர்களது நாளாந்த வாழ்க்கை, தொழில் வாழ்க்கை, கல்வி வாழ்க்கை என்பவற்றில் இஸ்லாமிய சிந்தனைகளின் செல்வாக்கு நிறைந்து காணப்படுவதை அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக காலத்தில் தாய், தந்தை, வளர்ந்த பிள்ளைகள் இச்சிந்தனையைப் பெற்றுக் கொள்வதனால் மட்டுமே குடும்பத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு அதிகம்.

இஜ்திமாக்கள் குடும்ப இஜ்திமாக்களாக பரிணாமம் பெற்றுள்ளன

– தேசிய ஒழுங்கமைப்பாளர் சகோதரர் அப்துர் ரஷீத்

அல்ஹஸனாத்: இவ்வருட இஜ்திமாக்களின் கருப்பொருளாக 'வணக்கத்துக்குரிய நாயனை வணங்குவது எவ்வாறு?' என்ற தலைப்பு தெரிவுசெய்யப்பட்டது ஏன்?

அப்துர் ரஷீத்: வணக்கம் தொடர்பாக மக்கள் பிழையான கருதுகோள்களைக் கொண்டுள்ளனர் என்பது எமது பொதுவான அவதானிப்பாகும். முஸ்லிம் சமூகம் வணக்கம் வேறு; வாழ்க்கை வேறு என்ற கருத்திலேயே உள்ளது. வணக்கத்தை வஹியிலிருந்தும் வாழ்க்கையை இன்றைய கல்விப் பின்னணியிலிருந்தும் எமது சமூகம் புரிந்து கொண்டுள்ளது. இதனால் வணக்கம் மறுமையை மையப்படுத்தியும் வாழ்க்கை உலகத்தை மையப்படுத்தியும் அமைந்து விட்டது. எனவே, அல்லாஹ்வுக்கு இபாதத் செய்வதில் பெரும் பகுதி புறக்கணிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

மக்கள் மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதில் ஈடுபாடு காட்டாமை, மார்க்கத்தை நிலைநாட்டுவது இபாதத் என்று கருதாமை, வாழ்க்கையில் எப்போதும் அல்லாஹ்வின் நினைவுடன் தக்வாவின் அடிப்படையில் வாழ வேண்டும் என்ற நோக்கம் இன்மை, அன்றாட நடைமுறை வாழ்வில் இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பேண வேண்டும் என்ற உணர்வு மங்கிப் போயுள்ளமை முதலன அம்சங்கள், மக்கள் இபாதத் பற்றிய பிழையான விளக்கத்தைக் கொண்டிருப்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

இந் நிலையில் வாழ்க்கையின் பெரும் பகுதி இபாதத் (வணக்கம்) என்ற வட்டத்திலிருந்து வெளியேறி விடுகின்றது. இந் நிலைப்பாடு முஸ்லிம்கள் மத்தியில் புரையோடிப் போயுள்ளதால் இபாதத் தொடர்பான ஓர் அறிவூட்டலை, விழிப்பூட்டலைச் செய்வதற்காகவே இவ்வருட இஜ்திமாக்களின் கருப்பொருளாக 'வணக்கத்துக்குரிய நாயனை வணங்குவது எப்படி?' என்ற தலைப்பை தெரிவு செய்தோம்.

அல்ஹஸனாத்: நாடுதழுவிய இவ் இஜ்திமாக்கள் ஊடாக, மக்களிடையே காணப்படும் இபாதத் பற்றிய எண்ணக்கருவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கருதுகிறீர்களா?

அப்துர் ரஷீத்: தேசிய மட்டத்தில் சுமார் 50 ஆயிரம் பேரை இலக்காகக் கொண்டு 35 இஜ்திமாக்களை நடத்த தீர்மானித்திருந்தோம். எனினும், ஆண்களும் பெண்களுமாக சுமார் 56 ஆயிரம் பேர் நேரடியாக இஜ்திமாக்களில் கலந்து கொண்டு வணக்கம் தொடர்பான சிந்தனையைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது, அல்ஹம்துலில்லாஹ். இஜ்திமா உரைகள் அடங்கிய இறுவட்டு (CD) விற்பனை, இன்னும் பல்லாயிரம் பேருக்கு வணக்கம் தொடர்பான கருத்துக்களைக் கொண்டு சென்றிருக்கும், இன்ஷா அல்லாஹ்.

இஜ்திமாவில் கலந்து கொண்டவர்கள் உரைகளை உன்னிப்பாக செவிமடுத்தனர். இஜ்திமா தொடர்பான கருத்துக் கணிப்புகளை நாம் மேற்கொண்டபோதும் பலரும் சாதகமாகவே பதிலளித்தனர். அவர்களுள் பலர் தொடர்ந்தும் இஸ்லாத்தைக் கற்பதற்கு ஆர்வம் தெரிவித்துள்ளனர். ஜமாஅத்தின் முதன்மைப் பயிற்சி நெறியான முஅய்யித் பயிற்சிநெறியில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை பலர் பூர்த்தி செய்து வழங்கியுள்ளனர். அத்துடன் இஜ்திமா உரைகள் அடங்கிய இறுவட்டுக்களை கொள்வனவு செய்வதில் பொதுமக்கள் காட்டிய ஆர்வம், இபாதத் பற்றிய எண்ணக்கருவில், எமது இஜ்திமா கருப்பொருள் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என நம்புகிறோம்.

அல்ஹஸனாத்: இஜ்திமாவுக்கான முன்னேற்பாடுகள், வேலைத்திட்டங்கள் குறித்து?

அப்துர் ரஷீத்: தேசிய மட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதனைவழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஜ்திமாவின் இலக்குகள் பிராந்திய இர்ஷாத் செயலாளர்கள் ஊடாக பிராந்தியங்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது. பிராந்தியங்களின் ஊடாக உப பிராந்தியங்களுக்கு இஜ்திமா இலக்கை அடைவதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. உப பிராந்தியங்கள் தங்களுக்குக் கீழால் உள்ள மன்றங்களை அழைத்து இஜ்திமா தொடர்பான வழிகாட்டலை வழங்கின.

மன்றங்கள் மக்களுக்கு இஜ்திமா பற்றிய அழைப்பை மேற்கொள்வதற்காக பல வழிமுறைகளைக் கையாண்டன. சுவரொட்டி, துண்டுப் பிரசுரம், பெனர், ஜுமுஆ அறிவித்தல்கள், ஒலிபெருக்கி அறிவிப்புகள் போன்ற வழிமுறைகள் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக, நேரடியாக தனிநபர்களைச் சந்திப்பதற்காக உஸ்ரா அமைப்புகளின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இஜ்திமாக்கள் நடைபெற்ற பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் இஜ்திமா பற்றிய செய்தி நேரடியாக சென்றடைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குடும்ப இஜ்திமாக்கள் நடைபெற்ற இடங்களில் குறிப்பாக கிண்ணியா, புத்தளம், மாதம்பை போன்ற இடங்களில் ஆண்களும் பெண்களும் ஒவ்வொரு வீட்டிற்கும் செய்தியை எடுத்துச் சென்றனர்.

அல்ஹஸனாத்: கடந்த வருடத்தைப் போன்றே இவ்வருடமும் பெண்களுக்கான தனியான இஜ்திமாக்கள் மற்றும் ஆண்கள்-பெண்களுக்கான குடும்ப இஜ்திமாக்கள் நடைபெற்றன. அவை பற்றி...?

அப்துர் ரஷீத்: பொதுவாக பெண்களுக்கு மார்க்கத்தை கற்றுக் கொள்வதற்கான ஆர்வமும் வாய்ப்பும் அதிகமாக இருக்கின்றது. ஆதலால், பெண்கள் இவ்வாறான அழைப்புகளுக்கு ஆர்வத்துடன் பதிலளிக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. எனவே, பெண்களுக்கு மார்க்க சிந்தனை கிடைப்பதற்கான ஏற்பாடுகளை ஊர் மட்டங்களில் செய்து கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவேதான் பெண்களுக்குத் தனியாகவும் குடும்பமாகவும் இஜ்திமாவை ஏற்பாடு செய்தோம்.

குடும்ப இஜ்திமாக்களை ஏற்பாடு செய்வதிலுள்ள நன்மை என்னவென்றால், ஆண்கள் மாத்திரம் குறிப்பிட்ட சிந்தனையை எடுத்துச் செல்வதினால் குடும்பத்தில் பாரிய தாக்கம் ஏற்படுவதில்லை. ஏக காலத்தில் தாய், தந்தை, வளர்ந்த பிள்ளைகள் இச்சிந்தனையைப் பெற்றுக் கொள்வதனால் மட்டுமே குடும்பத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு அதிகம். இம்முறை குடும்ப இஜ்திமாக்களில் கலந்து கொள்வதில் பொதுமக்கள் காட்டிய பேரார்வம் இதற்கு சான்று.

அல்ஹஸனாத்: கடந்த காலங்களில் நடைபெற்ற இஜ்திமாக்களுடன் ஒப்பிடுகின்றபோது இம்முறை நடைபெற்ற இஜ்திமா தொடரின் சிறப்பம்சங்கள் குறித்து?

அப்துர் ரஷீத்: கடந்த வருடத்தைப் போன்றே இந்த



வருடத்திலும் நடைபெற்ற இஜ்திமாக்களில் பெருந் தொகையான பெண்கள் கலந்து கொண்டனர். பெண்களுக்கான இஜ்திமாக்கள் பரவலாக நடைபெற்றமையும் இதற்கு முக்கிய காரணியாகும். ஒவ்வோர் உப பிராந்தியத்திலும் ஓர் இஜ்திமாவையே இதற்கு முன்னர் ஏற்பாடு செய்தோம். கடந்த வருடங்களில் இஜ்திமாக்களில் கலந்து கொண்டவர்கள் காட்டிய ஆர்வம் காரணமாகவும் தங்களது பிரதேசங்களிலும் இவ்வாறான இஜ்திமாக்கள் நடைபெற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தமையினாலும் ஒவ்வோர் உப பிராந்தியத்திலும் பல இஜ்திமாக்கள் நடைபெற்றன.

சில பிரதேசங்களில் இஜ்திமாக்களில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்த்தமையால் பள்ளிவாசல்களிலோ பாடசாலைகளிலோ இஜ்திமாக்களை நடத்த முடியாமல் போனது. இதனால் இஜ்திமாக்களை மைதானங்களிலும் புதிய இடங்களிலும் நடத்த வேண்டி ஏற்பட்டது.

இவ்வருட இஜ்திமா தொடரின் மற்றுமொரு சிறப்பம்சம், ஒவ்வொரு வீட்டிற்கும் ஆண்களும் பெண்களும் தனித்தனியாக அழைப்பு விடுத்தமையாகும்.

அல்ஹஸனாத்: இஜ்திமாவின் பின்கட்ட வேலைகள் எவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளன?

அப்துர் ரஷீத்: இஜ்திமாக்களின் ஊடாக பலர் இஸ்லாத்தைக் கற்பதற்கு ஆர்வமூட்டப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாம் பற்றிய தெளிவை வழங்குவதற்காக ஒரு பயிற்சி நெறியை ஜமாஅத் நாடளாவிய ரீதியில் நடத்தி வருகின்றது. அவ்வகையில் இஜ்திமாவின் கருப்பொருளின் ஊடாக இஸ்லாத்தைக் கற்க வேண்டும் என்ற சிந்தனை தூண்டப்பட்டுள்ளது. அவ்வகையில் இஜ்திமாவில் கலந்து கொண்டோருக்கான இக் கற்கைநெறியை தொடர விரும்புகின்றவர்களுக்கு விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் எல்லாப் பிராந்தியங்களிலும் உடனடியாக பயிற்சிநெறிகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன, அல்ஹம்துலில்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தேவையான சாரதி அனுமதிப் பத்திரங்களை உரிய முறையில் பெற்றுக் கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

ORIENT LEARNERS
Driver Training
Reg No: DS. 291

(Motor Car, Dual Pupose Vehicales, M/ Trycycle, M/ Cycles and M/ Coaches)

NAPAWELA- AVISSAWELLA
Office
No: 03, New Shopping Complex
Avissawella, Tel: 0362231175
Hot: 0779385656, 0714757585, 0727674145
Warakapola

We Innovate, You benifit !!

1st Time in Srilanka

BIOCHEM
Laboratories

- Are you willing to get your Laboratory Reports via SMS Alerts & Emails?
- Do you wish to forward your test results straightly to your doctor?
- Are you failed to get all your previous lab reports?
- Are you facing difficulties to preserve your past ECG records?

We have "YES" for your questions
.And many more services beyond your expectation by our much qualified & professional Technical team.

We commence on: 1st of August 2010 onward
@

33/1 YA Complex
New Colombo road,
Mawanella.

Hotline: 0773693633
Web:www.biochemlk.com
E-mail: info@biochemlk.com

ABAYA PALACE
அபாயா பெலஸ்

Abaya Jilbabs, Hijabs, Scalfs, Shouls, Abaya Shoes & Accessories
(Latest Design of all Kind Abayas)

277, 1st floor
Peradeniya Road, Kandy
0773778793, 0712722780

peradeniy // Fashion Bug // Abaya Palace // Singer Mega // Kandy

ஏகிய்யாருலகள்!

த:வாவும் நவீன நுட்பங்களும்

// பிரச்சினையை எவ்வாறு கண்டுபிடிப்பது?
// கண்ட பிரச்சினையை எப்படித் தீர்ப்பது?
- தஃவா- கற்பித்தல்- உளவியல்- சமூகப் பணி ஆகிய துறைகளில் அனுபவமிக்க பேனாவிலிருந்து பிறந்த கருத்துக் குவியல்.
- ஒவ்வோர் இஸ்லாமிய அழைப்பாளனதும் கரங்களில் இருக்க வேண்டிய நூல்

ஆசிரியர்: எம்.எஸ்.எம். அஸ்மியாஸ்
B.A. Master of Social Work, Dip in Psychological Counselling

Radiaance Publication,
145, Veluwana Road, Colombo- 09
Mobile: 0773772273

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்வாயிலாக அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எந்த வகையினர்?

அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ. பிஸ்தாமி (நளீமி)

மனிதர்கள் அனைவரும் ஒரு நோக்கத்துக்காகவே படைக்கப்பட்டுள்ளனர். அவர்களது தேவைகளையும் விருப்பங்களையும் நிவர்த்திக்கும் வகையில் அல்லாஹ்வினால் முழுப் பிரபஞ்சமும் வடிவமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. உலகமும் அது சார் பொருட்களும் மனிதனுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவைத் தாண்டி நுகரப்படும்போது மனிதன் தனது இயல்பை இழந்து விடுகின்றான்; நோக்கத்தை மறந்து விடுகின்றான். இங்குதான் உலகவாழ்வு பற்றிய புரிதல்கள் பிழையாக உணரப்படுகின்றன. இந்த அடித்தளத்தினூடாக மனிதர்கள் மூன்று வகைப்படுத்தப்படுகின்றனர்.

முதலாம் தரத்தினர்

இவர்கள் மறுமை பற்றிய சிந்தனை மிகையாக உள்ளவர்கள். எனினும், உலகை மறக்காமல் யதார்த்தங்களை உணர்ந்து செயல்படுபவர்கள். மறுமைக்கான உறவுப்பாலமாக உலகைப் பார்ப்பவர்கள் தமது இலக்கை கனகச்சிதமாக அடைந்து கொள்வதற்கான அதிசிறந்த ஊடகமாக உலகைப் பார்ப்பவர்கள் ஆராய்பவர்கள். அதன் மூலம் உச்சபயனை பெறுபவர்கள். படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து அதனை அடையும்வரை பயணிப்பவர்கள். இறை உணர்வாலும் ஆன்மிக பரவச நிலையாலும் வாழ்வின் நிமிடங்களுக்கு பெறுமானம் சேர்ப்பவர்கள். வாழ்வும் மரணமும் இறை திருப்திக்கான சோதனைகள் என்பதை அறிந்து நடப்பவர்கள். உலகம் இவர்களின் கைகளில் கிடக்கிறது. மறுமை பற்றிய உணர்வு உள்ளத்தில் நிரம்பி வழிகிறது.

உலகையும் மறுமையையும் சமதளத்தில் வைத்து நோக்கும் இவர்கள் உண்மையிலேயே உயர்ந்தவர்கள்; உன்னதமான மனிதர்கள். இப்படியான ஒரு சிலரால்தான் உலகு இன்றுவரை பாதுகாக்கப்படுகின்றது. அல்லாஹ்வின் சீற்றம் பூமியை கவ்விப்பிடிக்காமல் இருப்பது இவர்களின் பிரார்த்தனைகளுக்கும் வணக்க வழிபாட்டுக்குமுள்ள மகிமையான வலிமையால்தான். இவர்கள்தான் இஸ்லாமிய அறநெறியை அச்சொட்டாக அடியொட்டி நடக்கும் ஜெயசீலர்கள். இறை அருட்கடாட்சங்களைக் கண்கூடாகப் பார்ப்பவர்கள். உலகில் வாழ்ந்த சுவனத்தின் அனந்தரக்காரர்கள். நிலையான சுகம் காண்பவர்கள்.

இரண்டாம் தரத்தினர்

அப்பட்டமாகவே மறுமை பற்றிய உணர்விழந்து உலகின் பின்னால் அலைக்கழிந்து திரிபவர்கள். உலக இன்பங்களில் மெய்மறந்து நடைப்பிணமாக அவஸ்தைப்படுபவர்கள். மரணத்தோடு வாழ்வு துண்டிக்கப்படும் என்ற கனவில் காலங்கடத்தும் அநியாயக்காரர்கள். தன்னிலை மறந்து உலக வாழ்வின் கலங்கிய சகதியில் புதையுண்டு செல்பவர்கள். ஆதியும் அந்தமும் உலக வாழ்வு மட்டுமே என்று நினைப்பவர்கள். பணமும் பொருளும் மனைவி மக்களும் மற்றும் பௌதிக வளங்களும் மட்டுமே வாழ்வை நகர்த்திச் செல்வதற்கான மூலப்பொருட்கள் என்று நினைப்பவர்கள். உலகம் பற்றி அதிதீவிரமாக சிந்திக்கும் இந்த ரகத்தினருக்கு உள்ளம் பற்றி சிந்திக்க அவகாசமே கிடைப்பதில்லை. அந்த அளவு உலகில் காலூன்றிக் கிடப்பவர்கள். ஆன்மிக வறுமை நிலைக்குள்ளால் பாதிக்கப்பட்டுள்ளதைக் கூட புரிந்து கொள்ள முடியாதளவு உலக சோலிகள் நிறைந்தவர்கள். மொத்தத்தில் உலகை மேய்ந்து மறுமையை உதறித் தள்ளி நடப்பவர்கள். மனோ இச்சையின் அடிவருடிகள்.

மூன்றாம் தரத்தினர்

உலகம் ஒரு கையிலும் மறுமை மறுகையிலும் உள்ளவர்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உருவானவர்கள். சேற்றில் நடப்பட்ட கம்பம் போன்றவர்கள், ஸ்திரமற்றவர்கள். எப்போதுமே இழுபறிநிலையில் உள்ளவர்கள். சந்தர்ப்பம் வாய்த்தால் எதற்கும் இசைவாக்கம் அடைபவர்கள். இவர்களைப் பொறுத்தவரை நல்ல காற்று தொடர்ந்தும் வீசினால் நறுமணம் கமழும் மலர்கள் போல கமகமவென காணப்படுவர். பஞ்சமா பாதகங்கள் விரவிக் கிடக்கும் சூழல் வாய்த்தால் துர்நாற்றம் வீசும் கயவர்களாக மாறுவார்கள். சூழல் செல்வாக்கின் ஆதிக்கம் இவர்களில் பாதிப்புச் செலுத்தும். எனவே, இவர்கள் உடனடியாக சூழலை மாற்றிக் கொள்ள வேண்டும்.

யஹ்யா இப்னு முஆத் (ரஹ்) சொல்கிறார்: "மனிதர்கள் மூவகையினர். முதலாமவர் உலகை விட்டும் மறுமையில் சோலியானவர்; அடுத்தவர் மறுமையை விட்டும் உலகில் சோலியானவர் மூன்றாமவர் இரண்டிலும் சோலியானவர். முதல் வகையினர் வெற்றியாளர்கள். இரண்டாமவர் அழிந்து செல்பவர்கள். மூன்றாமவர் பயங்கரமானவர்கள்."

(ஸப்வதுஸ் ஸப்வா)

முதலாம் வகையில் அல்லாஹ் எங்களை சேர்த்தருள்வானாக ஆமீன்!

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம்பை மன்ற அங்கத்தவர் ஜௌபர் ஹாஜியார் மறைந்தார்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மாதம்பைக் கிளையின் ஆரம்ப உறுப்பினர்களுள் ஒருவரான அல்ஹாஜ் ஜௌபர் அவர்கள் கடந்த 02.06.2010 ஆம் திகதி காலமானார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

ஓர் இஸ்லாமிய சமூக அமைப்பை நிறுவி இஸ்லாமிய வாழ்க்கை நெறிக்கு செல்வாக்கைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இயங்கிய கல்வி வட்ட (Study Circle) உறுப்பினர்களுடன் இணைந்து இஸ்லாமிய வளர்ச்சிக்கு பங்காற்றிய அவருடைய அர்ப்பணம் மிக்க பணி இலகுவில் மறந்துவிட இயலாது.

மாதம்பை நகரில் அரசோச்சிய பித்அத்துகளின் அழிவுக்கும் மூட நம்பிக்கைகளின் மறைவுக்கும் தூய இறைநம்பிக்கை, தூய இபாதத்கள், நற்குணப் பண்புகள், தூய இஸ்லாமியத் தலைமைத்துவம் என்பவற்றின் வாழ்வுக்கும் பக்கபலமாக இருந்தவர்களுள் அவரும் ஒருவர்.

சிந்தனைத் திருப்பம் என்பது மிகக் கடினமானது. உளத்திருப்பம் இலகுவானது. மாதம்பை மக்களின் இஸ்லாமிய நெறிமுறைகளை நோக்கிய உளத் திருப்பத்திற்கு அவரும் முயற்சி செய்தார். இது அவரால் செய்ய முடிந்த பங்களிப்பு. அவர் எப்போதும் தனது மார்க்கத்துக்கும் இயக்கத்துக்கும் இயக்க உறுப்பினருக்கும் விசுவாசமாக நடந்து கொண்டார். நீண்ட கால இயக்க வரலாற்றில் இயக்கத்துக்குள் தளம்பல்கள் ஏற்படும்போதெல்லாம் அவர் சிந்தனை பிசகாது, இலக்குத் தவறாது, பாதை சறுக்காது கானல்நீர் போல் காட்சி தரும் எதிரிகளின் ஆசைவார்த்தைகளுக்கு மயங்காது தொண்டாற்றினார்.

மாதம்பை மக்களின் இஸ்லாமிய அறிவு வளர்ச்சிக்கு அவர் ஒத்துழைப்பு வழங்கியதுபோல மாதம்பையின் கல்வி வளர்ச்சிக்கு அவர் செய்த பங்களிப்பு மகத்தானது. மாதம்பை பாடசாலையின் கல்வி, பண்பாட்டு எழுச்சிக்காக ஒரு சிறந்த அதிபரைக் கொணர்வதற்கு அவர் இரவு பகலாக ஓடிய ஓட்டம் சொல்லும் தரமன்று. பாடசாலை வளர்ச்சிக்காக அவர் அமைச்சர்கள் முன்னாலும் அதிகாரிகள் முன்னாலும் உறுதியாக உரையாடிய விதம் அலாதியானது.

தாராள உள்ளம் படைத்தவர். அவர் யாருடனும் கோபித்துக் கொண்டது கிடையாதாம். சத்தியத்தை வாழவைப்பதற்காக எதையும் விட்டுக் கொடுத்தார். வீட்டில் பிள்ளைகள், குடும்பத்தில் அங்கத்தவர்கள், ஊரில் சகோதரர்கள், கடையில் வேலையாட்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் என அனைவருடனும் மனம் நோகாது உரையாடும் இயல்பு அவரிடம் காணப்பட்டது. இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய உம்மத்துக்கும் சோதனையென்றால் அவர் படும் கவலைக்கு அளவில்லை.

1943ஆம் ஆண்டு பிறந்து தனது 67 ஆவது வயதில் இறுதிவரை வாடாத மரமாக இருந்து சிலாபம் வைத்தியசாலையில் திடீரென தனது இறுதி மூச்சை இழந்த அல்ஹாஜ் ஜௌபர் அவர்களின் நல்லமல்களை அங்கீகரித்து, தவறுகளை மன்னித்து சுவனப் பாக்கியத்தை எல்லாம் வல்ல அல்லாஹ் வழங்குவானாக!

யா அல்லாஹ் இவ்வுலகைப் பிரிந்து உன்னிடம் தஞ்சமடைந்துள்ள சகல முஸ்லிம்களதும் பாவங்களை மன்னித்து அவர்களுக்கெல்லாம் சுவன பாக்கியத்தை வழங்குவாயாக!

அஷ்ஷெய்க் ரீ.எம். நிலாம் (இஸ்லாஹி)

புனித ரமழானில் பயனுள்ள வாசிப்பு

150/-



250/-

100/-

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தில் இஸ்லாம் கற்க www.islahme.com

(தமிழ் மொழி முறைசார் இஸ்லாமிய பாடநெறி)

இஸ்லாத்தைக் கற்றுலும் கற்பித்தலும் அவ்வறிவை உலகில் பரவச் செய்தலும் முக்கியமான பொறுப்பாகும். இன்று அற்கான வழிவகைகள், வாசல்கள் திறந்து விடப்பட்டுள்ளன. அறிவு தேடலும் ஆன்மிக தாகமும் இன்று பரவலாக மனிதர்களின் தேவையாக இருக்கிறது. இது தகவல் புரட்சியுடன் கூடிய அறிவு யுகம்.

பாரம்பரியமாக வகுப்பறைக் கல்வியுடன் சுருங்கும் நிலையில் இருந்து வெளியில் வந்து, சர்வதேச மட்ட வளங்களையும் பயன்படுத்திக் கற்கும் வாய்ப்புகள் உருவாகி விட்டன. இன்று மனிதனின் கற்றல் முயற்சிகளுக்கு பல ஏற்பாடுகள் தொழில்சார் கல்விக்கு அதிக இடத்தை வழங்கி உள்ளன. ஆளுருவாக்கத்துடன் கூடிய சமூக மேம்பாட்டுக் கல்விக்கான ஏற்பாடுகள் இரண்டாம் பட்சமாகவே உள்ளன.

இஸ்லாத்தைப் படிப்பதில் முறைசார் ஒழுங்குகளில் காட்டப்படும் அக்கறையும் சற்றுக் குறைவாகவே உள்ளது. இணையதளத்தில் ஆங்கிலத்தில் அதற்கான ஏற்பாடுகள் தாராளமாக உள்ளன. எனினும், தமிழ் பேசும் மக்களைக் கருத்திற் கொண்டு தமிழ் மொழி மூலம் முறைசார் ஒழுங்கில் இஸ்லாத்தைக் கற்கும் ஏற்பாடுகள் இல்லையெனலாம்.

இத்தேவையுணர்ந்து தமிழ் மொழியில் இஸ்லாத்தை முறையாகக் கற்க ஓர் இணையதளம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உலகில் பரவலாக வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு இஸ்லாத்தின் தூதை முறையாகக் கற்க ஓர் அரிய வாய்ப்பாக இது கருதப்படுகிறது. சிறந்த வளவாளர்கள் இதற்கான வழிகாட்டல்களைச் செய்கிறார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் அருளால் www.islahme.com புனித ரமழான் முதல் நாளுடன் ஆரம்பிக்கப்படுகிறது. ரமழான் முதல் நாள் (10.08.2010) முதல் அது தன் முதலாவது பாடநெறியை 'அல் குர்ஆனை அணுகும் முறை' எனும் ஒரு பாடப் பயிற்சித் தொடருடன் ஆரம்பிக்கிறது. பிரபல மார்க்க அறிஞரும் இலங்கை ஜாமிஆ நளீமிய்யாவின் பிரதிப் பணிப்பாளரும் பன்னூலாசிரியரும் சிறந்த பேச்சாளரும் இக்குழுவின் ஆலோசகருமான அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி) இத்தொடரின் வளவாளர் ஆவார்.

இவ் இணையதளத்துக்கு விஜயம் செய்து ஜூலை 20ஆம் திகதி முதல் நீங்கள்- உங்கள் பதிவுகளைச் செய்து கொள்ளலாம். இங்கு:

1. வீடியோ விரிவுரைகள் (Vedio Lectures)
2. பல்தேர்வு வினாக்கள்
3. மாணவர் கருத்துப் பரிமாறல் அறை (Students Chat Room)
4. தலைப்பு தொடர்பான உசாத்துணை நூல்கள் முதலானவை காணக் கிடைக்கின்றன.

இப்பயிற்சி நெறியைப் பூரணமாக முடித்து அதன் தேர்வில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

இந்த ரமழான் பயிற்சிநெறியைத் தொடர்ந்து மேலும் பல குறுங் கால நீண்ட கால பாடநெறிகள் பிரபலமான, தகுதி வாய்ந்த அறிஞர்கள், துறைசார் நிபுணர்களைக் கொண்டு நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அல்லாஹ்த் தஆலாவின் உதவியுடன் முஸ்லிம் சமூகத்திற்கு இஸ்லாத்தின் தூதை இணையதளம் மூலம் எத்திவைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் இக்கன்னி முயற்சி வெற்றிபெற துஆச் செய்யுமாறு வேண்டுகிறோம். உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள், தெரிந்தவர்கள் எல்லோருக்கும் இதன் செய்தியை எத்திவையுங்கள். உங்கள் கருத்துக்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

Visit: www.islahme.com

தகவல்:
ஊடகப் பிரிவு
தாருல் ஈமான்
பஹ்ரைன்

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சோர்வு, மன உளைச்சலுக்கான சிகிச்சை

அஷ்ஷெய்க் யூஸுப் அல்கர்ழாவி
தமிழில்: முஹம்மத் நப்லி

கடந்த இதழ் தொடர்...

2. வாழ்க்கைப் போராட்டத்தில் முஸ்லிமின் கட்டுச்சாதனம் தொழுகை

ஒரு முஸ்லிம் தனக்கு ஏற்படும் கடுமையான கஷ்டங்கள், மன உளைச்சல்களின் போது மீள வேண்டிய ஒரே இடம் தொழுகையாகும். தொழுகையின்போது மனிதன் தனது இரட்சகனின் முன்னால் பணிவுடனும் பயபக்தியுடனும் நிற்கிறான்; தொழுகை ஒரு முஸ்லிமின் திடவுறுதியையும் ஆன்மிக பலத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது. அவை துயரங்களைத் தாங்கிக் கொள்ள ஏதுவாய் அமைகின்றன. எனவேதான் அல்லாஹ் முஃமின்களுக்கு வழிகாட்டும்போது "விசுவாசம் கொண்டோரே பொறுமை மற்றும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்" (ஸூரதுல் பகரா: 153) எனக் கூறுகிறான்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமக்கு ஏதேனும் துன்ப, துயரங்கள் ஏற்படும் சமயத்தில் தொழுகையின் பக்கம் விரைபவர்களாக இருந்தார்கள்.

குறிப்பாக ஒரு மனிதன் நல்ல முறையில் வுழூச் செய்து தொழுகையின் ருகூஉ, ஸுஜூதுகளை உரிய முறையில் நிறைவேற்றிய பின் இறையச்சத்துடனும் இறைவன் தன்னுடன் இருக்கின்றான் என்ற உணர்வுடனும் செய்யும் பிரார்த்தனைகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான். அதிலும் குறிப்பாக إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ (உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம். எனவே, எமக்கு நேரான வழியைக் காட்டித் தருவாயாக) எனும் பிரார்த்தனையின் மூலம் அகிலத்தாரின் இரட்சகனிடம் உதவி கோரும்போது, அவன் தன் அடியானின் பிரார்த்தனைக்கு பதிலளிக்கின்றான்.

"மேலும், அவன் கஷ்டப்படுகின்றவர்களின் பிரார்த்தனைகளுக்கு பதிலளிக்கிறான்; கவலைக்குள்ளானவர்களின் கவலைகளை நீக்குகிறான்."

எனவே ஒருவன் ஸுஜூதிலிருக்கும்போது அதிகமாக பிரார்த்திக்க வேண்டும். அது அவன் விரும்பியவற்றைக் கேட்பதற்குப் பொருத்தமான நேரமாகும்.

எனவேதான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "ஓர் அடியான் தனது இரட்சகனுக்கு மிக நெருக்கமாக உள்ள நேரம் ஸுஜூதிலிருக்கும் நேரமாகும்; எனவே, அதில் அதிகம் பிரார்த்தனை செய்யுங்கள்" (முஸ்லிம்) எனக் கூறினார்கள்.

3. பலவீனர்களுக்கு உதவி செய்தல்

ஒரு முஸ்லிம் பிறருக்கு செய்கின்ற உதவி, ஒத்தாசைகள் அவனுக்கு ஏற்படும் துன்ப துயரங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு துணையாக அமையும். அதிலும் குறிப்பாக, ஏழைகள் அநாதைகள், விதவைகள், அங்கவீனர்கள் போன்ற பலவீனப்பட்டவர்களுக்கு உதவி செய்கின்றபோது அல்லாஹ் அம்மனிதனின் துன்ப துயரங்களைப் போக்கி விடுகின்றான்.

எனவேதான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "ஒரு மனிதனை சந்தோஷப்படுத்துதல், அவனது கஷ்டத்தைப் போக்குதல், அவனது கடன் சுமையை நீக்கிவிடல், அவனது தேவையொன்றை நிறைவேற்றிக் கொடுத்தல் என்பன அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல்களாகும். ஒரு முஸ்லிம் சகோதரனது தேவையை நிறைவேற்றுவதற்காக பயணிப்பது ஒரு மாத காலம் பள்ளிவாசலில் இஃதிகாப் இருப்பதை விட எனக்கு மிகவும் விருப்பமானதாகும்" எனக் கூறினார்கள்.

பிறருக்கு உதவி செய்வதனூடாக மனிதன் தனிமை எனும் சிறையிலிருந்து விடுதலை பெறுகின்றான். குறித்த மனிதனுக்கு தன்னால் சாதிக்க முடியும் என்ற தன்நம்பிக்கை பிறக்கும். தனது கவலையை மறந்து பிறரின் கவலைகளை நீக்கும் ஆர்வம் ஏற்படும்

பிறருக்கு உதவி செய்பவன் மனிதர்களின் அன்பைப் பெறுகிறான். அவர்கள் அவனுக்கு தமது உள்ளத்தால் பிரார்த்திப்பர். இத்தைகைய தூய்மையான பிரார்த்தனையை அல்லாஹ் புறக்கணித்து விடுவதில்லை.

4. மன அழுத்தம், சோர்வு, கவலைகளைப் போக்குவதற்காக இறைதூதர் அவர்கள் கற்றுத் தந்துள்ள ஓதல்கள், பிரார்த்தனைகள்

கவலை, சோர்வு, மன அழுத்தம், மன உளைச்சல் போன்ற உள நோய்களுக்கு பரிகாரமாக நபியவர்கள் பல ஓதல்கள், பிரார்த்தனைகளைக் கற்றுத் தந்துள்ளார்கள். இமாம் இப்னுல் கையிம் அவர்கள் தனது 'ஸாதுல் மஆத்' எனும் நூலில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உளரீதியான நோய்களுக்களித்த சிகிச்சை தொடர்பாக பேசுகிறார்கள். இந்நூலில் தனியானதொரு அலகில் துன்ப, துயரங்களில் சிக்கியுள்ளோர் மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகள் தொடர்பாக விளக்குகிறார். இச் சிகிச்சைகள் யாவும் பிரார்த்தனைகளாக, ஓதல்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

சில பிரார்த்தனைகள் வருமாறு:

1. لاَ إِلَـهَ إِلاَّ اللهُ الْعَظِيْمُ الْحَلِيْمُ، لاإِلَـهَ إِلاَّ اللهُ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ، لاَ إِلَـهَ إِلاَّ اللهُ رَبُّ السَّمَوَاتِ وَرَبُّ الأَرْضِ وَرَبُّ الْعَرْشِ الْكَرِيْمِ

"வணக்கத்துக்குரிவன் மகத்தான கனிவான அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. வணக்கத்துக்குரியவன் மேன்மை மிக்க அர்ஷின் அதிபதியான அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. வணக்கத்துக்குரிவன் வானங்கள், பூமி மகத்துவமிக்க அர்ஷின் அதிபதியான அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை."

(அல்புகாரி, முஸ்லிம்)

2. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு ஏதும் கஷ்டங்கள் ஏற்பட்டால்

يَا حَيُّ يَا قَيُّومُ بِرَحْمَتِكَ اسْتَغِيْثُ

"மரணிக்காதவனே, நிலைத்திருப்பவனே உன்னுடைய அருளைக் கொண்டே உதவி தேடுகிறேன்" என்று பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள். (அத்திர்மிதி)

3. அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களள் அறிவிக்கின்றார்கள். துன்பத்திற்குட்பட்டோர்

اَللهُمَّ رَحْمَتَكَ أَرْجُوْ، فلا تَكِلْنِيْ إِلى نَفْسِيْ طرْفَةَ عَيْنٍ، وَأَصْلِحْ لِيْ شَأْنِيْ كُلَّهُ، لاَ إِلَـهَ إِلاَّ أَنْتَ

"யா அல்லாஹ்! நான் உனது அருளையே எதிர்பார்த்திருக்கிறேன். ஒரு நொடிப் பொழுதேனும் என்னை உன்னுடைய பராமரிப்பிலிருந்து தூரமாக்கி விடாதே! எனது அனைத்துக் காரியங்களையும் சீர்படுத்தித் தருவாயாக. உன்னத் தவிர வேறு இலாஹ் இல்லை" என பிரார்த்திக் கட்டும் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (அபூ தாவூத்)

4. இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள், "ஓர் அடியானுக்கு கவலைகள் ஏற்படும்போது,

أَللَّهُمَّ إِنِّيْ عَبْدُكَ، ابْنُ عَبْدِكَ، ابْنُ أَمَتِكَ، نَاصِيَتِيْ بِيَدِكَ، مَاضٍ فِيَّ حُكْمُكَ، عَدْلٌ فِيَّ قَضَاؤُكَ، أَسْأَلُكَ بِكُلِّ اسْمٍ هُوَ لَكَ سَمَّيْتَ بِهِ نَفْسَكَ، أَوْ أَنْزَلْتَهُ فِيْ كِتَابِكَ أَوْ عَلَّمْتَهُ أَحَدًا مِنْ خَلْقِكَ، أَوِاسْتَأْثَرْتَ بِهِ فِيْ عِلْمِ الْغَيْبِ عِنْدَكَ، أَنْ تَجْعَلَ الْقُرْآنَ رَبِيْعَ قَلْبِيْ، وَنُوْرَ صَدْرِيْ وَجَلاَءَ حُزْنِيْ وَذَهَابَ هَمِّيْ

"இறைவா! நான் உனது அடிமை; உனது அடிமை மற்றும் உனது அடிமைப் பெண்ணின் மகன். எனது சகல விடயங்களுக்கும் நீயே சொந்தக்காரன். உன்னுடைய தீர்ப்பே என்னில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. நீயே உனக்கு சூட்டிக் கொண்ட அல்லது நீ அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ள அல்லது நீ உனது தூய அடியார்களில் எவரேனும் ஒருவருக்கு (நபிக்கு) கற்றுக்கொடுத்த, அல்லது உனது மறைவான அறிவில் உள்ள அனைத்துப் பெயர்களாலும் உன்னை நான் பிரார்த்திக்கின்றேன். அல்குர்ஆனை எனது உள்ளத்திற்கான வசந்தமாகவும் எனது கவலைகளை அகற்றக் கூடியதாகவும் ஆக்கிவிடு!" எனப் பிரார்த்தித்தால் அவனது கவலைகளைப் போக்கி மகிழ்ச்சியைக் கொடுப்பான். (அஹ்மத்)

5. அஸ்மா பின்த் உமைஸ் (ரழியல்லாஹு அன்ஹா) அறிவிக்கிறார்கள், இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கஷ்டத்தின் போது ஓத வேண்டிய சில வார்த்தைகளை கற்றுத் தரட்டுமா? எனக் கேட்டார்கள், எனது பதிலை எதிர்பார்க்காமலேயே,

اَللَّهُمَّ رَبِّيْ لاَ أُشْرِكُ بِهِ شَيْئًا

"அல்லாஹ்வே எனது இரட்சகன்; அவனுக்கு எந்த ஒன்றையும் இணையாக்க மாட்டேன்" என்று ஓதுமாறு கூறினார்கள். (அபூ தாவூத், இப்னு மாஜா)

இன்னோர் அறிவிப்பின்படி, 7 தடவைகள் ஓத வேண்டுமென வந்துள்ளது.

6. ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்; "யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மீனின் வயிற்றிலிருந்தபோது தன் இறைவனிடம் பிரார்த்தனை புரிந்த வார்த்தைகள் மூலம் எவரேனும் அல்லாஹ்வை அழைத்தால் நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு பதிலளிப்பான்." (அத்திர்மிதி) அவ்வார்த்தைகள் வருமாறு;

لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ سُبْحَانَكَ إِنِّيْ كُنْتُ مِنَ الظَّالِمِيْنَ

"உன்னைத் தவிர வேறு இலாஹ் இல்லை. நீ தூய்மையானவன் நிச்சயமாக நான் அநியாயக்காரர்களுள் ஒருவனாகவுள்ளேன்."

மற்றுமோர் அறிவிப்பில் "நான் சில வார்த்தைகளை அறிந்துள்ளேன். அதனை துன்பப்படும் ஓர் அடியான் ஓதினால் அவனுடைய துன்ப, துயரங்களை அல்லாஹ் நீக்குவான். அவை எனது சகோதரன் யூனுஸ் மீனின் வயிற்றிலிருந்தபோது சொன்ன வார்த்தைகளாகும்" என ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியாதாக இடம்பெற்றுள்ளது.

அபூ ஸஈத் அல்குத்ரி (ரழியல்லாஹு அன்ஹு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அறிவிக்கிறார்கள். "இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒருமுறை பள்ளிவாசலினுள் நுழைந்தபோது அபூ உமாமா என்ற அன்ஸாரித் தோழரை அங்கு சந்தித்தார்கள். அப்போது அவரைப் பார்த்த இறைதூதர் அவர்கள், "அபூ உமாமாவே! என்ன தொழுகை நேரமல்லாத ஒரு நேரத்தில் பள்ளிவாசலில் இருக்கிறீர்?" எனக் கேட்டார்கள். அதற்கு அத்தோழர் "எனக்கு அதிகமான கவலைகளும் கடன் சுமையும் ஏற்பட்டுள்ளன" என்றார்கள். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "நான் உமக்கு ஒரு பிரார்த்தனையை கற்றுத் தரட்டுமா? அதை ஓதிவந்தால் அல்லாஹ் உனது கவலைகளைப் போக்குவான்; கடன் பளுவையும் நீக்குவான்" எனக் கேட்டார்கள். அதற்கு அந்த நபித்தோழர் "கற்றுத் தாருங்கள் யா ரஸூலல்லாஹ்" என பதிலளித்தார். அப்போது நபியவர்கள், "காலையிலும் மாலையிலும்

اَللّٰهُمَّ إِنِّي أَعُوْذُبِكَ مِنَ الهَمِّ وَالحُزْنِ وَأَعُوْذُبِكَ
مِنَ العَجْزِ وَالْكَسَلِ وَأَعُوْذُبِكَ مِنَ الْجُبْنِ وَالبُخْلِ
وَأَعُوْذُبِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ وَقَهْرِ الرِّجَالِ.

என்று பிரார்த்தனை புரியுங்கள்" என பதிலளித்தார்கள்.

"இறைவா! கவலைகள் சோகங்களிலிருந்தும் இயலாமை, சோம்பலிலிருந்தும் கோழைத்தனம் கஞ்சத்தனத்திலிருந்தும் கடன் சுமை, மக்களின் அடக்குமுறைகளிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்."

(அல்புகாரி, அத்திர்மிதி)

பின்னொரு நாளில் அந்த நபித்தோழர் கூறுகின்றனர். "நான் அந்த துஆவை ஓதி வந்தேன். எனது கவலைகள் யாவற்றையும் அல்லாஹ் போக்கினான். எனது கடனை அவன் நிறைவேற்றினான்."

துஆ ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள்

நபியவர்கள் கற்றுத் தந்துள்ள இந்த சிகிச்சை முறைகள் அல்லது பிரார்த்தனைகள் உரிய பயனளிக்க வேண்டுமாயின், அதன் விளைவுகள் சரிவர கிடைக்க வேண்டுமாயின் பின்வரும் நிபந்தனைகள் பேணப்பட வேண்டும்.

1. அல்லாஹ்விடம் மட்டுமே தூய்மையான முறையில் பிரார்த்திக்க வேண்டும் பிரார்த்தனையின்போது அல்லாஹ்வுடன் ஒரு நபியையோ, இறை நேசரையோ, வேறெவரையுமோ கூட்டுச் சேர்க்கக் கூடாது.

அல்லாஹ்வுக்கு இணைவைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு கவலைகளும் கஷ்டங்களும் சோதனைகளும் ஏற்படுகின்றபோது அவர்கள் இதற்கு முன்னர் எவற்றையெல்லாம் வணங்கிக் கொண்டிருந்தார்களோ அவை அனைத்திலும் நம்பிக்கையிழந்து முழுமையாக இறைவனின் பக்கமே திரும்பி விடுவார்கள். அல்லாஹ் அவர்களுள் ஏற்படுத்தியுள்ள (அல்லாஹ் ஒருவனையே ஏற்றிடும்) இயல்பு இயற்கைத் தன்மை அப்போது வெளிப்பட்டுவிடும். அந்த இயல்பின்மீது படிந்துள்ள கறைகள் யாவும் அகன்று விடும். அப்போது அவர்கள் தூய்மையான முறையில் அல்லாஹ்விடம் மட்டுமே பிரார்த்தனை செய்வார்கள். எனவே ஏக இறைவனான அல்லாஹ்வும் அவர்களது பிரார்த்தனைகளுக்கு பதிலளிப்பான்.

"கரை மற்றும் கடலில் அவனே உங்களைப் பயணம் செய்ய வைக்கிறான். முடிவாக நீங்கள் கப்பல்களில் இருக்கும்போது நல்ல காற்றுடன் அவர்களை அவை கொண்டு சென்றன. அதன் மூலம் அவர்கள் அகம் மகிழும் சந்தர்ப்பத்தில் புயல் காற்று அதனிடம் வந்து அனைத்துப் பக்கங்களிலும் அவை சூழ்ந்து கொண்டால் நிச்சயமாக அதிலிருந்து மீள முடியாது என்று அல்லாஹ்வுக்கு மட்டுமே மார்க்கத்தை (வணக்கத்தை) கலப்பற்றதாக்கி உளத்தூய்மையுடன் "எங்கள் இரட்சகனே! இதிலிருந்து நீ எம்மை காப்பற்றிவிட்டால், நிச்சயமாக நாங்கள் (உனக்கு) நன்றி செலுத்துபவர்களில் உள்ளவர்களாக இருப்போம் என்று பிரார்த்திக்கின்றனர். அவன் அவர்களை காப்பாற்றி கரை சேர்த்தபோது அநியாயமாக பூமியில் அழிச்சாட்டியம் செய்கின்றனர்; வரம்பு மீறுகின்றனர்; மனிதர்களே உங்களது வரம்ப மீறும் செயல் உங்களுக்கே கேடாக அமையும். அதனால் இவ்வுலக வாழ்க்கையில் சிறிது சுகம் அனுபவிக்கலாம் பின்னர் எம்மிடமே உங்கள் மீட்சி இருக்கிறது. (அப்போது) நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை நாம் உங்களுக்கு அறிவித்து விடுவோம்." (யூனுஸ்: 22, 23)

2. அல்லாஹ் தனது பிரார்த்தனைக்கு செவிசாய்ப்பான் என்ற நம்பிக்கையோடு பிரார்த்தித்தால் தனது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வானா, ஏற்றுக் கொள்ள மட்டானா? என்ற சந்தேகத்துடன் ஒருவன் பிரார்த்திக்கக் கூடாது. ஏனெனில் அந்த சந்தேகம், தயக்கம் என்பன அவனது பிரார்த்தனையின் தாக்கத்தை போக்கிவிடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "அல்லாஹ் செவிசாய்ப்பாவன் என்ற நம்பிக்கையோடு அவனை அழையுங்கள். அழைப்புகளுக்கு செவிசாய்ப்பது என்பது அல்லாஹ் தனக்குள் வகுத்துக் கொண்ட நியதியாகும்."

"நபியே எனது அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு அருகிலேயே இருக்கிறேன், என்னை எவரேனும் அழைத்தால் நான் அவ்வழைப்பிற்கு பதில் சொல்கிறேன் என்று கூறுங்கள். அவர்கள் எனது அழைப்பை ஏற்று என் மீது நம்பிக்கை கொள்ளட்டும். அதனால் அவர்கள் நேர்வழி அடைந்திடலாம்." (அல் பகரா:186)

(78ஆம் பக்கம் பார்க்க)

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
www.noolaham.org

உலகெங்கும் பரவலாக அறியப்பட்ட இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் அரபியில் எழுதிய அல்பிதாயா வந்நிஹாயா நூலின் ஒரு பகுதியான கஸஸுல் அன்பியாவின் தமிழாக்கம் இதோ வெளிவந்துவிட்டது.

விலை ரூ.175/-

இப்னு கஸீரின்
(அல்பிதாயா வந்நிஹாயா)

நபிமார்கள் வரலாறு

முதல் பாகம்

இந்நூலில் இடம்பெற்றுள்ள அறுபெரும் நபிமார்கள்:
ஆதம், இத்ரீஸ், நூஹ், ஹூத், ஸாலிஹ் மற்றும் இப்ராஹீம் (அலைஹிமுஸ்ஸலாம்)

இந்நூலின் சிறப்பம்சங்கள்

★ கூடுதல் குறைவில்லா நேரடித் தமிழாக்கம்
★ அரபிக் கலவையில்லா செந்தமிழ்
★ சீரான மொழிநடை மற்றும் தேவையான இடங்களில் அடிக்குறிப்புகள்
★ நபிமார்கள் பற்றி இதுவரை தமிழில் வெளிவராத உண்மைச் செய்திகள்
★ இதுவரை தமிழில் வெளிவராத ஓர் அற்புதப் படைப்பு

வெளியீடு
ஆயிஷா பதிப்பகம்
பழைய எண் 78, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5
✆ +91 - 44 - 4356 8745 Email : ayshapublications@gmail.com

தமிழகத்திற்குள் தபாலில் பெற ரூ.25/- சேர்த்து அனுப்பவும்.
M.O. D.D. அனுப்புவோர் Aysha Publication என்ற பெயரில் மேற்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழான் பொற்சுவடுகளிலிருந்து சில...

ரமழான் பிறை	ஹிஜ்ரி	நிகழ்வு
05	05	அகழி யுத்தத்திற்காக தயாரிப்பு வேலைகளை முஸ்லிம்கள் இத்தினத்தில் மேற்கொண்டார்கள்.
07	89	இளம் தளபதி முஹம்மத் பின் காஸிம் தலைமையிலான படை இந்தியாவின் சிந்து பிரதேசத்தை வெற்றி கொண்டது.
09	10	யமனில் வாழ்ந்த ஹம்தான் கோத்திரத்தைச் சேர்ந்த அனைவரும் இந்நாளில் இஸ்லாத்தை ஏற்றனர்.
09	91	தாரிக் பின் ஸியாத் தலைமையிலான முஸ்லிம்கள் ஸ்பெய்னிய ஆட்சியாளரான ரொட்ரிக்கை வெற்றி கொண்டனர்.
10	1393	இஸ்லாத்தை அழிக்கும் நோக்கில் புறப்பட்ட சிலுவை வீரர்களை முஸ்லிம்கள் வெற்றி கொண்டனர்.
12	32	அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வபாத்தான தினம்.
13	09	யமன், தாயிப், ஹுமைர் ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்த தூதுக்குழுக்கள் நபியவர்களிடம் இஸ்லாத்தை ஏற்றன.
17	02	பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு பெருவெற்றி கிட்டியது.
17	40	கூபாவில் வைத்து அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கொலை செய்யப்பட்டரார்கள்.
17	58	அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்த தினம்.
20	08	மக்கா வெற்றி கொள்ளப்பட்டது.
21	584	சிலுவை வீரர்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்த ஸிரியா சுதந்திரமடைந்தது.
22	648	ஸலாஹுத்தின் அய்யூபி தலைமையிலான முஸ்லிம்கள் சிலுவை வீரர்களைத் தோற்கடித்து பைதுல் மக்திஸை மீட்டெடுத்தனர்.
23	362	முஸ்லிம்கள் பைஸாந்திய பேரரசை வெற்றி கொண்டனர்.
24	658	ஐன் ஜாலூத் யுத்தத்தில் மொங்கோலியர்களை முஸ்லிம்கள் தோற்கடித்தனர்.
25	08	கஃபாவில் வைக்கப்பட்டிருந்த சிலைகள் உடைத்தெறியப்பட்டன.
28	92	ஸ்பெய்னில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவுபடுத்தப்பட்டது.
29	02	முஸ்லிம்கள் மீது ஸகாத் விதியாக்கப்பட்ட நாள்.
30	94	தளபதி மூஸா பின் நுஸைர் மெட்ரிட் நகரை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார்.

தொகுப்பு: எம்.ஏ. பாத்திமா அஸீமா, கல்-எளிய அரபுக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ரஹ்மானின் அடியார்களின் பண்புகள்

- பூமியில் அடக்கமாகவும், பணிவாகவும் நடப்பார்கள்.
- மூடர்கள் அவர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால் ஸலாமுன் (சாந்தி உண்டாவதாக) என்று கூறி அவர்களை விட்டும் விலகி விடுவார்கள்.
- அவர்கள் தங்கள் இறைவனை நின்றவர்களாகவும் சிரம் பணிந்தவர்களாகவும் இரவெல்லாம் வணங்கிக் கொண்டிருப்பார்கள்.
- அவர்கள் நரகத்தின் கொடூரத்தையும் வேதனையையும் அறிந்து அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள பிரார்த்தனை செய்து கொண்டே இருப்பார்கள்.
- அவர்கள் தானம் கொடுத்தால் அளவு கடந்து விடாமலும் கஞ்சத்தனம் செய்யாமலும் மத்திய தரத்தில் கொடுப்பார்கள்.
- அவர்கள் அல்லாஹ்வைத் தவிர வேறொருவரையும் வணக்கத்திற்குரியவனாக அழைக்க மாட்டார்கள்.
- அவர்கள் கொலை, விபசாரம், பொய்சாட்சி கூறுதல் போன்ற கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட மாட்டார்கள்.
- அவர்கள் நற்செயல்கள் செய்வார்கள்; அல்லாஹ் விடம் பாவமன்னிப்புக் கோருவார்கள்.
- அவர்கள் அறிவோடும் உணர்வோடும் செயற்படுவார்கள்.
- அல்லாஹ்வின் மார்க்கத்தை இப்பூமியில் நிலை நாட்ட தம்மை அர்ப்பணித்துச் செயற்படுவார்கள்.
- அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் சுவனத்தையுமே இலக்காகக் கொள்வார்கள்.
- இவ்வுலகில் கூலியை எதிர்பார்த்து எதையுமே செய்ய மாட்டார்கள். அனைத்தையும் மறுமைக்காகவே செய்வார்கள்.
- எப்போதும் அல்லாஹ்வின் விருப்பத்தை முற்படுத்தி தங்களின் விருப்பத்தையே பிற்படுத்தியே வாழ்வார்கள்.

பின்த் அலியார்
மருதமுனை

வினா-விடைப் போட்டி-27

வினாக்கள் _____

01. கலாநிதி அஹ்மத் அல்அஸ்ஸால் அவர்கள் தனது எத்தனையாவது வயதில் அல்குர்ஆனை மனனமிட்டு முடித்தார்கள்?
02. மக்கா வெற்றிகொள்ளப்பட்டது எப்போது?
03. அல்குர்ஆனுக்கு வழங்கப்படும் மற்றொரு பெயர் யாது?
04. பங்களாதேஷில் 1975ஆம் ஆண்டு இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியவர் யார்?
05. ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் முஸ்லிம்கள் மீது ஸகாத் விதியாக்கப்பட்டது?
06. ஸ்பெய்னிய ஆட்சியாளரான ரொட்ரிக் மன்னனைத் தோற்கடித்த முஸ்லிம் படைத் தளபதி யார்?
07. பத்ர் போரில் குறைஷிப் படையணியில் இருந்து போராடிய அபூ ஜஹ்லின் மகன் பின்னாளில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவர் யார்?
08. 'யெரட்ஸ் யிஸ்ராஈல்' என்பதன் அர்த்தம் என்ன?
09. தமிழ் மொழிமூலம் இஸ்லாத்தை முறையாகக் கற்பிக்கும் நோக்கில் புதிதாக ஓர் இணையதளம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவ் இணையதளம் யாது?
10. பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் அமீரின் பெயர் என்ன?

(கடந்த இதழ் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் பக்கம் 78ல் பார்க்கவும்)

உங்கள் விடைகளை ஆகஸ்ட் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

சிறுவர் பூங்கா

அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதனூடாக அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழானில் வாரி... (9ஆம் பக்கத் தொடர்)

வேண்டும் என்ற நோக்கமும் அடையப் பெறுதல் வேண்டும். ரமழானில் வாரி வாரி வழங்குவதால் பிச்சைக்கார சமூகம் உருவாகக் கூடாது. மாறாக பொருளாதார மேம்பாடு கண்ட சமூகம் தோன்ற வேண்டும்.

ரமழானின் ஒவ்வொரு காலைப் பொழுதிலும் வானவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுகின்ற சமூகமாக நாம் மாற வேண்டும். அவர்களின் சாபத்தை விட்டும் தூர விலகிய சமூகமாகவும் நாம் வாழ வேண்டும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறுகிறார்கள்:

"அடியார்களுக்காக வழங்குகின்ற ஒவ்வொரு நாளிலும் இரு மலக்குகள் இறங்குகின்றனர். அவர்களில் ஒருவர் "யா அல்லாஹ்! இறைவழில் செலவு செய்கின்ற இந்த மனிதருக்கு பிரதியீட்டைக் கொடுப்பாயாக!" என்று பிரார்த்திப்பார். அடுத்தவர் "யா அல்லாஹ்! செலவளிக்காது தடுத்து வைத்துக் கொள்கின்ற இவருக்கு அழிவைக் கொடுப்பாயாக!" என்று பிரார்த்திப்பார்." (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

எனவே, ரமழானியப் பொழுதுகளை வழக்கமான இபாதத்துக்களால் மட்டும் அலங்கரிப்பதைத் தவிர்த்து தான தர்மங்களை அள்ளி வழங்கி தன்னிறைவுள்ள சமூக உருவாக்கத்திற்கான அடித்தளத்தை இடுவோமாக!

கடை விற்பனைக்கு

கொழும்பு–சிலாபம் பிரதான வீதியில் அமைந்துள்ள மாதம்பை பெரிய பள்ளிவாசலுக்கு அருகாமையில் சகல வசதிகளையும் கொண்ட இரண்டு மாடிக் கடை விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:
எம்.ஐ.எம். அக்ரம்
0755164943

MST

Mobile Subscription Team

கொழும்பு வாழ் அல்ஹஸனாத் வாசகர்களே!

மாதத்தின் முதல் வாரத்திதல் அல்ஹஸனாத் உங்கள் கரம் கிட்ட வேண்டுமா?

உங்களுக்கு அருகாமையில் அல்ஹஸனாத் இதழ் விற்பனை செய்யப்படுவதில்லையா?

அல்ஹஸனாத் இதழை கிரமமாகப் பெறுவதில் அசௌகரியங்களை எதிர்கொள்கிறீர்களா?

சந்தா தொகையை செலுத்துவதற்கு வங்கி, தபாலகம் செல்வதில் அசௌகரியமா?

கவலையை விடுங்கள்!

அழையுங்கள்
0771677109, 0777874984

உங்கள் இல்லங்களுக்கு வந்து நாம் சந்தாக்களை சேகரிப்போம், இன்ஷா அல்லாஹ்

மேலதிகக் கட்டணங்கள் எதுவுமில்லை!

MST உங்கள் இல்லம் நாடும் எங்கள் சேவை

MST கொழும்பு பிரதேசத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விற்பனை முகவர்கள் தேவை!

நான்கு தசாப்தம் கடந்து அழைப்புப் பணிபுரியும் மாதாந்த சஞ்சிகை மூலம் தஃவா செய்து நன்மையடைய விரும்புகிறீர்களா?

அல்குர்ஆன், அல்ஹதீஸ், தஃவா களம், பெண்கள் பகுதி, சிறுவர் பூங்கா, இலக்கியம், தேசம் கடந்து... என பல்வேறு அம்சங்களுடன் வெளிவரும் உங்கள் குடும்ப சஞ்சிகை அல்ஹஸனாத் இந்த வாய்ப்பை உங்களுக்கு வழங்குகிறது.!

அழைப்புப் பணி புரியும் நன்மைகளுடன் விற்பனைக் கழிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 0776 984 202, 0117 20 65 75

AOUFF CATERING SERVICE

விஷேட புரியாணி

திருமண வைபவங்கள், பெருநாள் தினம் மற்றும் ஏனைய விஷேட வைபவங்களுக்கு புரியாணி தேவையா? சுத்தமான முறையில், நீங்கள் விரும்பும் வகையில் பெற்றுக் கொள்ள விரைந்து வாருங்கள்.

எம்.எச்.எம். அவுப்
211, பழைய நகர், மாதம்பை
0322248117, 0723885858

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஹிஷாம் ஹுஸைன்

குடும்ப இஜ்திமா

ஜுலை 16இல் குடும்ப இஜ்திமா. பச்சை நிற சுவரொட்டி கண்ணில் பட்டது. மனது அதில் ஒட்டவில்லை.

நானும் அவனும் வகுப்பு நண்பர்கள். அவன் அதிகாலையில் வள்ளங் கரைக்குச் சென்று மீன்களை வாங்கி ஊரெங்கும் விற்றுப் பிழைப்பவன். கடின உழைப்பு, மாதமொருமுறை வைத்தியசாலைக்கு தன்னை காண்பிக்கப் போவான். பழைய மிதிவண்டி, மாதமொரு முறை என்னிடம் காட்ட வருவான்.

"குடும்ப இஜ்திமா ஈக்கிதே! இன்ஷா அல்லாஹ், கட்டாயம் போவனும். நீனும் போவியே!" பேச்சுவாக்கில் சொன்னான்.

"பாப்போம்." ஒற்றை சொல்லில் முடித்துக் கொண்டேன்.

பகல் சோற்றை மூடிவைத்து விட்டு மனைவி எங்கோ ஊர் வம்பளக்கப் போய்விட்டாள். இருந்ததை வாயில் கொட்டிவிட்டு குட்டித் தூக்கம் போட்டேன். பெண்களின் பேச்சுக் குரல் கேட்டு விழித்தேன். பர்தா அணிந்த பெண்கள் சிலர் மனைவியோடு பேசிக் கொண்டிருந்தனர். யார் வந்தது என்பது போல மனைவியைப் பார்த்தேன்.

"குடும்ப இஜ்திமாக்கு சொல்லி வந்துதுங்க! சரி பார்ப்போண்டு சொல்லி ஈக்கிரேன்."

ஜுமுஆ முடிந்து நண்பர் வட்டம். மீன் வியாபாரியும் இருந்தான். பல்வேறு தலைப்புக்களோடு குடும்ப இஜ்திமாவும் கலந்தது. இரண்டாவது முறையும் வலியுறுத்தி அழைத்தான்.

"இவ்வளோ சொல்லிட்டா. வருவோமே..." என்று இழுத்தேன்.

வாசல் கதவு தட்டும் சப்தம். போய் பாரு! என்பதுபோல் மகனைப் பார்த்தேன். வாசல் வரை சென்றவன்,

"வாப்பா! வாப்பா!"

உற்சாகக் குரலில் கூவினான். குடும்ப இஜ்திமாவுக்கான துண்டுப் பிரசுரம். வந்திருந்த பெரியவர்களுடன் மகனுக்கு முன் அறிமுகம் இருப்பது தெரிந்தது.

"ஜமாஅத் ஊழியர்மார்" என்றான்.

உனக்கெப்படித் தெரியும் என்பதுபோல் பார்த்தேன்.

"அஸாபீர், ஜம்இய்யா ஊழியர்களுக்கெல்லாம் இந்த மௌலவிதான் தர்பிய்யா கிளாஸ் நடத்துவாங்க" என்றான்.

அஸாபீர், ஜம்இய்யா, தர்பிய்யா... ஏதோ நாலு நல்ல விஷயத்த படிக்கட்டும்.

திரீ வீலரில் ஸ்பீக்கர பூட்டி குடும்ப இஜ்திமா அறிவித்தல். வழியில் மீன் வியாபாரியை சந்தித்தேன்.

"குடும்ப இஜ்திமா ஏற்பாடு ரொம்ப விஷேசமாத்தான் நடக்குதுபோல" என்றேன்.

"மாஷா அல்லாஹ், அல்லாட ஒதவியால எல்லாம் பரக்கத்தா ஏற்பாடாவுது. இந்தா பாரு நீ பொஞ்சாதி, புள்ளைவொ ஆறு பேரும் வந்துரணும்."

இம்முறை உரிமையோடு அழைத்தான். எனது மனமும் அதையே சொன்னது.

"எனக்கும் வரணுமாட்டுந்தான் ஈக்கிது... சரி! நாங்க வருவோம்."

அவனுக்கு என்னைத் தெரியும்.

"அல்ஹம்துலில்லாஹ்!" அவன் போட்ட சப்தத்தில் வீதியில் சென்ற சிலர் திடுக்கிட்டுப் பார்த்தனர்.

பச்சை நிற சுவரொட்டி. ஜுலை 16இல் குடும்ப இஜ்திமா... வார்த்தைகள் மனதில் ஒட்டியது.

"இன்ஷா அல்லாஹ்"

நாவு தானாகக் கொட்டியது.

ஜுலை 16. ஜுமுஆ முடிந்து பகல் உணவு. மனைவி கதவு நிலையில் சாய்ந்து நிற்கின்றாள்.

"மூணு மணிக்கெல்லம் பெரிய சாஹிராவுக்கு

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திரட்டுமாம். அஸர் தொழுது முடிஞ்சதும் இஜ்திமா தோங்கிருமாம்."

மனைவி கவனமாக சொற்களை அடுக்கினாள். எனக்குத் தெரியும் என்பதுபோல தலையை அசைத்தேன். வாய் நிறைய பெருநகை அணிந்தாள். நானும் சிறுநகை புரிந்தேன். மனது இலேசாகக் குடைந்தது.

❑❑❑

புத்தளம்–மன்னார் பெரு வீதி நிறைய வாகனங்கள். கையில் முளைத்த குருத்தோலை முதல் கைத்தடி முளைத்த பருத்தோலை வரை எங்கும் மனிதர்கள். எல்லார் முகத்திலும் ஒரே புன்னகை, பூரிப்பு. உறவுக்கார வீட்டுக்கு வந்தவர்களைப் போல.

"அல்ஹம்துலில்லாஹ். ஒம்பதாயிரம் பேர்."

கையிலிருந்த பைல் கடதாசியில் ஏதோ குறித்துக் கொண்டிருந்த இருவர் பேசிக் கொண்டனர்.

ஸாஹிரா திடல் இன்று மனிதக் கடல். ஓ லெவல் வரை ஓடியாடி விளையாடிய எனது பாடசாலை மைதானத்தில் ஒன்றுகூடிய மனிதர்களைக் கண்டு ஸாஹிரா திடல்போல மனமும் நிறைந்திருந்தது. புத்தளத்து வெய்யில் துளிகூட சுடவில்லை. கச்சான் காற்றும் தொப்பியைக் கழற்றும் அளவுக்கு வீசவில்லை.

மேடையின் பின்னணியில் சுமார் பதினைந்து அடி உயரத்துக்கு அமைக்கப்பட்டிருந்த புத்தளம் பெரிய பள்ளியின் குவிமாடமும் துஆ கேட்கும் ஆணின் கையுடன் இணைந்த பெண்ணின் கையும் புத்தளம் உப பிராந்தியத்தின் வரைபடமும் கண்களையும் புருவத்தையும் உச்சந்தலை மேல் வைத்து விட்டது. இணைந்த கைகளுக்கு மத்தியில்,

"இறைவா, எங்கள் மனைவியரையும் மக்களையும் எங்களுக்குக் கண்குளிரச்சியாக்குவாயாக! அன்றியும் எங்களை பரிசுத்தவான்களுக்கு வழிகாட்டிகளாகவும் ஆக்கியருள்வாயாக!" (ஸூரா அல்புர்கான் 25: 74) என்று எழுதப்பட்டிருந்தது.

மேடைக்கு இடப்புறமாக ஆண் சமுத்திரம். வலப்புறமாக பெண் சமுத்திரம். இரண்டுக்கும் நடுவில் திரை. மனைவி பெண் சமுத்திரத்தில் சங்கமித்திருந்தாள். மூத்த மகள் கரு நிற பர்தா அலைகளோடு அலையானாள். சிறுசுகள் எங்காவது நீந்தித் திரியும்.

அஸர் தொழுகையுடன் இஜ்திமா ஆரம்பம். ஆண்கள் திரைக்கு முன்னாலும் பெண்கள் பின்னாலும் கூட்டுத் தொழுகையில் வணக்கத்துக்குரிய நாயனை வணங்கியபோது, மனதில் இனம் புரியாத உவகை. பென்னம் பெரிய கடலில் நானும் ஒரு நீர்த்துளி போன்ற ஓர் உணர்வு. ஒரு தைரியம். ஒரு நம்பிக்கை.

கனமூலையைச் சேர்ந்த அஷ்ஷெய்க் பஸ்லுல் பாரிஸ் காஇத் ஆகவிருந்து இஜ்திமாவை நடத்தினார். புனித அல்குர்ஆன் வசனங்களை ஓதிய எனது மகனின் வயதையொத்த சிறுவன் சப்றானின் ஆன்மிக இசையில் இலயித்தேன். மூத்தவனையும் இந்த மாதிரி ஓதிப் பழவச் சொல்லனும்.

தொலைக்காட்சியிலும் வீசீடீக்களிலும் பார்த்த பெரிய ஆலிம்களை நேரில் காணக் கிடைத்ததில் இரட்டிப்பு சந்தோஷம். உஸ்தாத் எம்.யூ.எம். ரம்ஸியின் மென்மையான பேச்சும் இனிய குரலும் மனதைத் தடவி தடயங்களைப் பதித்துச் சென்றது. அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் அவர்கள் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற அடிப்படைக் கடமைகள், வாழ்க்கையே வணக்கமாக்குவதற்கான ஆரம்பப் பயிற்சியைத் தருகின்றது எனக் கூறியபோது வாழ்க்கை முழுவதும் வணக்கமாகும் என்ற விடயம் புதியதாகவும் புதுமையாகவும் இருந்தது. அவரது உரையின் நிறைய இடங்கள் மனதைத் தொட்டன; சில இடங்கள் சுட்டன.

முதல் அமர்வு முடிவடைந்து விட்டது. மகன் கடதாசி பைலுடன் நிற்கின்றான். தாடி வளர்த்து, நீண்ட காற்சட்டை அணிந்த ஒருவருக்கு என்னைக் காட்டுகின்றான். அவர் என்னைப் பார்த்து முகம் மலர சிரிக்கின்றார். பதிலுக்கு நானும் சிரித்தேன். யாரு அது என்பது போல மகனைப் பார்த்தேன். என் அருகில் ஓடோடி வந்தவன்,

"எங்க வகுப்பு சேர். நீங்கதான் வாப்பான்டு காட்டினேன்."

பள்ளியில் அடிக்கடி கண்டிருக்கின்றேன். அவர்தான் மகனின் வகுப்பாசிரியர் என்று இன்றுதான் தெரியும்.

மஃரிப் தொழுதோம். விண் விளக்கு அணைந்தாலும் மின்விளக்குகள் சாஹிரா திடலை பகலாக்கியிருந்தது. மேடையின் இரு புறமும் பெரிய திரைகளில் மேடையில் பேசுகின்றவரை காட்டுகின்றார்கள். தூரத்திலிருப்பவர்களுக்கும்

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையின் கருத்துடன் கலப்பதற்கு வசதியாக இருந்தது.

"அகில இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் இஜ்திமாவின் கருப்பொருள் உரையை நிகழ்த்துவார்."

அறிவித்தல் கேட்டவுடன் அவரை சரியாகக் காண விரும்பி உடலை உயர்த்தி அமர்ந்து கொண்டேன். நடுத்தர வயது வாலிபன் ஒருவர் மேடையில் ஏறுகிறார். சமவெளிகளில் நடக்கின்றார்; குன்றுகளின் உச்சியை அடைகின்றார்; பள்ளத்தாக்கில் வேகமாக வருகிறார்; நீரோடைகளில் கவனமாக அடிமேல் அடி எடுத்து வைக்கின்றார். என்னை அழைத்துக் கொண்டு வெகு தூரம் செல்கின்றார்.

"மனிதன் வாழ்கிறான் என்றால் அவன் வணங்குகிறான் என்பது பொருள்" என என் புருவத்தை உயர்த்தச் செய்தவர், "மனிதனின் குணமும் ஒரு வணக்கமாகும். குணத்தை, பண்பை நெறிப்படுத்தாத ஒருவர் தொழுகிறார், நோன்பு நோற்கிறார். ஆனால் சுவனம் கிடைக்குமா, கிடைக்காதா? சந்தேகம்தான்..." எனக் கூறியபோது அவரை கூர்ந்து அவதானிக்கலானேன். "நடைமுறை வாழ்க்கையும் ஒரு வணக்கம். திருமணம், குடும்பம், கணவன்–மனைவி உறவு... குடும்ப வாழ்க்கை வணக்கத்துக்கு அப்பாற்பட்டது என்று கூற முடியாது..." அவர் என்னைப் பார்ப்பது போலிருந்தது. என்னைத்தான் பார்க்கின்றார். ஆம்! என்னைத்தான் பார்க்கின்றார். உற்சாகமாக இருந்தது. உடம்பை இன்னும் கொஞ்சம் உயர்த்தி அமர்ந்து கொண்டேன்.

இஜ்திமா நிறைவடைகின்றது. ஒவ்வொருவராக அரங்கிலிருந்து வெளியேறுகின்றனர். பெரிய சமுத்திரமொன்று வற்றி வெறிச்சோடிப் போவது போலிருந்தது. எனக்கு வீடு செல்ல மனமில்லை.

மகனின் வகுப்பாசிரியர் என்னிடம் வந்து எனது கைகளைப் பற்றிக் கொண்டார்.

"ஒங்க மகன் படிப்புல, ஸ்போர்ட்ஸ்ல எல்லாம் பயங்கர தெரமசாலி. ஜம்இய்யத் தலபாலையும் ஊழியரா இருக்குறார். இன்ஷா அல்லாஹ், பெரிய ஆளா வருவாரு."

தனது மாணவனை, பதினொராம் வகுப்பு படிக்கும் ஒரு பொடியனை, இருக்கிறார், வருவார் என்றெல்லாம் அவனது வகுப்பாசிரியரே மரியாதை கொடுத்து பேசியதைக் கேட்டபோது, ஈன்ற பொழுதின் பெரிதுவப்பினால் அனைத்தும் கலங்கலாகத் தெரிந்தது. அவருக்குத் தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

❑❑❑

"வீடு வரும் வழி நெடுக இஜ்திமா பற்றிய பேச்சுத்தான். இங்கே! என்னட ஸ்கூல் கூட்டாளி புள்ள ஒன்னு வந்து ஈந்துது. புத்தளத்துல பாத்திமா ஸ்கூல்லதான் ஏ லெவல் எழுதிச்சிது. இப்ப புளிச்சாக்கொளத்துல ஈக்குதுங்களாம். மூத்த மகன் கொலேஜ் முடிச்சிட்டு டீச் பன்னுராராம்" என்றவள் குரலைத் தாழ்த்தினாள்.

"நம்ம மகள பக்கத்திலேயே கூப்புட்டு வச்சிக்கிட்டுது. தொலச்சலயும் பக்கத்துலதான். கடைசியா போவக்கிட்ட ஏன்ட மகள்ண்டு சொல்லி தலைய தடவி உட்டுதுப்பா" ஷஃபான் மாத நாலாம் பிறை இரவிலும் மனைவி முகத்தில் பௌர்ணமி.

இரவு உணவை முடித்துவிட்டு பிள்ளைகள் தூங்கப் போய்விட்டனர். மகன் இன்னும் வரவில்லை. அவனுக்கு நெறைய வேல ஈக்கும்.

மனைவி சாப்பிட அழைத்தாள். பாயில் அமரும்போது என்னை அறியாமலேயே "இரிங்களேன்" என்றேன்.

மனைவி முகத்தில் இரண்டு பௌர்ணமிகள். பக்கத்திலேயே அமர்ந்து கொண்டாள். ஒரு பிடி உணவை அள்ளிக் கொண்டாள். இஜ்திமாவில் கண்டவை, கேட்டவை, பகிர்ந்தவை, சந்தித்த புதியவர்கள், புளிச்சாக்குளம் தோழி, டீச்சர் மகன், ஏன்ட மகள்... மனைவி பேசிக் கொண்டே போகிறாள். கையிலெடுத்த உணவை இன்னும் வாயில் வைக்கவில்லை.

மனைவி ஓயாமல் பேசுகிறாள். ஒருவித குற்ற உணர்வு எனது மனதைக் குடைகிறது. மனைவியின் முகம் கலங்கலாகத் தெரிகிறது. கண்களை பூமிக்குள் புதைக்க முனைகின்றேன்.

திடீரென பேச்சை நிறுத்தினாள். இருவரும் மௌனித்தோம். அவள் முகம் பார்க்கும் துணிவை இழந்திருந்தேன். அந்த மௌன நொடிகள், இருபது வருட இல்லற வாழ்வில் இருவரும் பேசிக் கொண்ட நிமிடப் பொழுதுகளைப் பேசியது.

"அல்ஹம்துலில்லாஹ்..." மனைவியின் குரல் மௌனத்தைக் கலைத்தது. தலையை உயர்த்தி அவள் முகம் பார்க்கின்றேன். குரல் தழுதழுக்க என் முகம் பார்த்து கனிந்தாள்.

"எவ்வளோ காலத்துக்குப் பொறவு இப்புடி கதச்சீக்கிறோம். இல்லையாப்பா?"

Digitized by Noorjahan Foundation.
www.noorjahan.org

மனச்சோர்வு.... (70ம் பக்கத் தொடர்)

உங்கள் இரட்சகன் கூறுகிறான். "என்னிடம் பிரார்த்தியுங்கள் நான் உங்கள் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வேன், நிச்சயமாக எவர்கள் தற் பெருமை கொண்டு எனக்கு வழிபட மறுக்கின்றார்களோ அவர்கள், இழிவுக்கும் கேவலத்திற்கும் ஆளாகி நரகில் நுழைவர்." (அல்முஃமின்: 60)

3. தொடர்ந்தேர்ச்சியாகவும் மென்மையாகவும் தாழ்மையாகவும் அவனிடம் பிரார்த்தித்தல்

ஒருவன் தனது பிரார்த்தனை உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது. மாற்றமாக தொடர்ந்து பிரார்த்தித்துக் கொண்டே இருப்பதோடு, அதன் விளைவை அல்லாஹ்வின்பால் விட்டு விட வேண்டும். அதிகமான மருந்துகள் பலனளிப்பதற்கு குறுகிய அல்லது நீண்ட காலம் செல்வதை நாம் காண்கிறோம். எனவே நம்பகமான வைத்தியராக இருப்பின், நோயாளி காலதாமதத்தை பொருந்திக் கொண்டு தொடர்ந்தும் மருந்தை உட்கொள்ள வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிரார்த்தனையின் விளைவுகளை விரைவாக எதிர்பார்ப்பது குறித்து எங்களை எச்சரித்துள்ளார்கள்.

"ஓர் அடியான் அவசரப்படாதவரை அவனது பிரார்த்தனைகளுக்கு அல்லாஹ் பதிலளிப்பான், அதற்கு சஹாபிகள் "அல்லாஹ்வின் தூதரே! எவ்வாறு ஒருவன் அவசரப்படுவான்?" என வினவினர். அதற்கு நபியவர்கள், "நன் பிரார்த்தித்தேன். ஆனால் பதில் கிடைக்கவில்லை" எனக் கூறி அவன் பிரார்த்திப்பதை விட்டுவிடுவான்" இதுதான் அவசரப்படுதல் என்றார்கள்.

நிகாஹ் சேவை

மணமகள் தேவை

கம்பஹா மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட அல்குர்ஆனை மனனம் செய்து ஹாபிழ் மற்றும் மௌலவிப் பட்டம் பெற்ற 26 வயதான மணமகனுக்கு நல்லொழுக்கமும் மார்க்கப்பற்றுமுள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முகத்திரை அணியும் 22 வயதுக்குட்பட்ட கம்பஹா, கொழும்பு, கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த மணமகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0777 00 55 46

மணமகன் தேவை

மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரம் கற்று முன்பள்ளி ஆசிரியையாக பணிபுரியும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 22, உயரம் 5' 6'') மார்க்கப்பற்றும் நற்குணமுமுள்ள தொழில் புரியும் 25-30 வயதுக்கிடைப்பட்ட மணமகனை அவரின் சகோதரர் எதிர்பார்க்கின்றார். மாத்தளை, கண்டி, கேகாலை அல்லது குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0716049741, 0715152119

மாவனல்லையைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரம் வரை கற்ற மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள மணமகளுக்கு (வயது 30) பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள மணமகனை அவரின் குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0726666547

சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:

ஆஇஷா ஹஸீபா காமில்
முஸ்லிம் பெண்கள் அ.க.
கள்-எலிய

ஆகஸ்ட் மாத அல்ஹஸனாத் இதழை பரிசாகப் பெறுவோர்

எப். ரஹ்மா ரிஸ்வான்
அகலவத்தை

எம்.எச்.எப். பஸ்னா
கன்னத்தோட்டை

ஏ.எம். முஹம்மத் ஹிஜாஸ்
பொத்துவில்

ஹனா மின்ஹாஜ்
பதுளை

பாத்திமா நஸ்ரினா
வெலிப்பன்னை

எப். ஸம்ஹா மிர்ஸாக்
பேருவளை

ரயீஸுல் ஹக்
உக்குவளை

யூ.எப். ஸிர்னா
மினுவங்கொடை

ஜுவைரிய்யா
நாவலப்பிட்டி

பாத்திமா ரஹீமா
தர்கா நகர்

குறிப்பு:

விடைகளை தபால் அட்டையில் (Post Card) எழுதி அனுப்புவது வரவேற்கத்தக்கது.

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ORCHID

ALUMINIUM DISTRIBUTORS

Manufactures of
Aluminium, Stainless Steel
Hotel, Kitchen Equipmints

எமது பள்ளிவாயல்கள், ஹோட்டல், வீடுகளில்
இப்தாருக்கு தேவையான
உறுதியான முறையில் தயாரிக்கப்பட்ட
சகல அளவுகளிலுமான



அலுமினியம் சட்டி (பானை)களை
4 கொத்து முதல் 80 கொத்து வரை எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
(சமையலறைக்குத் தேவையான அனைத்து
உபகரணங்களும் எம்மிடம் உண்டு)

50 - 80 கொத்து பானைகளுக்கு
20 வருட உத்தரவாதம் உண்டு



பழைய பானைகளைத் திருத்தி கொள்ளலாம்.
அல்லது அவற்றுக்குப் பதிலாக
புதிய பானைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாட்டின் எப்பாகத்திற்கும்
விநியோக வசதி உண்டு!

Phone : 038 4924195
Fax : 038 4924470
Mob : 0777 322896
Hotline : 077 3211074

Digitized by Noolaham Foundation.

ஹலாலான கோழி இறைச்சிக்கு பெயர் பெற்ற நாமம்

HAIRA

Symbol of Goodness

நீங்கள் ஏன் Haira உற்பத்திகளை தெரிவு செய்ய வேண்டும்?

* ஹலாலான அறுப்பு முறை
* உன்னதமான சுவை
* உயர்ந்த தரம்
* நியாயமான விலை

மலையக மண்ணில் 19 வருட கால உன்னத சேவையில் உங்கள் நம்பிக்கையை வென்ற ஹைரா நிறுவனம் மத்திய மாகாணத்தின் சிறந்த உற்பத்தியாளருக்கான மூன்று நட்சத்திர உயர் விருதினை பெற்றுக்கொண்டதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு,

HAIRA FARMS (PVT) LTD
NO, 02/01/02, Mosque Road,
Madawala Bazzar, Kandy
Tel: +94 812 470370 Fax: +94 812 476813
Email: hairafarms@sltnet.lk

ரமழான் அல்குர்ஆனின் மாதம்
அதனை ஓதுவோம்! அதன்வழி நடப்போம்!
அதனை விளங்குவோம்! அதன்பால் அழைப்போம்!

G.C.E O/L மற்றும் A/L இன் பின்னர்...

A Solid Foundation for your future Success through Access

உயர்கல்வி மற்றும் தொழில்வாய்ப்புகளுக்கு அடிப்படையாக விளங்கும் கணனி மற்றும் ஆங்கில மொழி விருத்தியுடன், மாணவர்களின் வாழ்கைத்திறன்களையும் (Life Skills) வளர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதுதான் BCAS வழங்கும் Access Programme. பல ஆயிரம் மாணவர்களின் வாழ்க்கையினை வெற்றிப்பாதையில் இட்டுச்செல்ல காரணமாகவிருந்த Access பாடநெறியானது O/L, A/L இன் பின்னர் மாணவர் மேற்கொள்ளும் எத்தகையவொரு உயர்கல்வித் துறைக்கும் அடிப்படையாக அமையும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு நடாத்தப்படுகின்றது.

4 மாத முழுநேர (8.30 - 4.30) கிழமைக்கு 5 நாட்கள் நடைபெறும் Access Programme, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை பெற்றுத்தருகின்றது.

BCAS இல் நீங்கள் தெரிவுசெய்யக்கூடிய ஏனைய உயர்கல்விப் பாடநெறிகள்

Degree Path

HND Programmes

- Software Engineering
- Network Engineering
- Business & IT
- Quantity Surveying
- Business Management
- Law

- 18 - 22 months duration (Fulltime/Part-time)
- 04 Semesters
- Edexcel A graded center

Professional Path

MCP	- 4 weeks
MCSA	- 7 weeks
MCSE	- 9 weeks
CAD & BS	- 10 months
HRM	- 4 months
Computer Based Accounting	- 4 months
Teaching	- 8 months
English for Communication	- 2 1/2 months

BCAS HND பாடநெறியை பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு தமது பட்டப்படிப்பை பூர்த்திசெய்வதற்கு *UK, Canada, USA, Australia, New Zealand* போன்ற நாடுகளிலுள்ள 114 மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் அனுமதியை மற்றும் நேரடியான ஏனைய கல்வி ஏற்பாடுகளையும் எவ்வித கட்டணமுமின்றி *BCAS* செய்து தருகின்றது.

Call Now : 077 206 7070 / 077 8820988

B.C.A.S
KANDY CAMPUS

No 344, Peradeniya Road,
Kandy.
081-2204388/2224731
(Near Girls High School-Kandy)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hi-Tech Computer Training & Consulting Center

WinSYS NETWORKS®

The network security training provider of the nation

No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.

Tel: 011-2589567/8,0777 259927

NEW BRANCHES Puttalam

Twinwin ICT Professionals

No: 33,Masjid Road, Puttalam, Sri Lanka.

Tel:- 0772399120

E-win NETWORKS®

No: 223,D.S. Senanayaka Street, Kandy, Sri Lanka.

Kandy:- 081-2203785/6, 0777 04 77 08

www.winsysnetworks.net info@winsysnetworks.net

NO Remote Labs NO Simulators Only 100% REAL Routers and Switches

CCNA Only 12,000/= Conditions Apply

CCNA/CCNA Security/CCNA voice (CVOICE)/CCNP/CCSP/CCVP/CCIE Routing & Switching

இலங்கை கணணி வரலாற்றில் முதல் முறையாக

CCIE ROUTING & SWITCHING
Cisco Certified Internetwork Expert

CCIE VOICE
Cisco Certified Internetwork Expert

CCIP Training
Cisco Certified Internetwork Professional

Visit us or Call for More Details

CISA 30 CISM (CISSP)

C|EH C|HFI Linux ubuntu linux for human beings

Get a Double Diploma In Hardware & Networking Just for 4000/=

Get a Special Diploma In Network Administration Just for 7000/=

MCP Only 14,000/=

MCSA MCTS Microsoft CERTIFIED Systems Engineer Microsoft CERTIFIED Technology Specialist

MCTS/ MCITP Windows 7 070-680 MCTS Configuring Only 8000/=

PHP My SQL

* MySQL Overview
* Obtaining and Installing MySQL
* Working with MySQL
* Reporting Data in MYSQL
* Using MySQL functions
* General MySQL Administration
* MySQL Program Options
* Session Management in PHP
* Data Types and Variables
* PHP Overview
* PHP Operators
* PHP Flow Control
* PHP Functions
* Objects in PHP
* Handling MySQL Database with PHP , Cookies
* Maintaining, Modifying & Removing MySQL Data

இலங்கையில் 100 க்கும் மேற்பட்ட Cisco Routers மற்றும் Switch களை உள்ளடக்கிய ஒரே Network பயிற்சி நிலையம். கடந்த 7வருடங்களில் 4000க்கும் மேற்பட்ட மாணவர்கள் நம்பி வந்த ஒரே இடம்.

1000/1000 என்ற சாதனைகள் ஒன்றல்ல இரண்டல்ல பல மாணவர்களை உருவாக்கிய பெருமை WinSYS Network நிறுவனத்திற்கு உள்ளது. சாதனைகள் தொடரும்.....

பயிற்சி மட்டும் அல்லாது அதனை இயல் வாழ்க்கையில் உபயோகிக்கும் முறையான இடங்களை சரியான முறையில் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் ஒரே இடம்.

தலைநகர் கொழும்புக்கு வெளியே Cisco பயிற்சியை

Puttalam (Twinwin ICT Professionals)/Kandy (E-win Networks)/ Galle & Jaffna Batticaloa கள எடுத்து சென்ற ஒரே பயிற்சி நிலையம்.

ஆரம்பம் முதல் இன்று வரை இலங்கை அரசாங்கத்தால் நம்பத்தகுந்த நிறுவனம் என்பதால் அரச ஊழியர்களை பயிற்றுவிப்பதற்காக WinSYS நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த Network மற்றும் Security பயிற்சிகளை உங்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை உள்ளடக்கிய இலங்கையின் ஒரே தலை சிறந்த நிறுவனம்.

 AJ Prints (Pvt) Ltd, Dehiwala, Tel: 2723205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org